

சென்னையைச் சேர்ந்த திருமதி. [illegible]
பொறியியல் பட்டதாரி. [illegible]
நிறுவனம் ஒன்றில் மேலாளராகப் [illegible]
இவருக்கு சிறு வயது முதற் [illegible]
கவிதை மேல் ஆர்வம் அதிகம்.

ஆங்கில நாளிதழ்களுக்கு [illegible]
நிகழ்வுகளைக் குறித்து [illegible]
எழுதியுள்ள இவர் 2009 ஆம் [illegible]
தரமான தமிழ் நாவல்களைப் [illegible]
இருக்கிறார்.

அன்பை மென்மையாக [illegible]
கதாபாத்திரங்கள், புதுமையான [illegible]
நடை, இனிமையான முடிவு [illegible]
இவரின் முத்திரை.

பூவில் தூங்கும் பனித்துளி ✱ லட்சுமி சுதா ✱

# பூவில் தூங்கும் பனித்துளி

## லட்சுமி சுதா

Please share your novels and Comments @ http://tamilnovel-link.ucoz.com/forum/



## முன்னுரை

அனைவருக்கும் வணக்கம்!

என் 'பூவில் தூங்கும் பனித் துளி' மூலம் உங்களை மீண்டும் சந்திப்பதில் எனக்குப் பெரு மகிழ்ச்சி.

இந்தக் கதையின் நாயகி வர்ஷாவிற்குத் தன் தந்தை ஒரு அந்நியனிடம் வியாபார சம்பந்தமான விஷயங்களைப் பற்றியும், உடல் நலத்தைப் பற்றியும் பகிர்ந்து கொள்வது மனதிற்கு ஒப்பவில்லை.

விளைவு நாயகன் ரிஷப்புடன் எப்பொழுதுமே 'சண்டைக் கோழி'யாக இருக்கிறாள். இருவரும் எப்படிக் கடைசியில் இணைகிறார்கள் என்பதே இந்தக் கதை.

என்னுடைய நாவல்களைப் புத்தக வடிவில் வெளியிட்டு வரும் அருண் பதிப்பகத்திற்கு என் மனமார்ந்த நன்றி.

கதையைப் படித்துக் கருத்துக்களைத் தெரிவித்து, மேலும் மேலும் எழுதத் தூண்டும் அத்தனை வாசகர்களுக்கும் என் உளமார்ந்த நன்றி.

உங்களது கருத்துக்களையும், விமர்சனங்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்,
**லட்சுமி சுதா**

# பூவில் தூங்கும் பனித் துளி

## 1

உன்
பார்வையின்
அர்த்தம்
என்ன?
என்னை
உருக்குகிறது
உன்
நீள்
விழி!

நான்
உன்
பார்வையில்
கரைகிறேன்!
நான்
உன்
பார்வையில்
என்னை
முற்றிலும்
தொலைத்து
விட்டேன்!
உன்
பார்வையில்
நான் என்னை
இழந்து
உன்னில்
கலந்து விட்டேன்!

'மலைகளின் அரசி' என்று வர்ணிக்கப்படும் ஊட்டியிலிருந்து கிட்டத்தட்ட இருபத்தைந்து கிலோமீட்டர் தொலைவில் உள்ளது அவலான்சி என்னும் இடம்.

இயற்கை கொஞ்சும் அந்த இடம் பார்க்கப் பார்க்கத் திகட்டாத ஒன்று. பறவைகளுக்கு ரொம்பப் பிடித்த இடம் அது. 'பர்ட்-வாட்சர்ஸ்' தவறாமல் வரும் இடம் அது.



'கானடா அணை' என்று ஒரு அணை அங்கே ரொம்ப பிரசித்தம். 'கேனடா' அந்த அணையைக் கட்ட உதவி புரிந்ததால் அந்தப் பெயர் பெற்றது அது.

இந்த அணைக்குப் பக்கத்தில் 'ட்ரொவ்ட் ஃபார்ம்' ஒன்று உள்ளது. 'ட்ரொவ்ட்' வகை மீன்கள் சுத்தமான தண்ணீரில் மட்டுமே உயிர் வாழும்.

இந்தியாவிலேயே 'ட்ரொவ்ட்' மீன்கள் இங்கே மட்டுமே இருக்கின்றனவாம். அமைதியாக, இயற்கை வளம் பொதிந்து உள்ள இந்த இடத்திற்கு வர்ஷா அவ்வப்பொழுது வருவது உண்டு.

அங்கிருந்த ஏரியில் மீன் பிடித்து விட்டுக் குதிரையில் சவாரி செய்வது அவளுக்கு ரொம்பப் பிடித்த பொழுது போக்கு. மரங்கள் சூழ்ந்த அந்தப் பகுதியில் அன்றும் அவள் குதிரையில் வந்து கொண்டிருந்தாள்.

அந்த ஏரியைத் தாண்டிச் சாலை அருகே குதிரையில் வந்து கொண்டிருந்தாள் அவள். சட்டெனக் குதிரை மிரண்டது போல் அவளுக்குத் தோன்றியது.

'என்னவாக இருக்கும்?' என்று அவள் யோசித்துச் சுதாரிப்பதற்குள் ஒரு கார் அவர்கள் அருகே வேகமாக வந்தது. அந்தக் குறுகலான சாலையில் வளைவில் இருந்து சட்டென வந்த காரைக் கண்டு திடுக்கிட்டாள் வர்ஷா.

அந்தக் கார் அவர்கள் அருகே வந்தது. பயத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் உறைந்து போய்ச் சிலையாய் இருந்தாள் அவள்.

அந்தக் கார் சட்டென பிரேக் போட்டு நின்றது. மிரண்டு போன குதிரை பின்வாங்கியது. அதன் முரட்டுத்தனத்தோடு

போட்டி போட முடியாமல் தோற்றுப் போன வர்ஷா தரையில் விழுந்தாள்.

கார் கதவைத் திறந்து அதிலிருந்து இறங்கினான் ஒருவன். அவன் முகத்தில் கோபம் தாண்டவமாடியது.

"நீ உன் மனதில் என்ன நினைத்துக் கொண் டிருக்கிறாய்? இது பிரைவேட் - ரோட். இங்கே குதிரையில் ஜம்மென்று சவாரி செய்கிறாய்!" என்று அவளைப் பார்த்துச் சீறினான் அவன்.

'கீழே விழுந்திருக்கிறேன் நான். கொஞ்சம்கூட இரக்கம் இல்லாமல் கத்துகிறானே... சரியான காட்டுமிராண்டி! சே... இவனிடம் மாட்டினோமே!' என்று மனதிற்குள் புலம்பினாள் அவள்.

"என்ன பேச்சையே காணோம்? கீழே விழுந்ததில் ஏற்பட்ட அதிர்ச்சியில் வாய் 'ஃபெவிகால்' போட்டது போல் ஒட்டிக் கொண்டதோ!" என்றான் ஏளனமாக.

"என்ன, விட்டால் பேசிக் கொண்டே போவீர்கள் போல... நீங்கள் குறைந்தது எழுபது கிலோ மீட்டர் வேகத்தில் வளைவில் திரும்பி இருப்பீர்கள்.

கார் புதிதாக ஓட்டத் தொடங்குகிறீர்கள் போல... முதலில் அதை ஒழுங்காக ஓட்டக் கற்றுக் கொள்ளுங்கள்.

பின்னர் இந்த மாதிரி மலைக்கெல்லாம் காரை எடுத்து வாருங்கள்..." என்று தன் சுடிதாரில் ஒட்டிக் கொண்டிருந்த மண்ணைத் தட்டி விட்டபடியே அலட்சியமாகப் பேசினாள் வர்ஷா.



"டோண்ட் டாக் ரப்பிஷ். நான் இருபது கிலோ மீட்டர் வேகத்தில்தான் வந்து கொண்டிருந்தேன்.

குதிரைக்கு அடி ஏதும் படவில்லையே... பாவம்!"

"தேங்க்ஸ் டு யூ. குதிரையையும் என்னையும் நீங்கள் மேல் உலகிற்கு அனுப்பி இருப்பீர்கள்.

யார் செய்த புண்ணியமோ... நாங்கள் தப்பித்தோம்!"

"இது உன்னுடைய குதிரை இல்லை. அதான் இப்படி பொறுப்பில்லாமல் பாசம் இல்லாமல் இருக்கிறாய்.

பிரைவேட் - ரோட்டில் குதிரைச் சவாரி செய்கிறாயே! சே... சரியான இடியட்!" என்று சொன்னவன் குதிரையைப் பாசத்தோடு தடவிக் கொடுத்தான்.

அதைப் பார்த்த அவள் மனம் எரிந்தது. கீழே விழுந்தது நான். ஒரு பேச்சிற்குக்கூட அடிபட்டதா என்று கேட்கவில்லை. குதிரையைக் கொஞ்சுகிறான் எனப் பொருமினாள் அவள்.

"ஓ... நீங்க திரைப்பட நடிகை அமலாவிற்குச் சொந்தமா?" என்றாள் சட்டென வர்ஷா.

அவன் அவளைக் குழப்பத்தோடு பார்த்தான்.

"என்ன ஆச்சு உனக்கு? கீழே விழுந்ததில் மூளையின் செல்கள் ஏதேனும் ஆஃப் ஆகிவிட்டதா உனக்கு?

நீ என்ன கேட்கிறாய், சம்பந்தம் இல்லாமல்...?"

"ம்... நீங்கள் ஆள்தான் நன்றாக வளர்ந்திருக்கிறீர்கள். மூளையில் ஆனால் செல்லே இல்லை. பாவம்!"

"ஏய்... என்ன சொல்றே நீ!" என்று அவளைக் கோபத்துடன் நெருங்கினான் அவன்.

அவன் கண்களில் தெரிந்த 'தீ'யைக் கண்டு அவள் பயந்து போய்ப் பின்வாங்கினாள்.

"நீங்கள் ப்ளு-க்ராஸில் மெம்பரா என்பதைத் தான் அப்படிக் கேட்டேன். நடிகை அமலா ப்ளு-க்ராஸ் வழியாக நிறைய விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் உதவி புரிகிறார்களே, அதுபோல நீங்கள்... நீங்களும் செய்கிறீர்களோ என்று சந்தேகம் வந்தது.

அதுதான் கேட்டேன். மற்றப்படி வேறு ஏதும் இல்லை!" என்றாள் அழுத்தமாக வர்ஷா.

"ஓ.கே.!" என்று தோளை அலட்சியமாகக் குலுக்கி விட்டுக் காரை நோக்கி நடந்தான் அவன்.

அவன் கார் அந்த ரோட்டில் சீறிப் பாய்ந்தது. அதைப் பார்த்த வர்ஷாவின் கோபம் அதிகரித்தது.

சரியான திமிர் பிடித்தவன். சே! இவனோடு பேசினாலே பி.பி. ஏறிவிடும் போல! சரியான காட்டு மிராண்டி. பெரிய லக்ஸரி - கார் வேறு ஐயாவிற்கு என்று அவனைக் கரித்துக் கொட்டினாள் வர்ஷா.

கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். அச்சச்சோ... நேரமாகி விட்டதே! பாவம், விக்ரம் வேறு காத்துக் கொண்டிருப் பானே எனப் பதைபதைத்தாள். இந்த நெட்டையனால் மூட்-அவுட் ஆகிவிட்டது. சே! என நினைத்தபடியே குதிரையில் ஏறினாள்.



கிட்டத்தட்ட ஒரு இரண்டு கிலோ மீட்டர் தூரம் கடந்து வந்திருப்பாள் வர்ஷா. அவள் கைப்பேசி சிணுங்கியது.

"விக்ரம்! ஸாரி... நீ அங்கேயே இரு. நான் இன்னும் பத்து நிமிஷத்தில் அங்கே இருப்பேன்!" என்று சொல்லி விட்டுக் கைப்பேசியின் இணைப்பைத் துண்டித்தாள்.

வாடகைக் குதிரைக்கு உண்டான பணத்தைக் கொடுத்துவிட்டுத் தன் காரைக் கிளப்பினாள் அவள்.

காரை ஓட்டும் பொழுதும் அந்த நெட்டையன் செய்ததை அவளால் மறக்க முடியவில்லை.

வர்ஷாவின் முகத்தில் எப்பவும் குழந்தைத்தனம் இருக்கும். அதனாலேயே அவளை யாரும், குறிப்பாக ஆண்கள் கடிந்து பேச மாட்டார்கள்.

அவளும் கடிந்து பேசும்படி நடந்து கொள்ள மாட்டாள். ஏதாவது அவள் தெரியாமல் தப்பு செய்திருந் தாலும், 'பரவாயில்லை, இட்ஸ் ஆல் ரைட்!' என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்று விடுவார்கள் ஆண்கள்.

ஆனால் இந்த நெட்டையன் அப்படி ஏதும் செய்யவில்லை. அதுவே அவள் மூளையை அரித்துக் கொண்டிருந்தது.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு காரை அந்த 'ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்' முன் நிறுத்தினாள் வர்ஷா.

வர்ஷாவிற்கு நகைகள் டிசைன் செய்வதில் விருப்பம் அதிகம். 'ஜெம்மாலஜி'யில் முறையாக மேற்படிப்பு

படித்தவள். அப்பாவின் அனுமதியோடு 'தி க்ரிஸ்டெல்ஸ்' என்று ஒரு கடையை ஊட்டியில் தொடங்கினாள்.

பெண்களின் விருப்பத்திற்கேற்ப, அவர்கள் ரசனைக்கு ஏற்ப அழகழகான கற்களில் மோதிரம், கம்மல், வளையல், சங்கிலி, கொலுசு என நிறைய அணிகலன்களை அவள் வடிவமைத்துத் தயாரித்து, விற்பனை செய்து வருகிறாள்.

ஒரு வருடமாக வியாபாரம் நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறது. கடையில் விற்பனை செய்ய இரண்டு பெண்களை நியமித்திருந்தாள்.

பெண்கள் உடை நிறத்திற்கு ஏற்ப டிரெண்டியாக அணிகலன்கள் அணிவது ஃபேஷனாகிவிட்டதால் அவள் கடைப் பொருட்களுக்கு நல்ல கிராக்கி.

அதுவும் ரொம்ப விலை அதிகம் இல்லாமல், 'ரீசனபிள் காஸ்ட்'டாக இருந்ததால் நிறையப் பேர் தயங் காமல் வாங்கினார்கள்.

நிறைய டூரிஸ்ட்கள் வரும் இடம் என்பதால் கூட்டம் அந்த இடத்தில் எப்பவுமே இருக்கும். அதனால் அவள் கடையிலும் பெண்கள் கூட்டம் இருக்கும்.

விக்ரம் அவளுடைய ஸ்கூல்-மேட். பள்ளிப் படிப்பை முடித்து விட்டு 'பி-ஆர்க்' படித்தான் அவன். அப்பாவின் சிவில் பிஸினெஸ்ஸைப் பார்த்துக் கொள்ள இண்டீரியர் டிஸைன் செய்ய இந்தப் படிப்பு உதவி புரியும் என்று தெரிந்துதான் அந்தப் படிப்பைத் தேர்வு செய்தான் விக்ரம்.

விக்ரமை அவள் முதலில் சந்தித்தது, அவள் மனதில் ஓடியது. ஸ்கூல் படிக்கும்பொழுது அவள் விக்ரமிடம்



அவ்வளவாகப் பழகியது கிடையாது. அவளுக்கென்று ஒரு ஃபிரண்ட்ஸ் வட்டம் உண்டு.

அதில் விக்ரம் இல்லை. ஆனால் கல்லூரிப் படிப்பு முடித்த பின்பு நட்பு பூத்தது. அந்த நாள் அவள் நினைவுக்கு வந்தது.

ஊட்டியில் நாடகக் குழுக்கள் அவ்வப்பொழுது நாடகங்களை மேடையில் போடுவது வழக்கம். சரித்திர நாடகங்கள், காதல் நாடகங்கள், காமெடி நாடகங்கள் எனப் பலதரப்பட்ட நாடகங்களைக் குழுக்கள் அரங்கேற்றுவார்கள்.

தோழி மீரா வற்புறுத்தியதால் 'ரோமியோ - ஜூலியட்' நாடகத்திற்கு அவளுடன் வருவதாக வாக்களித்தாள் வர்ஷா.

அந்த அரங்கத்தில் நல்ல கூட்டம். மூன்றாவது வரிசையில் இருவருக்கும் இடம் கிடைத்தது.

நாடகம் ஆரம்பித்தவுடன் மேடையில் தோன்றிய ரோமியோவை முதலில் அடையாளம் கண்டுகொண்டது மீராதான்.

"ஏய் வர்ஷா! ரோமியோவை நல்லா பார்!" என்று கத்தினாள்.

"ம்... நான் நல்லா பார்த்தா ஜூலியட் கோவிச்சுக்கப் போறா!"

"அடச்சே... நம்மளோட ஸ்கூல்ல படிச்சானே லாஸ்ட் பெஞ்ச் பாய்... விக்ரம்... அவன்தான்டி ரோமியோவா நடிக்கிறான்...!"

அவள் சொன்ன பிறகு அவனைக் கூர்ந்து நோக்கினாள் அவள்.

"ஆமாம் மீரா... அவன்தான் போல. ஏய் அவன் மிஸ்கிட்ட பேசவே மாட்டான். அவனா ஸ்டேஜில இப்படித் தூள் கிளப்பறான்!"

"எனக்கும் அதே சந்தேகம்தான்..!"

"சரி... எதுக்கு இப்படி மண்டையை உடைச்சுக்கணும். நாடகம் முடிஞ்சவுடன் விக்ரம் தானா ரோமியோன்னு உறுதி செஞ்சுக்கலாம்டி...!"

"தட்ஸ் எ குட் ஐடியா! பரவாயில்லை. உனக்கு அப்பப்ப மூளை வேலை செய்யுது!"

"சரிடி... வாயை மூடிக் கொண்டு நாடகத்தைப் பார்!" என்று அவளைத் தொடையில் கிள்ளினாள் வர்ஷா.

அதற்குப் பின்பு இருவரும் நாடகம் முடிந்த பின்பு, முதல் வேலையாகக் குழுவினர் இருந்த அறைக்குச் சென்றனர்.

"ஹலோ ரோமியோ! நீங்க நல்லா நடிச்சீங்க!" என்றாள் மீரா.

"ஓ... தேங்க்யூ! நீங்கள் மட்டும் சொல்றீங்க. உங்க ஃபிரெண்ட் பேச மாட்டாங்களா?"

"ம்... ம்... நீங்க நல்லா ஆக்ட் செஞ்சீங்க."

"தேங்க்ஸ் எ லாட். உங்களை மாதிரி ஒரு பெண் ஜூலியட்டாக நடித்திருந்தால் நான் நடிக்க அவசியமே இருந்திருக்காது.

இட் வுட் ஹேவ் பீன் ஆல் ரியல்!"



"ஓ... நீங்கள் நிஜமாலுமே இறந்து போய் இருப்பீர்களா?" என்றாள் கிண்டலாக வர்ஷா.

"நான் சொன்னது காதல் ஸீன் மட்டுமே..."

"சரி... ரெண்டு பேரும்... மாறி மாறிச் சண்டை போட்டுக்காதீங்க. நானும் வர்ஷாவும் இங்கே வந்ததே ஒரு உண்மை தெரிஞ்சுக்கத்தான். முக்கியமான விஷயம் உங்களைப் பற்றி..." என்றாள் மீரா.

"அட... என்னங்க இப்படி ஒரு பீடிகை? சீக்கிரம் சொல்லுங்க. நீங்க சொல்றதைப் பார்த்தா பயமா இருக்கு.

நான் படபடன்னு பேசுவேன். ஆனால் நல்ல பையன்தாங்க!"

"அந்தப் பயம் இருக்கட்டும். நீங்க செயிண்ட் லூயிஸ் ஸ்கூல்லதானே படிச்சீங்க?"

"அட! ஆமாம். நீங்களும் அங்கேதான் படிச்சீங்களா? உங்க ரெண்டு பேர் முகமும் ஃபெமிலியரா இருக்கு.

வந்தவுடனேயே நான் கேட்கணும்னு நினைச்சேன்."

"ஆமாம்... நாங்களும் அதே ஸ்கூல்தான். ஃபிரெஞ்ச் க்ளாஸ் போது உங்களை மீட் செஞ்சிருக்கோம்.

நீங்க கடைசி பென்ச்சில் உட்கார்ந்து இருப்பீங்க. அப்புறம் எனக்குத் தெரிஞ்ச வரை நீங்க மிஸ் கேட்ட எந்தக் கேள்விக்கும் பதில் சொன்னதா ஞாபகம் இல்லை...!" என்றாள் மீரா.

"ஓ... இதெல்லாம் நல்லா ஞாபகம் வெச்சிருப்பீங் களே..." என்றான் விக்ரம்.

இப்படிக் கேலியும் கிண்டலுமாக ஆரம்பித்த சந்திப்பு கொஞ்சம் கொஞ்சமாக நட்பாக வளர்ந்தது.

விக்ரமின் கண்ணியமான பார்வை, கிண்டல் பேச்சு இதெல்லாம் வர்ஷாவிற்குப் பிடித்தது. அதனாலேயே எந்தத் தயக்கமும் இன்றி அவனி ம் அவளால் இயல்பாகப் பேச முடிந்தது.

பழக ஆரம்பித்த நான்கு மாதத்திற்குள் சட்டென ஒரு நாள் தன் காதலை அவளிடம் சொன்னான் விக்ரம்.

அதை எதிர்பார்க்காத வர்ஷா திகைத்தாள். என்ன சொல்வது எனப் புரியாமல் குழம்பினாள். அவள் விக்ரமை அந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தது இல்லை.

அவனை ஒரு நல்ல நண்பனாக நினைத்துத்தான் பழகி வந்தாள். அதனாலேயே என்ன பதில் சொல்வது அவனுக்கு எனத் திணறினாள்.

பின்பு மனதில் நினைத்ததைப் பக்குவமாக அவனிடம் சொன்னாள். "விக்ரம்... நான் இதை உங்ககிட்டே இருந்து எதிர்பார்க்கலை. நான் யோசிக்கணும், ப்ளீஸ்."

"ஓ.கே வர்ஷா! நீ யோசிச்சு சொல். பட் ரொம்ப நாள் என்னைக் காக்க வைக்காதே!"

"சரி விக்ரம். அதோட எனக்கு அப்பாவின் விருப்பமும் இதில் ரொம்ப முக்கியம்.

என்னை அம்மா இல்லாத குறை தெரியாமல், ரொம்ப அன்பாக, பாசத்தைக் கொட்டி வளர்த்தவர் அப்பாதான். நிறையப் பேர் அவரை வேறு ஒரு திருமணம் செய்து கொள்ளச் சொன்னபொழுது அதை உறுதியாக மறுத்தவர் அப்பா.



அதனால் அவரை எதிர்த்து நான் எதையும் செய்ய மாட்டேன். யூ நீட் டு அண்டர்ஸ்டாண்ட் தட்."

"ம்... ம்... இந்தக் காலத்தில் இப்படி ஒரு பெண் இருப்பது ஆச்சரியம்தான். ஆனால் உன்னுடைய அப்பா என்னை ஏன் மறுக்கப் போகிறார்...? சொல்.

என்னுடைய அப்பாவின் பிஸினெஸை நான்தான் அவருடன் சேர்த்துப் பார்த்துக் கொள்கிறேன்.

அதோடு நான் ஒரே பிள்ளை. சொத்தெல்லாம் எனக்குத்தான். பார்க்க நன்றாக இருக்கிறேன். இதற்கு மேல் வேறு என்ன வேண்டும்?" என்றான் சற்றே கோபமாக விக்ரம்.

"விக்ரம்! எனக்குத் தெரியாது. ஹி மே ஹேவ் ஸம் எக்ஸ்பெக்டேஷன்ஸ் அபௌட் ஹிஸ் டாட்டர்ஸ் வெட்டிங்."

"ஓ.கே. நீ யோசித்த பின்பு சொல்!" என்றான், தணிந்த குரலில் அவன்.

விக்ரம் தன்னை ப்ரபோஸ் செய்ததை நினைத்தபடியே கடையினுள் நுழைந்தாள் அவள்.

"ஹாய் வர்ஷா! ஹவ் ஆர் யூ?" என்றான் புன்முறுவலோடு விக்ரம்.

"ம்... உண்மையைச் சொன்னா... நாட் ஃபைன்!" என்றாள் பெருமூச்சோடு.

"ஏன், என்ன ஆச்சு? யூ ஸவுண்ட் டல். கமான் டெல் மி!"

"வீட்டில் பிரச்சினை விக்ரம்...!"

"என்ன வர்ஷா? எதுவாயிருந்தா என்ன, என்கிட்டே சொல்லு. தயங்காதே... ப்ளீஸ்.. உன்னை இப்படி டல்லா பார்க்க மனசு என்னவோ செய்யுது."

"நான் இதுவரை கேட்ட எதையுமே அப்பா மறுத்தது இல்லை. சொல்லப் போனால் கேட்காமலேயே நிறைய வாரி வழங்கியிருக்கிறார்.

ஐபாட், காஸ்ட்லி டிரெஸ், ஏன், நான் ஓட்டற கார் எல்லாமே அப்பாதான் எனக்குக் கொடுத்தது..."

"வர்ஷா! நீ ஏதோ வேலையே பார்க்காமல் வீட்டில சும்மா உட்கார்ந்துகிட்டு இருக்கிற மாதிரி பேசறே...

இது உன் கடை. யூ ஆர் ரன்னிங் இட். கண்டிப்பா இது வழியா உனக்கு லாபம் கிடைக்குமே... யூ கேன் பை எனிதிங் ஃப்ரம் திஸ் மணி...!"

"விக்ரம்! நான் கடை தொடங்கியதே சமீபத்தில்தான். கடைக்குத் தேவையான முதலீட்டைச் செய்து கொடுத்ததும் அப்பாதான்."

"ஓ.கே. ஸாரி. நீ பேசும்பொழுது நான் குறுக்கே பேசிட்டேன். யூ கேரி ஆன்... ஏதோ சொல்ல வந்த..."

"ம்... ஊட்டியில் 'லிடில் தியேட்டர்' விலைக்கு வர்றதைப் பற்றி நம்ம பேசிண்டு இருந்தோம்.

உனக்கு நடிப்பதில் ஆர்வம் என்று எனக்குத் தெரியும். உனக்காக அந்தத் தியேட்டரை விலைக்கு வாங்கி, உனக்குப் பரிசாகக் கொடுக்க வேண்டும் என்று நான் நினைத்திருந்தேன்.



அப்பாவிடம் அதைப் பற்றி, உன்னைப் பற்றிப் பேசினேன். அப்பா எடுத்தவுடன் 'முடியாது' என்று மறுத்து விட்டார். உன்னைப் பற்றி அவருக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை விக்ரம்.

தியேட்டர் வாங்க முடியவில்லை என்ற கவலை ஒரு பக்கம், உன்னைக் கண்டால் அவருக்கு ஏன் பிடிக்கவில்லை என்ற குழப்பம் மறுபக்கம்... இதெல்லாம்தான் என் மூட்-அவுட், டல்னெஸ்ஸிற்குக் காரணம்."

அதைக் கேட்டு விக்ரம் முகம் சிறுத்தது. அதைக் கஷ்டப்பட்டுச் சமாளித்தான் விக்ரம்.

"நீ அவரை இன்னும் கொஞ்சம் பேசி கன்வின்ஸ் செய்து இருக்கலாம் வர்ஷா!"

"சொன்னால் நீ நம்ப மாட்டாய் விக்ரம். நான் என் நகைகளை வேண்டுமானால் விற்றுப் பணம் திரட்டி தியேட்டர் வாங்கவா என்றுகூட அவரிடம் சண்டை போட்டுப் பார்த்தேன்.

ஆனால் அதைக்கூட அவர் தீர்மானமாக மறுத்து விட்டார். அப்படிச் செய்தால், அவர் பேச்சை மீறிச் செய்தால் அவர் வீட்டை விட்டுப் போய் விடுவாராம்.

சே... சே... என்ன ஒரு எமோஷனல் பிளாக்மெயில் இது. நான் கேட்ட எதையுமே மறுத்தது இல்லை அப்பா! போன வருடம் நீலாவின் பிறந்த நாளுக்கு ஒரு அழகிய நெக்லஸ் நான் பரிசளித்தேன்.

விலை எவ்வளவு தெரியுமா? இரண்டு லட்சம். அப்பா ஏதும் சொல்லவில்லை. பட் இப்ப நான் கேட்ட தொகை... ஜஸ்ட் ஐந்து லட்சம்! அதற்கு என்ன பேச்சு பேசினார்?

மனசே ஆறவில்லை. சரி... மனம் அமைதியாகக் கொஞ்சம் நேரம் குதிரையில் சவாரி செய்யலாம் என ஏரி அருகே போனேன். அங்கேயும் ஒருவனால் என் நிம்மதி போச்சு...!"

"ஏய்... இது என்ன பார்ட் டூவா? பார்ட் ஒன் உன் அப்பாவோட கதை. இது யார் கதை?"

"விக்ரம்! உனக்கு எல்லாமே கிண்டல்தான்!" என்று தொடங்கியவள் நடந்ததைச் சுருக்கமாகச் சொல்லி முடித்தாள்.

"ஓ... தட்ஸ் வெரி ஸ்ட்ரேன்ஜ்!"

"இதில் என்ன ஸ்ட்ரேன்ஜ்?"

"ம்... இவ்வளவு அழகான ஒரு பெண் கீழே விழுந்து பாவம்... தரையில் எழுந்திருக்க முடியாமல் இருந்திருக்கிறாள். அதைக் கண்டு கொள்ளாமல் குதிரையைப் பற்றி விசாரித்து இருக்கிறானே... சரியான மடையன்!" என்றான் விக்ரம்.

## 2

**விண்ணும்**
**மண்ணும்**
**உரசிக்**
**கொள்ளுமா?**
**மலையும்**
**வானும்**
**பேசிக்**
**கொள்ளுமா?**



**கடலும்**
**மணலும்**
**சந்தித்துக்**
**கொள்ளுமா?**
**நிலவும்**
**சூரியனும்**
**எப்பொழுது**
**பேசிக்**
**கொள்ளும்?**
**உன்**
**நீள்விழிகள்**
**எப்பொழுது**
**என்னை**
**வருடும்?**
**சீக்கிரமாகப்**
**பதில்**
**சொல்**
**பெண்ணே!**

"விக்ரம்! நான் சீரியஸாகப் பேசிக் கொண்டிருக்கிறேன். நீ ஜோக் அடிக்கிறியா?"

"ஓ... நோ வர்ஷா! ஐயாம் சீரியஸ். யூ ஜஸ்ட் லீவ் இட். அந்த மடையனைப் பற்றி யோசிச்சு உன் டையத்தை

வேஸ்ட் செய்யாதே! இப்ப தியேட்டர் வாங்கறதுக்கு என்ன செய்யறது? சே.... ஒரே குழப்பமா இருக்கு!"

"ம்... ம்... நானும் அதைத்தான் யோசிக்கிறேன். விக்ரம்! உன் அப்பாவிடம் பேசிப் பார்க்கிறாயா?

அவர் உனக்கு ஹெல்ப் செய்வார்னு எனக்குத் தோணுது."

"நோ வர்ஷா! அப்பாவிற்கு இந்த டிராமா, நடிப்பு இதெல்லாம் சுத்தமா பிடிக்காது.

அதான் பிரச்சினை. சரி விடு. என் லக் அவ்வளவுதான்!"

"கமான்... விக்ரம்! ஏன் உடனே லக்கை ப்ளேம் செய்யறே? வீ நீட் டு கீப் கோயிங்...

வேறே ஏதாவது வழி கண்டுபிடிக்கணும்."

"சரி, வர்ஷா! நான் அப்ப கிளம்பறேன். எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு."

"ஓ.கே. விக்ரம்! ஸாரி... நான் உனக்கு ஹெல்ப் செய்ய முடியாம போயிடுத்து."

"இட்ஸ் ஓ.கே.!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து நடந்தான் விக்ரம்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டிருந்தாள் வர்ஷா. அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது. அந்தத் தியேட்டரை வாங்குவது அவனுடைய கனவு என்று அவளுக்குத் தெரியும்.



அப்பா ஏன் இதில் இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறார் எனத் தன்னையே கேட்டுக் கொண்டாள். இதுவரை அப்பா இவ்வளவு தீவிரமாக எதையும் மறுத்தது இல்லை.

ஆனால் இன்று அப்பாவின் முகத்தில் ஒரு இறுக்கம், தீவிரம், கவலை எல்லாமே தெரிந்தது. அப்பாவின் இந்த முகம் எனக்குப் புதிது.

என்ன காரணமாக இருக்கும் என யோசித்தபடியே இருந்தாள் அவள்.

"மேடம்! இந்த டிஸைனில் பிங்க் கற்கள் பதித்து மாலை செய்து தர முடியுமா?' என்று காலையில் ஒருவர் கேட்டார். ஸ்கூல் டே ஃபங்ஷனிற்கு வேண்டுமாம். நூறு செட் வேண்டுமாம் ஒரு வாரத்திற்குள். அவர் நம்பர் குறித்து வைத்திருக்கிறேன் மேடம்!

நீங்கள் வந்த பின்பு உங்களிடம் பேசிவிட்டு அவரிடம் கன்ஃபர்மேஷன் சொல்வதாகச் சொல்லியிருக்கிறேன், மேடம்!" என்று நீலாவின் குரல் கேட்க, யோசனையிலிருந்து மீண்டாள் வர்ஷா.

"நீலா... என்ன சொன்னே? ஸாரி, நான் சரியா கவனிக்கலை?"

'மேடமிற்கு என்ன ஆச்சு? முகம் டல்லா இருக்கே!' என நினைத்தாள் நீலா.

அதே கேள்வியை மீண்டும் மேடமிடம் கேட்டாள்.

"ஓ... ஒரு வாரத்தில் வேணுமா? சரி... ஆனால் நூறு செட் என்றால் நல்ல ஆர்டர்.

நீலா... நீ ஒண்ணு செய். அவருக்கு ஃபோன் செய்து 'ஓ.கே.' என்று சொல்லிவிடு. அதோடு அவரிடம் இருபது சதவீதம் முன்பணமாக வாங்கி விடு."

"ஓகே. மேடம்! ஏன் டல்லா இருக்கீங்க?" என்றாள் தயக்கத்தோடு நீலா.

"ம்... நத்திங்! ஒரு ப்ராஜெக்ட் பற்றி யோசித்துக் கொண்டிருந்தேன். அதான்... நத்திங் டு வொர்ரி!"

"ஓகே. மேடம்!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து அகன்றாள் நீலா.

அவள் சென்ற பிறகு கண்மூடி யோசனையில் ஆழ்ந்தாள் வர்ஷா. அப்பாவின் பிடிவாதம், மறுப்பு எல்லாமே அவளுக்குப் புதிதாக இருந்தது.

விக்ரமின் தளர்ந்த நடை அவளின் கண்முன்னே நிழலாடியது. பாவம் விக்ரம்! என்ன செய்வது என்று பெரு மூச்செறிந்தாள்.

ஆனால், விக்ரம் ஏன் வேறு வழியில் முயற்சிக்காமல் சட்டென மனம் துவண்டு விடுகிறான்? ஒருவேளை அவன் அணுகு முறையே எப்பொழுதும் அப்படித்தானா?

ஆங்கிலத்தில் ஃபைட்டிங் ஸ்பிரிட் என்று சொல் வார்களே, அது விக்ரமிடம் இல்லையா? ஸம்திங் இஸ் மிஸ்ஸிங். அவன் எல்லாவற்றிலேயும் இப்படித்தான் இருப்பானா?

பிரச்சினைகளை எதிர்கொள்ளாமல் அதைக் கண்டு துவண்டு போய் விடுவானா? மனதைத் தளர விட்டு



விடுவானா? இது சரியில்லையே... என்ன செய்யலாம்? விக்ரமை மாற்ற முடியுமா?

யோசனையில் மூழ்கியிருந்தவளைக் கைப்பேசி சத்தம் மீண்டு வரச் செய்தது. அப்பாவின் நம்பரும், ஃபோட்டோவும் திரையில் பளிச்சிட்டது.

"சொல்லுங்க அப்பா!"

"இன்னிக்கு சாயங்காலம் கொஞ்சம் சீக்கிரம் வர முடியுமாடா?" என்றார் மறுமுனையில் வசந்தன்.

"ம்... அப்படியா அப்பா! ஏன் சட்டுன்னு இப்ப சொல்றீங்க? எங்கேயாவது வெளியில போறோமா?

இல்லை... உங்களுக்கு உடம்புக்கு முடியலையா? டாக்டர்கிட்டே போகணுமா?"

"வர்ஷா! ரெண்டுமே இல்லை. வீ ஆர் கோயிங் டு ஹேவ் எ கெஸ்ட் இன் ஹோம். அதுக்குத்தான் சொன்னேன்.

டின்னருக்கு இன்வைட் செஞ்சிருந்தேன். இன்னிக்கு வரச் சம்மதிச்சார். அதனால நீ கண்டிப்பா வீட்டில இருக் கணும்டா!"

"அப்பா... இன்னிக்கு ஃபேக்டரிக்கு வேறே போகணும். ஒரு புது ஆர்டர் கிடைச்சிருக்கு.

அதான் யோசனையா இருக்கு."

"ஒரு நாள் அட்ஜஸ்ட் செய் வர்ஷா. ப்ளீஸ்!"

அப்பாவின் குரலில் இருந்த ஏதோ ஒன்று அவளைச் சம்மதம் சொல்லத் தூண்டியது.

"ம்... சரிப்பா! நான் எத்தனை மணிக்கு வீட்டுல இருக்கணும்?"

"ஏழு மணிக்குள்ளே வந்திடும்மா. தேங்க்ஸ்டா கண்ணம்மா!" என்று இணைப்பைத் துண்டித்தார் வசந்தன்.

அப்பா அவளை ஆசையாகக் கண்ணம்மா என்று அவ்வப்பொழுது அழைப்பார். பிரியத்தை வெளிக் காட்டுவதில் அவருக்கு ஈடு அவரே.

அதுவும் வர்ஷா மூட்-அவுட் ஆகியிருந்த பொழுது எல்லாம் அவர் அதைத் துருப்புச் சீட்டாக உபயோகப்படுத்தி அவளைச் சமாதானம் செய்து விடுவார்.

'சே! கெஸ்ட் யார் என்று கேட்க மறந்து விட்டேனே...!' எனத் தன்னையே நொந்து கொண்டாள் அவள்.

கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஐந்து என உறுதி செய்தது. கணினியில் வந்திருந்த மெயில்களைப் பார்க்கத் தொடங்கினாள்.

அன்று செய்ய வேண்டிய வேலைகள் எல்லா வற்றையும் குறித்துக் கொண்டாள். முக்கியமான இ-மெயில் களுக்குப் பதில் அனுப்பினாள்.

பின் ஃபேக்டரிக்கு ஃபோன் செய்து புது ஆர்டரைப் பற்றி விளக்கினாள்.

"பிரகாஷ்... 'பிங்க் ஸ்டோன்ஸ்' நம்மகிட்ட எவ்வளவு இருக்குன்னு செக் பண்ணுங்க.

நூறு மாலைக்குத் தேவையான அளவு கற்கள் இருக்கான்னு பாருங்க.



அப்படி இல்லைன்னா, நைட் எந்த நேரமாக இருந்தாலும் எனக்கு ஃபோன் பண்ணுங்க.

இந்தக் கற்கள் இங்கே இருக்காது. அதனால சென்னையிலிருந்துதான் வரவழைக்கணும். அதனால நீங்க எவ்வளவு சீக்கிரம் சொல்றீங்களோ, அவ்வளவு சீக்கிரம் நல்லது!" என்று பணித்தாள்.

"சரிங்க மேடம். நான் கோடவுனை செக் செய்துட்டு உங்களுக்கு கால் பண்றேன்.

ஸ்கூல் ஆர்டர் நமக்கு பல்கில் கிடைத்திருக்கு. அதனால் நாம நல்லபடியா செஞ்சு குறித்த நேரத்திற்குள் செய்து கொடுத்திடலாம் மேடம்!" என்றான் நம்பிக்கையோடு பிரகாஷ்.

"ஓ... தேங்க்ஸ். ஐ நோ ஐ கேன் ட்ரஸ்ட் யூ!" என்றாள் லேசான புன்முறுவலோடு வர்ஷா.

"தேங்க்ஸ் மேடம்!" என்று சொல்லிவிட்டு இணைப்பைத் துண்டித்தான் பிரகாஷ்.

"நீலா! நான் இப்ப வீட்டுக்குக் கிளம்பறேன். நான் எதிலேயாவது கையெழுத்துப் போடணுமா?

இருந்தால் இன்னும் ஒரு ஃபைவ் மினிட்ஸில் எடுத்துக் கொண்டு வா!" என்றாள் இண்டர்காமில் வர்ஷா.

"இருக்கு மேடம்! வவுச்சர் தயாரா இருக்கு. நான் உங்க ரூமிற்கு வர்றேன்."

கணினியை ஆஃப் செய்தாள் வர்ஷா. அப்பாவிடம் மீண்டும் விக்ரம் பற்றியும், தியேட்டர் பற்றியும் பேசலாமா என யோசித்தாள்.

அப்பா முடிவு செய்தால் செய்ததுதான். அதனால் பேசுவதால் பிரயோஜனம் இல்லை எனத் தீர்மானித்தாள்.

வர்ஷா வீட்டை அடையும்பொழுது மணி எட்டாகி இருந்தது. அனுமார் வால் மாதிரி வேலை நீண்டு கொண்டே இருந்தது.

அப்பா ஏழு மணிக்குள் வரச் சொன்னாரே என நினைத்தபடியே வண்டியைப் பார்க் செய்தாள்.

காலிங் பெல்லை அடித்தாள். அப்பா திட்டப் போகிறார் லேட்டாக வந்ததற்கு... என நினைத்தபடியே கதவுக்கு வெளியே நின்று கொண்டிருந்தாள் வர்ஷா.

"வா வர்ஷா! ஏன் லேட்டாச்சு?" என்று உரிமையோடு கேட்டாள் சந்திரா.

சந்திரா சின்ன வயது முதல் வர்ஷாவை எடுத்து வளர்த்தவர்கள். அந்த வீட்டில் அதனால் அவர்களை வேலையாள் போல் வர்ஷாவோ அவள் அப்பாவோ நடத்துவது இல்லை.

"ம்... ம்... ஆமாம் ஆன்ட்டீ! அப்பா எங்கே? காட்! என்னைத் திட்டப் போறார்."

"அப்பாவிற்குக் கடையில திடீர்னு வேலை வந்திடுச் சும்மா. அதனால அவசரமாக அங்கே போயிருக்கார்.

அப்புறம் என்ன சொன்னார்ன்னா...!" என்று அவள் முடிக்கும் முன்பு வர்ஷா குறுக்கிட்டாள்.

"அப்பாடா... அப்பா இல்லையா! இப்பத்தான் நிம்மதியா இருக்கு. யாரோ கெஸ்ட் வந்தால் எனக்கென்ன?



இந்த கெஸ்ட்டிற்கெல்லாம் அடுத்தவர்கள் கஷ்டம் தெரியாது போல. டின்னர்னு சொன்னவுடனே வந்திட றாங்க..." என்று பேசிக்கொண்டே நுழைந்தவள் ஹாலில் சோபாவில் உட்கார்ந்து இருந்தவனைப் பார்த்துத் திடுக் கிட்டாள்.

காலையில் பார்த்த நெட்டையன். கடவுளே! இவனா கெஸ்ட். சே... இன்னிக்கு நேரமே சரியில்லை போல என நினைத்துக் கொண்டாள்.

அவன் பார்வை தன் மேல் கோபமாகப் படர்வதை அவளால் உணர முடிந்தது. காட்! நான் பேசினதெல்லாம் கேட்டிருப்பான் போல இருக்கே.

நான் எப்பவும் இப்படி எடுத்து எறிந்து பேசமாட்டேன். ஆனால் இன்று ஏன் இப்படிப் படபடவென மனதில் இருப்பதைக் கொட்டி விட்டேன் என்று எனக்குத் தெரிய வில்லை.

காலையில் அப்பாவுடன் நடந்த அந்த ஆர்க்யூ மெண்ட்ஸால் இப்படிப் பேசினேனா... இல்லை, இந்த நெட்டையனால் ஏற்பட்ட தலைவலி காரணமாக என்னை அறியாமல் இப்படிக் கொட்டித் தீர்த்து விட்டேனா எனத் தன்னையே நொந்து கொண்டாள்.

அவனுக்கு மட்டும் எரிக்கும் சக்தி இருந்திருந்தால் நான் பஸ்பமாகி இருப்பேன் என நினைத்துக் கொண்டாள் அவள்.

ஹாலைக் கடந்து வேகமாகத் தன் அறைக்குள் சென்றாள் வர்ஷா.

இந்த நெட்டையன் எப்படி அப்பாவின் கெஸ்ட்? இவனை நான் இதற்கு முன்பு பார்த்ததே இல்லையே எனக் குழம்பினாள் அவள்.

அப்பாவின் பிஸினெஸ் சம்பந்தப்பட்டவனாக இருப்பானா? சே... இன்னிக்கு ஏன் இப்படி எல்லாமே தப்பாக நடக்கிறது எனத் தன்னையே நொந்து கொண்டாள்.

"என்ன வர்ஷா இப்படி பேசிட்ட? அந்தத் தம்பி முகம் பாவம் சின்னதாப் போயிடுச்சு.

நான் அவரைப் பத்தி சொல்லத்தான் வந்தேன். அதற்குள் நீ படபடன்னு ஏதேதோ பேசிவிட்டாய்.

என்ன இருந்தாலும் வீட்டுக்கு வந்த விருந்தாளி அவர். இல்லையா பாப்பா?"

"அச்சோ... ஆன்ட்டீ! எனக்குக் காலையிலிருந்தே மூட்-அவுட். அப்பா வேற சீக்கிரம் வீட்டுக்கு வான்னார். எல்லாம் சேர்ந்து சட்டுன்னு ஏதோ பேசிட்டேன்.

வீட்டில சோபாவில இப்படி சட்டமா உட்கார்ந்திருப் பார்ன்னு எனக்கு எப்படித் தெரியும்?

அதனால இதைப் பற்றி இனிமே பேச வேண்டாம் ப்ளீஸ்! அப்பா ஏன் இப்படி செய்யறார்? கெஸ்ட் வந்தா கவனிக்காம... வர வர அவருக்குப் பொறுப்பு இல்லை."

"ம்... அப்படியா வர்ஷா! அப்பா வரட்டும் சொல்றேன்."

"அட ராமா! சும்மா இருங்க... நான் சும்மா சொன்னேன்."



"வர்ஷா! அப்பா உன்னை அவர்கிட்டே பேசிண்டு இருக்கச் சொன்னார். அவர் வர இன்னும் ஒரு முக்கால் மணி நேரம் ஆகும் போல!"

"வாட்... முக்கால் மணி நேரமா? நான்... நான் என்ன பேசுவது? எனக்கு... ஆ... தூக்கம் வருது!" என்று இல்லாத கொட்டாவியை வரவழைத்தாள் அவள்.

"வர்ஷா கண்ணு... ஏதாவது போய்ப் பேசிட்டு இரும்மா. இல்லாட்டி அப்பா மனசு வருத்தப்படுவார்!" என்றாள் சந்திரா.

"சரி... வேற வழியில்லை. இருங்க. ஃபேஸ் வாஷ் செஞ்சிட்டு வர்றேன்!" என்றாள் வேண்டா வெறுப்பாக, அவள்.

"சரிம்மா... நான் டின்னருக்கான உணவு எல்லாம் டைனிங் டேபிளில் எடுத்து வைக்கிறேன்."

சந்திரா போன பின்பு வர்ஷா ஃபேஸ்-வாஷ் செய்தாள். வேறு உடை உடுத்தலாமா என ஒரு நொடி யோசித்தவள், அந்த எண்ணத்தைக் கைவிட்டாள்.

நான் அவனுக்காக வேறு உடை அணிந்து கொண்டு நிற்பது போல் இருக்கும். அதனால் வேண்டாம் என முடிவு செய்தாள்.

கலைந்திருந்த கூந்தலைச் சரி செய்து கொண்டு லேசான ஒப்பனை செய்தாள். அங்கிருந்த கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள்.

பின்பு அறையிலிருந்து வெளியே வந்தாள். ஹாலில் உட்கார்ந்து இருந்தவன் பெயர்கூடத் தெரியாது. இவனிடம் என்ன பேசுவது என யோசித்தபடியே வந்தாள்.

அவனை ஹாலில் காணவில்லை.

அட! எங்கே போய் விட்டான்? போட்ட போடில் பயந்து போய்... இல்ல நொந்து போய் ஓடிவிட்டானா?

ஆனால் அவனைப் பார்த்தால் ஓடற ஆளாகத் தெரியவில்லை. 'சம்திங் இஸ் ஃபிஷ்ஷி' என நினைத்தபடியே அப்பாவின் அறையினுள் நுழைந்தாள்.

அங்கே அவன் கப்போர்டில் இருந்த ஃபைல்களில் ஒன்றில் மூழ்கியிருப்பதைப் பார்த்தவளுக்கு ஏனோ கோபம் வந்தது.

"ஹலோ!" என்றாள்.

அவன் கண்கள் ஃபைலிலிருந்து ஒரு நொடி அவள் மேல் படர்ந்தன.

"ஹலோ!" என்று சொல்லிவிட்டு மீண்டும் ஃபைலில் மூழ்கினான் அவன்.

"இந்த ரூம் அப்பாவோடது. அந்த கப்போர்டில் கான்ஃபிடென்ஷியல் விவகாரங்கள் இருக்கலாம். அதனால்..."

"ஓ... உன்னோட அப்பா சி.பி.ஐ.யில் வேலை பார்க்கிறாரா? இல்லை... மினிஸ்டருக்கு பி.ஏ.வாக இருக்கிறாரா? இல்லை... உளவு வேலை அந்த மாதிரி ஏதாவது...?" என்றான் நிதானமாக.

அவள் முகம் கோபத்தால் சிவந்தது. அவன் வேண்டும் என்றே அவமானப்படுத்துகிறான் என்று அவளுக்குப் புரிந்தது.



"லுக்... ஒருவர் அனுமதி இல்லாமல் அவர்கள் வீட்டின் ஹாலைக் கடந்து ரூமிற்குள் நுழைவது நாகரிகம் இல்லை."

"ம்... நேரம்தான். நீ நாகரிகம் பற்றிப் பேசுவது! அதோடு நான் உன் ரூமிற்குள் நுழையவில்லை.

உன் அப்பாவின் அனுமதியோடு அவரின் அறைக்கு வந்தேன். அனுமதி இல்லாமல் வந்திருப்பது நீ..." என்றான் அழுத்தமாக.

வர்ஷாவின் பொறுமை காற்றில் பறந்தது.

"இது எங்க வீடு. நான்... நான் இங்கே என்ன வேண்டுமானாலும் செய்யலாம்... சே! உங்களைப் பார்த்தாலே எரிச்சலாக வருகிறது."

அவன் கண்கள் அவள் முகத்தை அலட்சியமாகப் பார்த்தன.

"ம்... ஸார் பாவம்தான். இந்த மாதிரி ஒரு பெண் அவருக்கு...!" என்றான் பரிதாபமான குரலில்.

வர்ஷாவின் முகம் சுருங்கியது. இவன் வேண்டுமென்றே தன்னைச் சீண்டுகிறான். நான் இனிமேல் கோபப்படாமல் இவனை எதிர்கொள்ள வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் அவள்.

"நீங்கள் அப்பாவின் பிஸினெஸ் லைனில் இருக்கிறீர்களா?" என்று பேச்சை மாற்றினாள்.

"ஒரு வகையில் அப்படித்தான்..."

"இன்னும் எவ்வளவு நேரம் இங்கே இருக்கப் போகிறீர்கள்?"

"அதுதான் சொன்னாயே... டின்னர் முடிந்த பிறகுதான் போவேன்."

"நீங்கள் என்ன விஷயமாக அப்பாவைச் சந்திக்க வந்தீர்கள்?"

"அது கான்ஃபிடென்ஷியல்!"

அவன் அளித்த பதில்கள் வர்ஷாவின் கோபத்தைத் தூண்டின.

"லுக்... ஐ டிட் நாட் இன்வைட் யூ. உங்களுடன் பேசிக்கொண்டு இருக்குமாறு அப்பா சொன்னதால்தான் நான் வந்தேன்.

உங்களுக்குத் தனியாக இருக்கத்தான் விருப்பம் போல. பை!" என்று படபடத்துவிட்டு அறையிலிருந்து வெளியேறினாள் அவள்.

# 3

பூவின்

மேல்

பனித்துளி

.......

ஏனோ

உன்

நெற்றியில்

அரும்பும்



வியர்வையை

ஞாபகப்

படுத்துகிறது!

படபடத்தபடி

பறக்கும்

பட்டாம்பூச்சி

.........

ஏனோ

உன்

கண்களை

ஞாபகப்

படுத்துகிறது!

பிறைச்

சந்திரன்

.........

ஏனோ உன்

விரல் நகங்களை

ஞாபகப் படுத்துகிறது!

ஹாலுக்கு வந்த வர்ஷாவின் மனம் கொதித்தது. சே! திமிர் பிடித்தவன். இவனைப் போய் அப்பா அழைத்து இருக்கிறாரே 'கெஸ்ட்' என்ற பெயரில் என நொந்து போனாள் அவள்.

அவள் கைப்பேசி சிணுங்கியது. 'விக்ரம்' எனத் திரையில் பளிச்சிட்டது.

"ஹாய் விக்ரம்! நானே உனக்கு ஃபோன் செய்யணும் என்று நினைத்திருந்தேன்."

"என்ன ஆச்சு வர்ஷா... சொல்லு!"

"ம்... ம்... நான் காலையில் உன்னிடம் சொன்னேனே, ஒரு நெட்டையனைப் பற்றி. அவன் இப்பொழுது என் வீட்டிற்கு டின்னருக்கு வந்திருக்கிறான்.

என்னால் அதிர்ச்சியில் பேசவே முடியலை விக்ரம். நான்... நான் எனக்கு ரொம்ப எரிச்சலாக இருக்கிறது.

ஹி இஸ் பாரலைஸிங் மை நெர்வஸ் சிஸ்டம். சே! அவனைப் பார்த்தாலே ஏதோ டிராகுலாவைப் பார்ப்பது போல் இருக்கிறது."

"ஓ... அப்படியா? டிராகுலாவை எல்லாம் உன்னால் ஜெயிக்க முடியாது."

"நான் ஒண்ணும் அவனை ஜெயிக்க வேண்டும் என்று நினைக்கவில்லை.

அப்பா அவனிடம் அவர் வரும் வரை பேசிக் கொண்டிருக்கும்படி சொன்னார்.

ஆனால் அந்த நெட்டையன் என்னவோ அவன்தான் ரொம்ப ஒழுங்கு போல நான் வேஸ்ட் போல பேசுகிறான். ஐ ஜஸ்ட் காண்ட் ஸ்டாண்ட் ஹிம்!"

"ஓ... கூல் வர்ஷா! யூ ஆர் எ பியூட்டிஃபுல் கேர்ள் அண்ட் ஐ லவ் யூ. டோண்ட் பாதர் அபௌட் ஹிம்."



"விக்ரம்... தேங்க்ஸ்!"

"சரி, அவன் யார்?"

"தெரியவில்லை. அப்பாவின் பிஸினெஸ் சம்பந்தமாக வந்திருப்பான் போல...!"

"ம்... அவன் வயது எவ்வளவு இருக்கும்?"

"தெர்ட்டீஸ் ஐ திங்க்...!"

"ஓகே. வர்ஷா! ஜாக்கிரதையா இரு. படங்களில் பார்த்திருப்பாயே...

டிராகுலாவிற்குப் பெண்களைப் பிடிக்கும். அவன் உன்னை ஏதாவது செய்துவிடப் போகிறான்."

"அவனால் என்னை ஏதும் செய்ய முடியாது. எனக்கு அவனைப் பார்த்தால் எரிச்சலாக வருகிறது.

அவன் கண்களிலும் கோபம் தெரிகிறது. ஸோ நத்திங் டு வொர்ரி!"

அப்பாவின் கார் வரும் சத்தம் கேட்டது அவளுக்கு.

"விக்ரம்! அப்பா வர்றார். நான் அப்புறம் பேசறேன். பை!" என்று அவசரமாக இணைப்பைத் துண்டித்தாள்.

"ஹாய் வர்ஷா! என்னடா டயர்டா தெரியறே?"

"ம்... ம்... பசிக்குது அப்பா. டின்னர்னு சொன்னா நீங்க அடுத்த நாள் பிரேக்-பாஸ்ட்டுக்கு வருவீங்க போல...!"

"ஸாரிடா. ஒரு அர்ஜெண்ட் ஒர்க். அதான். சரி, நீ ரிஷபை மீட் பண்ணிப் பேசினாயா?"

"ஆங்... ரிஷப்! யெஸ் பேசினேன்."

நெட்டையன் பேர் ரிஷபா எனக் குறித்துக் கொண்டாள் வர்ஷா.

"சரி, நான் ஒரு ஃபைவ் மினிட்ஸில் வந்து விடுகிறேன். யூ எண்டர்டெயின் ரிஷப்...!"

"அப்பா ஹி இஸ் நாட் அன் ஈஸி கம்பெனி!"

"ஜஸ்ட் டாக் டு ஹிம்!"

"பட்! ஐ டோண்ட் திங்க் ஹி வாண்ட்ஸ் டு டாக் டு மி. ஹி திங்க்ஸ் ஐயாம் ஸ்டுப்பிட்!"

"ம்... இன் ஸம் மேட்டர்ஸ் யூ ஆர் மை லிட்டில் கேர்ள்!" என்று செல்லமாக அவள் கன்னத்தைத் தட்டினார் வசந்தன்.

'ஓ... அப்பாவிற்குக் கோபம் இல்லை என்மீது. அப்பாடா!' எனப் பெருமூச்சு விட்டாள்.

"அப்பா! இன்னிக்குக் காலையில நான் உங்களிடம் விக்ரமிற்காகப் பணம்...!" என்று அவள் முடிக்கும் முன்பு தந்தை குறுக்கிட்டார்.

"ஸாரி... அதே பதில்தான்!" என்று சொல்லிவிட்டுக் குளியல் அறை நோக்கிச் சென்றார் வசந்தன்.

அப்பா ஏன் விக்ரம் பற்றி பேசினாலே இவ்வளவு இறுக்கமாக இருக்கிறார் என யோசித்தபடியே இருந்தாள் அவள்.

காலடிச் சத்தம் கேட்க சட்டெனத் திரும்பினாள். ரிஷப் அவள் அருகே நின்று கொண்டிருந்தான்.



"அப்பா வந்து விட்டார்."

"ஓ... தட்ஸ் குட்!"

அவன் அருகே இருக்கும்பொழுது ஏனோ ஒரு பதட்டம் தன்னில் பரவுவதை அவள் உணர்ந்தாள்.

"நான் டிவி வைத்துக் கொள்ளவா? மை ஃபேவரிட் ப்ரோக்ராம்!"

"ம்... இது உங்க வீடு. நீங்க என்ன வேணுமோ செய்யலாம்!"

ஒரு சேனலில் ஜாக்கி சான் படம் ஓடிக் கொண் டிருந்தது. அதை ஆர்வமாகப் பார்த்தாள் அவள்.

படத்தில் மூழ்கியிருந்த வர்ஷா தந்தை வந்ததைக் கவனிக்கவில்லை.

"ம்... இஸ் எனி ஒன் வாட்சிங் திஸ்!" என்று தந்தையின் குரல் கேட்டவுடன் நிஜ உலகிற்கு வந்தாள் வர்ஷா.

"அப்பா! ஐயாம் ஜாக்கி சான் ஃபேன்."

"ஓ... எனக்குத் தெரியாது அது!" என்று சொல்லிக் கொண்டே டி.வி.யை அணைத்தார்.

"ஸாரி ரிஷப். ரொம்ப லேட்டாயிடுச்சு... டின்னருக்கு. ஹோப் வர்ஷா எண்டர்டெயிண்ட் யூ!"

"யெஸ், ஆஃப்கோர்ஸ் ஷி இஸ் எ குட் ஹோஸ்ட்!" என்றான் ரிஷப்.

அவன் கண்களில் குறும்பு மின்னியது. அவன் தன்னைக் கிண்டல் செய்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

அவள் தந்தையும் அவனும் ஏதோ பேசிச் சிரித்த படியே சாப்பிட்டனர். அவர்கள் இருவருக்கும் நல்ல பழக்கம் போல... என நினைத்துக் கொண்டாள் அவள்.

பக்கத்திலிருக்கும் நிலங்கள், ஃப்ளாட்ஸ் என ரியல் எஸ்டேட் பக்கம் பேச்சு திரும்பியது. ஸோ... அப்பாவின் கடைக்கும் இவனுக்கும் சம்பந்தம் இல்லை.

இவன் ஏதோ ப்ராப்பர்டி வாங்க வந்திருக்கிறான் போல என யோசித்தபடியே சாப்பிட்டாள் அவள்.

அவள் மௌனமாகச் சாப்பிடுவதைக் கவனித்தார் வசந்தன்.

"வர்ஷா! உனக்குக் கூட அந்த ப்ராப்பர்டி தெரியுமேமா!"

"ஆ... ஆமாம். தெரியும். இட்ஸ் வெரி அட்ராக்டிவ்!" என்றாள் வர்ஷா.

"வாட் வர்ஷா! அது டிஸ்பியூடில் இருக்கும் ஒரு பாழடைந்த வீடு. அதைப் போய் அட்ராக்டிவ் என்று சொல்கிறாய்.

நாங்கள் பேசுவதைக் கவனிக்காமல் சும்மா ஒப்புக்குப் பேசாதே. எதிலும் கவனம் இருக்க வேண்டும்!" என்றார் வசந்தன்.

தனியாக இருக்கும் பொழுது இந்த மாதிரி சொல்லி யிருந்தால் அதைப் பெரிதாக எடுத்துக் கொண்டிருக்க மாட்டாள் வர்ஷா.

ஆனால் ஒரு அந்நியன் முன்பு சொன்னவுடன் ஏனோ அவள் மனதைக் குத்தியது. அவள் முகம் சுருங்கியது.



ஏதும் பதில் சொல்லாமல் ஃபோர்க்கால் புலவை அளைந்தபடியே இருந்தாள் அவள்.

டின்னர் பரிமாறிக் கொண்டிருந்த சந்திராவிற்கு வர்ஷா மூட்-அவுட் ஆகிவிட்டாள் என்று புரிந்தது.

அதற்குப் பின்பு ஆண்கள் இருவரும் பேசியபடியே சாப்பிட்டனர்.

"எனக்குத் தலை வலிக்கிறது. ப்ளீஸ் எக்ஸ்கியூஸ் மி. பை... அப்பா, குட்நைட்!" என்று சொல்லிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் அந்த இடத்திலிருந்து வெளியேறினாள் அவள்.

"என்னம்மா... சரியாவே சாப்பிடலை. சாப்பாடு பிடிக்கலையா?" என்றாள் பரிவாக சந்திரா.

"இல்லை ஆன்ட்டி! சாப்பாடு எல்லாம் ரொம்ப நன்றாக இருந்தது. ஆனால் அந்த ரிஷப்பால் என் மூட் அவுட்.

அப்பா அவன் முன்னாலே என்னை அவமானப் படுத்துகிறார்!" என்றாள் மெதுவாக.

"அப்பா எப்பவும் பேசற மாதிரிதானே பேசறார். நீ தப்பா நினைக்காதே பாப்பா.

பால் எடுத்துட்டு வரவா... கொஞ்சம் குடிம்மா!"

"சரி... ஆன்ட்டி!"

"நல்ல பெண் நீ. அப்புறம் அந்த தம்பி இன்னிக்கு இங்கேதான் தங்கப் போறார்.

நாளைக்கு பிரேக்பாஸ்ட் இங்கேதான். நீ ரூமில கொஞ்சம் சாப்பிடு. அப்புறம் சும்மா டைனிங் டேபிளில் சாப்பிட்ட மாதிரி பேர் பண்ணு நாளைக்கு...!"

"ஓ... நாளைக்கு வேற அவன் இங்கே இருக்கப் போகிறானா? ஏன் ஆன்ட்டி அப்பா இப்படி செய்யறார். சே... வர வர அப்பா ரொம்ப மாறிவிட்டார்!"

"வர்ஷா! அப்படி எல்லாம் இல்லை. அப்பா எப்பவும் போலத்தான் இருக்கிறார். உனக்கு என்னவோ இன்னிக்கு மூட் அவுட். அதான் எல்லாமே தப்பாகத் தெரிகிறது."

"ம்... அப்படித்தான் இருக்கும். உணவு ரொம்ப அருமையாக இருந்தது. ஆனால் ரசித்துச் சாப்பிட முடிய வில்லை.

சம்திங் இஸ் ராங் வித் மி!"

"சரி வர்ஷா! போய் ரெஸ்ட் எடு. தூங்கு. யூ லுக் டயர்ட்!"

"ஓ... தேங்க்ஸ். நீங்களும் படுங்க ஆன்ட்டி. குட் நைட்!" என்று சொல்லிவிட்டு அறைக்குள் சென்றாள் அவள்.

ரூம் ஹீட்டரை ஆன் செய்தாள் வர்ஷா. அன்று குளிர் ரொம்ப அதிகமாக இருப்பது போல் தோன்றியது அவளுக்கு.

இரவு உடைக்கு மாறியவள் ஸ்வெட்டரை அணிந்து கொண்டாள். கட்டிலில் படுத்தாள்.

எப்பவும் படுத்தவுடன் தூங்கி விடுவாள் வர்ஷா. ஆனால் அன்று ஏனோ தூக்கம் வர மறுத்தது.

அப்பாவைச் சம்மதிக்க வைக்க முடியுமா? தியேட்டர் விஷயத்தில் அப்பா இவ்வளவு பிடிவாதமாக இருக்கிறாரே! என்ன செய்யலாம் என யோசித்தபடியே புரண்டு புரண்டு படுத்தாள் அவள்.



எப்பொழுது தூங்கினோம் என அவளுக்குத் தெரியவில்லை. காலை வெயில் சோம்பலாக அவள் அறையினுள் எட்டிப் பார்த்தது.

அந்த வெயில் அவளுக்கு இதமாக இருந்தது. மனமின்றி மெதுவாகக் கண்களைத் திறந்தாள் அவள்.

சுவர்க் கடிகாரம் மணி எட்டு என உறுதி செய்தது. ஓ... நேற்றுப் படுத்தவுடன் தூங்காததால் இப்பொழுது நன்றாகத் தூக்கம் வருகிறது என நினைத்தபடியே எழுந்திருக்க மனமின்றிப் படுத்திருந்தாள் அவள்.

ஜன்னலின் திரைச் சீலைகள் காற்றில் பறந்தன. வெளியே தோட்டத்தில் மரங்களின் இலைகள் சோம்பலாகச் சுருங்கி இருப்பது போல் இருந்தது அவளுக்கு.

மெதுவாகப் படுக்கையில் இருந்து எழுந்தாள் அவள்.

முகம் கழுவிவிட்டு வாக் போகத் தயாரானாள் வர்ஷா. பனியைச் சூரியனின் கதிர்கள் விரட்டிக் கொண்டிருந்தன.

அவள் கைப்பேசி சிணுங்கியது.

"ஓ... விக்ரமா!" என முணுமுணுத்தபடியே பட்டனை அழுத்தினாள்.

"ஹாய் விக்ரம்! குட் மார்னிங்."

"குட் மார்னிங் வர்ஷா!"

"ஸோ, என்ன காலையில கால் பண்றே... எனிதிங் அர்ஜெண்ட்?"

"ம்... நத்திங். ஹவ் இஸ் டிராகுலா?"

"டிராகுலா இஸ் ஸ்டில் ஹியர் விக்ரம். என்னோட ப்ளட் கவுண்ட் டிரெயின் ஆயிடும் போல.

ஹி இஸ் தி மோஸ்ட் இரிடேடிங் பெர்ஸன் விக்ரம்!"

"நிஜமாவா? ஐ காண்ட் பிலீவ் இட்."

"ம்... நீ இங்கே வந்து பார். ஒரு டூ ஹவர்ஸ் இருந்தாலே உனக்கு எல்லாம் புரியும்."

"நான் வந்து விடுவேன். ஆனால் உன்னோட அப்பா என்ன சொல்வார்ன்னு தெரியலை!"

"கரெக்ட். அப்பா வில் நாட் பி கம்ஃபர்டபிள். நீ வீட்டுக்கு வர வேண்டாம்.

அந்த பார்க் கிட்ட வெயிட் பண்ணு. நான் அங்கே வர்றேன்."

"ம்... தட்ஸ் நைஸ். எப்ப வரப் போறே நீ?"

"இன்னும் ஒரு ஒன் ஹவர் டைம் கொடு விக்ரம்!"

"ஓ.கே. ஐ வில் பி தேர்... வர்ஷா!"

அங்கே நாய் குரைக்கும் சத்தம் கேட்டது.

"என்ன வர்ஷா சத்தம்?"

"ம்... ரோஸிதான் சத்தம் போடுது. அப்பா வாக் போகும்போது அதையும் வாக்கிற்கு அழைச்சிட்டுப் போவார்.

ஸோ அப்பா இங்க கிட்ட வர்றார் போல... காட்!"

"ஓ... அப்படியா! மரத்துக்குப் பின்னாடி ஒளிஞ்சுக்கோ."

"ம்... ரோஸி இஸ் ஸ்மார்ட். இப்ப என்ன செய்யறது?"



"சரி, நான் கட் செய்யறேன் லைனை. நீ இயல்பா இரு... பை!" என்று இணைப்பைத் துண்டித்தான் விக்ரம்.

அவளிடம் இருந்து ஒரு பெருமூச்சு பிறந்தது.

பனி மூட்டமாக இருந்தது தோட்டம். ரோஸி அவள் அருகே பாய்ந்து வந்தது.

"ரோஸி!" என்று நாயின் தலையைத் தடவிக் கொடுத்தாள்.

ஒரு உருவம் அவள் அருகே வந்தது. பனி மூட்டமாக இருந்ததால் அவளுக்குச் சரியாகத் தெரியவில்லை.

"அப்பா!" என்று குரல் கொடுத்தாள் அவள்.

உருவம் அருகே வந்த பின்புதான் அது ரிஷப் என்று அவளுக்குப் புரிந்தது. அவன் டிராக் சூட் அணிந்திருந்தான்.

ஜாகிங் செய்துவிட்டு வருகிறான் என்பதை அவன் முகத்தில் இருந்த வியர்வைத் துளிகள் உறுதி செய்தன.

அவள் இதயத் துடிப்பு அதிகரித்தது. இவனைப் பார்த்தாலே ஏன் எனக்கு இப்படி மூச்சு முட்டுகிறது எனத் தன்னையே கேட்டுக் கொண்டாள்.

வேகமாக வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் அவள். "ஹாய் வர்ஷா! தலைவலி தேவலையா?"

அவனிடமிருந்து அந்தக் கேள்வியை அவள் எதிர் பார்க்கவில்லை.

"என்ன?" என்றாள் ஆச்சரியமாக.

"தலை வலித்தது என்று சொல்லிவிட்டு நேற்று டின்னரில் பாதியில் எழுந்து விட்டீர்களே...! அதைத்தான் கேட்டேன்.

தலைவலி தேவலையா... என்று!"

"ஓ... மச் பெட்டர். தேங்க் யூ!"

"வீட்டிற்குள்ளேயே அடைந்திருந்தால் தலை வலிக்கும்."

"என் தலைவலி அதனால் வரவில்லை."

"ஓ... எதனால் வந்தது?"

"அதை உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை!" என்று வேகமாக வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

அவன் அவள் முன்னே வந்து நின்று அவள் வழியை மறித்தான்.

அவள் அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

"நியாயப்படி பார்த்தால் தலைவலி எனக்கு வந்திருக்க வேண்டும்.

உன் பேச்சும், செயலும் கொஞ்சம் அதிகப்படிதான்!" என்றான் அழுத்தமாக.

"லுக்... அதைச் சொல்ல உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை. என் இஷ்டம்! நான் என்ன வேண்டுமானாலும் பேசுவேன். என்ன வேண்டுமானாலும் செய்வேன்."



"ம்... உன்னை மாதிரி ஒரு பெண்ணை நான் இது வரை சந்தித்ததில்லை. யூ ஆர் வெரி அராகண்ட். பட் பியூட்டிஃபுல்!

அதுதான் உன் திமிருக்குக் காரணமா?"

"ஷட் அப்!" என்று அவன் கன்னத்தில் பளீரென அறைந்தாள் வர்ஷா.

அவன் கண்கள் கோபத்தில் சிறுத்தை போல் மின்னின. வர்ஷாவின் கோபம் அப்பவும் தணியவில்லை.

"வீட்டிற்கு வந்த கெஸ்டிற்குத் தரும் மரியாதை இதுதானா? வெரி குட்!" என்று உறுமினான்.

அவள் அவனை எரித்துவிடுவது போல் பார்த்தாள். பின்பு வேகமாக அங்கிருந்து ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கிச் சென்றாள்.

சே! இவன் வந்ததிலிருந்து பிரச்சினைதான். இவன் எவ்வளவு திமிர் பிடித்தவன். இவன் என்னை இப்படிப் பேசுகிறான்.

அப்பாவிற்கு வேறு ஆளே கிடைக்கவில்லை போல... இருந்து இருந்து இவனை கெஸ்ட்டாக அழைத்து வந்திருக்கிறார் என்று மனம் நொந்தாள்.

அவனை அடித்த பின்புகூட கோபம் அடங்கவில்லை. சே! என்னென்னவோ சொன்னானே... 'அராகண்ட் அண்ட் பியூட்டிஃபுல்!'ன்னுதானே சொன்னான்.

நான் அப்படித்தான் இருப்பேன். இவன் யார் அதைப் பற்றி கமெண்ட் அடிக்க. டிராகுலா! இரத்தம் உறிஞ்சும் டிராகுலா என அவனை மனதிற்குள் திட்டித் தீர்த்தாள்.

அறைக் கதவு தட்டும் சத்தம் கேட்டது அவளுக்கு. யாராக இருக்கும் என யோசித்தபடியே கதவைத் திறந்தாள்.

"வர்ஷா குட்டி! சாப்பிட வாம்மா. அப்பா உன்னை அழைத்து வரச் சொன்னார்!" என்றாள் சந்திரா.

"அச்சோ... எனக்கு வரப் பிடிக்கவில்லை. ப்ளீஸ் உடம்பு சரியில்லை என்று அப்பாவிடம் சொல்லிடுங்க... ஐ காண்ட் கம் ஆஸ் லாங் ஆஸ் ரிஷப் இஸ் தேர்!"

"அச்சச்சோ... அப்பா தப்பா நினைப்பாரே கண்ணா! ரொம்ப உடம்பு முடியலையா?"

"ஆமாம். நேற்று ஆரம்பித்த தலைவலி இன்னும் தீரலை. என்ன செய்வது?"

"சரிம்மா... நீ படுத்து ரெஸ்ட் எடு. நான் அப்பாவிடம் சொல்றேன். பாவம் நீ... நான் உனக்கு இங்க சாப்பாடு எடுத்துட்டு வர்றேன்."

"ஓ... தேங்க்ஸ் ஆன்ட்டி!" என்று சொல்லிவிட்டு டி.வியை உயிர்ப்பித்தாள் அவள்.

டி.வியில் ஓடிக் கொண்டிருந்த ஏதோ ஒரு சேனலைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள்.

"வர்ஷா! என்ன செய்யறே? ஓபன் தி டோர்!" என்று அப்பாவின் குரல் கேட்டவுடன் டி.வி.யை அவசரமாக அணைத்தாள் அவள்.

கதவைத் திறந்தாள். வெளியே வசந்தனின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.



"ஸோ... உனக்கு வர வர பேஸிக் மேனர்ஸ் தெரியலை வர்ஷா!"

"அப்பா! எனக்கு எல்லாம் சொல்லிக் கொடுத்தது நீங்கள்தான்!"

"ஓ... இப்ப எதிர்த்து வேறு பேசுகிறாயா?"

"இல்லை அப்பா. எனக்கு உங்க கெஸ்ட்டைப் பிடிக்கவில்லை. அதுதான் உண்மை.

அதனால்தான் நான் பிரேக்பாஸ்டிற்கு வரவில்லை. நேற்றே டின்னர் வேறு வழியில்லாமல் இருந்தேன்."

"ஏன் வர்ஷா இப்படிச் சொல்கிறாய்? ரிஷப் இஸ் எ நைஸ், சார்மிங் ஜென்டில்மேன். ஹி இஸ் வெரி ஸ்மார்ட் இன் பிஸினெஸ்."

"அப்பா! எனக்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. பட், ஹி பாதர்ஸ் மி. அவன் இருந்தால் நான்... நான் ஏனோ முட்டாள் மாதிரி இருப்பது போல் தோன்றுகிறது.

அவன் உங்களிடம் சொன்னானா? நேற்று நான் குதிரையில் வரும்பொழுது அவன் கார் மேல் கிட்டத்தட்ட விழுந்து விட்டேன்.

கொஞ்சம்கூட மனிதாபிமானம் இல்லாமல் அவன் நான் விழுந்ததைச் சட்டை செய்யாமல் குதிரைக்கு அடி பட்டுவிட்டதா என ரொம்பவே பதறினான்.

ஹி இஸ் நாட் எ ஹியூமன். சரியான காட்டுமிராண்டி. அவனால் என் நாளே ஸ்பாயில் ஆனது.

நீங்களும் என்னைக் கோபிக்கிறீர்கள், பாருங்கள். நான் என்ன செய்வது? எனக்கென யாரும் இல்லை!" என்று கண் கலங்கினாள்.

அதைப் பார்த்த வசந்தனின் மனம் இரங்கியது. ஏனோ கண் கலங்கிய மகளைப் பார்க்கும் பொழுது மனம் கசிந்தது.

"வர்ஷா! ஏன் இப்படி எல்லாம் பேசறே? இப்ப என்ன, உனக்கு ரிஷபைப் பிடிக்கலை!

அவ்வளவுதானே. ஓ.கே லீவ் இட். ஹி ஹேஸ் லெஃப்ட் அவர் ஹவுஸ்.

அவன் பிரேக்பாஸ்ட் சாப்பிட்ட பின்பு கிளம்பிட்டான். ஸோ உன் தலைவலி சரியாயிடுச்சா இப்ப...!"

"அப்பா... தேங்க்ஸ். போயாச்சா அவன்!" என்றாள் ஆர்வமாக.

"யெஸ் வர்ஷா! உனக்கு ஏன் ரிஷபை பிடிக்கலை? ஹி இஸ் எ ஸ்மார்ட் கைய். யூ ஷட் கெட் ஹிஸ் ஃபிரண்ட்ஷிப்.

சில நேரம் உன் முடிவுகள் தப்பாக இருக்கிறதும்மா. எது நல்லது எது கெட்டது என்று உனக்குத் தெரியவில்லை. இன்னும் குழந்தையாகவே இருக்கிறாய்.

அதுதான் எனக்குக் கவலையாக இருக்கிறது. உன் அம்மா இருந்திருந்தால் உன்னை நன்றாகப் பொறுப்போடு வளர்த்திருப்பாளோ என அடிக்கடி தோன்றுகிறது.

நீ தனியாக ஒரு ஃபேஷன் ஜுவல்லரி ஷாப் எல்லாம் வெச்சு நடத்தறே! பட் யூ பிஹேவ் லைக் எ கிட் மை கேர்ள்!"



"அவன் போயிட்டான்தானே அப்பா. நான் ஏன் அவனை என் ஃபிரண்டாக ஆக்கிக்கணும். அவன் அடுத்த தடவை வரும்பொழுது நான் இங்கே இருக்கவே மாட்டேன். சரி, அவன் ஏன் இங்கே வரப் போகிறான்?"

"வர்ஷா... உட்கார். நாம் இருவரும் இனி அடிக்கடி ரிஷபை சந்திக்க வேண்டி வரும். உட்கார். சொல்கிறேன்."

# 4

வாரத்திற்கு
எட்டு
நாட்கள்
இருந்தால்
கூட
எனக்குப்
போதாது!
வருடத்திற்கு
முந்நூற்று
எழுபது
நாட்கள்
இருந்தால்
கூட
எனக்குப்
போதாது!

ஒரு
நாளிற்கு
இருபத்து
ஆறு
மணி நேரம்
இருந்தால்
கூட
எனக்குப்
போதாது!
உன்னை
நினைப்பதற்கு!

அப்பாவின் முகத்தில் சட்டென ஒரு சோகம் படர்ந்தது போல் தோன்றியது அவளுக்கு.

அப்பா ஏதோ சீரியஸான விஷயம் சொல்லப் போகிறார் என்று அவள் மனதில் பட்டது.

"என்ன அப்பா, சொல்லுங்க!" என்றாள் மெதுவாக.

"பணம் வர்ஷா! தியேட்டர் பிஸினெஸ் மட்டும் நஷ்டத்தில் ஓடவில்லை. நம் பிஸினெஸும்தான்...!"

வர்ஷாவிற்கு அப்பா சொல்வதை நம்பவும் முடிய வில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

பணம் இன்று வரை அவளுக்குப் பெரிய பிரச்சினையாகத் தெரியவில்லை. ஏனோ அடிவயிற்றில் ஒரு பயம் பந்து போல் எழும்பியது.



"பட் ரிஷபிற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் அப்பா?" என்றாள் மெல்லிய குரலில்.

"வீ நீட் ஹிஸ் ஸப்போர்ட் வர்ஷா. அவனை நான் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை."

"பட் அவனை உங்களுக்கு எவ்வளவு நாளாகத் தெரியும்?"

"கொஞ்ச நாட்களாகத்தான் தெரியும்டா...!"

"ஆனால் ரிஷபைப் பற்றி நீங்கள் பேசியதாக எனக்கு ஞாபகம் இல்லை. ஸோ ஹி இஸ் நாட் எ க்ளோஸ் ஃபிரண்ட். நாட் எ பெர்ஸனல் ஃபிரண்ட். கரெக்டா அப்பா?"

"கரெக்ட். பட் ஹி இஸ் இண்டரஸ்டெட் இன் பையிங் எ ஹவுஸ். ஊட்டியில் அதுவும் மூன் க்ரெஸ்ட் எஸ்டேட் அருகே ஒரு வீடு வாங்க வேண்டும் என்று ரிஷப் விரும்புகிறான்."

"ஓ... அப்படியா! இஸ் ஹி மேரிட் அப்பா?" என்றாள் வர்ஷா.

அவன் மனைவி எப்படி இருப்பாள்? ரொம்ப மாடர்னாக, ரொம்ப ஃபேஷனபிளாக இருப்பாளோ? அவளுக்கு இந்த இடம் பிடிக்குமா?

ஊட்டியின் சீதோஷ்ண நிலை நிறையப் பேருக்குப் பிடிக்காது. எப்ப பார் குளிர், மழை என்று இருக்கிறதே என நிறையப் பேர் அலுத்துக் கொள்வார்கள்.

"இல்லை வர்ஷா! ஹி இஸ் நாட் மேரிட்."

"ம்... நான் ஏன் இதைப் பற்றி உங்களிடம் கேட்டேன் என்று தெரியவில்லை. எனக்கு ஏனென்று தெரியவில்லை அப்பா. அவனைப் பார்த்தாலே எரிச்சல் வருகிறது.

அவனைத் திரும்பப் பார்க்கவே கூடாது, கடவுளே! நான் இதுவரை அந்த மாதிரி ஒருவனைச் சந்தித்ததே இல்லை.

ஹி மேட் ஸ்ட்ரேன்ஜ் இம்பாக்ட் ஆன் மி அப்பா. ஒரு புயல் வருவதற்கு முன்பு இடி இடிக்குமே... அதுபோல்தான் இருக்கிறது அவனது வருகை.

பாவம் அவன் மனைவி என்று நினைத்துதான் கேட்டேன்... அவனுக்குத் திருமணம் ஆகிவிட்டதா என்று!"

"வர்ஷா! டோண்ட் ஓவர் டிராமடைஸ் தி ஸீன். வர வர விக்ரம் போன்ற ஃபிரண்ட்ஸ் வழியாக யூ ஆர் கெட்டிங் பேட் ஐடியாஸ்.

உன்னை வெல் மேனர்ட் கேர்ளாக வளர்க்க வேண்டும் என நினைத்தேன். பட் இட்ஸ் எ ஃபெயிலியர். நீ நேற்று நடந்த முறையிலேயே அது தெரிந்தது.

இன்றைக்கும் நீ பிரேக்பாஸ்டிற்கு வரவில்லை. முன்பெல்லாம் நீ இப்படி இல்லை. இப்பொழுதுதான் இப்படி எல்லாம் நடந்து கொள்கிறாய்.

காரணம் உன் ஃபிரண்ட்ஸ் சர்க்கிள். இட்ஸ் நாட் ஹெல்தி ஃபார் யூ..." என்று படபடத்தார் வசந்தன்.

அவர் குரலில் வலி, வருத்தம், ஏமாற்றம் எல்லாம் தெரிந்தது. அவரைப் பார்க்கக் கஷ்டமாக இருந்தது வர்ஷாவிற்கு.



"சரி... நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்!" என்றாள் மெலிந்த குரலில்.

"ம்... இங்கே ஊட்டியில் நிறைய வீடுகள் விற்பனைக்கு வந்துள்ளன.

அவற்றை எல்லாம் நீ ரிஷபிற்குச் சுற்றிக் காட்ட வேண்டும்."

"பட் வொய் மீ? நான் ஏன் சுற்றிக் காட்ட வேண்டும்?"

"ம்... ஹி இஸ் எ பிக் ஷாட். எனக்கு வயதாகி விட்டதால் என்னால் போக முடியாது.

அதனால் நீ போவதுதான் முறை. அதோடு உனக்கு ஊட்டி ரொம்ப நன்றாகத் தெரியும். அதனால்தான். அப்புறம் உனக்கு வீடு பார்ப்பது ரொம்பப் பிடித்த விஷயமும்கூட!"

வீடுகளைப் பார்ப்பது அவளுக்குப் பிடித்த ஒன்று. ஆனால் ரிஷபின் கம்பெனிதான் பிடிக்கவில்லை. சே! இவனைச் சந்தித்ததிலிருந்து எல்லாமே தப்பாகத்தான் நடக்கிறது என்று மனம் நொந்தாள்.

"அப்பா... நோ...!" என்று ஆரம்பித்தவள் தந்தையின் வாடிய முகத்தைப் பார்த்து மனதை மாற்றிக் கொண்டாள்.

"சரி, நான் வீட்டைச் சுற்றிக் காட்டும்பொழுது என்னென்ன சொல்ல வேண்டும் என்று நீங்களே சொல்லி விடுங்கள்."

"ரிஷப் ஏதேனும் உன்னிடம் ஒபினியன் கேட்டால் மட்டுமே சொல். நீயாவது வாயைத் திறந்து உன் முட்டாள் தனத்தைக் காட்டிக் கொள்ளாதே!

சரி... நான் உன்னை அப்புறமாக மீட் செய்யறேன் வர்ஷா. இன்னும் அரைமணி நேரத்தில் நீ ப்ளூ க்ரெய்ன் ஹோட்டலுக்குப் போ.

ஹி இஸ் தேர் ஒன்லி. ஹி இஸ் எக்ஸ்பெக்டிங் யூ. கரெக்டா டயத்துக்குப் போயிடு.

நவ் ஐ ஹேவ் அன் எமர்ஜென்ஸி ஒர்க். டேக் கேர் வர்ஷா!" என்று சொல்லிவிட்டு அவள் பதிலுக்குக் காத்திருக்காமல் அவர் வெளியேறினார்.

'காட்! இன்னிக்கு விக்ரமை மீட் செய்யறதா இருந்தது. ஐ நீட் டு கேன்சல் இட்!' எனத் தனக்குள்ளேயே பேசிக் கொண்டாள் அவள்.

இந்த ஐடியா கண்டிப்பாக ரிஷபினுடையதாக இருக் காது. அவன் என்னைத் திமிர் பிடித்தவள் என்று பட்டம் கட்டி இருக்கிறான்.

ஸோ ஹி கேனாட் ஸ்டாண்ட் மை கம்பெனி. அப்பாவின் வேலைதான் இது. நான் என் நண்பர்களுக்காக வீடு வேட்டையாடி இருக்கிறேன்.

அதை வைத்துக் கொண்டு அப்பா இந்த மாதிரி முடிவு செய்திருப்பார்.

"என்னடா வர்ஷா! ஏதோ ரொம்ப யோசிக்கிற மாதிரி தெரியுது!" என்று சந்திராவின் குரல் அருகே கேட்க நிஜ உலகிற்கு வந்தாள் வர்ஷா.

"ம்... ஆன்ட்டி! நான் வீடு வேட்டைக்குப் போகிறேன். யாருக்குத் தெரியுமா? என் தலைவலிக்குக் காரணமான ரிஷபிற்கு.



அவனைப் பார்த்தாலே, அதுவும் அவன் கண்களைப் பார்த்தாலே எனக்குப் பயமாக இருக்கிறது."

அதைக் கேட்டுச் சந்திரா சிரித்தாள்.

"ஏன் கண்ணம்மா அவனைப் பார்த்துப் பயப்படு கிறாய்?"

"தெரியலை ஆன்ட்டி. அப்பா வேறு ரிஷபின் உதவி நமக்குத் தேவைப்படும்னு சொல்றார்.

ரிஷப் அப்பாவின் பிஸினெஸை டேக்-ஓவர் செய்து விடுவாரோ என்று எனக்குப் பயமாக இருக்கிறது."

"உன்னுடைய அப்பாவிற்குத் தெரியும் என்ன செய்வது என்று! டோண்ட் ஒர்ரி கண்ணம்மா!"

"சரி ஆன்ட்டி... நான் கிளம்பறேன். ப்ளூ க்ரெய்ன் ஹோட்டலிற்குப் போக வேண்டும்.

அப்பா வேற கரெக்டா டயத்திற்குப் போகச் சொன் னார்கள்!" என்று வேகமாக நடந்தாள் வர்ஷா.

ஊட்டியின் பெரிய ஹோட்டல் ப்ளூ க்ரெய்ன். ரொம்ப பணக்காரர்கள் தங்கும் ஹோட்டல் அது. எல்லா வசதிகளும் நிரம்பிய அந்த ஹோட்டலில் தங்குகிறான் என்றால் ரிஷப் ரொம்ப வசதியானவன்தான்.

வெள்ளை டாப்ஸும், ஒரு ஜீன்ஸும் அணிந்து கொண்டு தன்னைக் கண்ணாடியில் பார்த்தபொழுது ஏனோ ரிஷப் சொன்னது காதில் ஒலித்தது.

'யூ ஆர் அராகண்ட்! பட் பியூட்டிஃபுல்!' என்று அவன் சொன்னது நினைவிற்கு வந்து தொலைத்தது.

'ஹெல் வித் ஹிம்!' என்று முணுமுணுத்துவிட்டு ஸ்வெட்டர் ஒன்றை மேலே அணிந்து கொண்டு கிளம்பினாள் வர்ஷா.

காரில் ஏறி அமர்ந்தவள், அப்பா சொன்னதை யோசித்தபடியே காரைச் செலுத்தினாள்.

பிஸினெஸ் விஷயத்தைப் பற்றி அப்பா என்னிடம் இன்று வரை ஏதும் சொன்னது இல்லை. ஆனால் இன்று முதல் முறையாக ஏதேதோ பேசினார்.

நிஜமாலுமே பிஸினெஸில் ரொம்ப பிரச்சினையா? பணம் ரொம்ப நஷ்டமா? - என யோசித்தபடியே காரைச் செலுத்தினாள்.

அடுத்த பத்து நிமிடத்தில் ஹோட்டலின் பிரம்மாண்ட வரவேற்பறை முன் இருந்தாள் அவள்.

ரிசப்ஷனில் இருந்த பெண்ணிடம் தன் பெயரைச் சொன்னாள். "நான் மிஸ்டர் ரிஷபைப் பார்க்க வந்திருக் கிறேன்."

ரிசப்ஷனிஸ்ட் அவளைப் பார்த்துப் புன்முறுவல் ஒன்றைச் சிந்தினாள்.

'ரிஷப் இஸ் எ லக்கி மேன். பணத்தில் புரள்பவன் போல. அவன் தங்கியிருக்கும் அறை ரொம்ப எக்ஸ்பென்ஸிவ். இதோ இப்பொழுது அவனைத் தேடி ஒரு அழகான இளம்பெண். ம்... ம்... ஹி இஸ் எ லக்கி மேன்!" என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் ரிசப்ஷனிஸ்ட்.

"ஓ.கே. ஸார். வர்ஷா மேடமை உங்கள் ரூமிற்கு அனுப்புகிறேன்!" என்று சொல்லியபடியே ரிசீவரை வைத்தாள் அவள்.



வர்ஷா மனதிற்குள் அவன் கீழே இறங்கி வந்தால் நன்றாக இருக்கும். நான் அவனைத் தேடிப் போக வேண்டியிருக்கிறதே என நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

"மேடம்! மூன்றாவது தளத்தில் - அறை நம்பர் ஒன்று. அங்கேதான் ரிஷப் ஸார் இருக்கிறார்.

அந்தத் தளத்தில் ஒரே ஒரு அறைதான் இருக்கிறது. அதனால் உங்களுக்குக் கண்டுபிடிப்பது சுலபம்தான்."

"ஓ.கே. தேங்க்ஸ்!" என்று சொல்லிவிட்டு லிஃப்ட் நோக்கி நடந்தாள்.

ஏனோ ஒரு பயம் அவள் மனதை ஆக்கிரமித்தது. அவனைக் கைநீட்டி வேறு அடித்து விட்டேன். அதை எல்லாம் மனதில் வைத்துக் கொண்டு என்னைக் குத்திப் பேசப் போகிறான்.

சே... அப்பாவிற்காக இதெல்லாம் பொறுத்துப் போக வேண்டி இருக்கிறது என நினைத்தபடியே மூன்றாம் தளத்தில் இறங்கினாள் அவள்.

அங்கிருந்த அறையின் கதவைத் தட்டினாள் அவள். கதவைத் திறந்தவனைப் பார்த்தாள் வர்ஷா.

ரிஷப் ஒரு நீலநிற டி-ஷர்ட் அணிந்திருந்தான். பிரவுன் கலர் பேண்ட் அணிந்திருந்தவனைப் பயத்தோடு பார்த்தாள் வர்ஷா.

"குட் மார்னிங் வர்ஷா. தேங்க்ஸ் ஃபார் கம்மிங்...!"

"இட்ஸ் ஓ.கே. வீடு காட்டுவது ஒன்றும் சிரமமான வேலை இல்லை!" என்றாள் டேபிளில் இருந்த மேகஸின்ஸைப் பார்த்தபடியே.

அந்த மேகசினில் சில ப்ராபர்டிஸ் பற்றித் தெரிந்து கொள்ளலாம் என்று அவளுக்குத் தெரியும்.

"ம்... யூ லைக் டு கிளான்ஸ் தெம். ஸம் மேகஸின்ஸ் ஆர் குட் ஆன் ப்ராபர்டிஸ்!"

"நீங்கள் என்னிடமிருந்து ஹவுஸஸ் பற்றி என்ன தெரிந்து கொள்ள விரும்புகிறீர்கள்?

உங்களுக்கே பார்த்தால் தெரியுமே! அது ரெஸி டென்ஷியல் ஏரியாவா இல்லை. கமர்ஷியல் ஏரியாவா என்று?

ஐ மீன் நீங்களே இதை யெல்லாம் பார்த்தாலே தெரிந்து கொள்வீர்கள்... அப்புறம்... நான் எதற்கு என்று புரியவில்லை!"

"ம்... மே பி! பட் லோக்கல் நாலெட்ஜ் மே பி ஹெல்ப் ஃபுல்... அதுதான் ஒரு நல்ல ஆளாக அனுப்பச் சொன்னேன் உன் அப்பாவிடம்!

அவர் உன்னை அனுப்பி வைத்திருக்கிறார். என்ன செய்வது?" என்றான் சலிப்பாக.

"ஓ... சரி, நீங்கள் ஏன் இங்கே தங்க வேண்டுமென்று நினைக்கிறீர்கள்?" என்றாள் கோபத்தை அடக்கியபடி.

"இட்ஸ் எ பியூட்டிஃபுல் ப்ளேஸ். தட்ஸ் வொய். ஏன் உனக்கு ஏதாவது ஆட்சேபணை இருக்கிறதா?"

"இ... இல்லை. உங்களிடம் பணம் இருக்கிறது. உங்களுக்கு வாங்க வேண்டும் என்று ஆசை இருக்கிறது. ஸோ... யூ கோ அகெட் வித் யுவர் பிளான்!"



"தேங்க்ஸ்... பை தி பை... பணம் பற்றி பேசியவுடன் எனக்கு ஒன்று நினைவுக்கு வருகிறது.

உன்னுடைய அப்பா பிஸினெஸ் பற்றி உன்னிடம் பேசினாரா... இப்பொழுது அது நஷ்டத்தில் இயங்குகிறது எனச் சொன்னாரா? அதற்கு பேக்-அப் பிளானாக என்னை பிஸினெஸில் சேர்ப்பதாக இருக்கிறார்.

அதைப் பற்றிப் பேசினாரா? இந்தா, டீ சூடாக இருக்கிறது. குடித்து விட்டுச் சொல்!" என்று ஃப்ளாஸ்க்கில் இருந்து தேநீரை ஒரு கோப்பையில் ஊற்றி அவளிடம் நீட்டினான்.

வர்ஷாவிற்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. இதயத் துடிப்பு அதிகரித்தது. சே! இவன் முன்னால் இப்படி அவமானப்பட வேண்டியிருக்கிறதே எனத் துடித்தாள்.

"ம்... இதுவரை நாங்கள் ஃபேமிலி பிஸினஸ் மாதிரி செய்து வந்தோம். ஐ ஹேட் டு ஸீ அன் அவுட்ஸைடர் ஜாயின் அஸ்!"

"இப்பொழுது இருக்கும் நிலையில் உலகில் என்னவெல்லாமோ நடக்கிறது. ஸோ... இதெல்லாம் ஆச்சரியம் இல்லை!" என்றான் கூலாக ரிஷப்.

தேநீரைக் குடித்து விட்டுக் கோப்பையை டேபிளில் வைத்தாள் வர்ஷா.

"சரி, போகலாமா?" என்றான் அவன்.

"ஓ.கே. வாங்க."

"யார் காரில் போகப் போகிறோம்? எனக்கு இங்கே நிறைய குறுக்கு வழி தெரியும். அதனால் நானே காரை ஓட்டுகிறேன்!" என்றாள் வர்ஷா.

"இல்லை. வேண்டாம்! நீ குதிரை ஓட்டுவதைப் போல்தான் காரை ஓட்டுவாய். அதனால் என் காரிலேயே போகலாம்."

"நான் நன்றாகக் கார் ஓட்டுவேன். அதனால் என் காரிலேயே போகலாம்!"

"இந்த மாதிரி ஆர்க்யூ செய்வது எனக்குப் பிடிக்காது. ஸோ! நேரத்தை வீணடிக்காமல் வா. நீ எங்கே யார் மீதாவது மோதிவிடப் போகிறாய் என்று பயந்து கொண்டே உட்கார முடியாது."

எவ்வளவு திமிர் இவனுக்கு... சே! இவனிடம் வந்து இப்படி எல்லாவற்றுக்கும் சண்டை போட வேண்டியிருக்கிறதே என மனம் குமைந்தாள் அவள்.

"சீட் பெல்ட்டைப் போட்டுக் கொள்."

அதை அவள் போட வேண்டும் என்று நினைத்தாள். ஆனால் அவன் சொன்னபின்பு போட்டுக் கொள்ள மனம் இடம் கொடுக்கவில்லை.

"நான் ஃப்ரீயாக உட்கார விரும்புகிறேன்...!" என்றாள் அழுத்தமாக.

இவன் சொல்வதை நான் கேட்க மாட்டேன் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் அவள். இவன் யார் என்னை அதிகாரம் செய்வதற்கு?

'இதைச் செய். இதைச் செய்யாதே!' என்று எப்ப பார் கட்டளைகள் பிறப்பித்துக் கொண்டிருக்கிறான். இவன் பிஸினெஸில் மூக்கை நுழைத்தால் அவ்வளவுதான் என்று பதறியது அவள் மனம்.



"அப்பாவின் பிஸினெஸ் பற்றி ஐ மீன் ஃபினான்ஸ் பற்றி எனக்கு ஏதும் தெரியாது.

ஐயாம் எ ஜுவல் டிஸைனர்."

"அஃப்கோர்ஸ் யூ ஆர்...!" என்றான் கிண்டலாக அவன்.

வர்ஷாவிற்கு எரிச்சலாக வந்தது. நான் வேலை பார்க்கிறேன் என்பதை இவன் நம்ப மறுக்கிறான். வேலை பார்ப்பதற்குத் தேவையான திறமை எனக்கு இருக்கிறது என்பதை இவன் நம்பக்கூட மறுக்கிறானே...!

அவள் கைப்பேசி சிணுங்கி அவளை உலகிற்கு மீண்டும் அழைத்து வந்தது.

"விக்ரம்! நான் இப்ப வெளியில இருக்கேன். ஸாரி. உன்கிட்டே சொல்ல மறந்திட்டேன்."

"இட்ஸ் ஓ.கே. ஹவ் இஸ் டிராகுலா! அவனால எந்தப் பிரச்சினையும் இல்லையே உனக்கு?"

விக்ரம் மெதுவாகத்தான் பேசினான். இருந்தாலும் கேட்டு இருக்குமோ ரிஷபிற்கு என்று அவள் பயந்தாள்.

"இ... இல்லை... விக்ரம்! ஸாரி. நான் இப்ப ரொம்ப பேச முடியாது. வெளியில இருக்கேன். அப்புறம் பேசறேன்!" என்று சொல்லிவிட்டு இணைப்பைத் துண்டிக்கும் பட்டனை அழுத்துவதற்குப் பதிலாக ஸ்பீக்கர் பட்டனைப் பதட்டத்தில் அழுத்தினாள் அவள்.

"டிராகுலா ரிஷபிடம் நீ ஜாக்கிரதையாக இரு. பை டியர்!" என்று விக்ரம் சொன்னவுடன் திடுக்கிட்டாள் வர்ஷா.

நிசப்தமாக இருந்ததால் அவன் குரல் தெள்ளத் தெளிவாகக் கேட்டது, கார் முழுவதும்.

"காட்!" என்று தலையில் கை வைத்தாள் வர்ஷா.

அவனை ஓரக் கண்ணால் பார்த்தாள். அவன் முகம் இறுகிப் போயிருந்தது. கடவுளே! விக்ரம் இப்ப பார்த்தா கால் செய்யணும்! எல்லாம் என் நேரம் எனப் பதறினாள் அவள்.

"ஸோ உன் பாய்-ஃபிரண்ட் பேர் விக்ரமா? டிராகுலா அப்புறம் வேறு என்ன பெயர் வைத்திருக்கிறாய் எனக்கு?" என்றான் கூலாக.

# 5

நான்
இந்த
உலகில்
தோன்றியவுடன்
அழுதேனாம்!
உன்னைச்
சந்திக்கப்
போகிறேன்
என்று
எனக்குத்
தெரியாது
அப்பொழுது!



அதனால்
தான்
அழுதேன்!
இல்லை...
உன்னைச்
சந்திக்கப்
பல
வருடங்கள்
காத்திருக்கப்
பொறுமை
இல்லாமல்
அழுதேனா?
உனக்குத்
தெரியுமே
பெண்ணே,
சொல்!

"நான்... நான்... ஐயாம் ஸாரி!" என்றாள் வர்ஷா தணிந்த குரலில்.

"ம்... வசந்தன் ஸாருக்கு இப்படி ஒரு பெண். சே! பாவம் அவர்.

சரி, என்ன சொல்கிறான் விக்ரம். உன் பாய்-ஃபிரண்ட்?"

"அது உங்களுக்குத் தேவையில்லாத ஒன்று."

"அப்படியா! அப்ப இப்படிச் செய்யலாமா?"

"என்ன, சொல்லுங்கள்?"

"நீ வந்த முதலாக என்னிடம் நடந்து கொண்டதை, என்னிடம் கேவலமாகப் பேசியதை எல்லாவற்றையும் உன் அப்பாவிடம் சொல்லவா?

டின்னருக்கு நான் அலைந்து கொண்டு வந்தேன் என்று முதலில் சொன்னாய். அப்புறம் என்னிடம் சண்டைக்கு வந்தாய்.

அப்புறம் கைநீட்டி அடித்தாய். அப்புறம் உன் விக்ரமிடம் என்னை டிராகுலா என்று சொன்னதை என எல்லாமே பட்டியல் இட்டுச் சொல்லவா?"

"யூ... யூ ஸவுண்ட் லைக் எ பிளாக் மெயிலர். சே! நீங்கள் இவ்வளவு மோசமாக இருப்பீர்கள் என நான் நினைக்கவில்லை!" என்று சீறினாள்.

"எப்படி வேண்டுமானாலும் கூப்பிட்டுக் கொள். சரி, சொல்! உன் விக்ரம் என்ன வேலை பார்க்கிறான்?"

"அவன் பிஸினஸ் செய்கிறான்."

"ஓ... என்னைப் போல்தானா அவனும்!"

"ப்ளீஸ் விக்ரமை உங்களோடு ஒப்பிடாதீர்கள். ஹி இஸ் எ ஜெம்!"

"ஓ... ஜெம். அப்ப கழுத்தில் மாலையாக மாற்றி அழகு பார்ப்பதுதானே!"



அவள் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள். எல்லாம் என்னால் வந்தது. செல்போனை ஒழுங்காக ஆபரேட் செய்திருந்தால் பிரச்சினை இல்லை.

முட்டாள்தனமாகச் செய்து விட்டேன். ஆனால் இந்த நெட்டையன் அருகில் இருந்தால் இப்படித்தான் ஆகிவிடுகிறது.

"சரி, இது என்ன இடம்?" என்றான் கார் ஓட்டியபடியே அருகில் இருந்த கட்டடத்தைக் காட்டியபடி.

"ம்... இது லிட்டில் தியேட்டர். அமெச்சூர் ஆர்டிஸ்ட்ஸ் இங்கே நிறைய டிராமாஸ் நடத்துவார்கள்.

இன்ஃபேக்ட் இதை விற்கப் போகிறார்கள். நான்கூட இந்தத் தியேட்டரை வாங்குவதைப் பற்றி அப்பாவிடம் பேசினேன்.

பட் நோ லக்!" என்று சொன்ன பிறகுதான் அவளுக்கு உறைத்தது, உளறி விட்டோம் என்று.

"ஸோ நீ இதில் டிராமாஸ் பெர்ஃபார்ம் செய்திருக்கிறாயா?"

"இ... இல்லை!"

"ஸோ... விக்ரம் இதில் ஸ்டேஜ் ஷோ செய்திருக்கிறானா?"

"ஆமாம்..."

"அவனுக்காக நீ தியேட்டர் வாங்குவது பற்றி அப்பாவிடம் பேசினாயா?"

அவள் ஏதும் சொல்லாமல் பேசாமல் இருந்தாள்.

"ஸோ மௌனம் சம்மதம் என்று அர்த்தம். சே! தன் கேர்ள் ஃபிரண்ட்கிட்டே இருந்து ஒரு பிராபர்ட்டியை எதிர்பார்த்துக் காத்திருக்கானே விக்ரம்!

நாட் ஸோ குட் ஆஃப் ஹிம். அவனால் சில லட்சங்களைப் புரட்டி தியேட்டர்கூட வாங்க முடியாதா? ஹி நீட்ஸ் யுவர் மணி!

ஷேம் ஆன் ஹிம். உனக்கே இது அவமானமாகத் தெரியவில்லையா?" என்று உறுமினான்.

"லுக்! என்னுடைய பெர்சனல் விஷயத்தில் தலை யிடுவது எனக்குப் பிடிக்கவில்லை!" என்றவள் சட்டெனக் கத்தினாள்.

"காரை நிறுத்துங்கள்... ப்ளீஸ்!"

"இரு. இங்கே நிறுத்த முடியாது. கூட்டமாக இருக்கிறது. ம்... இங்கே நிறுத்தலாம்!" என்று காரைச் சாலை ஓரமாக நிறுத்தினான் ரிஷப்.

காரின் ஜன்னலைத் திறந்தாள் வர்ஷா. தலையை வெளியே நீட்டி "பீட்டர்... பீட்டர்!" என்று கத்தினாள்.

அந்தச் சாலையில் கூட்டம் அதிகமாக இருந்தது. சாலையில் சிலர் அவளைத் திரும்பிப் பார்த்தனர்.

ஆனால் பீட்டர் கருமமே கண்ணாக இரண்டு கைகளில் இருந்த காய்கறி கவர்களைப் பத்திரமாகத் தூக்கிக் கொண்டு நடந்து போய்க் கொண்டிருந்தான்.

"சே! பார்க்க மாட்டேங்கிறானே!" என்று முணு முணுத்தாள்.



"ம்... பரிதாபம்! நீ கத்துவது ஊருக்கே கேட்கிறது. பீட்டருக்குக் கேட்கவில்லை. ஹோப் ஹி இஸ் நாட் டெஃப்!

நீ ஸ்டேஜில் நடித்தால் உனக்கு மைக்கே தேவை இல்லை வர்ஷா!"

அவள் அவனை முறைத்தாள். பீட்டர் அவர்கள் காரைக் கடந்து போவதை ரிஷப் கவனித்தான்.

"ஓடு வர்ஷா! அவன் கிட்டேதான் இருக்கிறான்."

சட்டென கார் கதவைத் திறந்து கொண்டு வேகமாக நடந்தாள் அவள்.

"பீட்டர்! எத்தனை தடவை உன்னைப் பெயர் சொல்லிக் கத்திக் கத்திக் கூப்பிடுவது?"

"ஸாரி... ஸாரி! ஏதோ யோசனையில் போய்க் கொண்டிருந்தேன்."

"சரி... நான் விக்ரமை இன்று பார்ப்பது சந்தேகம். நீ அவனிடம் சொல்லிவிடு.

எனக்கு ஃபோன் செய்ய வேண்டாம் என்று சொல்லி விடு. ப்ளீஸ் மறக்காமல் சொல்லி விடு.

நான் இப்ப உடனே கிளம்ப வேண்டும். பை பீட்டர்!" என்று சொல்லிவிட்டு காரை நோக்கி நடந்தாள் அவள்.

"ஸோ... பீட்டரிடம் பேசிவிட்டாயா?" என்றான் ரிஷப்.

"ம்... தேங்க்ஸ்!"

"ஸோ... இப்ப திருப்தியா?"

"யெஸ்."

"போகலாமா இப்ப?"

"ஓ... போகலாமே... பீட்டர் ஒன்றும் என்னை அவாய்ட் செய்யவில்லை.

ஏதோ யோசித்துக் கொண்டு போய்க் கொண்டிருந்தான். பாவம்! நான் கூப்பிட்டது அவன் காதில் விழவில்லை!"

"ம்... எந்த ஆணும் உன்னை அவாய்ட் செய்ய மாட்டான்!" என்றான் மெதுவாக.

"நான் மெஸேஜ் ஒன்று சொல்லவே பீட்டரிடம் பேசினேன். நீங்கள் நினைப்பது போல் ஒன்றும் இல்லை!" என்று படபடத்தாள்.

"குட்... இன்னும் இப்ராஹிமை மட்டும்தான் நீ சந்திக்க வேண்டும்.

கரெக்டா? வழியில் வரலாம். பார்த்துக் கொண்டே வா!"

"எனக்குப் புரியவில்லை."

"இல்லை... முதலில் விக்ரமோடு போனில் பேசினாய். அப்புறம் பீட்டரை வழியில் பார்த்து நேரில் பேசினாய்.

அதே மாதிரி அடுத்தது இப்ராஹிமைப் பார்க்க வேண்டி வரும் என்று சொன்னேன்."

அவள் அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

"இந்த ஏரியாவில் இரண்டு வீடுகள் விலைக்கு வருகின்றன. அதைப் பார்க்கலாம் வா!" என்று சொல்லிவிட்டு காரை அவன் நிறுத்தினான்.



காரைக் கண்டவுடன் எஸ்டேட் ஏஜெண்ட் வேகமாக ஓடி வந்தான்.

"குட் மார்னிங் ஸார். மேடம், குட் மார்னிங்!"

"வாங்க ஸார்!" என்று எஸ்டேட் மானேஜர் ரிஷபை வரவேற்றார்.

"இந்த வீட்டைப் பாருங்கள் ஸார். ரொம்ப அருமையான வீடு.

புது வீடு. ஆனால் பழங்காலப் பங்களா முறையில் டிசைன் செய்யப்பட்டது.

கதவு, ஜன்னல், தரை எல்லாமே தேக்கு. மேடம்! சமையல் அறையைப் பாருங்க.

ரொம்பப் பெரிதாக, விசாலமாக இருக்கும். அப்புறம் குளிர் போவதற்காக அங்கங்கே தணல் மூட்ட ஏதுவாக அமைப்பு இருக்கிறது. இந்த அமைப்பை நீங்கள் பூட்டியும் வைக்கலாம்.

அதனால் குழந்தைகள் இருந்தால்கூடப் பயமில்லாமல் நெருப்பு மூட்டலாம்."

வர்ஷா வீட்டின் மற்ற அறைகளைப் பார்வையிட்டபடி இருந்தாள். இங்கே விக்ரம் இருந்தால்... நன்றாக இருக்கும் என நினைத்தபடியே ஃபிரென்ச் விண்டோ வழியாகத் தெரிந்த பசுமையை ரசித்துக் கொண்டிருந்தாள் அவள்.

தோளில் சட்டென ஒரு கைபட திடுக்கிட்டுத் திரும்பினாள்.

அங்கே ரிஷப் நின்று கொண்டிருந்தான்.

"காட்!" என்று கண்கள் படபடக்க முணுமுணுத்தாள் அவள்.

"என்ன, பயந்திட்ட போல!"

"யெஸ்... நான் இயற்கையை ரசித்துக் கொண் டிருந்தேன். ஐ வாஸ் இன் எ டிஃபரண்ட் வேர்ல்ட்."

"ஸாரி... நான் இரண்டு முறை பெயர் சொல்லி அழைத்தேன். நீ திரும்பவில்லை."

"நான் கவனிக்கவில்லை. இந்தத் தோட்டம் ரொம்ப அழகாக இருக்கிறது. நான் அதில் லயித்து விட்டேன்."

"இட்ஸ் ஓ.கே. வா, போகலாம்!"

அவள் இரண்டு அடி எடுத்து வைத்திருப்பாள். சட்டென அந்த இடமே மிதப்பது போல் அவளுக்குத் தோன்றியது.

அந்த அறை அப்படியே சுழன்றது. பயந்து போன வர்ஷா தோராயமாக அருகில் இருந்தவனின் கையைப் பற்றினாள்.

"எனக்குத் தலை... தலை சுற்றுகிறது!" என்று முனகினாள்.

"ஓ... காட்! அடிக்கடி உனக்குத் தலைவலி வருமா? இங்கே உட்கார்!" என்று மென்மையாக அவளைக் கைத் தாங்கலாக சோபாவில் உட்கார வைத்தான்.

"தலைவலி இல்லை... இது. ஐ ஃபீல் டிஸ்ஸி... தலை சுற்றுகிறது!" என்றாள் மெதுவாக.

அவனின் அண்மை அவளுக்கு ஏதோ செய்தது. மூச்சு விடக்கூடச் சிரமமாக இருந்தது. ஏனோ அழுகை வந்தது.



கஷ்டப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டு சோபாவில் உட்கார்ந்திருந்தாள் அவள்.

"இந்தா! இந்தத் தண்ணீரைக் குடி!" என்று வாட்டர் பாட்டிலை அவளிடம் நீட்டினான்.

அதிலிருந்த தண்ணீர் திவ்யமாக இருந்தது அவளுக்கு. தன் நாக்கால் உதட்டை ஈரப்படுத்திக் கொண்டாள்.

"பை தி பை நீ காலையில் பிரேக்பாஸ்ட் சாப்பிட்டியா?"

அப்பொழுதுதான் அவளுக்குச் சாப்பிடவில்லை என்பது நினைவுக்கு வந்தது. காலையில் அப்பா சொன்ன வுடன் அவசர அவசரமாகக் கிளம்பியது ஞாபகம் வந்தது.

"சாப்பிடாததால்தான் உனக்குப் பசியில் மயக்கம் வந்திருக்கு..."

"ஆமாம். அது... அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?"

"உன் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது. யூ லுக் டயர்ட்! அப்புறம் உன் உதடுகள் ரொம்ப காய்ந்து இருக்கின்றன.

அதனால்தான் நீ அதை அடிக்கடி நாக்கால் தடவி ஈரப்படுத்திக் கொள்கிறாய்."

அவன் தன்னை ரொம்பவே கவனித்திருக்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது. ஏனோ அவள் கன்னங்களில் செம்மை படர்ந்தது.

"இந்தா... இதைச் சாப்பிடு!" என்று அவளிடம் ஒரு சாக்லேட் பாரை நீட்டினான்.

"எ... எனக்கு வேண்டாம்!"

"ம்... குழந்தைகள் விரும்பிச் சாப்பிடும் பொருள் இது. அதனால் உனக்கும் பிடிக்கும்.

சாப்பிடு. சாப்பிட்டால் யூ வில் கெட் எனெர்ஜி!" என்று வற்புறுத்தி அவள் கையில் திணித்தான்.

பசியினால் அதைக் கடகடவெனச் சாப்பிட்டாள் அவள். அவன் உதடுகளில் ஒரு புன்னகை பரவியது.

"யூ ஆர் எ ரியல் கிட்!" என்று சொல்லியபடியே அவள் உதட்டின் அருகே ஒட்டியிருந்த சாக்லேட் கிரீமைத் துடைத்தான்.

அவள் எழுந்தாள். ஏனோ அவனின் தொடுதல் அவள் உடலில் மின்சாரம் பாய்ந்தது போல் ஒரு உணர்வை ஏற்படுத்தியது.

"போகலாமா? அந்த ஏஜெண்ட் எங்கே?" என்றாள் வர்ஷா.

"அவர் போய் விட்டார். அந்த இன்னொரு வீடு எங்கே? இங்கிருந்து ரொம்ப தூரமா?"

"இ... இல்லை. இங்கிருந்து ஒரு கிலோமீட்டர் தூரம்தான். அதையும் பார்த்துவிட்டே போகலாம்!"

"உன்னால் முடியுமா? யூ ஆர் டயர்ட் ஆல்ரெடி!"

"இட்ஸ் ஓகே. பார்த்து விடலாம்!"

"ஃபைன். வா போகலாம்!" என்றான் ரிஷப்.

காரில் அமர்ந்த பின்பு சோர்வு நீங்கியது போல் இருந்தது அவளுக்கு. அப்பாவின் பிஸினெஸில் இவன்



மூக்கை நுழைத்து விடுவானோ என்ற பயம் வேறு அவள் மனதை அழுத்தியது.

"இந்த வீட்டைப் பார்த்த பின்பு நாம் லன்ச் சாப்பிட்டு விட்டுப் போகலாம்.

பாவம் என்னால் உன் பிரேக்பாஸ்ட் வேறு ஸ்கிப் ஆகிவிட்டது."

"இல்லை. வேண்டாம். எனக்கு இப்ப பசியில்லை."

வர்ஷாவிற்குப் பசி காதை அடைத்தது. அந்தச் சாக்லேட் பார் வேறு அவள் பசியைத் தூண்டி விட்டிருந்தது. ஆனாலும் அவனுடன் சேர்ந்து சாப்பிடப் பிடிக்கவில்லை.

அதனாலேயே பசி இல்லை என்று பொய் சொன்னாள் அவள்.

"என்ன வர்ஷா போரடிக்கிறதா?"

"இல்லை... இந்த வீடு அழகாக இருக்கிறது. அதைப் பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன்."

"ஓ... ஆர் யூ பிளானிங் டு லீவ் யுவர் ஹோம் அண்ட் டேக் திஸ்."

"ம்... நோ. பட் எதுவுமே நிரந்தரம் இல்லை வாழ்க்கையில். நேற்று வாழ்க்கை ஒரு மாதிரி இருந்தது. இன்று ஒரு மாதிரி இருக்கிறது.

அப்பாவின் பிஸினெஸ் ட்ரபிளில் இருக்கிறது என்று எனக்கு நேற்றுத்தான் தெரிந்தது. சட்டென எல்லாமே மாறிவிட்டது போல் இருக்கிறது.

உங்கள் நிழல் என் மேல் பட்டவுடன்தான் இந்த மாதிரி மாற்றங்கள் எல்லாம் ஏற்பட்டு இருக்கிறது. என்ன செய்வது?"

"ஓ... எல்லாவற்றுக்கும் நான்தான் காரணம் என்று சொல்கிறாய். தேங்க்ஸ் ஃபார் யுவர் காம்ப்ளிமெண்ட்ஸ்.

சேன்ஜ் இஸ் இன்எவிடெபிள். சேன்ஜஸ் கேன் பி பெட்டர் ஃபார் லைஃப்!"

"ஓ... பிராமிஸஸ்... யூ ஆர் பிராமிஸிங் அபௌட் சம்திங் பெட்டர் ஃபார் மி. வெரி ஸ்ட்ரேன்ஜ்!"

"ம்... நான் எதையும் உனக்கு பிராமிஸ் செய்யவில்லை!" என்றான் பட்டென ரிஷப்.

அதற்குப் பின்பு இருவரும் ஏதும் பேசவில்லை. அவன் காரை விரைவாக ஓட்டினான்.

அந்த இன்னொரு வீட்டின் முன் கார் நின்றது. அது அடுக்கு மாடி குடியிருப்பில் ஒரு ஃபிளாட் என்பதைப் பார்த்தவுடன் ரிஷப் வேண்டாம் என முடிவு எடுத்து விட்டான்.

"சரி, வா. ஹோட்டல் ப்ளூ க்ரெய்ன் போய் விடலாம். அங்கேயே லன்ச் சாப்பிட்டு விடலாம்."

"இல்லை... வேண்டாம்!"

"ஏன் விக்ரமிடம் லன்ச் அப்பாயின்ட்மெண்ட் ஏதேனும் வைத்திருக்கிறாயா?"

"தட்ஸ் நன் ஆஃப் யுவர் பிஸினெஸ்."

"தென் கம் வித் மி!" என்றான் தணிந்த குரலில்.



"சரி!" என்பது போல் தலையசைத்தாள் அவள்.

ஹோட்டல் லன்ச் ஹால் அழகாக இருந்தது. பெயிண்டிங், அலங்கார விளக்குகள், செயற்கை நீரூற்று, எனப் பார்க்கப் பார்க்க எல்லா இடமும் அழகாக இருந்தது.

லன்ச் ஹால் நிரம்பி வழிந்தது. ஆனால் ரிஷபைப் பார்த்தவுடன் மேனேஜர் ஓடி வந்தார்.

"ஸார் அந்த ஸ்பெஷல் ரூமில் உட்காருங்க ஸார். உங்களுக்காக ரூம் பிளாக் செஞ்சிருக்கோம்."

"ஓ... தேங்க்ஸ்!" என்று சொல்லிவிட்டு நடந்தான் ரிஷப்.

இருவரும் உட்கார்ந்தனர், அந்த ஸ்பெஷல் ரூமில். அங்கே கூட்டம் அதிகம் இல்லை.

மெனு கார்டைப் பார்த்தாள் வர்ஷா. ஸ்வீட் கார்ன் சூப், பேபிகார்ன் ஃப்ரை, வெஜிடபிள் புலவ் ஆர்டர் செய்தாள். ரிஷப்பும் தனக்கு வேண்டியதை ஆர்டர் செய்தான்.

இருவரும் சாப்பிட்டனர். மௌனமாக, ஏதும் பேசாமல் சாப்பிடுவது வர்ஷாவிற்கு முடியாத ஒன்று. ஆனால் வேறு வழியில்லாமல் அதைப் பொறுத்துக் கொண்டிருந்தாள்.

"நான் ஒரு ஃபோன் கால் செய்ய வேண்டும். எக்ஸ்கியூஸ் மி. ஒன் செகண்ட்!" என்று சொல்லிவிட்டு வேகமாக அங்கிருந்து வெளியேறினான் ரிஷப்.

அவன் சென்ற பின்பு இன்னும் கொஞ்சம் ரைஸ் போட்டுக் கடகடவெனச் சாப்பிட்டாள் வர்ஷா. அப்பாடா! எவ்வளவு பசி. இப்பத்தான் அடங்கியது என நிம்மதி அடைந்தாள் வர்ஷா.

வாஷ் பேஸின் அங்கே அறையின் பின்னால் இருப்பது தெரிந்தது.

கை கழுவச் சென்றாள் அவள். பின்னே ரிஷபின் சத்தம் கேட்டது.

அவன் ஃபோனில் யாருடனோ பேசிக் கொண்டிருப்பது அவளுக்குக் கேட்டது.

"அந்த ப்ராப்பர்டி ரொம்ப நன்றாக இருந்தது. விலை எல்லாம் பிரச்சினை இல்லை.

இப்பொழுது ஆனால் குத்தகையில் உள்ளது. இன்னும் ஒரு மாதத்தில் முடிந்துவிடும் போல!

என்னை அழைத்துச் சென்று காட்டியது ஒரு பெண்தான்!" என்று அவன் சொன்னதைக் கேட்டவுடன் மேலும் என்ன சொல்லப் போகிறான் எனத் தெரிந்து கொள்ள ஆவலாக அங்கேயே நின்று கொண்டிருந்தாள் வர்ஷா.

ரிஷப் சிரிக்கும் சப்தம் கேட்டது.

"காட்! அழகான பெண்தான். நல்ல பொம்மை மாதிரி முகம். வெரி கிட்டிஷ் கேர்ள். பட் நல்ல ஃபிகர்.

ஆனால் அவளின் ஐ.க்யூ. (இண்டெலிஜெண்ட் கோஷண்ட்) கண்டிப்பா ரொம்ப குறைவாகத்தான் இருக்கும்.

இட் மே பீ இன் சிங்கிள் டிஜிட்!" என்றான் கிண்டலாக ரிஷப்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த வர்ஷாவின் முகம் கோபத்தாலும், அவமானத்தாலும் சிவந்தது.



என்னை முட்டாள் எனச் சொல்லிச் சிரிக்கிறான். யாரிடம் என்று தெரியவில்லை. சே! இவனுக்கு எவ்வளவு திமிர். நல்ல ஃபிகராம். டிராகுலா! உன்னை நான் சும்மா விடமாட்டேன் என மனதில் உறுதி பூண்டாள்.

அங்கிருந்த கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தாள். 'ஐ.க்யூ ஒத்தைப் படை' என்று சொன்னானே! அவன்தான் முட்டாள் என மனதில் அவனைத் திட்டினாள்.

அவளைப் பார்த்த ஒரு வயதான பெண்மணி, "என்னம்மா உடம்பு சரியில்லையா? வெளுத்துப் போயிருக்கியே!" என்றார் அக்கறையோடு.

"தலைவலி... அதான்!" என்று மழுப்பினாள் வர்ஷா.

"இந்தா ஸேரிடான்!" என்று தன் கைப்பையிலிருந்து ஒரு மாத்திரையை அவளிடம் நீட்டினாள் அந்தப் பெண்மணி.

# 6

நீ
பேசும்
வார்த்தைகள்
அழகான
கவிதை!
நீ
பார்க்கும்
பார்வை

அழகான
கவிதை!
நீ
சிரிக்கும்
பொழுது
சங்கீதம்
சிந்துகிறது!
நீ
தூங்கும்
பொழுது
உன்
கனவாக
நான்
இருக்க
மாட்டேனா
என்று
என்
மனம்
தவிக்கிறது
- பெண்ணே!

"தேங்க்ஸ்!" என்று அதை வேகமாக முழுங்கினாள் வர்ஷா.



அவள் கையில் மட்டும் ஏதாவது ஆயுதம் வைத்திருந்தால் அதை வைத்து ரிஷபை ஒரு வழி செய்திருப்பாள். தன்னைச் சமாளித்துக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள் அவள்.

இவனோட ஐ.க்யூ என்னவாக இருக்கும்? பெரிசா பேச வந்திட்டான் என அவனை வறுத்து எடுத்தாள் அவள்.

ரிஷப் டேபிளில் உட்கார்ந்திருந்தான். அவனைப் பார்க்கப் பார்க்க அவளுக்கு எரிச்சல் வந்தது.

அவன் எதிரே உட்கார்ந்தவள் ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். அவனிடம் அறிவுபூர்வமான விஷயங்களைப் பேச வேண்டும். அப்பொழுதுதான் நான் முட்டாள் இல்லை என்று இந்த முட்டாளிற்குப் புரியும் என மனதினுள் நினைத்துக் கொண்டாள்.

"இந்தத் தடவை எலெக்ஷன் ரிசல்ட் எப்படி ஆகும் என்று தெரியவில்லை.

டூ -ஜி ஸ்பெக்ட்ரம், அமைச்சர் கைது இதெல்லாம் சரியான நேரத்தில் மாட்டி இருக்கிறது!" என்றாள் அவனிடம் சம்பந்தமே இல்லாமல்.

ஒரு நொடி புரியாமல் விழித்தான் ரிஷப். பின்பு அவன் உதடுகளில் ஒரு புன்னகைக் கீற்று படர்ந்தது.

"ம்... தெரியவில்லை. மக்கள் எப்படி வேண்டு மானாலும் தீர்ப்பு அளிப்பார்கள்.

கடைசி நேரத்தில் மக்களுக்கு இலவசங்களை அள்ளி வீசலாம். கேஸ்-அடுப்பு, கலர் டிவி., வீடு என ஏதாவது சர்ப்ரைஸ் இருக்கலாம்."

"அப்புறம் எகிப்தில் மிலிட்டரி ராஜ்யம் ஓய்ந்துவிட்டது. முப்பது வருடங்களுக்கு மேல் மொபாராக்கின் கொடிதானே பறந்தது அங்கே.

இப்பொழுதுதான் அங்கே இருப்பவர்களுக்கு விடுதலை கிடைத்திருக்கிறது. மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கிறார்கள்."

"யெஸ். ஆனால் சட்டென அங்கே மாற்றம் வந்துவிடாது. எப்படியும் கொஞ்ச மாதங்கள் ஆகும். புதிதாக ஆட்சிக்கு வருபவர்கள் மாற்றங்கள் எல்லாம் செய்ய...!"

"ம்... இந்தியாவின் கிரிக்கெட் அணி ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து மூன்றில் எவ்வளவு வலிமை யாக இருந்தது.

அதனால்தான் உலகக் கோப்பையை வெல்ல முடிந்தது என்று ஸ்ரீகாந்த் பேட்டி கொடுத்திருக்கிறார்.

நீங்கள் அதைப் படித்தீர்களா? இட் வாஸ் வெரி இன்ஃபர்மேடிவ்!" என்றாள் வர்ஷா.

"ம்... படித்தேன். கபில்தேவ், லிட்டில் மாஸ்டர் கவாஸ்கர், ஸ்ரீகாந்த், ரவி சாஸ்திரி என்று ஒரு இண்ட்ரஸ்டிங் குழு அது.

தி கெமிஸ்ட்ரி வாஸ் குட். நோ ஈகோ. அதனால்தான் ஜெயிக்க முடிந்தது."

அப்பாடா அரசியல், விளையாட்டு என எல்லாம் பேசி முடித்தாகிவிட்டது. இனிப் பங்குச் சந்தைதான் பாக்கி என நினைத்தாள் வர்ஷா.



யோசித்தபடியே ஜூஸைப் பருகினாள். ஏனோ புரை ஏறியது அவளுக்கு.

"ம்... மெதுவா!" என்றான் கண்களில் குறும்பு மின்ன.

"உங்களைக் கிண்டல் செய்ய எனக்கு நேரமாகாது. ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்."

"ஐயாம் ஸாரி... ஆனால் நான் உன்னை இரண்டு... இல்லை... மூன்று டிஜிட்டிற்குக்கூட அப்க்ரேட் செய்யலாம்."

"என்ன சொல்றீங்க... புரியலை!"

"ஐயாம் டாக்கிங் அபெளட் யுவர் ஐ.க்யூ!" என்றான் கூலாக.

அவன் சொன்னதைக் கேட்டு அவளுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. மீண்டும் புரை ஏறியது அவளுக்கு.

"ஸோ... உங்களுக்குத் தெரியுமா? நான் ஒட்டுக் கேட்டேன். நீங்கள் பேசியதை என்று...!"

"ம்... ஒட்டுக் கேட்பவர்களுக்கு ஒரு ஒற்றுமை உண்டு தெரியுமா? அவர்கள் தங்களைப் பற்றி நல்லதாக ஏதுமே கேட்க மாட்டார்கள். ஒருவேளை அது மட்டும் காதில் விழாது போல!"

"டோண்ட் டாக் அபெளட் மி. காட்!" என்று சீறினாள் அவள்.

கோபத்தில் டேபிளைக் கையால் குத்தினாள். பின்பு கஷ்டப்பட்டுக் கோபத்தை அடக்கினாள்.

"நான்... நான் அழகாக இருக்கிறேன்! என்று நீங்கள் சொன்னதைக் கேட்டேன்."

"ம்... பொம்மை போன்ற குழந்தைத்தனமான முகம். பட்...!" என்று அவன் முடிக்கும் முன்பு அவள் குறுக்கிட்டாள்.

அவன் "நல்ல ஃபிகர்" என்று அப்பொழுது சொன்னதை மீண்டும் அவன் உதடுகள் உச்சரிப்பதை அவள் மனம் ஒப்பவில்லை.

"லுக் ஐயாம் நாட் எ டம்ப் கேர்ள். நான் ஒன்றும் முட்டாள் இல்லை."

"ஐ நெவர் தாட் யூ வேர் டம்ப்!" என்றான் கூலாக அவன்.

அவன் இப்படி ஒத்துக் கொண்டது அவளின் கோபத்தைக் குறைத்தது. லேசான புன்னகை அவன் இதழ்களில் படர்ந்தது.

"ஆல்-ரைட். நான் அங்கே இருந்து நீங்கள் பேசியதைக் கேட்டிருக்கக் கூடாது.

நான் அப்படி எல்லாம் இதுவரை ஒட்டுக் கேட்டதில்லை. ஐ பிராமிஸ். இதுதான் முதல் தடவை.

அப்புறம் நீங்கள்... எங்கள் பிஸினெஸில் பங்கேற்கப் போகிறீர்களா?"

"உன் அப்பாவைக் கேள்...!"

"சரி, நான் அவரிடம் கேட்கிறேன்."

சரியான கல்லுளிமங்கன்! வாயைத் திறக்க மாட்டேங்கிறான். சொன்னால் குறைந்து போய் விடுவானா என்ன என்று அவனைத் திட்டினாள் மனதிற்குள் வர்ஷா.



"வர்ஷா! எப்படி இருக்கிறாய்? உன்னைப் பார்த்து ரொம்ப நாளாகி விட்டதே!" என்ற குரல் கேட்டுத் திரும்பினாள் வர்ஷா.

மஞ்சரி ஆன்ட்டி அங்கே நின்று கொண்டிருந்தாள். மஞ்சரி அவளுடைய சொந்த அத்தை. மஞ்சரி அத்தை காதலித்துத் திருமணம் செய்ததால் வீட்டில் அவரை யாரும் ஏற்றுக் கொள்ளவில்லை, வர்ஷாவின் தந்தை உட்பட.

மஞ்சரி அத்தை சென்னையில் இருப்பார்களே... இங்கே எப்படி வந்தார்கள் என்று குழம்பினாள் வர்ஷா.

"அத்தை! எப்படி இருக்கீங்க?"

"ம்... நல்லா இருக்கேன்டா. ம்... எவ்வளவு அழகா இருக்க நீ! பார்த்து எவ்வளவு வருஷம் ஆச்சு!

எனக்கு மட்டும் ஒரு மகன் இருந்தா உன்னைத் தூக்கிட்டு வந்து மருமகளா என் வீட்டுக்கு அழகு பார்த்திருப்பேன்.

என்ன செய்யறது, எனக்குப் பிறந்தது பெண். சரிடா, நீ எங்கே இந்த ஹோட்டலுக்கு?"

"நான்... நாங்க வீடு பார்க்க வந்தோம் அத்தை!"

அத்தையின் பார்வை ரிஷப் மேல் படிந்தது. பின்பு ஆச்சரியமாக வர்ஷாவைப் பார்த்தாள் அவள்.

"வர்ஷா! எப்ப ஆச்சு கல்யாணம்? அப்பா எப்படி ஒத்துக்கிட்டார்? ரொம்ப நல்ல ஜோடிப் பொருத்தம்.

மேட் ஃபார் ஈச் அதர் போல இருக்கீங்க..."

"ஐயோ அத்தை... நீங்க வேறே!" என்று பதறினாள் வர்ஷா.

"மேடம்... நீங்க நினைக்கிற மாதிரி உறவு இதுவரை எங்களுக்குள் இல்லை.

நான் ஒரு பிஸினெஸ்மேன். இங்கே ஒரு பிராபர்டி பார்த்தேன். அதை வாங்க வர்ஷா உதவி செய்யறா!"

"ஓ... அப்படியா! ஆல் தி பெஸ்ட் தம்பி! உங்களுக்கு நல்ல வீடு கிடைக்கும்."

"தேங்க்ஸ் மேடம்!"

"சரி, வர்ஷா! நான் கிளம்பறேன். உங்க மாமாவோட வந்தேன். இங்கே ஒரு கல்யாணத்திற்கு வந்தோம். இதோ கிளம்பணும்."

"சரி, அத்தை. பார்த்துப் போங்க."

அத்தை போகும் திசையையே பார்த்துக் கொண் டிருந்தாள் வர்ஷா. அவள் மனதிலிருந்து பெருமூச்சு ஒன்று கிளம்பியது.

"அத்தை என்றால் ரொம்பப் பிடிக்குமா... உனக்கு?"

"ம்... பிடிக்கும். பாவம், காதலித்துத் திருமணம் செய்து கொண்டதால், அப்பாவிற்கு அவர்களைப் பிடிக்கவில்லை.

தாத்தா, பாட்டி எல்லோரும் அவர்களை ஒதுக்கி வைத்து விட்டார்கள்.

ஆனால் மாமா அவர்களை நன்றாகப் பார்த்துக் கொள்கிறார்கள். அது போதும்."



"ம்... காதலித்துத் திருமணம் செய்தால் எதை எல்லாம் இழக்க வேண்டியிருக்கு, பார்த்தியா?

உன் குடும்பத்தில் இப்படி நடந்திருக்கு. இருந்தும் நீ காதலிக்கிறாய். விக்ரமை நீ காதலிப்பது உன் அப்பாவிற்குத் தெரியுமா?"

"இட்ஸ் நன் ஆஃப் யுவர் பிஸினெஸ்!"

"சரி, வா போகலாம்."

"நீங்க எதுக்கு? எனக்கு வீட்டுக்குப் போக வழி தெரியும்."

"அது எனக்கும் தெரியும். காரிலிருந்து நான் லேப்-டாப்பை எடுக்க வேண்டும். அதனால் கார் பார்க்கிங் வரை வரலாம் என்று நினைத்தேன்!"

"ஓ... அப்படியா? தேங்க்ஸ் ஃபார் தி லன்ச்."

"இட்ஸ் மை பிளஷர்."

இருவரும் கார் பார்க்கிங் நோக்கி நடந்தனர்.

"ஸீ யூ...!" என்று சொல்லிவிட்டு கார் நோக்கி நடந்தவள் ஒரு நொடி திடுக்கிட்டாள்.

"ஓ... காட்!" என்றாள் வர்ஷா.

ரிஷப்பும் அதே நேரத்தில் அதைக் கவனித்து விட்டான்.

"என்ன, முன் டயர் ரெண்டும் இப்படி காத்து போய் இருக்கு!"

"ம்... தெரியலை. வண்டியை விடும்பொழுது சரியாக இருந்தது. சே... என்ன செய்வது இப்ப...?"

"நான் உன்னை டிராப் செய்கிறேன்... வா."

"இ... இல்லை. வேண்டாம்."

"பரவாயில்லை. வா. எனக்காகத்தானே நீ வீடு சுற்றிக் காட்ட வந்தாய். அதனால் ஐயாம் ரெஸ்பான்ஸிபிள் ஃபார் யுவர் ஸேஃப்ட்டி.

அதனால் பிடிவாதம் பிடிக்காமல் வா!" என்று அவள் கையைப் பற்றினான்.

அவள் சட்டெனக் கையை விடுவித்துக் கொண்டாள். அவன் தொட்ட இடம் மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது.

அவன் காரில் மௌனமாக உட்கார்ந்திருந்தாள் அவள். வெளியே காற்று நன்றாக வீசியது. வெயிலும் நன்றாக அடித்தது.

"நான் ஜன்னலைத் திறக்கவா... காற்று நன்றாக இருக்கும்!" என்று சொன்னவாறே கார் ஜன்னலைத் திறந்தாள்.

அப்பொழுது ஒரு வளைவில் இன்னொரு கார் வேகமாக எதிர்த் திசையில் வந்தது.

மோதி விடாமல் இருப்பதற்காகச் சட்டென பிரேக்கை அழுத்தினான் ரிஷப். அதே நேரத்தில் அவன் கை வர்ஷா விழுந்து விடாமல் அவளைக் கெட்டியாகப் பிடித்தது.

அவன் பிடிக்கா விட்டால் அவள் ஸீட் பெல்ட் அணியாததால் கார் கண்ணாடியில் விழுந்திருப்பாள் மொத்தமாக. லேசான காயம் அவள் முன்நெற்றியில் பட்டது, கண்ணாடி உராய்ந்ததால்.



அதற்கு மேல் அவளுக்குச் சரியாக நினைவில்லை. ரிஷப் முகம் மங்கலாகத் தெரிந்தது. உதட்டில் ஏதோ எரிச்சல் படர்ந்தது.

அவன் கை அவளை இழுத்துப் பிடித்திருந்தது. ஒரு புதிய முகம் கார் ஜன்னல் வழியாக எட்டிப் பார்ப்பது போல் தோன்றியது அவளுக்கு.

"ம்... இட்ஸ் ஆல் ரைட்!" என்று ரிஷப் சொல்வது அவளுக்குக் கனவில் கேட்பது போல் இருந்தது.

தலை எல்லாம் மரத்துப் போனாற்போல் இருந்தது அவளுக்கு. காதுகள் இரண்டும் அடைத்துக் கொண்டு எதோ மாதிரி இருந்தது.

நல்ல காலம் ரிஷப் தன்னைப் பிடித்தான். இல்லா விட்டால் நான் இறந்து போயிருப்பேன் என்று அந்த மயங்கிய நிலையிலும் அவளுக்குத் தோன்றியது.

தலையைத் தூக்கப் பார்த்தாள். ஆனால் எல்லாமே சுழலுவது போல் இருந்தது அவளுக்கு.

"வர்ஷா... நான் உன்னை ஹாஸ்பிடலுக்கு அழைத்துப் போகப் போகிறேன்."

"யெஸ்... எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஒரு கார் குறுக்கே வந்தது. அது ராங் ஸைடில் வந்ததாக ஞாபகம்!" என்றாள் மெதுவாக.

அதற்குள் அவர்கள் கார் ஹாஸ்பிடலை அடைந்தது. எமர்ஜென்ஸி வார்டிற்குள் வர்ஷா அழைத்துச் செல்லப் பட்டாள்.

ஒரு நர்ஸ் அவள் பிளட்பிரஷரையும், பல்ஸையும் பரிசோதித்தாள். டாக்டர் அவள் கண்களைப் பரிசோதித்தார். கண்ணாடியில் தலை மோதியதால் ஞாபகம் ஏதேனும் பாதிக்கப்பட்டு இருக்கிறதா என்பதை செக் செய்வதற்காக ஸ்கேன் செய்தார்கள் தலையை!

தலையில் மோதியதால் நெற்றி புடைத்து இருந்தது. வலி தெரியாமல் இருக்க பெயின் கில்லரும், பேரஸிடமால் மாத்திரையும் அவளுக்கு இருபத்து நான்கு மணி நேரத் திற்குக் கொடுக்குமாறு டாக்டர் சொன்னது அவள் காதில் விழுந்தது.

டாக்டர் இன்னும் ஏதேதோ சொன்னார். ரிஷப் தலை அசைப்பது தெரிந்தது.

ஆனால் டாக்டர் என்ன சொன்னார் என்று அவளுக்குச் சரியாகக் கேட்கவில்லை.

காரில் திரும்பிப் போகும் பொழுது அவள் மெதுவாக ரிஷபைக் கேட்டாள்.

"டாக்டர் வேறு என்ன சொன்னார்? எனக்குச் சரியாகக் கேட்கவில்லை."

"ம்... என்னென்ன கவனிக்க வேண்டும்... இரண்டு நாள் வரை!"

"அப்படியா, என்னென்ன?"



"சிவியர் வாமிட்டிங், உடல் வலி... இது மாதிரி ஏதேனும் இருந்தால் உடனே ஹாஸ்பிடல் வர வேண்டுமாம் நீ...!"

"ஓ அப்படியா!"

சின்ன வயதில் ஒரு பையன் தன்னைத் தள்ளிவிட்டது அவளுக்கு ஞாபகம் வந்தது. அப்பொழுது அவள் முட்டியில் காயம் பட்டது. அதை அவள் அழுதபடியே சந்திரா ஆன்ட்டியிடம் சொன்னது நினைவுக்கு வந்தது.

அதே போல் இப்பொழுது சந்திரா ஆன்ட்டியின் முன்னே போய் நிற்கப் போகிறோம் என நினைத்துக் கொண்டாள் வர்ஷா.

வீடு வந்துவிட்டது. ஏனோ வர்ஷாவிற்குப் பயமாக இருந்தது. மெதுவாகக் காரிலிருந்து இறங்கினாள்.

அவளைக் கைத்தாங்கலாக வீட்டினுள் அழைத்துச் சென்றான் ரிஷப்.

"ப்ளீஸ் சந்திரா ஆன்ட்டியைக் கூப்பிடுங்கள். ஐ ஃபீல் ஸிக்..."

"டேக் இட் ஈஸி. நான் அவர்களைக் கூப்பிடறேன்."

"ஸார்... சந்திராம்மா வெளியே போயிருக்காங்க. நாளைக்குத்தான் வருவாங்க!" என்றார் செக்யூரிட்டி.

"ஓ... காட்!" என்று முணுமுணுத்தாள் அவள்.

"சரி... உள்ளே வா!" என்றான் ரிஷப் அவள் கையைப் பற்றியபடி.

"நான்... என்னால் நடக்க முடியும்!" என்றாள் வர்ஷா.

ஆனால் தலைவலி மண்டையைப் பிளந்தது.

"அம்மா!" என்று தலையில் கை வைத்தாள் அவள்.

"ஷ்... பயப்படாதே!" என்ற ரிஷப் சட்டென அவளை இரு கைகளாலும் குழந்தையைத் தூக்குவது போல் தூக்கினான்.

அவள் 'வேண்டாம்' என்று சொல்ல நினைத்தாள். ஆனால் உதடுகள் ஒட்டிக் கொண்டன.

அவள் கன்னம் அவன் மார்பில் உராய்ந்தது. அவள் கைகள் அவன் கழுத்தைச் சுற்றி இருந்தன. அவளால் எதுவுமே பேச முடியவில்லை.

சமாளித்துக் கொண்டு பேசினாள்.

"அந்த சோபாவில் நான் படுத்துக் கொள்கிறேன்."

"வேண்டாம்... உன் அறை மாடியில்தானே இருக்கிறது."

"ஆமாம்... இரண்டாம் மாடி!"

அவன் அவளைப் பூப்போலத் தூக்கியபடி மாடிப் படிகளில் ஏறினான். அவள் அவன் கழுத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள்.

அறைக் கதவின் குமிழை அவள் திறக்க முயன்றாள்.

"இரு... வர்ஷா!" என்றவன், அவளை அங்கிருந்த நாற்காலியில் உட்கார வைத்தான்.



பின்பு கதவைத் திறந்தான். மீண்டும் அவளை அலாக்காகத் தூக்கிக் கொண்டு கட்டிலின் மேல் அவளைப் படுக்க வைத்தான்.

"தேங்க்ஸ்... நான் சீட்-பெல்ட் போட்டிருந்தால் இப்படி நடந்திருக்காது. ஸாரி. என்னால் உங்களுக்குச் சிரமம்...!" என்றாள் மெலிந்த குரலில்.

"ஜஸ்ட் ஷட்-அப். பேசிப் பேசி எனர்ஜியை வேஸ்ட் செய்யாதே!" என்றவன் அவள் காலணிகளைக் கழற்றினான்.

அங்கிருந்த கப்போர்டைத் திறந்தவன், அதிலிருந்து ஒரு இரவு உடையை எடுத்து அவளிடம் நீட்டினான்.

அவள் அதை வாங்கத் தயங்கினாள்.

"நான் வேண்டுமானால் ஹெல்ப் செய்யவா?" என்றான் கண்களில் குறும்பு மின்ன.

"வே... வேண்டாம். எனக்கு மாத்திரை வேண்டும். கீழே ஹாலில் கப்போர்டில் இருக்கும். ப்ளீஸ் அதை எடுத்துத் தர முடியுமா?"

"ஓ... ஷ்யூர். நீ உடை மாற்றிக் கொள். நான் உனக்கு மாத்திரையும் தண்ணீரும் எடுத்து வருகிறேன்!" என்று சொல்லிவிட்டு அறையை விட்டு வெளியேறினான்.

அவள் இரவு உடைக்கு மாறினாள். அங்கிருந்த கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள்.

நெற்றியில் நன்றாகவே புடைத்து வீங்கியிருந்தது. அதைத் தொட்டாள். வலித்தது. உடனே கையை எடுத்துக் கொண்டாள்.

கதவு தட்டும் சத்தம் கேட்டது.

"வாங்க ரிஷப்!" என்றாள் வர்ஷா.

"இந்தா டேபிளட். இதைப் போட்டுக்கோ. எல்லாம் சரியாயிடும்."

"சரியாயிடுமா...?" என்றாள் மெலிந்த குரலில்.

"ம்... கண்டிப்பா. யூ ஆர் ஃபைன். உன் கண்ணின் கருவிழிகள் இரண்டும் ஒரே அளவா, ஒன்று போல் இருக்கின்றன.

ஸோ யூ ஆர் ஓ.கே. அதனால் மனதைப் போட்டுக் குழப்பிக்காதே!"

"ம்... எனக்கு ஒரு உதவி."

"என்ன சொல்?"

"சந்திரா ஆன்ட்டி வர மாட்டார்கள் போல இன்னிக்கு. அப்பா எப்ப வருவார் என்று தெரியவில்லை.

அவர் வரும் வரை இங்கேயே இருக்க முடியுமா? ஸாரி! ப்ளீஸ் எனக்குப் பயமா இருக்கு... அதனால்தான்!" என்றவளின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

அவன் அவள் கன்னத்தில் கோடு போல் வழிந்திருந்த கண்ணீரைத் துடைத்தான்.

"டோண்ட் ஒர்ரி. நான் இங்கேயே உட்கார்ந்திருக்கிறேன். குட் நைட்!" என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுதே கண்களை மூடித் தூக்கத்தில் ஆழ்ந்தாள் வர்ஷா.



ரிஷப் இருக்கிறான். அதனால் பயம் இல்லை என்று அவள் மனதிற்குப் பட்டது. அதனால் நிம்மதியாகத் தூங்கினாள் வர்ஷா.

அவள் தூங்குவதையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன். அவள் முகத்தின் குழந்தைத்தனம், நெற்றியில் விளையாடிய கூந்தல் கற்றை எல்லாவற்றையும் ரசித்தவன் அவள் அருகே சென்று நெற்றியில் இதழ் பதித்தான்.

"அப்பா... குட்நைட்!" என்று தூக்கத்தில் முனகியவள், அவன் கன்னத்தில் உதடுகளைப் பதித்துவிட்டுத் தூங்கினாள்.

# 7

மழை  
லேசாகத்  
தூறிக்  
கொண்டிருந்தது!  
சூரியனை  
மறைத்து  
விட்டது  
மேகக்  
கூட்டம்!  
வண்ணக்  
குழம்பாக  
வானில்  
வானவில்

என்னைப்
பார்த்துச்
சிரித்தது!
சட்டென
மனதில்
உன்
ஞாபகம்!
நான்
சிலிர்த்தேன்!
உன்
நினைவு
என்னைத்
துரத்துகிறது!
எங்கே நீ?
பெண்ணே!

யாரோ தன்னைத் தொட்டாற்போல் தோன்ற, சட்டெனக் கண் விழித்தாள் அவள்.

"என்ன ஆச்சு வர்ஷா செல்லம்... முகமெல்லாம் வாடிப் போயிருக்கே!" என்றாள் சந்திரா.

"ஓ... ஒரு சின்ன விபத்து... ஆன்ட்டி!" என்றவள் தன் விரலால் நெற்றியை வருடினாள்.

வலி இருக்கவே, கையை விலக்கிக் கொண்டாள். உடம்பு லேசாக வலித்தது. ஆனால் ரொம்ப வலி இல்லை.



வாமிட் ஏதும் வரவில்லை. ஸோ... நோ ப்ராப்ளம். எந்த ஸிம்ப்டமும் இல்லை என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்.

"ஐயாம் லக்கி ஆன்ட்டி!"

"என்ன லக்கோ? ரிஷப்தான் லக்கி. தம்பி மேல் சிறு கீறல் கூட இல்லை.

ஆனால் உனக்குத்தான் நெற்றியில் நல்ல அடி போல... சே! அந்தத் தம்பியால்தான் உனக்கு இந்த விபத்து, வலி எல்லாம்...!"

"அச்சோ ஆன்ட்டி. என் மேலதான் தப்பு. நான் சீட் பெல்ட் போடவில்லை. அவர் என்னைப் போடச் சொன்னார்.

நான்தான் மறுத்து விட்டேன். அதோடு அவர் பிரேக் போட்டார். என்னை ஒரு கையால் நன்றாகப் பிடித்துக் கொண்டார். இல்லாவிட்டால் ஜன்னல் திறந்து இருந்ததால் நான் வெளியே விழுந்தாலும் விழுந்திருப்பேன்."

"ஏன் அப்படி சட்டுன்னு பிரேக் பிடித்தார்?"

"எதிரில் ஒரு கார் வளைவில் ராங்-ஸைடில் வந்தது. அதன் மேல் மோதாமல் இருப்பதற்காகத்தான் அவர் அப்படி சட்டுன்னு பிரேக் பிடித்தார்.

அந்தக் கார் ஓட்டியவன் மேல்தான் தப்பு. ரிஷப் மேல் இல்லை."

"ஓ... அப்படியா செல்லம். ஸாரி! நான்தான் ரிஷபைத் திட்டி விட்டேன்.

சரி, நான் டவலால் உன் முகத்தையும், கை கால்களையும் துடைத்து விடுகிறேன்," என்று உள்ளே சென்றாள்.

மிதமான சூட்டில் மென்மையான டவல் வைத்து முகத்தை லேசாக ஒற்றி எடுத்தாள். அது இதமாக இருந்தது அவளுக்கு.

பின்பு யூடிகோலன் தடவிக் கைக்குட்டையில் வைத்து முகத்தை ஒற்றி எடுத்தார்.

"தேங்க்ஸ் ஆன்ட்டி."

"சரி, சூடா காப்பி தரவா? இல்லை, தேநீர் தரவா?"

"ம்... காப்பியே குடுங்க."

அவள் எழுந்து உட்காரச் சந்திரா உதவினாள்.

காப்பி குடித்த பின்பு தெம்பு வந்தது போல் உணர்ந்தாள் வர்ஷா.

"நான் எழுந்து நடக்கலாம் என நினைக்கிறேன்."

"வர்ஷா செல்லம்! டாக்டர் கிட்டே கேட்ட பின்பு நடக்கலாமே!"

"இல்லை ஆன்ட்டி. நேற்றே டாக்ட்ரிடம் போயிட்டு வந்திட்டோம். லேசான காயம் என்றுதான் சொன்னார்."

"ம்... அப்புறம் ரிஷப் தம்பி பேசினார். இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கே வருவாராம்.

உன் அப்பா என்ன சொல்லப் போகிறாரோ, தெரியவில்லை. அதுதான் கவலையாக இருக்கிறது."



"ம்... என்ன செய்வது? ஆன்ட்டி! அந்தக் கண்ணாடியைக் காட்டுங்கள். அந்தக் காயம் எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும்."

சந்திரா அந்தச் சிறிய கண்ணாடியை அவள் முகம் பார்க்க வசதியாக மேலே பிடித்துக் காட்டினாள்.

நெற்றியின் வீக்கத்தைப் பார்த்தாள் அவள். வீக்கம் குறைந்த மாதிரி தெரியவில்லை. ஒரு நெல்லிக்காய் அளவுக்கு வீங்கியிருந்தது.

"ஆன்ட்டி! என்னோட மண்டை நல்ல தடிமானம் போல. அதனால்தான் ஸ்கேன் செய்து பார்த்ததில் எந்த அடியும் இல்லை என்று சொல்லி விட்டார்கள்."

"இப்பவும் உன் குறும்புப் பேச்சு போகவில்லை. தட்ஸ் குட்!"

"சரி, நீங்கள் ரிஷபிடம் என்ன பேசினீர்கள்?"

"ம்... நேற்று நடந்ததைப் பற்றிக் கேட்டேன். அப்புறம் உனக்கு வேறு அவரைப் பிடிக்கவில்லையா! அதனால் ஏதாவது ரிஷப் தம்பி வேண்டுமென்றே செய்திருப்பானோ என்றுகூட நினைத்தேன்."

"அச்சோ... அப்படி எல்லாம் இல்லை ஆன்ட்டி. ரிஷப் வாஸ் வெரி ஜெண்டில். அவர் என்னைப் பத்திரமாகப் பார்த்துக் கொண்டார்."

ரிஷப் தன் மேல் காட்டிய அன்பும் பரிவும் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் உடம்பு சரியில்லாமல் இருந்தபொழுது ரிஷபின் அண்மை எனக்குப் பயத்தை ஏற்படுத்தவில்லை.

வெறுப்பைத் தோற்றுவிக்கவில்லை. சொல்லப் போனால் நான் பாதுகாப்பாக உணர்ந்தேன். ஆனால் நான் நன்றாக இருந்த பொழுது, அவனைப் பார்த்தாலே எரிச்சலும், கோபமும் வந்தது.

என்னை நினைத்தால் எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. மனமே வித்தியாசமானதுதான் என்று நினைத்துக் கொண்டாள் அவள்.

சோர்வாக இருந்ததால் கண்களை மூடினாள் அவள். தன்னை மறந்து மீண்டும் தூங்கிவிட்டாள் அவள்.

அவள் கண் விழித்த பொழுது டாக்டர் மார்க் அவள் அருகே உட்கார்ந்திருந்தார். டாக்டர் மார்க் அவர்களின் ஃபேமிலி டாக்டர். ஐம்பது வயதான பொழுதும் ரொம்ப சுறுசுறுப்பாக நன்றாக வேலை பார்ப்பார்.

"ஹலோ டியர் கேர்ள்... ஹவ் ஆர் யூ?"

"ம்... நாட் பேட் டாக்டர் அங்கிள்!"

டாக்டரின் அருகில் அப்பாவின் கவலை தோய்ந்த முகம் தெரிந்தது. பாவம் அப்பா! இப்பொழுதெல்லாம் நான் அவருக்கு ரொம்பக் கஷ்டம் கொடுக்கிறேன் போல என நினைத்துக் கொண்டாள் அவள்.

"என்ன ஆச்சு வர்ஷா?" என்றார் வசந்தன்.

"நல்ல காலம் அப்பா. ரிஷப் அந்தக் கார் மேல் மோதவில்லை. சரியான நேரத்தில் பிரேக் பிடித்தார்.

அவர் கொஞ்சம் மிஸ் செய்திருந்தால் என்ன ஆகி யிருக்குமோ நினைத்துப் பார்க்கவே பயமாக இருக்கிறது."



"சரி... சரி... அதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருக்காதே. உன் பி.பி., பல்ஸ் எல்லாம் செக் செய்யணும்."

"டாக்டர் அங்கிள். ஐயாம் ஓ.கே. நேற்றே நல்ல டாக்டர்ஸ் எல்லாம் என்னைப் பரிசோதித்தார்கள்.

அதனால் நீங்கள் அப்பாவைக் கவனியுங்கள். அவருக்கு ஏதேனும் டானிக் கொடுங்கள்."

"வசந்த்! உன் பெண்ணிற்குக் குறும்பைப் பார். நான் நல்ல டாக்டர் இல்லை என்று சொல்லாமல் சொல்கிறாள்.

வர்ஷா! உன் அப்பா நான் சொன்ன டானிக்கைக் குடிக்க மாட்டேங்கிறார்."

"அப்படியா நான் குடிக்க வைக்கிறேன். என்ன டானிக் அது?"

"லெஸ் வொர்க் அண்ட் மோர் ரெஸ்ட்!"

"மே பி பிஸினெஸில் நானும் ஈடுபட்டால் சரியாகிவிடும் அங்கிள். அப்பா பாவம்! அவர்கள் ஒருவரே எவ்வளவு நாள் பாரத்தைத் தாங்குவார்கள்.

பட் ஹி ஆல்வேஸ் ட்ரீட்ஸ் மி ஆஸ் எ சைல்ட். இப்பொழுது கூட அப்படித்தான் அங்கிள்!"

"சரி, நான் நீ சொன்ன டானிக்கைப் பின்பற்றுகிறேன்."

"தட்ஸ் குட். அப்ப இப்ப கோல்ஃப் விளையாடலாம் வா."

"இப்பவேவா?"

"அட வாடா! கோல்ஃப் விளையாட என்ன நேரம் காலம் எல்லாம் பார்க்கிறே?"

"அப்பா! போயிட்டு வாங்க. இட் வில் பி எ சேன்ஜ்!"

"சரிடா. வா போகலாம். எல்லோரும் கூட்டணி சேர்ந்திட்டீங்க."

அப்பா போன பின்பு கைப்பேசியை எடுத்து விக்ரமைத் தொடர்பு கொண்டாள் வர்ஷா.

"ஹாய் டியர்! நேற்று பீட்டர் வழியாக நீ வரவில்லை என்ற செய்தி கிடைத்தது.

"இட்ஸ் ஓகே. இன்னிக்குப் பார்க்கலாமா? எங்கே சந்திக்கலாம்?"

"முடியாது விக்ரம். எனக்கு ஒரு விபத்து. சின்ன விபத்துதான். ஆனாலும் கொஞ்சம் ரெஸ்ட் வேண்டும்."

"வாட், விபத்தா? எப்ப ஆச்சு? எப்படி ஆச்சு?"

நடந்ததைச் சுருக்கமாக விக்ரமிடம் சொன்னாள் வர்ஷா.

"ஐ வில் கில் ஹிம். அவன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் மனதில்?

எதிரில் கார் வருவது கண்ணுக்குத் தெரியவில்லையா அவனுக்கு!"

"இல்லை விக்ரம். தப்பு ரிஷப் மேல் இல்லை. எதிரில் வந்தவன் ராங் ஸைடில் வந்தான்.

அதோடு அது வளைவான பகுதி. சட்டென அந்தக் கார் எதிரில் வந்தது."



"இங்கே ரோட்டில் நிறைய வளைவுகள், சந்துகள் உண்டு. அதற்கு ஏற்ற மாதிரி டிராகுலா ஒழுங்காக வண்டியைக் கவனித்து ஓட்ட மாட்டானா?

சே! அவனால் நாம் சந்திக்க முடியவில்லை பார்.

இந்தத் தியேட்டர் விவகாரம் வேறு என் மனதை அரித்துக் கொண்டே இருக்கிறது."

அவன் இந்த நிலைமையில் தியேட்டர் பற்றி பேசியது ஏனோ அவளுக்குப் பிடிக்கவில்லை.

"வேறு என்ன விக்ரம்?"

"ம்... நீ அவன் காரில் ஏன் போனாய்?"

"அவன் இங்கே வீடு வாங்கும் ஐடியாவில் இருக்கிறான். அப்பா அதற்காக வீடு பார்ப்பதற்காக அவனுடன் போகச் சொன்னார்கள்."

"ஆனால் நீ ஏன் போக வேண்டும்?"

"எனக்கு லோக்கல் ஏரியாவைப் பற்றி நன்றாகத் தெரியும். அதனால்தான்... ஹோப் யூ ஆர் நாட் ஜெலஸ்...!"

"ம்... நீ அவனை டிராகுலாவாக நினைக்கும் வரை எனக்குக் கவலை இல்லை."

சட்டென ரிஷப் தன்னைத் தூக்கிக் கொண்டு நடந்தது அவளின் நினைவுக்கு வந்தது. தன்னைக் குழந்தை போல் படுக்க வைத்ததும் ஞாபகம் வந்தது.

'நான் உதவி செய்யவா?' என்று இரவு உடையைக் கையில் கொடுத்தபடி அவன் கேட்டது அவளின் காதில் ஒலித்தது.

தன்னைச் சமாளித்துக் கொண்டு விக்ரமிடம் பேசினாள்.

"நாம் நாளைக்கு... இல்லை மறுநாள் மீட் பண்ணலாம் விக்ரம்."

"சரி... உனக்கு லேசான காயம்தானே! வேறு ஒன்றும் பெரிதாக இல்லை அல்லவா?"

"நான் உன்னிடம் பொய் சொல்வேனா?"

"தேங்க்ஸ். டேக் கேர் டியர்!"

"வர்ஷா! நீ ரெஸ்ட் எடுக்க வேண்டும். சும்மா ஃபோன் பேசிக் கொண்டிருக்காதே!" என்று உரிமையாகக் கண்டித்தாள் சந்திரா.

"இல்லை... எனக்கு உடம்பு சரியாகிவிட்டது. எவ்வளவு நேரம் படுத்துக் கொண்டே இருப்பது...

ரொம்ப போர் அடிக்குது!" என்று சிணுங்கினாள் வர்ஷா.

"அப்பா வந்தால் என்னைத்தான் கோபிப்பார். அதனால் சமர்த்தாக இரு!" என்று கெஞ்சினாள் சந்திரா.

"சரி!" என்று பேப்பரைப் படிக்கத் தொடங்கினாள்.

முதல் வரி முதல் கடைசி வரி வரை ஒன்று விடாமல் படித்தாள். அப்படிப் படித்த பின்பு தூக்கம் வந்தது. மீண்டும் தூங்கினாள் அவள்.

"வர்ஷா! இங்கே பார்... எவ்வளவு அழகா இருக்கு பார்!" என்று சந்திராவின் குரல் கேட்க, கண் விழித்தாள்.



சந்திராவின் கையில் ஒரு பூங்கொத்து இருந்தது. அழகிய டியூலிப் மற்றும் ரோஜாக்கள் அடங்கிய அந்த 'பொக்கே' பார்க்க அழகாக இருந்தது.

அதைப் பார்த்தவுடன் வர்ஷா படுக்கையிலிருந்து எழுந்தாள்.

"வாவ்! எவ்வளவு அழகாக இருக்கிறது! சிம்ப்ளி சூப்பர்ப். இது யாருக்கு வந்தது? எனக்கா...?"

"ம்... இந்த வயதில் எனக்கு யார் இவ்வளவு அழகான பூங்கொத்து கொடுக்கப் போகிறார்கள்!" என்று குறும்பாகக் கண்டித்தாள் சந்திரா.

"ஓ... எனக்குத்தானா இது? யார் அனுப்பியது இதை?"

"ம்... இரு பார்க்கிறேன். பெயர் எதுவும் இல்லை. ஆனால் ஏதோ எழுதியிருக்கே... இங்கே!

'ஃபார் எ க்ளவர் கேர்ள் லவ் 'வி'ன்னு இருக்கு!" என்றாள் சந்திரா.

'ஓ... இது விக்ரம் வேலையாகத்தான் இருக்கும். 'வி' அவன் இன்ஷியல்' என்று அவள் உதடுகள் முணு முணுத்தன.

அந்தப் பூங்கொத்தை எடுத்துக் கொண்டு படுக்கையில் இருந்து எழுந்தாள் வர்ஷா.

"வர்ஷா, எங்கே போறே?"

"ம்... இதை ஒரு பீங்கான் கிண்ணத்தில் போட்டுத் தண்ணீர் ஊற்றி வைக்கப் போகிறேன்!"

"யூ ஆர் ஸப்போஸ்ட் டு டேக் ரெஸ்ட். பெட்டை விட்டு நகரக் கூடாதுன்னு ஐயா சொல்லியிருக்கார்."

"ம்... அவர்கிட்டே சொல்ல வேண்டாம்!" என்றாள் குறும்பாக வர்ஷா.

'நல்ல பெண் இவள்!' என மனதிற்குள் அவள் செய்வதை ரசித்தாள் சந்திரா.

அதற்குள் காலிங்-பெல் சத்தம் கேட்க, யாராக இருக்கும் என யோசித்தபடியே கீழே இறங்கினாள் சந்திரா.

ஹாலில் தீபா நிற்பதைப் பார்த்தாள் அவள்.

"ஓ... தீபாவா! வாம்மா. வர்ஷாவிற்கு உடம்பு சரி யில்லை."

"ம்... தெரியும். அவளைப் பார்க்கத்தான் வந்தேன்!" என்று அவள் பதிலுக்குக் காத்திராமல் மாடிப்படி ஏறத் தொடங்கினாள் அவள்.

சந்திராவிற்குத் தீபாவைப் பற்றி நன்றாகத் தெரியும். அவளுக்குத் திமிர் அதிகம். அகம்பாவம் ஜாஸ்தி. தொண தொண எனப் பேசிக் கொண்டே இருப்பாள்.

பாவம், வர்ஷாவால் ரெஸ்ட் எடுக்க முடியாது. இவளைச் சீக்கிரம் கிளப்ப வேண்டுமே என நினைத்தபடியே அவளைப் பின்தொடர்ந்தாள்.

"ஹாய் வர்ஷா! என்னடி இப்படி அசிங்கமா நெற்றியில காயம்!" என்றாள் குத்தலாக.

"ம்... ம்... திருஷ்டி போகட்டும் என்று நானா வேண்டு மென்றே ஏற்படுத்திக் கொண்டேன். சரி, உனக்கு எப்படித் தெரியும் எனக்கு அடிபட்டது?"



"இன்று காலை ரிஷபைப் பார்த்தேன். இன்ஃபேக்ட் நானும் அவரும் ஒன்றாகத்தான் பிரேக்பாஸ்ட் சாப்பிட்டோம்.

அவர்தான் சொன்னார். அதோடு உன் தந்தையின் பிஸினெஸில் வேறு ஏதோ பெரிய பிரச்சினையாம். அதையும் சொன்னார்.

பாவம் நீ! இன்னும் கொஞ்ச நாள்தான் இந்தப் பங்களா வாசம். இருக்கும்வரை அனுபவித்துக் கொள்!"

"தீபா! ஸ்டாப் இட். எனக்கு டயர்டாக இருக்கிறது. அதனால் லீவ் மி அலோன்!"

"இன்னும் ஒண்ணே ஒண்ணு சொல்றேன். காது குளிரக் கேட்டுக்கோ. நானும் ரிஷபும் சீக்கிரமே கல்யாணம் செஞ்சுக்கப் போறோம்.

ஹி இஸ் க்ரேஸி அபௌட் மி. அண்ட் ஹி இஸ் வெரி அட்ராக்டிவ்.

நான் அவருக்காக எதை வேண்டுமானாலும் கொடுக்கத் தயார்!" என்றாள் கொஞ்சலாக தீபா.

"சரி... கங்கிராட்ஸ். லீவ் மி அலோன்!"

அவள் சென்ற பிறகு ஏனோ மனம் சோர்வானது வர்ஷாவிற்கு.

தீபாவைப் பற்றி அவளுக்கு எப்பவுமே நல்ல அபிப்பிராயம் கிடையாது. நிறைய ஆண் நண்பர்கள், பார்டிஸ் இதெல்லாம்தான் அவளின் பொழுதுபோக்கு.

ரிஷப் அவளிடம் பிரேக்பாஸ்ட் சேர்ந்து சாப்பிட்டான் என எண்ணும்பொழுது அவள் மனதை ஏதோ நெருடியது.

ரிஷப்பிடம் சொல்லலாமா, 'தீபா அவ்வளவா சரியில்லை!' என்று.

எப்படி ஒரே சந்திப்பில் கல்யாணம் வரை பேசி முடிவு செய்தார்கள்.

ஏன் நான் ஏமாற்றப்பட்டது போல் உணர்கிறேன்.

ரிஷப் என்ன வேண்டுமானாலும் செய்யட்டும். எனக்கென்ன வந்தது!

நான் ஏன் அதைப் பற்றி யோசிக்க வேண்டும் எனத் தன்னையே கடிந்து கொண்டாள்.

"வர்ஷா! தீபாவே உள்ளே வேக வேகமா வந்திட்டா. கொஞ்சம்கூட தன்மை இல்லைடா அவளுக்கு!"

"விடுங்க ஆன்ட்டி. அவள் எப்பவுமே அப்படித்தான். இப்ப அப்பா பிஸினெஸ் வேற ஏதோ ப்ராப்ளம்னு தெரிஞ்சுடுச்சு.

அதனாலே வேணும் என்றே என்னைச் சீண்டி விட்டு விட்டுப் போகிறாள்.

அதோடு அவளுக்கும் ரிஷப்பிற்கும் கல்யாணமாம். அதையும் சொல்லிவிட்டுப் பெருமை அடித்துக் கொண்டாள்.

ஐ ஹேட் ஹர். அவள் ஏன் இப்படிச் செய்கிறாள் என்று புரியவில்லை. அதோடு ரிஷப்பிற்கு ஏன் இப்படி புத்தி போகிறது என்று தெரியவில்லை."

"சரி வர்ஷா! நீ இதையெல்லாம் யோசிச்சு மனசைக் குழப்பிக்காதே!

யூ நீட் ரெஸ்ட் செல்லம்!"



அவள் கண்களை மூடி ரெஸ்ட் எடுக்க முயன்றாள். ஆனால் ரிஷப்பும், தீபாவும் பேசிச் சிரிப்பது போல் அவள் மனக்கண்ணில் நிழலாடியது.

பேச்சுக் குரல் அறை அருகே கேட்பது போல் தோன்ற, கண்களைத் திறந்தாள் அவள்.

ரிஷபும் அப்பாவும் பேசிக் கொண்டு அவளை நோக்கி நடந்து வருவது அவளுக்குத் தெரிந்தது.

அவள் எழுந்து உட்கார்ந்தாள்.

"வர்ஷா! நீ படுத்துக் கொள். டோண்ட் ஸ்ட்ரெயின்!" என்றார் வசந்தன், உத்தரவு போடும் குரலில்.

"அப்பா! ஐயாம் ஆல்ரைட். எனக்கு இங்கே என்ன நடக்கிறது என்று தெரிய வேண்டும்!" என்றாள் அழுத்தமாக.

"யூ மீன் பிஸினெஸிலா?"

"ஆமாம்... பிஸினெஸ் உங்க பெயரில்தான் நடக்கிறது என்று நம்புகிறேன்.

இன்னும் ரிஷப் பெயருக்கு மாறவில்லை என்றும் நம்புகிறேன்."

"இப்பொழுது மாறவில்லை. ஆனால் மாறலாம். ஏனென்றால் ஒரு டீசண்ட் ப்ராஃபிட் பார்த்து ரொம்ப நாளாகி விட்டது!"

"யார் இந்தக் காலத்தில் டீசண்ட் ப்ராஃபிட் பிஸினெஸில் பார்க்கிறார்கள் அப்பா?"

"ஐ ஹேவ் மேட் ஆல்வேஸ்!" என்றான் ரிஷப்.

அப்பாவின் முகம் வாடுவதை அவள் கவனித்தாள். அப்பாவை ரிஷப் மறைமுகமாக மட்டம் தட்டுவது போல் ப்ராஃபிட் பற்றிப் பேசியது அவளுக்குக் கோபத்தை ஏற்படுத்தியது.

"அந்த லாபம் கிடைப்பதற்கு நீங்கள் என்னவெல்லாம் செய்வீர்களோ?

ஹூ ஆர் யூ எனிவே டு டாக் அபௌட் அவர் பிஸினெஸ்!" என்று படபடத்தாள்.

"வர்ஷா! என்ன இது? ரிஷப் நிறைய டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ், ஷாப்பிங் மால், ஃபேக்டரிஸ் என வெரைட்டியாக திறம்பட பிஸினெஸ் செய்கிறார்.

அவருடைய பொருட்கள் நிறைய ஏற்றுமதி ஆகின்றன. ஹி ஹேஸ் எ பிராண்ட்...!"

"வெல் வெல்... எ ரியல் பிஸினெஸ் மேக்னட். வாட் ஆர் யூவர் பிளான்ஸ் ஃபார் அஸ்!" என்றாள் வெறுப்பாக ரிஷப்பைப் பார்த்து.

ரிஷப் ஏதும் சொல்லாமல் அவளைப் பார்த்தான்.

"வர்ஷா! நம்ம கம்பெனியை நாம் ரிஆர்க் செய்ய வேண்டும்!" என்றார் வசந்தன்.

"அதைத் தவிர வேறு வழியில்லையா... அப்பா?"



# 8

**இது**
**எப்படி**
**நடக்கும்?**
**இரவு**
**வெளிச்சமாக**
**இருக்கிறது!**
**பகல்**
**கறுப்புப்**
**போர்வையில்**
**உலா**
**வருகிறது!**
**நிலவு**
**என்னைச்**
**சுடுகிறது!**
**சூரியன்**
**என்**
**மேல்**
**அமுதைப்**
**பொழிகிறது!**
**அட**
**கனவில்**
**கூட**

முரண்பாடா?
உன்னை நினைத்துப்
படுத்ததால்தானே?

"இருக்கிறது, கம்பெனியை மூடுவதுதான் ஒரே வழி!" என்றார் சோர்வாக வசந்தன்.

"ஓ... நிலைமை அவ்வளவு மோசமா அப்பா?" என்று கேட்கும் பொழுதே அவள் குரல் நடுங்கியது.

வசந்தன், "ஆமாம்!" என்பது போல் தலை அசைத்தார்.

"அப்பா! ரீ-ஆர்கனைஸேஷன் செய்தால் என்ன ஆகும்?" என்று கேட்கும் பொழுதே அவள் மனம் வலித்தது.

"ரிஷப் தான் கம்பெனியை டேக்-ஓவர் செய்யப் போகிறார். யாருக்கும் வேலை போகாது.

அது ஒப்பந்தத்தின் ஒரு பகுதி."

"வாட் அபௌட் யூ டாடி?"

"ம்... ஐ வில் கேரி ஆன். ஆனால் பதவி எனக்கு இருக்காது...!" என்றார் மெதுவாக வசந்தன்.

"ம்... வாட் அபௌட் மி!"

"உன்னுடைய நகை டிஸைன் சிலவற்றை நான் பார்த்தேன். ரொம்ப இம்ப்ரஸிவ்வாக இருந்தது.

உன்னைக் கண்டிப்பாக ஆக்குபைடாக வைத்துக் கொள்ளலாம்!" என்றான் ரிஷப்.

"தட்ஸ் கைண்ட் ஆஃப் யூ. ஆனால் எனக்கு வேலை வேண்டுமா என யோசிக்கிறேன்."



"வர்ஷா! உனக்கு நகைகள் டிஸைன் செய்வது ரொம்ப பிடிக்குமே... யூ ஆல்வேஸ் என்ஜாய்ட் இட்!" என்றார் அவள் தந்தை.

"ஆமாம். ஆனால் இப்பொழுது யோசிக்க வேண்டியிருக்கிறது!" என்றாள் குரல் உடைய.

அப்பாவின் முகத்தைப் பார்த்தாள் அவள். அவர் முகத்தில் கவலை ரேகைகள் அப்பட்டமாகத் தெரிந்தன.

அப்பாவின் மடியில் தலை வைத்து அழ வேண்டும் என்று அவள் மனம் துடித்தது. கூடாது... ரிஷப் முன்னே இப்படிச் செய்யக் கூடாது என மனதை அடக்கினாள்.

"அப்பா... இட்ஸ் எ ஷாக். ஒரு பூகம்பம் வெடித்தது போல் இருக்கிறது எனக்கு.

ஒருவேளை இப்படிச் சட்டென்று எனக்கு இந்த விஷயம் தெரிய வராமல் கொஞ்ச நாள் முன்னாடியே தெரிந்திருந்தால்... இவ்வளவு கஷ்டம் மனதிற்கு இருந்திருக்காது.

என்னால் இதை... இதை எல்லாம் ஒத்துக் கொள்ள முடியவில்லை. என் மனம் இதை ஏற்றுக் கொள்ள மறுக்கிறது.

ஐ ஜஸ்ட் காண்ட் பிலீவ் இட் டாடி! நான் கொஞ்ச நேரம் தோட்டத்தில் தனியாக இருக்க விரும்புகிறேன்.

ப்ளீஸ்... எக்ஸ்கியூஸ் மீ!" என்று சொல்லிவிட்டு அறையை விட்டு வெளியேறினாள் வர்ஷா.

ரோஸிக்கு 'ஏதோ தப்பு' என்று புரிந்தது போல. வர்ஷாவைப் பின்தொடர்ந்து வாலை ஆட்டியபடியே வந்தது.

வெளியே பனி பெய்து கொண்டிருந்தது. குளிர் அவளை ஏதும் செய்யவில்லை. ரோஸி அவள் முகத்தையே பார்த்தபடியே இருந்தது.

தோட்டத்தில் இருந்த ப்ளம் மரத்தின் அடியில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள் அவள்.

ஒரு புயல் அடித்ததுபோல் ஆகிவிட்டதே வாழ்க்கை! பாவம் அப்பா. அவர் முகத்தைப் பார்க்கவே எனக்குச் சக்தி இல்லை.

கடவுளே! இது என்ன சோதனை? ஏன் இந்த மாதிரி ஒரு சுனாமி எங்கள் வாழ்வில்? இதெல்லாம் கனவாக இருக்கக் கூடாதா?

ரிஷப் வந்ததிலிருந்துதான் எல்லாமே தப்பாக நடக்கிறது. எல்லாவற்றையும் ஆட்டிப் படைக்கும் சூத்ரதாரி அவன்தானோ என யோசித்தபடியே குளிரில் இருந்தாள் வர்ஷா.

"என்னடா பனியில உட்கார்ந்து இருக்கிறாய். உடம்பு இன்னும் உனக்கு முழுசாகச் சரியாகவில்லை!" என்று அப்பாவின் கனிவான குரல் அருகே கேட்டது.

அதற்கு மேல் பொறுக்க முடியாமல் அப்பாவை அணைத்துக் கொண்டு அழுதாள் அவள்.

"என்ன வர்ஷா இது... எல்லாம் சரியாகிவிடும்!" என்று சிறு குழந்தையைச் சமாதானப்படுத்துவது போல் தேற்றினார் வசந்தன்.

அப்பா தனக்காகச் சமாதானம் சொல்கிறார் என அவளுக்குப் புரிந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு பேசினாள் அவள்.



"புரிகிறது அப்பா. பிஸினெஸ் பொறுப்பு முழுவதும் ரிஷபிற்குப் போய் விடுமா? இல்லை... நமக்குக் கொஞ்சம் மீதம் இருக்குமா?" என்றாள் மெல்லிய குரலில்.

"வர்ஷா! எனக்கு இந்த உலகில் ஒன்றே ஒன்றுதான் முக்கியம். அது நீதான். நீ கண் கலங்குவதை என்னால் பார்க்க முடியவில்லை!" என்று கண்கலங்கினார் வசந்தன்.

"அப்பா... எனக்கும் நீங்கள் மட்டும்தான் முக்கியம். ஒருவேளை நீங்கள் என்னிடம் முன்னமே பிஸினெஸ் நஷ்டம் பற்றி கோடிட்டுக் காட்டி இருந்தீர்கள் ஆனால் நான் என்னால் முடிந்தவற்றைச் செய்திருப்பேன்.

நமக்கு இந்த நிலை வந்திருக்காது அப்பா...!"

"இப்பொழுதுகூட நீ ஒன்று செய்யலாம். நம்மைப் பழைய நிலைமைக்கு அது கொண்டு போகும் மை கேர்ள்!" என்ற வசந்தன் வர்ஷாவின் தலைமுடியைப் பாசமாகக் கோதினார்.

"என்ன அப்பா அது?" என்றாள் கண்களில் ஒளி மின்ன வர்ஷா.

"நீ ரிஷபைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்!" என்றார் அழுத்தமாக வசந்தன்.

"என்ன?" என்று அதிர்ந்தாள் வர்ஷா.

வசந்தன் மீண்டும் சொல்லவில்லை.

அவருக்குத் தெரியும் - வர்ஷாவிற்குக் காதில் நன்றாகவே விழுந்தது என்று.

"வர்ஷா! நாம் ரொம்ப மோசமான நிலையில் உள்ளோம். ரிஷப் பிஸினெஸை ஓவர் டேக் செய்யவில்லை என்றால், நம் கதி என்னவாகும் என்று தெரியவில்லை."

"அப்பா... நீங்கள் சொல்வது எனக்கு... முடியாது!"

அவள் தந்தை அவளை உற்றுப் பார்த்தார்.

"வர்ஷா! உன் அறைக்குப் போய்ப் பேசலாம் வா. இங்கே பனி ரொம்ப பெய்கிறது!" என்றார் மெதுவாக.

வர்ஷா அவரைப் பின் தொடர்ந்தாள்.

"நான் ரிஷபை முதலில் சந்தித்தது ஆஸ்திரேலியாவில்தான். ஐந்து வருடங்களுக்கு முன்பு ஒரு பிஸினெஸ் மாநாடு அங்கே நடந்தது.

அதில் பங்கேற்க நிறையப் பேர் வந்திருந்தனர். ரிஷபும் வந்திருந்தார்.

அந்த மாநாட்டில் நானும் அவரும் சேர்ந்து ஒரு பிரஸென்டேஷன் செய்ய வேண்டி இருந்தது.

நிறையக் குழுக்கள் பிரஸெண்டேஷன் செய்த பொழுதும் எங்கள் ப்ராஜெக்ட் நன்றாக இருந்ததால் எங்களுக்குப் பரிசாக ஒரு மொமெண்டோ கிடைத்தது.

அப்படி ஆரம்பித்த பழக்கம்தான் ரிஷபுடன். இவ்வளவு சின்ன வயதில் ரிஷபிற்கு இருந்த வியாபார நுணுக்கம், தெளிவு இதெல்லாம் எனக்குப் பிரமிப்பாக இருந்தது.

அப்பொழுதே நம் பிஸினெஸ் சரியாக ஓடவில்லை. நம் கம்பெனியை யாராவது நல்ல 'பையர்' கிடைத்தால் விற்று விடலாம் என்றுதான் நான் நினைத்துக் கொண்டிருந்தேன்."



"ஓ... அப்பொழுதே பிரச்சினையா அப்பா? நீங்கள் என்னிடம் சொல்லி இருக்கலாமே அப்பா!

நீங்கள் ஆஸ்திரேலியாவிலிருந்து எனக்காக ஒரு கிஃப்ட் வாங்கி வந்தீர்கள். ம்... அதெல்லாம் அந்த நிலைமையில் எப்படி உங்களால் செய்ய முடிந்தது?"

"நீ என் உயிர் வர்ஷா! மற்றதெல்லாம் எனக்கு செகண்டரிதான். நானும் ரிஷபும் அங்கே அன்று டின்னர் நன்றாகச் சாப்பிட்டோம்.

இன்ஃபேக்ட் ஹி இன்வைட்டட் மி ஃபார் டின்னர். அந்த ஹோட்டல் ஆஸ்திரேலியாவில் ரொம்பப் பிரபலம். அது ரிஷபிற்குச் சொந்தமானது.

அதை அவர் மெதுவாகத்தான் என்னிடம் சொன்னார். ஏனோ ரிஷபைப் பார்த்தவுடன் பிஸினெஸை நம்பிக்கையாகப் பார்த்துக் கொள்வார் என்று என் உள்ளுணர்வு சொன்னது மை டியர் கேர்ள்!

அவரிடம் முதல் முறையாக நான் நம் பிஸினெஸைப் பற்றிப் பேசினேன்!" என்றார் வசந்தன்.

"ஸோ யூ ட்ரஸ்டட் ஹிம் டாடி!" என்றாள் வர்ஷா.

அவள் மனம் வலித்தது. ஒரு அந்நியனிடம் அப்பாவால் எப்படி சுலபமாக வியாபாரத்தின் நஷ்டத்தைப் பற்றி பேச முடிந்தது. ஆனால் அதை என்னிடம் பகிர்ந்து கொள்ள எவ்வளவு தயங்குகிறார் என மனம் நொந்து போனாள் வர்ஷா.

அப்பாவிற்கு நல்ல நண்பர்கள் உண்டு. அவர்கள் எல்லாரையும் விட்டு விட்டு எப்படி ஒரு அந்நியனிடம் இதைப்

பற்றி பேசி உதவி கேட்க முடிந்தது அப்பாவால்... என ஆச்சரியமாக இருந்தது அவளுக்கு.

அதுவும் ஒரு அந்நிய தேசத்தில் ஏற்பட்ட சந்திப்பை ஆதாரமாக வைத்து அப்பா இந்த மாதிரி செயல்படுவது அவளுக்குத் திகைப்பை அளித்தது.

"ஹி இஸ் வெரி ட்ரஸ்ட்-ஒர்தி வர்ஷா. நான் பேச்சுவாக்கில் உன்னைப் பற்றி அவரிடம் பேசிக் கொண்டிருந்தேன்.

இன்ஃபேக்ட் ரிஷப் வாண்ட்ஸ் டு ஸெட்டில் டவுன் இன் லைஃப். அப்பொழுதுதான் உன்னைப் பற்றி ரிஷபிடம் பேசினேன்.

உன்னுடைய ஃபோட்டோ ஒன்று நான் எப்பவுமே என் வேலட்டில் வைத்திருப்பேன் அல்லவா?

அதை அவரிடம் காட்டினேன். அதற்கு அவர் என்ன சொன்னார் தெரியுமா?" என்று சஸ்பென்ஸ் வைத்து நிறுத்தினார் வசந்தன்.

"எ... என்ன சொன்னார் ரிஷப்?"

"ஹி டோல்ட் யூ ஆர் வெரி பியூட்டிஃபுல். நீ மகளாகக் கிடைக்க நான் பெருமைப்பட வேண்டும் என்றார். உன்னைச் சந்திப்பதற்கு முன்பே அவருக்கு உன் மேல் - ஃபோட்டோ பார்த்தவுடன் - காதல் வந்துவிட்டது என்று நினைக்கிறேன் மை கேர்ள்!" என்றார் கண்களில் குறும்பு மின்ன வசந்தன்.

"ஓ... டாடி நோ!"

ரிஷப்பிடம் அப்பா பிஸினெஸ் கவலை எல்லாம் கொட்டிய பின்பு அப்பாவைத் தேற்றுவதற்காக ஃபோட்டோவைப் பார்த்தவுடன் கேஷுவலாகச் சொல்லி யிருப்பான் ரிஷப்.



அதைப் போய் உண்மை என்று நம்பி அப்பா இப்படிப் பேசுகிறாரே... ஃபோட்டோவைப் பார்த்து விட்டு ஒரு பெண் மேல் காதல் கொள்ளும் பைத்தியக்கார வேலை எல்லாம் ரிஷப் ஒருபொழுதும் செய்ய மாட்டான்.

ஹி ஷுட் பி இன் ஹிஸ் தெர்டிஸ் நவ். அதனால் திருமணம் செய்து கொண்டு மனைவியுடன் செட்டில் ஆகவேண்டும் என நினைக்கலாம்.

அவனால் எல்லாவற்றிலும் பெஸ்ட்டாக இருப்பதை விலை கொடுத்து வாங்க முடியும். மனைவி உட்பட! அவனிடம் அதற்குத் தேவையான பணம் நிறைய இருக்கிறது.

ஏனோ அந்த நினைப்பே அவளுக்கு ஒரு அருவருப்பைத் தோற்றுவித்தது. அடிமைகளைச் சந்தையில் வாங்குவது போல் தோன்றியது அவளுக்கு.

ஒருவேளை அப்பா ரிஷபை மனதில் வைத்துக் கொண்டுதான் விக்ரமை அலட்சியப்படுத்தினாரோ! ரிஷப் என்னைப் பார்க்கத்தான் இங்கே வந்தானா?

ப்ராபர்டி வாங்குவது எல்லாம் சும்மா கண் துடைப்பா? சே! என்ன கொடுமை இது என மனம் குமைந்தாள் வர்ஷா.

"நீங்கள் அவரிடம் எனக்கு மாப்பிள்ளை பார்த்துக் கொண்டு இருப்பதாகச் சொன்னீர்களா அப்பா!"

"இல்லை வர்ஷா! நான் இதுவரை அதைப் பற்றிப் பேசவில்லை."

"அப்பா! பொருட்களை ஷாப்பிங் செய்து தேர்ந் தெடுப்பது போல் மனைவியையும் தேர்ந்தெடுக்கலாம் என ரிஷப் நினைத்துக் கொண்டிருக்கிறார்.

பட் ஐயாம் நாட் ஃபார் தட் பார்கெய்ன். என்னைக் காட்டிலும் அழகான பெண்கள் முழு விருப்பத்தோடு அவரைத் திருமணம் செய்து கொள்ளத் துடிக்கலாம்.

தீபா இங்கே வந்திருந்தாள். தீபாவை ரிஷப் பிரேக்பாஸ்டிற்கு இன்று இன்வைட் செய்திருந்தார் போல.

தே போத் ஆர் இன் லவ் டாடி. தீபா என்னிடம் அதைச் சொல்ல வந்தாள். சீக்கிரமே கல்யாணம் செய்து கொள்ளப் போகிறார்களாம்.

அதனால் நீங்கள் மனதைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். நாம் வேறு ஏதாவது யோசிக்கலாம்."

"இல்லை வர்ஷா! தீபா பேச்சை நீ நம்பாதே. அவள்...!" என்று தந்தை முடிக்கும் முன்பு வர்ஷா குறுக்கிட்டாள்.

"அப்பா! ப்ளீஸ் இதுபற்றி நாம் இனிமேல் பேச வேண்டாம். நான் காரில் ஒரு ரவுண்ட் போய்விட்டு வருகிறேன்."

"வர்ஷா இந்த மனநிலையில் நீ எங்கேயும் போக வேண்டாம். உனக்கு உடம்பு இன்னும் முழுமையாகச் சரியாகவில்லை.

அதனால் இந்தப் பனியில் போய் அலையாதே..."

"இல்லை அப்பா! எனக்கு இங்கேயே இருந்தால் மூச்சு முட்டுகிறது.



அதனால் என்னைத் தடுக்காதீர்கள்... ப்ளீஸ்!"

"வர்ஷா! நீ நான் சொல்வதைக் கேட்காமல் போனால் அவ்வளவுதான். ஜஸ்ட் ஃபர்கெட் மி!

ஐ வோண்ட் பி அலைவ் வென் யூ கம் பேக்!"

"அப்பா! ஏன் இப்படி எல்லாம் பேசறீங்க? சரி, நான் எங்கேயும் போகலை.

போதுமா? இதோ இந்த அறையிலேயே அடைந்து கிடக்கிறேன். ரிஷப்பின் பிஸினெஸிற்கு என்ன டிஸைன் பொருந்தும் என யோசித்துக் கொண்டிருக்கிறேன்... போதுமா!"

"அதைச் செய். குட் ஐடியா!" என்று சொல்லிவிட்டு அவள் அறையிலிருந்து கோபமாக வெளியேறினார் வசந்தன்.

அறையினுள் குறுக்கும் நெடுக்குமாக அலைந்தாள். விக்ரமின் நினைவு வந்தது. அவனைப் பார்க்க வேண்டும் என்று மனம் அலைமோதியது.

அவன் கொடுத்த சிவப்பு ரோஜாக்களை அவள் விழிகள் வருடின. பீங்கான் கிண்ணத்தில் இருந்து ஒரு ரோஜாவைக் கையில் எடுத்தாள். அதன் இதழ்களை வருடிக் கொடுத்தாள்.

சட்டென ஒரு ஐடியா அவளுக்குத் தோன்றியது. விக்ரமிடம் கேட்டால் என்ன? பிஸினெஸ் நஷ்டம் பற்றி அவனிடம் பேசினால் என்ன?

அவன் ஏதாவது உதவி செய்தால் செய்யலாம். ஆனால் இப்பொழுது எப்படிப் போவது? கார் எடுத்தால்

சத்தம் கேட்கும். பேசாமல் ஒரு டாக்ஸி எடுத்து விக்ரம் ஃபிளாட்டிற்குப் போகலாமா?

அதுதான் சரி... என்று முடிவு செய்தவள் கைப்பேசியை எடுத்து டாக்ஸிக்கு ஃபோன் செய்தாள்.

டாக்ஸியை வெளியே நிற்கும்படி சொன்னாள். சுவர்க் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி இரவு ஒன்பது என்று உறுதிப்படுத்தியது.

இரவு உடையைக் களைந்துவிட்டு வேறு உடையை அணிந்து கொண்டாள். வாட்ச்மேனிற்குத் தெரியாமல் போக வேண்டும். அது வேறு ஜாக்கிரதையாகக் கையாள வேண்டும் என நினைத்துக் கொண்டாள்.

டாக்ஸி டிரைவர் வந்து விட்டதாகக் கைப்பேசி குறுஞ் செய்தி அனுப்பி இருந்தார். தன் கைப்பையை எடுத்துக் கொண்டு அறையிலிருந்து மெதுவாக வெளியேறினாள்.

சுவர் ஏறி மெதுவாகக் குதித்தவளுக்கு அப்பொழுது தான் கைப்பேசியை அறையிலேயே வைத்துவிட்டது ஞாபகம் வந்தது.

"ம்... ம்... வேண்டாம்! அதை எடுக்க வேண்டாம். எடுத்தால் மாட்டிக் கொள்வேன்!" என நினைத்தபடியே டாக்ஸியினுள் ஏறினாள்.

"இந்த அட்ரஸ்ஸிற்குப் போங்க!" என்று டிரைவரைப் பணித்தாள்.

ஒரு முறை ஒரு கெட்-டுகெதருக்காக விக்ரம் வீட்டிற்கு நிறைய ஃபிரண்ட்ஸ் கும்பலாகப் போனதால் விக்ரம் தங்கியிருக்கும் ஃபிளாட் அவளுக்குப் பரிச்சயமான ஒன்று.



அடுத்த பத்து நிமிடத்தில் அவள் விக்ரம் வீட்டின் முன் இருந்தாள்.

காலிங் பெல்லை அழுத்தும்பொழுது ஏனோ மனம் படபடத்தது. விக்ரம் அவளைத் துளிக்கூட எதிர்பார்த்து இருக்க மாட்டான்.

"வர்ஷா! என்ன இந்த நேரத்தில..." என்று கதவைத் திறந்தான் பீட்டர்.

"ம்... விக்ரம் எங்கே பீட்டர்?"

"விக்ரமிற்கு இன்னிக்கு டிராமா ரோல் ஒண்ணு இருக்கு. அது முடிஞ்ச பிறகு வருவான்.

பத்து மணிகிட்டே வந்திடுவான்."

"ஓ... அப்ப நான் வெயிட் பண்றேன். ஹோப் யூ ஹேவ் நோ அப்ஜெக்ஷன்ஸ்!"

"ஒன்றுமில்லை வர்ஷா! நீ வெயிட் செய். நான் கம்ப்யூட்டரில் ஒரு வேலையைப் பாதியில் விட்டு இருக்கேன்.

அதை முடித்துவிட்டு வருகிறேன். ஃபிரிட்ஜில் நிறைய இண்டரஸ்டிங் ஐட்டம்ஸ் உள்ளன. யூ கேன் ஹெல்ப் யுவர்செல்ஃப்."

"ஓ... தேங்க்ஸ்!" என்று சொல்லிவிட்டு விக்ரமின் அறையில் உட்கார்ந்திருந்தாள் அவள்.

இதயத் துடிப்பு அதிகரித்தது. நான் வீட்டில் இல்லை என்பது இந்நேரம் தெரிந்திருக்குமா...! அப்பா என்னைத்

தேட ஆள் அனுப்பி விடுவார்களா என்ற பயம் அவள் மனதை அரித்தது.

கதவைத் தட்டும் சத்தம் கேட்கத் தயக்கத்தோடு கதவருகே சென்றாள். கதவைத் திறந்தவள் விக்ரமைப் பார்த்து மகிழ்ந்தாள்.

"விக்ரம்! நான் உன்னோட பேசணும். நான் அதற்குத்தான் வந்தேன்."

"என்ன வர்ஷா வாட் எ சர்ப்ரைஸ். இட்ஸ் குட் டு ஸீ யூ ஹியர்.

இன்னிக்கு நைட் இங்கதானே இருக்கப் போறே?" என்று கண்ணடித்தான்.

"விக்ரம் மைண்ட் யுவர் வர்ட்ஸ். ஐயாம் சீரியஸ். நீ இந்த மாதிரி ஜோக் அடிக்காதே!"

"சரி, ஒரு ஐந்து நிமிடம் டைம் கொடு. நான் மேக்கப்பை எல்லாம் கலைத்து விட்டு வருகிறேன்.

பொறுமையாகப் பேசலாம். டோண்ட் ஒர்ரி டியர்!"

"சரி... வா. நான் வெயிட் பண்றேன்!" என்றாள்.

நொடிகள் யுகங்கள் போல் தோன்றின அவளுக்கு. ஒரு வழியாக விக்ரம் மேக்கப்பைக் கலைத்துவிட்டு இரவு உடையில் வந்தான்.

"என்ன டியர், என்ன பிரச்சினை? சொல்!"

"விக்ரம் அந்த டிராகுலா வந்ததிலிருந்து எல்லாமே தலைகீழாக நடக்கிறது."



"ம்... உன்னைப் பார்த்தாலே தெரிகிறது. யூ லுக் வெரி பேல்...!"

"ம்... ம்... உண்மைதான். எல்லாமே டிராகுலாவால் தான்!"

"சரி, டிராகுலாவைப் பற்றிச் சொல்."

"ஹி இஸ் எ பிஸினெஸ் மேக்னெட். ஹி இஸ் எ பேச்சிலர். ஷாப்பிங் ஃபார் எ வொய்ஃப்.

என்னுடைய அப்பா என்னை...!" என்று முடிக்கும் முன்பு குறுக்கிட்டான் விக்ரம்.

"உன்னுடைய அப்பா உன்னை அவனோடு இணைத்துப் பார்க்கவில்லையே!"

"ம்... என் அப்பா அப்படித்தான் பார்க்கிறார் எங்கள் இருவரையும்!"

"ஓ... நீ என்ன நினைக்கிறாய்?"

"இட்ஸ் இம்பாஸிபிள் விக்ரம்!"

ஆனால் ஏனோ கண்ணை மூடினால், வர்ஷாவிற்கு ரிஷப்பின் முகம் நினைவில் தோன்றியது.

"தட்ஸ் குட்... டியர்!"

"பட் ஹி ஹேஸ் தி பவர் விக்ரம்!"

"என்ன பவர்?"

"ம்... டிராகுலா மாதிரி... அவன் கண்கள்... காட்! ஏதோ ஒரு சக்தி இருப்பது போல் தோன்றுகிறது."

"ஏய்... என்ன நீ திகில் பட எஃபெக்டை ஏற்படுத்து கிறாய்?"

"சரி விக்ரம்! நீ... நீ என்னைக் கல்யாணம் செய்து கொள்ள விரும்புகிறாயா?"

"இது என்ன கேள்வி!" என்று அவள் கையைத் தன்னுடன் இணைத்துக் கொண்டான் விக்ரம்.

"ஐயாம் க்ரேஸி அபௌட் யூ டியர்!" என்று அவளை அணைத்தான்.

"ஓ... நோ விக்ரம்! இதெல்லாம்... கல்யாணத்திற்கு அப்புறம்!" என்று அவனைத் தள்ளினாள்.

"சரி... உன் வீட்டில் உன்னைத் தேட மாட்டார்களா?"

"ம்... தேடலாம். நான் ஆன்ட்டிக்கு ஃபோன் செய்து சொல்லி விடுகிறேன்."

# 9

**என்னை**
**மாற்றி**
**விட்டாய்!**
**கொஞ்சம்**
**கொஞ்சமாக**
**எனக்கே**
**தெரியாமல்!**



**இரவிற்குப்**
**பின்பு**
**பகல்**
**வருவது**
**எவ்வளவு**
**இயல்போ**
**.......**
**அதைப்**
**போல்**
**என்னை**
**மாற்றி**
**விட்டாய்,**
**எனக்கே**
**தெரியாமல்**
**கொஞ்சம்**
**கொஞ்சமாக!**
**உன்னால்**
**மட்டுமே**
**முடியும் பெண்ணே!**

"என்ன சொல்லப் போகிறாய் வர்ஷா?"

"ம்... நீயே கேள்!" என்று சொன்னவள் லேண்ட் லைன் நோக்கிச் சென்றாள்.

"ஹலோ!" என்று மறுமுனையில் அவள் தந்தையின் குரல் கேட்டது.

"ஹலோ!" என்றாள் துணிவை வரவழைத்தபடி.

"வர்ஷா... வோ் தி ஹெல் ஆர் யூ...?" என்று தந்தை கத்தும் சத்தம் அவள் காதைத் துளைத்தது.

தந்தை இந்த மாதிரி எல்லாம் என்னைச் சத்தம் போட்டது கிடையாது. ஆனால் ரிஷப் வந்த பிறகு ரொம்பவே சத்தம் போடுகிறார் என்ற நினைப்பே அவள் கோபத்தைத் தூண்டியது.

"ரிஷப் அங்கேதான் இருக்கிறானா?"

"ஆமாம்."

அந்தப் பதிலைக் கேட்டவுடன் அவள் உடனேயே முடிவு செய்து விட்டாள். நான் திரும்பி வீட்டிற்குப் போக மாட்டேன். சே! அப்பா பேசுவதை எல்லாம் ரிஷப் கேட்டுக் கொண்டிருக்கலாம்.

நான் ஏதோ தவறு... பெரிய தவறு செய்த மாதிரி அல்லவா அப்பா கத்துகிறார். இதை விடக் கூடாது எனத் தீர்மானித்தாள்.

"அப்பா! நான் ஒரு ஃபிரண்ட் வீட்டில் இருக்கிறேன். பெயர் விக்ரம். நான் இங்கே கொஞ்ச நேரம் தங்கப் போகிறேன்.

யெஸ் ஐயாம் கோயிங் டு மோ்ரி விக்ரம். இதை நீங்கள் ரிஷபிடம் சொல்லி விடுங்கள்!" என்றாள் அழுத்தமாக.



போன் இணைப்பைத் துண்டித்தாள் அவள்.

"உன் அப்பாவா லைனில்?"

"ம்... ஆமாம்."

"அவர் இதை எப்படி எடுத்துக் கொள்வார்?"

"விக்ரம்... நான் இப்பொழுது சொல்லி இருக்கக் கூடாதுதான். மணி இப்ப பதினொண்ணு. அவர் தூக்கம் கண்டிப்பாகக் கெடும்.

நான் நாளைக் காலையில் இதைப் பற்றிச் சொல்லி இருக்க வேண்டும்!" என்றாள் பெருமூச்சோடு.

அதற்குப் பின்பு அவளுக்கு யாருடனும் பேசப் பிடிக்கவில்லை. ஏதோ தவறு செய்துவிட்ட குற்ற உணர்வு அவள் மனதை அழுத்தியது.

"விக்ரம்... நான் கொஞ்ச நேரம் ரெஸ்ட் எடுக்க வேண்டும். எனக்கு இன்னும் அதிர்ச்சியாகத்தான் இருக்கிறது எல்லாமே!"

"ஓ.கே. டியர்... வா! பீட்டர் அறையில் நான் படுத்துக் கொள்கிறேன்.

நீ என் அறையை உபயோகப்படுத்திக் கொள். வா!" என்றான் விக்ரம்.

அவனைப் பின்தொடர்ந்தாள் வர்ஷா. அவளுக்குத் தலை ரொம்ப வலித்தது.

வர்ஷா தன் காலணியைக் கழற்றினாள். அங்கிருந்த படுக்கையில் படுத்தாள். அவளுக்குத் தலைவலி காரண மாகவோ என்னவோ தூக்கம் உடனே வரவில்லை.

புது இடம். அதனால்தான் எனத் தனக்குத் தானே சொன்னவள், ஒரு வழியாகக் கொஞ்ச நேரம் கழித்துப் படுத்து உறங்கினாள்.

காலிங் பெல் சத்தம் போல் ஏதோ கேட்ட மாதிரி இருக்கக் கண் விழித்தாள் வர்ஷா. ஒரு நொடி முதலில் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

பின்பு லேசாக நினைவு திரும்பியது. தான் விக்ரம் வீட்டில் இருக்கிறோம் எனப் புரிந்தது அவளுக்கு.

"யார் அது?" என்று விக்ரமின் குரல் தெளிவாகக் கேட்டது.

"நான் ரிஷப். வர்ஷாவை அழைத்துப் போக வந்திருக்கேன்!" என்று ரிஷபின் குரல் கேட்கத் திடுக்கிட்டாள் அவள்.

"வர்ஷா! இது ரிஷப் குரல்தானா?" எனக் கேட்டபடியே தன் அறைக்குள் நுழைந்த விக்ரமைப் பார்க்கப் பாவமாக இருந்தது.

"ஆமாம் விக்ரம். இது ரிஷப்பின் குரல்தான்!" என்றாள் பயந்தபடி.

பாதித் தூக்கத்தில் எழுந்து இருந்ததால் அவள் விழிகள் சிவந்திருந்தன. ஆடை கசங்கி இருந்தது.

கதவைத் திறந்த மறுவினாடி வீட்டினுள் காலடிச் சத்தம் வேகமாகப் பரவியது.

"வா என்னோடு...!" என்று உறுமினான் ரிஷப், அவளைப் பார்த்து.



"லுக்! நீ இந்த மாதிரி அத்துமீறி வீட்டினுள் நுழையக் கூடாது!" என்றான் விக்ரம் கோபமாக.

"ஷட் அப்!" என்று சீறினான் ரிஷப்.

ஏதோ சரியில்லை என்று வர்ஷாவின் உள்ளுணர்வு சொன்னது. அவள் கை, கால் எல்லாம் குளிரினாலும், பயத்தினாலும் விரைத்து இருந்தன.

"என்ன ஆச்சு?" என்றாள் மெதுவாக.

"உன் அப்பாவிற்கு ஹார்ட் அட்டாக். ஆஸ்பிடலில் இருக்கிறார்கள்!" என்றான் ரிஷப்.

"நோ...!" என்று வீறிட்டாள் அவள்.

"நான்... நான் நம்ப மாட்டேன்!" என்று கதறினாள்.

ரிஷப்பின் முகத்தில் இருந்த ஏதோ ஒன்று அது உண்மைதான் என வர்ஷாவிற்கு உணர்த்தியது.

தன்னுடைய கைப்பையை டேபிளில் இருந்து எடுத்தாள். அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

"நான் உன்னை அழைத்துப் போகிறேன், டியர்!" என்றான் விக்ரம்.

"வேண்டாம்... விக்ரம் நீ வரக் கூடாது!" என்றாள் மெதுவாக. விக்ரம் அவளை அணைத்தான்.

"ஃபோன் பண்ணு வர்ஷா!" என்றான்.

அதற்குள் ரிஷப் தன் கையைப் பிடித்து வலுக் கட்டாயமாகத் தன்னை இழுத்துச் செல்வதை அவள் உணர்ந்தாள்.

படிக்கட்டுகளில் இறங்கும்பொழுது விழுந்து விடுவது போல் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது அவளுக்கு. ஆனால் அவளை ரிஷப் கெட்டியாகப் பிடித்து இருந்ததால் அவள் கீழே விழவில்லை.

காரினுள் அவளைத் தள்ளி உட்கார வைத்தான் ரிஷப்.

"இது உண்மையா?" என்றாள் அழுதபடியே.

"இந்த அர்த்த ராத்திரியில் உன் காதலனின் கைச் சிறையிலிருந்து, அவன் வீட்டிலிருந்து இல்லாவிட்டால் நான் ஏன் உன்னைப் பிரித்து அழைத்து வர வேண்டும்!" என்று நெருப்புத் துண்டங்களாக வார்த்தைகள் விழுந்தன.

விக்ரமோடு தன்னை இணைத்து ரிஷப் கேவலமாகப் பேசியது, அவள் கோபத்தைத் தூண்டியது. ஆனால் அடக்கிக் கொண்டாள் அவள்.

"ஹவ் பேட் இட் இஸ்!"

"பேட் இனஃப்!"

"அப்பாவின்... அப்பாவின் உயிருக்கு ஆபத்து இல்லையே!" என்று கதறினாள்.

"அவர் செய்த புண்ணியம் அவர் இன்னும் சாகவில்லை... போதுமா?"

"ப்ளீஸ்... நான் அப்பாவைப் பார்க்க வேண்டும். சீக்கிரமாகப் போங்கள்.

எப்ப ஹார்ட் அட்டாக் ஆச்சு?" என்றாள் அழுகையினூடே.



"ம்... நீ ஃபோன் செய்து முடித்த பின்புதான் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டது.

நீ வீட்டிற்கு வரமாட்டேன் என்றாய். விக்ரமோடு இரவில் அவன் வீட்டில் கும்மாளமடிக்கப் போவதாகச் சொன்னாய்.

அதோடு அவனையே திருமணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னாய். இந்த விஷயத்தை எல்லாம் தாங்கும் சக்தி அவர் இதயத்திற்கு இல்லை."

அப்பாவிற்குத் தான் சொன்னதைக் கேட்டு அதிர்ச்சி ஏற்படும் என்று அவளுக்குத் தெரியும். ஆனால் அது ஹார்ட் அட்டாக்கில் முடியும் என்று அவள் கொஞ்சம் கூட எதிர் பார்க்கவில்லை.

"ஆனால் அப்பாவிற்கு எப்படி அட்டாக் வந்தது? அவர் நன்றாக கோல்ஃப் எல்லாம் விளையாடுவாரே!"

"அவர் விளையாடி, ஸ்ட்ரெஸ் இல்லாமல் இருந்து வருடங்கள் ஆகிவிட்டன.

அவர் இதயம் பலவீனமாகிவிட்டது என்று உனக்குத் தெரியாதா?"

டாக்டர் மார்க் அப்பாவை ரொம்ப வேலைப் பளுவை இழுத்துப் போட்டுக் கொள்ள வேண்டாம் என்று அட்வைஸ் செய்வதை அவள் கேட்டிருக்கிறாள்.

அதன் பின்னே இப்படி ஒரு கதை இருக்கும் என அவள் துளிகூட எதிர்பார்க்கவில்லை.

"உங்களுக்குத் தெரியுமா அவர் இதயம் பலவீனம் என்று?"

"தெரியும், எனக்கு..."

"எவ்வளவு நாளாகத் தெரியும்?"

"நாங்கள் முதல் முதலாகச் சந்தித்தது ஆஸ்திரேலியாவில். அப்பொழுதே தெரியும். அவர் இதயம் பலவீனமானது என்று..."

"அப்பா உங்களிடம் சொன்னாரா? சே... அப்பா ஒரு அந்நியனான உங்களிடம் எல்லாவற்றையும் சொல்லி இருக்கிறார்.

அவருடைய பிஸினெஸ் பற்றி, நஷ்டம் பற்றி, உடல்நிலை பற்றி... என உங்களிடம் எல்லாமே சொல்லி இருக்கிறார்.

ஒருவேளை அதனால்தான் என்னிடம் எதுவுமே சொல்லவில்லை. ஐ ஹேட் யூ ரிஷப்...!" என்று அழுதபடியே கத்தினாள் வர்ஷா.

"ஷட் அப். டோண்ட் ஆக்ட் வர்ஷா! உனக்குத் தெரிந்திருக்க வேண்டும், இதெல்லாம்..."

"ஆனால் எப்படி... யாராவது சொன்னால்தானே தெரியும்!"

"உன் தந்தையின் முகத்தைப் பார்த்தாலே தெரிகிறது. அவருக்குக் கவலைகள் வருத்தங்கள் அதிகம் என்று.

நீ உன் காதலில் மூழ்கியிருந்ததால் உன் கண்களைக் காதல் மறைத்து விட்டது. சே! யூ மேக் மி ஸிக் வர்ஷா!

உன்னைப் போல் ஒரு செல்ஃபிஷ் பெண்ணை நான் இதுவரை பார்த்ததே இல்லை."

ரிஷப் தன்னைப் பற்றி ஏதேதோ சொன்னதைக் கேட்டு அவள் வருத்தப்படவில்லை.



நான் செய்தது தப்புதான். அப்பாவிடம் விக்ரம் பற்றி அப்படி பட்டெனப் பேசி இருக்கக் கூடாது. ஆனால் அதற்குக் காரணம் ரிஷப்தான்.

ரிஷபைத் திருமணம் செய்து கொள்ளும்படி அப்பா சொன்னதால்தான், சட்டென அப்படி நான் சொன்னேன். இல்லாவிட்டால் பக்குவமாக அப்பாவிடம் பேசி இருப்பேன் எனத் தனக்குள் நினைத்துக் கொண்டாள்.

அவள் ஏதும் பேசாமல் மௌனமாக இருந்தாள். பாவம், அப்பா ஹாஸ்பிடலில் எவ்வளவு கஷ்டப்படுகிறாரோ என நினைத்து நெகிழ்ந்தது அவள் மனம்.

அவள் இதுவரை ஹாஸ்பிடலை மிதித்தது கிடையாது. ஆனால் இரண்டு நாட்களாக ஹாஸ்பிடலை அடிக்கடி விசிட் செய்ய வேண்டியிருக்கிறது.

ஆனால் ரிஷபிற்கு ஒரு வகையில் நான் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். அப்பாவை இக்கட்டான தருணத்தில் ஹாஸ்பிடலில் சேர்த்தது ரிஷப்தான் என நினைத்தாள்.

காரை பார்க்கிங் ஸ்லாட்டில் நிறுத்திவிட்டு ரிஷப் இறங்கும் முன்பு காரிலிருந்து வேகமாக இறங்கினாள் அவள்.

ரிசப்ஷன் அருகே சந்திரா ஆன்ட்டியின் அழுத முகம் தெரிந்தது.

"ஆன்ட்டி!" என்று ஓடிச் சென்று அவர்களை அணைத்துக் கொண்டு அழுதாள் வர்ஷா.

டாக்டர் மார்க்கும் அங்கே நின்று கொண்டிருந்தார்.

"ஹி ஷுட் புல் த்ரூ திஸ் டைம்.... பாவம் வசந்த்!" என்றார் அவர்.

"அங்கிள்... ஐ லவ் ஹிம் எ லாட். ப்ளீஸ் எனக்கு அப்பா வேண்டும்... ப்ளீஸ்!

ஏன் அங்கிள் நீங்கள்கூட மறைத்து விட்டீர்கள்? அப்பாவிற்கு இதயம் பலவீனமானது என நீங்கள்கூடச் சொல்லவில்லையே!

ஆன்ட்டி! நீங்களும் சொல்லவில்லை... என்னிடம்!"

"இது யாருக்கும் தெரியாது மை கேர்ள். நீங்கள் எல்லாம் கவலைப்படுவீர்கள் என்று நினைத்துத்தான் உங்களிடம் சொல்லக்கூடாது என்பதில் தீவிரமாக இருந்தான் வசந்த்."

"காட்... அப்பா!" என்று முனகினாள் வர்ஷா.

"அது மட்டும் இல்லை வர்ஷா! நீ உன் அம்மா போல் ரொம்ப ஸாஃப்ட், டெலிகேட் என்று அடிக்கடி சொல்வான் வசந்த்.

உன் அம்மாவை அவன் பத்திரமாகப் பார்த்துக் கொண்டான். இருந்தும் ஹி லாஸ்ட் ஹர். அந்த மாதிரி உன்னையும் இழந்து விடுவோமோ என ஆழ்மனதில் அவனுக்கு ஒரு பயம் இருந்தது. அது எனக்குத் தெரியும்."

"பட் அங்கிள் ஐயாம் நாட் டெலிகேட். நான் அப்பாவைப் பார்க்கலாமா?"

"ம்... வசந்த் உன்னை இரண்டு முறை கேட்டான். அவனிடம் தன்மையாகப் பேசு. சரியா?"



அவர்களுடன் ரிஷப் நடந்து வருவதை அப்பொழுது தான் கவனித்தாள் அவள்.

அவள் கோபம் அவன் மேல் திரும்பியது.

"நீங்கள் ஏன் வருகிறீர்கள்?"

"இட்ஸ் ஓ.கே. வர்ஷா. ரிஷபும் வரட்டும். உன் அப்பா அவரையும் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டான்," என்றார் டாக்டர் மார்க்.

வசந்தன் ஸ்பெஷல் வார்டில் இருந்தார். சிறிய வட்ட வடிவமான டிஸ்க் போன்றவை அவர் நெஞ்சில் இருந்தது. அதிலிருந்து ஒரு ஒயர் மிஷின் பின்னே கனெக்ட் செய்யப் பட்டு இருந்தது.

அப்பாவை அந்த நிலையில் பார்த்த பொழுது அவள் கண்கள் கலங்கின.

"இட் வில் பி ஆல்ரைட்!" என்றார் வசந்தன் மெல்லிய குரலில்.

"யூ வில் பி இன் ஹோம் அப்பா. சீக்கிரமே... ஓ! நீங்க எங்களைப் பயமுறுத்தி விட்டீர்கள் அப்பா!"

"ஸாரிடா... எனக்கு என்ன ஆச்சுன்னு ஞாபகம் இல்லை. நல்ல காலம் மை லிட்டில் கேர்ள். நீ தனியாக இல்லை.

உன்கூடத் துணையாக ரிஷப் இருக்கிறார்."

ஓ! அப்பாவிற்கு ஞாபகம் இல்லை போல! நான் விக்ரம் வீட்டில இருந்து ஃபோன் செஞ்சது அவருக்கு ஞாபகம் இல்லை.

நானும் ரிஷபும் வீட்டிலேயே இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறார் என நினைத்துக் கொண்டாள் அவள்.

"நீங்க இப்ப தூங்கணும் அப்பா!" என்று சொல்லிய படியே அவர் நெற்றியில் முத்தமிட்டாள் வர்ஷா.

"ம்... நீங்க எல்லாரும் இப்ப வீட்டுக்குப் போகணும். ரிஷப்! நீ வர்ஷாவைப் பார்த்துப்பதானே!"

"ஆஃப்கோர்ஸ் இட்ஸ் மை பிளஷர்!"

"ரிஷப்! நீ ஹோட்டலுக்குப் போக வேண்டாம். இவர்களோடு தங்கு ப்ளீஸ்!"

"ஓ... கமான் அங்கிள். ஐ வில் டு தட். நீங்க ரெஸ்ட் எடுங்க!"

அவன் சட்டென அப்பாவை அங்கிள் என அழைத்தது அவளுக்கு வியப்பை அளித்தது.

"குட் நைட் அப்பா!"

"குட் நைட் மை டியர் கேர்ள்!"

ரிஷப்பின் கார் வீடு நோக்கிச் சென்றது. ஆன்ட்டியைப் பார்க்கவும் பாவமாக இருந்தது வர்ஷாவிற்கு. அழுதழுது அவர்கள் முகமே உப்பி இருந்தது.

வீட்டிற்குச் சென்றவுடன் ஆன்ட்டிக்கு ஒரு தூக்க மாத்திரையும், பாலும் கொடுத்தாள் வர்ஷா.

"நான் இதெல்லாம் போட்டது இல்லடா. வேண்டாமே...!"

"ஆன்ட்டி! ஒரு நாள் போட்டுக்கோங்க. ஒண்ணும் ஆகாது!" என வற்புறுத்திப் போட வைத்தாள் வர்ஷா.



"ஹாய் வர்ஷா! நான் எனக்குக் காப்பி கலக்கப் போகிறேன். உனக்கு வேண்டுமா?

அப்புறம் உனக்கு மாத்திரை ஏதாவது வேண்டுமா?"

"நீங்கள் அப்பாவைச் சரியான நேரத்தில் ஹாஸ்பிடல்ல சேர்த்தீங்க. தேங்க்ஸ் ஃபார் இட்!

அப்புறம் அப்பா சொன்னதற்காக நீங்கள் என்னைப் பார்த்துக்க வேண்டாம். என்னை என்னால் பார்த்துக் கொள்ள முடியும்."

"ம்... சரி உன் காதலன் விக்ரமை உன் தந்தைக்குப் பிடிக்காதா?"

"எனக்குத் தெரியாது... ஏன் கேக்கறீங்க?"

"நீ சொன்னவுடன், அதாவது விக்ரமைத் திருமணம் செய்யப் போவதாகச் சொன்னவுடன் அவர் முகம் மாறி விட்டது.

தட் நியூஸ் ஹிட் ஹிம் ஹார்ட்."

அவள் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள்.

"நீ ஏன் அந்த நியூஸை அவ்வளவு சட்டென அப்ரப்டாக உன் தந்தையிடம் சொன்னாய்?"

"எனக்குத் தனியாக முடிவெடுக்கத் தெரியும் என்று அப்பாவிற்கு உணர்த்த வேண்டும் என்று விரும்பினேன்.

அதோடு அப்பா... வந்து... வந்து... நான்..!" என்று உளறினாள்.

அவன் அவளைத் தீர்க்கமாகப் பார்த்தான்.

"புரியும்படியாகச் சொல் வர்ஷா!"

"நீங்கள் வாழ்க்கையில் செட்டில் ஆக வேண்டும் என்று நினைப்பதாக அப்பா சொன்னார்.

நீங்கள்... நீங்களும் நானும் திருமணம் செய்ய வேண்டும் என்று அப்பா விரும்பினார்."

"ஓ... அப்படியா? சில நேரம் என்னைப் பலர் தவறாகப் புரிந்து கொள்கிறார்கள்.

உன் அப்பாவும் அதற்கு விதி விலக்கு அல்ல. ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு விலை உண்டு.

அதேபோலச் சிலவற்றுக்குத் திருமணம் விலை ஆகலாம்!" என்றான் அழுத்தமாக ரிஷப்.

அவன் சொன்னதைக் கேட்டு அவள் முகம் கோபத்தால் சிவந்தது. சே! விலை கொடுத்து மனைவியை வாங்குவது போல் பேசுகிறானே என மனம் குமைந்தாள் வர்ஷா.

"நான் உன் நிலையில் இருந்தால் நான் உன் காதலன் விக்ரம் பற்றி இன்னும் கொஞ்ச நாட்களுக்கு உன் அப்பாவின் உடல்நிலை தேறும்வரை பேச மாட்டேன்.

நான் சொல்வது உனக்குப் புரியும் என நினைக்கிறேன்!" என்றான் ரிஷப்.

அப்பாவின் உடல்நிலை பலவீனமாக உள்ளது என்று அவளுக்குப் புரிந்தது. அவரை மகிழ்ச்சியாக வைத்துக் கொண்டால் உடல் நலம் சீக்கிரமாகத் தேறும் என்றும் அவளுக்குப் புரிந்தது.



"அப்பாவின் உடல்நிலை சரியாக, அவர் சீக்கிரம் குணமடைய நான் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயார்...."

"நீயும் நானும் சண்டை போடாமல் நல்ல ஃபிரண்ட்ஸ் மாதிரி, சொல்லப் போனால் காதலர்கள் மாதிரி இருப்பது உன் அப்பாவிற்குப் பிடிக்கும்!" என்றான் நிதானமாக ரிஷப்.

அவள் முகம் கோபத்தால் சிவந்தது.

"சந்தர்ப்பத்தை உங்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ளாதீர்கள். நீங்கள்... உங்கள் மனம் ஏன் இப்படி எல்லாம் யோசிக்கிறதோ!"

"லுக். நீ பார்க்க மட்டுமே மென்மையாக இருக்கிறாய். பட் உன் மனம் கல் மனம்.

பெற்ற தந்தையை, உன்னைப் பாசமாக, அன்பாக வளர்த்த உன் தந்தையின் இதயத்தைத் தெரிந்தே உடைத்தவள் நீ...

உன் காதலன் உனக்கு அவ்வளவு முக்கியமாகப் போய்விட்டான். அப்படித்தானே... சே! எவ்வளவு சுயநலம் உனக்கு?

அங்கிளின் உடல்நலம் மேல் எனக்கு... அந்நியனான எனக்கு இருக்கும் அக்கறைகூட உனக்கு இல்லையே....!" என்று கோபமாக உறுமினான் ரிஷப்.

"கெட் அவுட். லீவ் மி அலோன்!" என்று சீறினாள் அவள்.

அவன் கதவைச் சாத்திவிட்டு வேகமாக அறையை விட்டு வெளியேறுவது அவளுக்குத் தெரிந்தது.

அவன் சென்ற பின்பு கூட அவன் சொன்னதே அவள் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது.

கடவுளே! அவன் சொல்வது உண்மைதானா? நான்... நான்... அப்பாவைச் சரியாகக் கவனித்துக் கொள்ள மறுக்கிறேனா?

நான் அவ்வளவு சுயநலவாதியா என்று யோசிக்கத் தொடங்கினாள்.

அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. ஒன்றன் பின் ஒன்றாக ஏற்பட்ட அதிர்ச்சிகள் அவளை உருக் குலைத்தன.

# 10

**என்**
**கைப்பேசியும்**
**உன்**
**குரலிற்காகக்**
**காத்துக்**
**கொண்டு**
**இருக்கிறது!**
**என்**
**பேனாவும்**
**உன்னைப்**
**பற்றி**



**எழுதுவதற்காகக்**
**காத்துக்**
**கொண்டு**
**இருக்கிறது!**
**என்**
**தோட்டத்துப்**
**பூக்களும்**
**உன்**
**வருகைக்காகக்**
**காத்துக்**
**கொண்டு**
**இருக்கின்றன!**
**நானும்**
**இங்கே உனக்காக...!**

அடுத்த நாள் காலை வர்ஷா எழுந்திருக்கும்பொழுது மணி ஏழு. முன் தினம் இரவு சரியாகத் தூங்காததால் தலை லேசாக வலித்தது.

சந்திரா ஆன்ட்டி இன்னும் ரூமில் தூங்கிக் கொண் டிருப்பது தெரிந்தது. தூக்க மாத்திரையின் விளைவினால் தான் இப்படித் தூங்குகிறார்கள், பாவம்!

மற்ற நாள் என்றால் எழுந்து, சமையல் அறையில் மும்முரமாக ஏதாவது செய்து கொண்டிருப்பார்கள்.

ஆனால் எல்லாமே மாறிவிட்டது. வீடே அமைதியாக இருப்பது போல் தோன்றியது அவளுக்கு. அப்பாவின் உடல்நிலை எப்படி இருக்கிறது என்று தெரியவில்லையே!

ஹாஸ்பிடலுக்கு ஃபோன் செய்தால் நிலைமை தெரியும் என நினைத்தவள், வேகமாக ஃபோன் அருகே சென்றாள்.

"நான் ஹாஸ்பிடலுக்கு ஃபோன் செய்தேன். அங்கிள் இஸ் நார்மல்!" என்று ரிஷப்பின் குரல் அருகே கேட்டது.

சட்டெனத் திரும்பிப் பார்த்தாள். குளித்துவிட்டு ஃபிரெஷ்ஷாக ஒரு டி-ஷர்ட்டிலும், ஜீன்ஸிலும் இருந்தான் ரிஷப். தான் இன்னும் இரவு உடையிலேயே இருப்பது அவள் மனதை உறுத்தியது.

"ஓ... தேங்க்ஸ்! சீக்கிரமே கண் விழித்து விட்டீர்கள் போல!"

"யெஸ்... ஐ டோண்ட் நீட் மச் ஸ்லீப்."

"அப்பா சீக்கிரமே பழைய நிலைக்கு வந்து விடுவார்கள்தானே!"

"ம்... ஐயாம் நாட் எ டாக்டர்!"

"நோ... நீங்கள் டாக்டர் இல்லை என்பது எனக்குத் தெரியும். பட் யாராவது அதைச் சொல்ல மாட்டார்களா என்று இருக்கிறது!" என்று சொல்லும் பொழுதே கண்கள் கலங்கின.

தன்னைச் சமாளித்துக் கொண்டு அவளே தொடர்ந்தாள்.

"சரி... வுட் யூ மைண்ட் இஃப் ஐ டாக் அபௌட் பிஸினெஸ்!" என்றாள் உணர்ச்சிகளைத் துடைத்த குரலில்.



"நோ... ஐ வோண்ட் மைண்ட்."

"பிஸினெஸ் நன்றாகப் போய்க் கொண்டிருந்தது என்று நான் நினைத்தேன்.

உங்களால் சொல்ல முடியுமா! எப்படி இந்த மாதிரி ஒரு நிலைமையை அடைந்தது என்று!"

"பிஸினெஸ் கொஞ்ச வருடங்களாகச் சரியாகப் போகவில்லை. உன்னுடைய அப்பா அதனால் பெரிய முதலீடுகளைச் செய்யவில்லை.

போட்ட முதலே ஒரு கட்டத்தில் கை நழுவிப் போக ஆரம்பித்தது. உன் தந்தையின் உடல் நலமும் அதனால் பாதிக்கப்பட்டது.

அப்பொழுது அவர் பங்குச் சந்தையில் இன்வெஸ்ட் செய்ய ஆரம்பித்தார். உனக்கு ஒரு நல்ல சொகுசான வாழ்க்கைக்குத் தேவையானவை எல்லாம் கொடுக்க வேண்டும் என்பது அவர் விருப்பம்.

பட் நடந்தது வேறு.."

"ம்... அப்பாவிற்கு அதிர்ஷ்டம் இல்லை."

"அப்படியும் சொல்லலாம். அவர் முதலீட்டிலும் சரி, அவர் பெண்ணைப் பொறுத்தவரையிலும் சரி... அவருக்கு அதிர்ஷ்டம் இல்லை."

"ஸோ... நீங்கள் எங்களை வாங்கி விட்டீர்கள். ஐயாம் ஷ்யூர் யூ காட் அஸ் சீப்!" என்றாள் வெறுப்பாக.

"நாட்.. லைக் தட். கடன்கள் இருந்தன. அதை எல்லாம் நான்தான் அடைத்தேன்."

"அப்படியா!" என்றாள் பல்லைக் கடித்தபடி.

நிலைமை ரொம்ப மோசமாக இருப்பது அவளுக்குப் புரிந்தது. கீழ் உதட்டைப் பற்களால் கடித்தாள்.

"நான் சொல்வது உனக்குப் புரிகிறதா?"

"ம்... புரிகிறது!" என்றாள் மெலிந்த கரலில்.

அப்பா வந்து விட்டால் தேவலை. சீக்கிரமே வந்துவிட வேண்டும். கடவுளே! ஹெல்ப் மி ப்ளீஸ் என்று மனதிற்குள் வேண்டியபடி இருந்தாள்.

"அப்புறம் நாங்கள் இருக்கும் இந்த வீடு..."

"வீடு, நிலம் எல்லாமே அடகு வைக்கப்பட்டிருக்கிறது."

அதைக் கேட்டவுடன் அவளிடமிருந்து ஒரு பெருமூச்சு பிறந்தது. அப்பா! எனக்கு எதுவும் வேண்டாம். நீங்கள் மட்டும் என் அருகில் இருந்தால் போதும்... என மனதினுள் கரைந்தாள் அவள்.

"உங்களுக்கா அடகு வைத்திருக்கிறார்?"

"இல்லை..."

அவள் மனம் சோர்ந்து போனது. நான் கார் விபத்திலிருந்து தப்பித்த பொழுது அப்பாடா என நிம்மதியாக இருந்தேன்.

ஆனால் அதற்குப் பின்பு எத்தனை அதிர்ச்சிகள் என்னை இப்படித் துரத்துகிறதே... என்ன செய்வது எனப் புலம்பினாள்.

வீடும் அடகில் இருக்கிறது என்றால் அப்பாவை எங்கே அழைத்துச் செல்வது? கரண்ட் பில், மெயிண்டெனன்ஸ்...



என எவ்வளவோ இருக்கிறதே என அவள் மனதிற்குள் போராட்டம் நடந்தது.

"வீட்டில் இருக்கும் சாமான் முக்கியமாக ஃபர்னிச்சர்..." என்றாள் நடுங்கும் குரலில்.

"இல்லை... அடகு ஃபர்னிச்சரையும் சேர்த்துத்தான். பட் வீட்டை வாங்குபவர் அதை வாங்காமல் விட்டு விடலாம்."

"அப்படியா! நீங்கள் அடகிலிருந்து வீட்டை வாங்கி விட்டீர்கள்தானே! உங்கள் பெயரில்...!"

"யெஸ்!"

"எப்படி... எப்படி விலை எல்லாம் நிர்ணயம் செய்தீர்கள்?"

"ஒருவர் வீட்டிற்கு வேல்யூ இவ்வளவு என்று சொன்னார். அதைக் காட்டிலும் பத்து சதவீதம் நான் அதிகமாகக் கொடுத்தேன்."

அப்பா இந்த மாதிரியான ஒரு நெருக்கடியில் இருக்கிறார் என்பதை அறிந்தபொழுது அவள் மனம் வாடியது. எனக்காக அப்பா என்னவெல்லாம் செய்திருக் கிறார்.

ஆனால் நான்... நான் எவ்வளவு ஆடம்பரமாகச் செலவு செய்திருக்கிறேன். விலை உயர்ந்த பரிசுகள், எல்லாம் எவ்வளவு வாங்கி ஃபிரண்ட்ஸிற்குச் செலவு செய்திருப்பேன் என மனம் குமைந்தாள்.

கடைசி கேம்பிள் நானா? இந்தச் சூதாட்டத்தில் கடைசியாக விற்பனைக்கு இருப்பது நான் மட்டும்தான்

போல. அவள் மனதில் இருந்தது வார்த்தைகளாகத் தெறித்தது.

"நான் மட்டும் மீதம் இருக்கிறேன் விற்கப்படாமல்... சரியா? நானும் நல்ல பொருள்தான் ரிஷப்.

ஐயாம் குட் லுக்கிங். என் ஐ.க்யூ வேண்டுமானால் கம்மியாக இருக்கலாம்.

அதனால்தான் அப்பாவின் உடல்நலம் பற்றி எனக்கு ஏதும் தெரியவில்லை. அவர் பிஸினெஸ் பற்றி ஏதும் தெரியவில்லை.

இப்பொழுது எல்லாமே கை மீறிப் போய்விட்டது. ஏதாவது இங்கே விற்கப்படாமல் இருக்கிறதா?

ப்ளீஸ் சொல்லுங்கள். எது இந்த வீட்டில் உங்களுடையது? எது இந்த வீட்டில் எங்களுடையது என்று சொல்ல முடியுமா?" என்று ஏதேதோ பேசினாள்.

தொலைபேசி சத்தம் கேட்கவே அமைதியானாள் வர்ஷா. அது விடாமல் அடித்தது.

"ப்ளீஸ் அதை எடுங்கள். அதுவும் உங்களுடையது தான்..."

ரிஷப் கைத்தாங்கியை எடுத்தான். அவன் முகம் இறுகியது.

"விக்ரம் லைனில்!" என்று சொல்லிவிட்டு வேகமாக நடந்தான்.

"ஹலோ வர்ஷா டியர்! ஹவ் ஆர் யூ...? அப்பாவிற்கு இப்ப உடம்பு எப்படி இருக்கிறது?" என்றான் மறுமுனையில் விக்ரம்.



"விக்ரம்! ஹி இஸ் இம்ப்ரூவிங். நான் உன்னிடம் அப்புறம் விவரமாகப் பேசுகிறேன்!" என்று இணைப்பைத் துண்டித்தாள்.

விக்ரமிடம் நடந்ததை எல்லாம் சொல்லிப் புலம்ப வேண்டும் என்று அவள் மனம் துடித்தது. ஆனால் தன்னைக் கஷ்டப்பட்டுச் சமாளித்துக் கொண்டாள்.

ரிஷப்பின் பார்வை முதுகைத் துளைப்பதை அவளால் உணர முடிந்தது. அதனாலேயே தன்னை அடக்கிக் கொண்டாள் அவள்.

"நான்... ஐயாம் ஸாரி! வீடு அடகில் இருக்கிறது என்ற அதிர்ச்சியில் நான் என்னென்னவோ பேசி விட்டேன்.

ஸோ... நீங்கள் சொல்லுங்கள்... எதெல்லாம் நீங்கள் வாங்கி விட்டீர்கள்? எதெல்லாம் வாங்காமல் மீதம் உள்ளது?"

"ம்... எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. இந்த வீட்டை நான் எப்படியும் வருடத்திற்கு ஒரு மாதம் மட்டுமே உபயோகப்படுத்துவேன்.

என்னுடைய அறை எது என்பதை நான் தீர்மானித்து விடுகிறேன். அதைத் தவிர்த்து மற்றவற்றையெல்லாம் நீங்கள் உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

ஐ டோண்ட் ஹேவ் எனி அப்ஜெக்ஷன்ஸ்."

"ஓ... தேங்க்ஸ்! இட்ஸ் வெரி கைண்ட் ஆஃப் யூ!"

"ஓ... ஐயாம் எ பிஸினெஸ் மேன் வர்ஷா. இது இரக்கப்பட்டு நான் எடுக்கும் முடிவு இல்லை.

ஐ நீட் சம்திங் இன் ரிடர்ன்!" என்றான் நிதானமாக அவளைப் பார்வையால் அளந்தபடி.

அவள் உடல் எரிந்தது. கடவுளே! இது மாதிரி ஒரு நிலைமை எனக்கு ஏன்? நான் என்ன தவறு செய்தேன் என மனதிற்குள் புலம்பினாள் அவள்.

"ம்... நீங்கள்... ஸாரி. எங்களை இங்கேயே தங்குவதற்கு அனுமதிப்பதற்கு நாங்கள்... என்ன எவ்வளவு பணம்..." என்று திக்கித் திணறினாள் வர்ஷா.

"ம்... அதைப் பற்றி அப்புறம் நிதானமாகப் பேசலாம்...!" என்றான் அவன் கூலாக.

அதற்குள் சந்திரா ஆன்ட்டி அவர்களை நோக்கி வருவது அவள் கண்ணில் பட்டது.

"அப்பா நன்றாக இருக்கிறார்கள் ஆன்ட்டி. ஹாஸ்பிடலுக்குப் போன் செய்யும்பொழுது சொன்னார்கள்!" என்றாள் வர்ஷா.

சந்திரா ஆன்ட்டியின் முகத்தில் இருந்த கவலை ரேகைகள் மறைந்தது போல் தோன்றியது அவளுக்கு.

"அப்பாடா...! இப்பத்தான் மனசு நிம்மதியாச்சு. பாவம், அவருக்கு உன்னைப் பற்றி ரொம்பவே கவலை.

நீ அந்தக் கார் விபத்தில் சிக்கி, நெற்றியில் காயம் பட்டுக் கொண்டாய். அப்பொழுதே அவருக்கு ரொம்ப வருத்தம்.

சொல்லிச் சொல்லி மாய்ந்து போனார். ஆம்புலன்ஸில் ஏறும் பொழுது வேற உன்னைப் பற்றியேதான் பேசிக் கொண்டிருந்தார்.



நீ அன்று ஏன் வர்ஷா அப்படிச் செய்தாய்? ஏன் அப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் வீட்டை விட்டுப் போனாய்?" என்று பரிவாகக் கேட்டாள் சந்திரா.

அவளிடம் என்ன பதில் சொல்வது என்று புரியாமல் திகைத்தாள் அவள். ரிஷப் வேறு அங்கிருந்தது அவள் சங்கடத்தை அதிகரித்தது.

"நான்... நான் விக்ரமிடம் தியேட்டர் வாங்குவது பற்றி பேசப் போயிருந்தேன் ஆன்ட்டி!" என்றாள் மெல்லிய குரலில் தலை குனிந்தபடி வர்ஷா.

தந்தை சொன்ன எல்லாவற்றையும் சொல்ல ஏனோ அவளுக்கு மனம் ஒப்பவில்லை. அன்று ரிஷபைத் திருமணம் செய்து கொள்ளும்படி அப்பா சொன்னதால் ஏற்பட்ட அதிர்ச்சியால்தான் அப்படி சட்டெனப் போகத் துணிந்தேன் என்று சொல்ல வாய் வரவில்லை அவளுக்கு.

"சரி... விடு. நல்ல காலம் ரிஷப் தம்பி இருந்தார். அவர் பதட்டப்படாமல் ஆம்புலன்ஸை உடனே வரவழைத்தார்.

நீ எங்கே போயிருக்கிறாய் என்பதைக் கண்டுபிடித்து உன்னை ஹாஸ்பிடலுக்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

இல்லாவிட்டால் அப்பாவின் நிலைமை இன்னும் ரொம்ப மோசமாக இருக்கும்."

"ம்... ஆமாம். ரிஷப் இருந்ததால்தான் எல்லாமே முடிந்தது!" என்றாள் மெதுவாக வர்ஷா.

"சரி, ஆன்ட்டி நான்... என் ரூமிற்குப் போகிறேன். எக்ஸ்க்யூஸ் மி!" என்று சொல்லிவிட்டுத் தன் அறை நோக்கிச் சென்றாள்.

அடுத்து என்ன செய்வது? பணப் பிரச்சினையைச் சமாளிக்க என்ன வழி என்று யோசிக்கத் தொடங்கினாள். ஏதாவது வேலைக்குச் சென்றால் என்ன என்று ஒரு யோசனை தோன்றியது.

சரி, விக்ரமைக் கேட்டால் என்ன என்று ஒரு எண்ணம் தோன்றியது. கைப்பேசியை எடுத்து விக்ரமை ஃபோனில் தொடர்பு கொண்டாள்.

"ஹாய் வர்ஷா! சொல்.... டிராகுலா அங்கேயே டேரா போட்டு விட்டானா? அவன் ஏன் ஃபோனை எடுக்கிறான்?" என்றான் கோபமாக விக்ரம்.

"ம்... விக்ரம். நான் உன்னிடம் முக்கியமாக ஒன்று சொல்ல வேண்டும்."

"என்ன டியர்! அப்பாவின் உடல் நிலை ஏதாவது பிரச்சினையா?"

"அதெல்லாம் இல்லை. அப்பா இஸ ஸ்டேபிள். அப்பாவின் பிஸினெஸ் நஷ்டத்தில் இருக்கிறது.

ரொம்ப வருடங்களாக இருந்திருக்கிறது. பட் எனக்கு ரொம்ப லேட்டாகத்தான் எல்லாம் தெரிய வருகிறது.

அதோடு வீடு, நிலம் எல்லாமே அடகில் உள்ளது."

"வாட் ஆர் யூ ஜோக்கிங்?"

"இல்லை விக்ரம்! நான் சொல்வதெல்லாம் உண்மை. எனக்கு ஜாப் வேண்டும்.

அதற்காக நீ உதவி செய்ய முடியுமா?"



சந்திரா ஆன்ட்டி வரும் சத்தம் கேட்டது.

"விக்ரம்! நான் உன்னிடம் அப்புறம் பேசுகிறேன்... பை!" என்று இணைப்பைத் துண்டித்தாள்.

"வர்ஷா! அப்பாவிற்காக நான் கஞ்சி எடுத்துக் கொண்டு வருகிறேன்.

டாக்டர் அனுமதித்தால் கொடுக்கலாம். ரிஷப் தம்பி பத்து மணிக்கிட்டே எல்லாரும் ஹாஸ்பிடலுக்குக் கிளம்பலாம்னு சொன்னார்.

அதுக்குள்ள நீயும் தயாராயிடு. அதைச் சொல்லத் தான் நான் வந்தேன்."

"சரி ஆன்ட்டி... நான் கிளம்பிடறேன்."

ஆன்ட்டி சென்ற பின்பு சுயபச்சாதாபம் சட்டென அவளை ஆட்கொண்டது. வாய் விட்டு அழுதாள் வர்ஷா.

பின்பு அவளே தன்னை ஒரு வழியாகத் தேற்றிக் கொண்டாள். குளித்து விட்டு வந்தவள் என்ன உடை அணிவது என யோசித்தாள்.

அப்பாவிற்கு அவள் புடவை உடுத்தினால் ரொம்ப பிடிக்கும். ஆனால் அவள் பெரும்பாலும் மாடர்ன் உடைகள்தான் அணிவாள். அதுவே வசதி என்பதால் அவளுக்கு அது பிடித்தும் போய் விட்டது.

ஆனால் இன்று புடவை அணிந்தால் என்ன என்று தோன்றியது ஒரு எண்ணம் அவள் மனதில்.

வெளிர் நீல நிறத்தில் இருந்த ஒரு புடவையை எடுத்தாள். அதையே அணிவது என முடிவு செய்தாள்.

தலைமுடியை போனிடெயிலாக மாற்றினாள். சுவர்க் கடிகாரம் ஒன்பது என உறுதி செய்தது.

ஹாஸ்பிடல் போகப் போகிறோம் என்ற நினைப்பே அவளுக்குப் பதட்டத்தை அளித்தது. சமாளித்துக் கொண்டு தன் அறையிலிருந்து வெளி வந்தாள் அவள்.

சந்திரா ஆன்ட்டியும் ரிஷபும் ஹாலில் பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது. ரிஷபின் பார்வை தன் மேல் படர்வது அவளுக்குத் தெரிந்தது.

"வர்ஷா! வா, போகலாம். அப்பாவிற்கு நீ புடவை உடுத்தினால் ரொம்பப் பிடிக்கும்.

நானே உன்னைப் புடவை அணிந்து கொண்டு வான்னு சொல்லணும்னு நினைச்சேன். நீயே குறிப்பறிந்து கட்டிக் கொண்டு வந்து விட்டாய்."

"யூ லுக் வெரி நைஸ் இன் திஸ்!" என்றான் ரிஷப்.

"ஓ... தேங்க்ஸ்!" என்று சொல்லும் பொழுதே ஏனோ அவள் முகம் சூடானது.

"வாங்க, போகலாம்!" என்றான் ரிஷப்.

ஏதும் பேசாமல் மௌனமாக அவனைத் தொடர்ந்தனர் சந்திராவும் வர்ஷாவும்.

வர்ஷா பதட்டத்தைக் காட்டாமல் நிதானமாக இருக்க முயன்றாள்.

கார் ஹாஸ்பிடலை அடையும்வரை காரில் ஒரு கனத்த மௌனம் பரவியது.



ரிஷப் காரை பார்க் செய்து விட்டு வந்தான். ஹாஸ்பிடல் ரிசப்ஷனில் சந்திராவும், வர்ஷாவும் காத்துக் கொண்டிருந்தனர்.

அங்கிருந்த ரிசப்ஷனிஸ்ட் இண்டர்காம் வழியாக ஹாஸ்பிடல் உள்ளே யாருக்கோ தகவல் தெரிவித்தாள்.

"ஹலோ! நான் டாக்டர் ரிக். நான்தான் வசந்தன் ஸாரை அட்டெண்ட் செய்கிறேன்.

வாங்க உள்ளே போய்ப் பேசலாம்."

அவரை மூவரும் பின் தொடர்ந்தனர்.

வர்ஷாவின் முகம் வெளிறியது. பயத்தால் அவள் உதடுகள் உலர்ந்து போயின. நெற்றியில் லேசாக வியர்வை பூத்தது.

"உட்காருங்க...!"

அவர் காட்டிய நாற்காலிகளில் அமர்ந்தனர் மூவரும்.

"நீங்கதான் ஸாரோட பெண்ணா?"

"ஆமாம்."

"மேடம்! நான் உங்ககிட்ட தனியா பேசணும். வாங்க என்னோட...!"

"டாக்டர்! இஃப் யூ டோண்ட் மைண்ட் வர்ஷா இஸ் வெரி அப்ஸெட் அபௌட் திஸ் ஹோல் திங்.

அவளுக்கு மூன்று நாள் முன்னால் ஒரு ஆக்ஸிடெண்ட். அதனால் நானும் உங்களுடன் வருகிறேன்!" என்றான் ரிஷப்.

"ம்... வாங்க ரிஷப்!" என்றார் டாக்டர்

படபடத்த இதயத்தை அடக்குவது போல் தன் நெஞ்சில் கை வைத்தபடியே நடந்தாள் அவள்.

கடவுளே! எந்தக் கெட்ட செய்தியும் இருக்கக்கூடாது. ப்ளீஸ் எனக்கு ஏற்கெனவே நிறைய அதிர்ச்சிகளைக் கொடுத்து விட்டாய்.

இனியும் என்னால் எதையும் தாங்க முடியாது. அதனால் என்னைச் சோதிக்காதே என மனதிற்குள் வேண்டிக் கொண்டாள் அவள்.

"டோண்ட் ஒர்ரி வர்ஷா!" என்ற ரிஷப் சட்டென அவள் கையைப் பற்றினான்.

அவன் கையை அவள் அழுத்தமாகப் பற்றிக் கொண்டாள்.

"வர்ஷா! உங்க அப்பா இஸ் எ ஹார்ட் பேஷண்ட். இது அவரோட முதல் அட்டாக்.

பட் கொஞ்சம் சிவியர். ஆனால்...!" என்று அவர் முடிக்கும் முன்பு வர்ஷா கத்தினாள்.

"டாக்டர்! ப்ளீஸ்... அப்பாவை எப்படியாவது காப்பாத்துங்க!"

"வர்ஷா! கண்ட்ரோல் யுவர் செல்ஃப்!" என்று அவளைத் தன் புறமாக இழுத்தான் ரிஷப்.

அவள் உடல் நடுங்குவதை அவனால் உணர முடிந்தது.



"அவர் கண்டிஷன் இப்பொழுது சீராகத்தான் இருக்கிறது. ஆனால் இனிமேல் அவரை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

அவருக்கு அதிர்ச்சி தரும் தகவல்கள், வருத்தம் தரும் விஷயங்கள் அவர் காதில் விழாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

இன்னொரு மாரடைப்பை அவர் இதயம் தாங்காது."

"ஓ... தேங்க்ஸ் டாக்டர்!" என்றவள் ரிஷபின் தோளில் தலை சாய்த்துக் கண்ணீர் சிந்தினாள்.

அவள் முதுகைத் தட்டிக் கொடுத்துச் சிறுகுழந்தையைச் சமாதானம் செய்வது போல் செய்தான் ரிஷப்.

"அப்புறம் வீட்டில் அவரைக் கவனிக்க ஒரு நர்ஸ் - ஆண் நர்ஸ் ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்."

"சரி... டாக்டர். எவ்வளவு நாட்கள் இந்த நர்ஸ் தேவைப்படும்?" என்றான் ரிஷப்.

"மே பி ஒன் வீக் ஆர் ஒன் மன்த். அவர் உடல்நிலை முன்னேறுவதைப் பொறுத்துதான் சொல்ல முடியும்."

"இப்ப அப்பாவைப் பார்க்கலாமா டாக்டர்?"

"ம்... கண்டிப்பா. பட் ரொம்ப பேசி அவரை ஸ்ட்ரெஸ்ஃபுல்லா ஆக்கிடாதீங்க..."

'சரி...' என்பதுபோல் தலை அசைத்தாள் அவள். கடவுளே! நன்றி. எனக்கு இது ஒன்றே போதும் எனத் தனக்குள்ளே பேசியபடி நடந்தவள், அப்பொழுதுதான் தான் இன்னமும் ரிஷபின் கையைப் பற்றி இருப்பதை உணர்ந்தாள்.

# 11

உன்
கண்களால்
என்னை
நீ
கைது
செய்து
விட்டாய்!
உன்
சிரிப்பின்
அழகில்
நான்
என்னை
மறந்தேன்!
சிறைச்
சாலையில்
எப்பவும்
சந்தோஷமாகவே
இருக்கும்
கைதி
நான்
மட்டுமே!



உன்னாலே
மட்டும்
இது
முடியும்
பெண்ணே!
- எப்படி?

அப்பா ஸ்பெஷல் வார்டில் கண் மூடிப் படுத்து இருந்தார். காலடிச் சத்தம் கேட்டவுடன் கண் விழித்தார்.

ரொம்ப நேரம் வார்டில் இருக்கக் கூடாது என்று டியூட்டி டாக்டர் சொன்னதால் உடனேயே திரும்பிவிட வேண்டும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் அவள்.

"அப்பா... எல்லாம் சரியாயிடும்...!" என்றாள் மெதுவாக.

"ஆமாம்... உன்னையும் ரிஷபையும் சேர்ந்து பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறது."

அவள் முகத்தில் செம்மை படர்ந்தது.

"அப்பா... ரிஷப் என்னிடம் எல்லாம் சொன்னார். வீடு, நிலம் அடகில் இருப்பது... அவர் கம்பெனியை டேக்-ஓவர் செய்வது என எல்லாமே சொன்னார்.

அப்புறம்... அப்புறம் ஹி வாண்ட்ஸ் அஸ் டு லிவ் தேர் இன் தி ஹவுஸ்!" என்றாள் மெதுவாக.

"ம்... தட்ஸ் நைஸ்!" என்றார் வசந்தன்.

"ம்... மேடம்! விஸிட்டிங் ஹவர்ஸ் முடியப் போகுது. ஸோ ப்ளீஸ் கிளம்பிப் போங்க!" என்றாள் டியூட்டி நர்ஸ்.

"அப்பா! கிளம்பறோம்..." என்றாள் வர்ஷா.

"அங்கிள்... டேக் கேர்!" என்றான் ரிஷப்.

சந்திரா கொண்டு வந்திருந்த கஞ்சியை நர்ஸிடம் கொடுத்துவிட்டு 'கிளம்பறேன்' என்பது போல் தலை அசைத்தாள்.

வெளியே வந்த பின்பு வர்ஷாவின் மனம் லேசானது. அப்பாவின் உடல்நிலை தேறிச் சீக்கிரமாக வீட்டிற்குத் திரும்பி விடுவார் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

"அங்கிளிடம் நீ இன்னும் கொஞ்ச நாள் கழித்துச் சொல்லலாம்!"

"என்ன சொல்லலாம்?"

"ம்... நீ உன் காதலன் விக்ரமைத்தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறாய் என்று சொல்லலாம்."

அவள் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள். அப்பாவிடம் அந்த மாதிரி தன்னால் சொல்ல முடியுமா என யோசித்தாள்.

"சரி. உங்கள் பெற்றோர் இங்கே வீட்டிற்கு வரப் போகிறார்களா?" என்றாள் பேச்சை மாற்றும் விதமாக.

"இல்லை..."

"ஓ.கே. இப்ப வீட்டிற்குத்தானே போக வேண்டும்."

"ஆன்ட்டியை வீட்டில் விட்டுவிட்டு நீயும் நானும் ஒரு இடத்திற்குப் போக வேண்டும்."



"எங்கே?"

"கம்பெனிக்குத்தான்...!"

"ஓ... டேக்-ஓவர் பற்றி ஸ்டாஃபிடம் பேசுவதற்காகவா?"

"ஆமாம். நானும் அங்கிளும் சேர்ந்து பேசுவதாக இருந்தது. பட் அவர் இல்லாததால் நீ வா...!"

"சரி!" என்று முனகினாள் அவள்.

'ம்... ம்... இதுவெல்லாம் கஷ்டமான கட்டம் என் வாழ்க்கையில். அப்பாவிற்கு ரொம்பப் பிடித்தது இந்தக் கம்பெனி.

அவர் உயிருக்கு உயிராக மதிப்பது இந்தக் கம்பெனி. இப்பொழுது அது கைமாறுகிறது!' என்று மனதிற்குள் நினைத்தபடி இருந்தாள் அவள்.

கம்பெனி ஸ்டாஃப் பத்துப் பேர் என்பதால் அவர்கள் எல்லாரையும் அவளுக்கு நன்றாகத் தெரியும்.

சந்திரா ஆன்ட்டியை வீட்டில் விட்டுவிட்டு இருவரும் கம்பெனி நோக்கிச் சென்றனர்.

அங்கே கம்பெனிக்கு வெளியே கூட்டமாக இருந்தது. ஓ! அப்பா ஹாஸ்பிடலில் இருப்பது இவர்களுக்குத் தெரிந்து விட்டது. அதனால் அடுத்து கம்பெனிக்கு என்ன ஆகும் என்று யோசித்தபடி இருப்பார்கள்.

பாவம்! அதனால்தான் எல்லார் முகத்திலும் பதட்டம் தெரிகிறது என நினைத்தபடியே காரை விட்டு இறங்கினாள்.

அவளை உடனே அங்கிருந்தவர்கள் சூழ்ந்து கொண்டனர்.

"மேடம்...! ஸார் இப்ப எப்படி இருக்கார்?"

"எந்த ஹாஸ்பிடல் மேடம்?"

"எப்ப டிஸ்சார்ஜ் செய்வாங்க மேடம்?" என மாற்றி மாற்றி ஆள் ஆளுக்குக் கேட்டனர்.

"ம்... அவர் உடம்பு தேறி வருகிறது. பட் ஹி நீட்ஸ் ரெஸ்ட்.

அதனால் அவரால் வேலை இனி பார்க்க முடியாது. மீட் மிஸ்டர் ரிஷப். வெல். இனி கம்பெனியை இவர்தான் டேக்-ஓவர் செய்கிறார்!" என்றாள் வர்ஷா.

"ஓ... அப்படியா!" என்று கூட்டத்திலிருந்து சலசலப்பு எழுந்தது.

"நாம் எல்லோரும் உள்ளே போய்ப் பேசலாம். வாங்க... கடையின் முன் க்ளோஸ்டு என்று ஒரு போர்டு போட்டு விட்டு வாங்க.

இல்லாவிட்டால் கஸ்டமர்ஸ் வந்து விடுவார்கள்!" என்றான் ரிஷப்.

அவன் சொன்னபடியே செய்து விட்டு உள்ளே நுழைந்தனர் ஸ்டாஃப் எல்லோரும்.

அந்த அறையில் எல்லோரும் உட்காருவதற்கு வசதியாக நிறைய நாற்காலிகள் இருந்தன. ரிஷப் அங்கே உட்கார்ந்திருப்பது ரொம்ப கேஷுவலாகத் தோன்றியது அவளுக்கு.

அறையில் உட்கார்ந்திருந்த ஸ்டாஃப் முகத்தில் பதட்டம் தெரிந்தது. எல்லோரும் அவளையும் ரிஷபையும் பார்ப்பது அவளுக்குத் தெரிந்தது.



ஆனால் ரிஷப் அப்பா உட்காரும் நாற்காலியில் உட்காரவில்லை. அது காலியாக இருப்பதைக் கவனித்தாள் அவள்.

ரிஷப் ஒரு மேஜையின் விளிம்பில் உட்கார்ந்தபடி ரொம்ப கூலாக இருந்தான். அவன் பேசத் தொடங்கியவுடன் அங்கே அமைதி நிலவியது.

ரிஷப் பேசுவதை எல்லோரும் கூர்ந்து கவனிப்பது அவளுக்குப் புரிந்தது. அவன் நல்ல திறமையாக அழகாகப் பேசுவதை அவள் கவனித்தாள்.

ஒரு வேளை போர்ட் மீட்டிங் அதிலெல்லாம் பேசுவ தால் அவனுக்குப் பழக்கம் போல என்று நினைத்துக் கொண்டாள் அவள்.

"வசந்தன் ஸார் என்னை இங்கு அழைத்து வந்து அறிமுகப்படுத்துவதாக இருந்தது.

ஆனால் அதற்குள் அவருக்குச் சட்டென இந்த மாரடைப்பு வந்து விட்டது. அதனால்தான் நான் இங்கே இன்று அவர் மகள் மிஸ் வர்ஷாவோடு வந்திருக்கிறேன்."

அவளுக்கு அவன் சொன்னதைக் கேட்டவுடன் முந்தைய தினம் நடந்தது எல்லாம் நினைவிற்கு வந்தது. அவள் இதயத் துடிப்பு அதிகரித்தது.

"ஸார்! இந்த டேக்-ஓவரால் எங்கள் வேலை பாதிக்கப்படுமா?"

"அதெல்லாம் ஏதும் இல்லை. ஸோ டோண்ட் ஒர்ரி."

"நீங்கள் ஊட்டியைச் சேர்ந்தவரா... ஸார்?"

"ம்... நான் இங்கே இருந்திருக்கிறேன். இருபது வருடங்களுக்கு முன்பு. அப்புறம் ஆஸ்திரேலியாவில் இருந்தேன். அங்கேதான் நான் பிஸினெஸ் பற்றி நிறையத் தெரிந்து கொண்டேன்."

அவனுடைய பேச்சு ரொம்ப புரபஷனலாக இருந்தது. அவனுக்கு ஜுவல்லரி பற்றி எவ்வளவு விவரங்கள் தெரிந்திருக்கிறது என்று ஆச்சரியப்பட்டாள் வர்ஷா.

அவர்கள் செய்யும் வேலையை அவன் மனமுவந்து பாராட்டினான். இந்த ஜுவல்லரி ப்ராடெக்ட்ஸ் எல்லாம் வெளிநாட்டில் ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு பற்றி அவர்களிடம் பேசினான் ரிஷப்.

அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி அப்பட்டமாகத் தெரிந்ததைக் கவனித்தாள் வர்ஷா.

கற்கள் பற்றி, செமி-பிரெஷியஸ் ஸ்டோன்ஸ் பற்றி, ஜெம்ஸ் பற்றி அவன் பேசப் பேச வர்ஷா பிரமித்தாள்.

அவனுடைய பேச்சில் கூட்டம் மயங்கி இருப்பதைக் கண்டு மனதிற்குள் சிரித்துக் கொண்டாள் வர்ஷா. கண்டிப்பாக ரிஷப் பிஸினெஸைத் திறம்பட நடத்துவான்.

உண்மையைச் சொல்லப் போனால் அப்பாவைக் காட்டிலும் நன்றாக நடத்துவான். இவனிடம் ஏதோ ஒரு ஈர்ப்புச் சக்தி இருக்கிறது.

அவன் உயரம், கம்பீரம், ஆழமாகப் பேசும் ஆங்கிலம் என எல்லாமே அவனின் கவர்ச்சியை அதிகரிக்கிறது என்று ஒரு நொடி யோசித்தவள், சட்டெனத் தன் மனம் செல்லும் போக்கைக் கண்டு அதிர்ந்தாள்.



சே... நான் ஏன் இப்படி எல்லாம் யோசிக்கிறேன். காட்! இது தப்பு. அப்பாவின் உடல்நிலை இப்படி ஆனதால் என் மனம் பேதலித்து விட்டது போல எனத் தன்னையே கடிந்து கொண்டாள்.

ரிஷபின் தன்னம்பிக்கையும், ஆளுமைத் தன்மையும் அவளுக்குப் பிடித்தது. அங்கு வேலை பார்ப்பவர்களிடம் அவன் தன்னுடைய ஸ்டைலை, வொர்கிங் ஸ்டைலை அவர்கள் அறியாமலே அவர்களிடம் தெரிவித்துக் கொண்டிருந்தான்.

அவனுடைய நடை, டிரெஸ் ஸென்ஸ், பேச்சுத் திறமை இதெல்லாம் கண்டிப்பாக ஒரு புதிய மாற்றத்தை பிஸினெஸில் ஏற்படுத்தும் என மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் அவள்.

ஸ்டாஃப் நிலையிலிருந்து யோசித்துப் பார்க்கத் தொடங்கினாள் அவள். 'வேலை நீடிக்குமா, நீடிக்காதா?' என்ற நிலைமை மாறி அவர்கள் ஜுவல்லரி ப்ராடெக்ட்ஸ் ஏற்றுமதி ஆகப்போகிறது.

ஸோ, கண்டிப்பாக இந்த மாற்றம் அவர்களுக்குப் பிடிக்கும். அதுவும் ரிஷப் போன்ற வெற்றிகரமான தொழிலதிபரோடு வேலை பார்க்க ஒரு வாய்ப்பு

அதனால் கண்டிப்பாக அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பார்கள் என நினைத்தபடி மெதுவாக அறையை விட்டு வெளியேறினாள். ரிஷப் பேசி முடித்திருந்ததால் ஸ்டாஃப் எல்லோரும் அவனைச் சூழ்ந்தபடி கேள்விகள் கேட்டுக் கொண்டிருப்பது அவள் கண்ணில் பட்டது.

அறையின் வெளியே வரவேற்பு அறையில் இருந்த ஜன்னல் அருகே நின்று கொண்டு வெளியே வேடிக்கை பார்த்தாள் வர்ஷா.

"ஹாய் வர்ஷா! ஹவ் ஆர் யூ?" என்று சங்கீதாவின் குரல் கேட்கத் திரும்பினாள்.

"ம்... ஐயாம் ஓகே சங்கீதா! ஹவ் ஆர் யூ?"

"வெரி ஸாரி. அப்பா உடல் நிலை பற்றி எனக்கு விக்ரம் சொன்னான். நான் ஒரு வாரமாக லீவ்... அதனால்தான்!

இப்ப எப்படி இருக்கார் ஸார்?" என்றாள் சங்கீதா.

சங்கீதா கம்பெனியில் ரிசப்ஷனிஸ்ட்டாகப் பணியாற்று கிறாள். நல்ல அழகி. அதற்கேற்ப ஒப்பனை செய்து கொள்வதால் அவள் அழகை மேலும் அதிகப்படுத்திக் காட்டியது அது.

விக்ரமோடு நாடகங்களில் அவளும் நடிப்பாள். பீட்டர் போல் விக்ரமிற்குச் சங்கீதா ஒரு நல்ல ஃபிரண்ட்.

"இப்ப பரவாயில்லை... சங்கீதா! வீட்டில்தான் இருக்கிறார்..."

"ம்... ஸாரி வர்ஷா! நாங்கள் வேறு உன்னைத் தொல்லைப்படுத்தினோம். நீ பணக்காரி என நினைத்து தியேட்டரை வாங்கும்படி உன்னை வற்புறுத்தினோம்.

இன்ஃபேக்ட் விக்ரமிடம் தியேட்டர் பற்றி உன்னிடம் பேசச் சொன்னது நான்தான். ஸோ ஐ ஃபீல் கில்ட்டி!"

"ம்... நிறைய மாற்றங்கள் வாழ்க்கையில்... என்ன செய்வது?" என்றாள் பெருமூச்சோடு வர்ஷா.



"நீ ஒரு விபத்தில் வேறு சிக்கிக் கொண்டாய் போல... விக்ரம் சொன்னான்..."

சட்டென ஒரு சலிப்பு ஏற்பட்டது அவளுக்கு. விக்ரம் இவளிடம் எல்லாவற்றையும் சொல்லி இருக்கிறான் போல என நினைத்துப் பெருமூச்சு விட்டாள் அவள்.

அதற்குள் அங்கே ரிஷப் வந்து விடவே பேச்சு தடைப்பட்டது.

"வர்ஷா, போகலாமா? இல்லை யூ வான்ட் டு ஸ்பெண்ட் ஸம் மோர் டைம் ஹியர்...?"

"இல்லை... கிளம்பலாம்! ஸோ யூ ஆர் கான்ஃபிடென்ட் தட் தி பிஸினெஸ் வுட் பி குட்!"

"யெஸ்... ஐயாம் ஷ்யூர்!"

"அப்புறம் உங்கள்... உங்கள் பெற்றோரும் இங்கே வந்து தங்கப் போகிறார்களா?"

"என் அம்மா நான் பத்து வயது கிட்டே இருக்கும் பொழுதே இறந்து விட்டார்.

அப்பா மட்டும் என்னுடன் ஆஸ்திரேலியாவில் இருக்கிறார்!"

"ஓ... அப்படியா! இப்ப அவர் தனியா இருக்கிறாரா... அங்கே?"

"யெஸ்... உனக்குத் தெரியுமா? நான் இங்கே ஊட்டியில் இருந்த பொழுது வீடே கிடையாது. அப்பா தேயிலை எஸ்டேட்டில் வேலை பார்த்து வந்தார்.

சில நேரம் குளிர்காலத்தில் வீடு இல்லாமல் இருப்பது ரொம்ப சிரமமாக இருக்கும். அப்புறம் அப்பாவின் முதலாளி மனம் இரங்கி, அவர் வீட்டின் அவுட்-ஹவுஸில் எங்களுக்கு இடம் அளித்தார்."

"ஓ... அப்ப நீங்கள் வாழ்க்கையில் ரொம்ப தூரம் முன்னேறி வந்திருக்கிறீர்கள். நான்.. நீங்கள் பிறந்ததே பணக்காரக் குடும்பத்தில் என நினைத்தேன்."

"உன் போல் இல்லை... நான்!"

"ஆமாம்... என் போல் இல்லை நீங்கள். என் வாழ்க்கை ஒரே நாளில் மாறிவிட்டது. என்ன செய்வது?

என் வாழ்க்கை இனி எப்படி இருக்கப் போகிறதோ?"

"ஏன், உன் காதலன் விக்ரமோடு நன்றாக இருக்கும்! உனக்கும் அவனுக்கும் திருமணம் நடக்கும்.

குழந்தைகள் பிறக்கும். ஆனால் குழந்தைகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொள். டோண்ட் ரூயின் தெம் லைக் யுவர் ஃபாதர் டிட் யூ!"

"யூ டிட் நாட் ஹேவ் எ ஹேப்பி சைல்ட்-ஹூட். அதனால் என் மேல் பழி சுமத்தாதீர்கள்."

"குழந்தைகள் உன் போல் இருந்தால் ரொம்ப அழகாக இருப்பார்கள். கோதுமை நிறம், அளவான மூக்கு, ரோஜா இதழ் நிறத்தில் உதடு, பட்டுக் கன்னம், படபடக்கும் பெரிய கண்கள் எனப் பார்க்கவே அழகாக இருப்பார்கள்.

அறிவு மட்டும் உன் போலில்லாமல் என் போல் இருந்தால் ரொம்ப பெர்ஃபெக்ட் காம்பினேஷன்!" என்றான் ரிஷப்.



அவன் சொன்னதைக் கேட்டு அவள் முகம் சிவந்தது. இவன் என்ன பேசுகிறான்? தெரிந்துதான் பேசுகிறானா இல்லை சும்மா உளறுகிறானா?

நம்மைப் போல் குழந்தை இருக்க வேண்டும் என்றுதானே சொன்னான். 'இஸ் ஹி க்ரேஸி?' என மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் அவள்.

அதற்குப் பின்பு அவள் ஏதும் பேசவில்லை. ரிஷப் சொன்னதையே மனம் அசை போட்டது. அவள் மனம் அதிலேயே லயித்தது.

"வீடு வந்து விட்டது வர்ஷா! என்ன யோசனை?"

"ஓ... ஒன்றும் இல்லை!" என்றபடியே காரிலிருந்து இறங்கினாள் அவள்.

"வா... வர்ஷா! வாங்க தம்பி!" என்றாள் சந்திரா.

"ஆன்ட்டி இப்ப உடம்பு எப்படி இருக்கு? ஹாஸ்பிடல் போய் ஸாரைப் பார்த்த பிறகு யூ லுக் பெட்டர்!" என்றான் ரிஷப்.

"ஆமாம்... அங்கே போனதால்தானே உண்மை தெரிந்தது."

"என்ன உண்மை ஆன்ட்டி?"

"பிஸினெஸை நீங்கள் ஐயா உடம்பு சரியில்லாத பொழுது டேக்-ஓவர் செய்தது...!

இது... ரொம்ப தப்பு தம்பி. எல்லாச் சொத்தும் ஐயா பாப்பாவிற்குச் சிறுகச் சிறுகச் சேர்த்தது."

"ரிஷப்! ஸாரி... ஐ திங்க் ஷி இஸ் இன் எ ஷாக். நான் அவர்களிடம் பேசிப் புரிய வைக்கிறேன்!" என்றாள் வர்ஷா அவசரமாக.

"இட்ஸ் ஓகே!" என்று சொல்லிவிட்டு அறையினுள் சென்றான் ரிஷப்.

"ஆன்ட்டி! ரிஷப் மேல் எந்தத் தப்பும் இல்லை. அப்பாவின் பிஸினெஸ் ரொம்ப நாளாக நஷ்டத்தில் இருந்திருக்கிறது.

வீடு, நிலம் எல்லாமே அடகில் உள்ளது. ரிஷப்தான் வீட்டை வாங்கியிருக்கிறார்."

"அடக் கடவுளே! அப்ப நாம எல்லாம் வீட்டை விட்டுப் போகணுமா? என்ன பாப்பா இது?" என்று அதிர்ந்தாள் சந்திரா.

"இல்லை ஆன்ட்டி... ரிஷப் நாம எல்லோரும் இங்கேயே இருக்கலாம் என்று சொன்னார்."

"அது எப்படி பாப்பா சரி வரும்? நான் பரவாயில்லை. வயதானவள்! அதனால் இங்கே இருக்கலாம்.

வீட்டைத் துப்புரவாக வைத்துக் கொண்டு, சமைத்துக் கொண்டு நான் இங்கே இருக்கலாம்.

பார்ப்பவர்களுக்கு அது தப்பாகத் தெரியாது. ஆனால் நீ சின்னப் பெண்டா. ஊர் கண்டிப்பாக உன்னையும் ரிஷபையும் இணைத்துத் தப்பாகப் பேசும்."

அவள் சொன்னதைக் கேட்டதும் வர்ஷாவிடமிருந்து பெருமூச்சு பிறந்தது. ஆன்ட்டி தன் மேல் காட்டும் அக்கறையும், பரிவும் அவளுக்குப் பிடித்தது.



சட்டென ஆன்ட்டியின் மடியில் தலை சாய்த்து முகம் பதித்து அழத் தொடங்கினாள் வர்ஷா.

"என்னடா... நான் ஏதாவது தப்பா சொல்லிட்டேனா...!"

"இல்லை ஆன்ட்டி. அம்மா இல்லாத குறை தெரியாமல் என்னை நீங்கள் அன்பா, பாசமா வளர்த்திருக்கீங்க.

ஐயாம் லக்கி! உங்களை மாதிரி ஒருத்தர் கிடைத்த தற்கு... அப்பாவின் ரத்த சொந்தமான தங்கை, என் அத்தை இருந்தும் அவர்களால் ஏதும் செய்ய முடியாத நிலை.

ஆனால் நீங்கள்... நீங்கள்..." என மேலே பேச முடியாமல் வார்த்தைகள் சிக்கின.

"வர்ஷா! நீ அழாதே. நீ நேரா போய் ரிஷபிடம் சொல்லிவிடு.

உன்னைத் தப்பான கண்ணோட்டத்தில் அவன் ஒரு பொழுதும் பார்க்கக் கூடாது என்று.

அப்படி... அப்படி அவன் ஏதேனும் செய்ய முயற்சித்தால் நான் அவனைச் சும்மா விடமாட்டேன்."

"ஆன்ட்டி! நீங்கள் கவலைப் படாதீர்கள். நான் ரிஷபிடம் இப்பொழுதே பேசுகிறேன்.

அது மட்டும் இல்லை. என்னை ஏதாவது செய்தால் விக்ரம் ரிஷபை ஒரு வழி செய்துவிடுவான் என்று மிரட்டி விட்டு வருகிறேன். நீங்கள் கவலைப்படாதீர்கள்!" என்றாள் கிண்டலாக.

"வர்ஷா! எத்தனை விக்ரம் வந்தாலும் ரிஷபை ஒன்றும் செய்ய முடியாது.

அவன் கண்களில் ஒரு தேடல், பிடிவாதம் தெரிகிறது. நீ அதைக் கவனித்தது இல்லையா?"

"ம்... ஆமாம் ஆன்ட்டி!" என்றாள் மெல்லிய குரலில்.

ரிஷபைப் பற்றி ஆன்ட்டி இவ்வளவு சரியாக எடை போட்டிருக்கிறார்களே என அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

ரிஷபின் அறைக்குள் தயங்கியபடியே சென்றாள் வர்ஷா.

அங்கே ரிஷப் கைப்பேசியில் யாருடனோ பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

அவன் பேசி முடிக்கும் வரை அமைதியாக இருந்தாள் அவள். பேசி முடித்தவன் திரும்பினான்.

அங்கே வர்ஷா இருப்பதைப் பார்த்தவனின் விழிகளில் வியப்பு தெரிந்தது.

"நான் உங்களிடம் பேச வேண்டும்... இப்பொழுது நீங்கள் ஃப்ரீயா!"

"ம்... சொல்!"

"ஆன்ட்டியின் சார்பாக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களிடம் நான் இப்பொழுதுதான் எல்லாவற்றையும் சொன்னேன்.

அவர்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியில் சட்டென வாய்க்கு வந்ததைப் பேசிவிட்டார்கள்."

"இட்ஸ் ஓ.கே."



"அப்புறம் என்னிடம் கொஞ்சம் நகைகள் இருக்கின்றன. அதை நான் விற்று விடுகிறேன்.

அதில் கிடைக்கும் பணத்தை வைத்து அப்பாவின் மருத்துவச் செலவுகள், நர்ஸ் சம்பளம் என எல்லாமே மேனேஜ் செய்யலாம்.

அதோடு நான் என் கடையையும் விற்றுவிடப் போகிறேன்."

# 12

உன்
நிழலைத்
தாங்கிப்
பிடிக்கத்
துடிக்கிறேன்
நான்!
உன்
கூந்தலில்
இருந்து
விழுந்த
அந்த
ஒற்றை
ரோஜா

என்
வீட்டுப்
பெட்டகத்தில்
பத்திரமாக
இருக்கிறது!
ஆனால்
நிஜமான
உன்னை
நான்
எப்பொழுது
என் வீட்டில்
பார்க்கப்
போகிறேன்?

"ஓ... விற்றுவிட்டு என்ன செய்யப் போகிறாய்?"

"நான் வேலைக்கு முயற்சி செய்யப் போகிறேன்."

"வெரி ப்ராக்டிக்கல். அப்புறம் என்ன?"

"வெல்...! நெக்ஸ்ட் வீட்டைப் பற்றிப் பேச வேண்டும்!"

"மறுபடியுமா... ஏற்கெனவே பேசி முடிவு செய்து விட்டதாக ஞாபகம்."

"இ... இல்லை... ஆன்ட்டி நன்றாகச் சமைப்பார்கள். வீட்டை நன்றாகப் பராமரிப்பார்கள். அவர்கள் பணம் ஏதும் கொடுக்காமல் வீட்டில் தங்குவதற்கு அர்த்தம் இருக்கிறது.



பட்... நான்... உங்களுக்கு இரண்டு வேலையாட்கள் தேவையிருக்காது.

நான் இங்கே தங்குவதற்கு எவ்வளவு பணம் உங்களிடம் கொடுப்பது?" என்று ஒரு வழியாக மனதில் இருந்ததைக் கேட்டு முடித்தாள் அவள்.

"நீ என்னுடைய விருந்தாளியாக இரு. பணம் எதுவும் வேண்டாம்!"

"பட்... நான் இங்கே தங்குவதற்கு... உங்கள் வீட்டில் சும்மா தங்குவதற்கு எனக்கு... எனக்கு முடியாது."

"ஏன்?"

"மற்றவர்கள் தப்பாக நினைப்பார்கள்."

"என்ன நினைப்பார்கள்?"

அவள் முகம் கோபத்தாலும் அவமானத்தாலும் சிவந்தது.

"பணம் எவ்வளவு என்று சொல்லுங்கள். மற்ற பேச்சு வேண்டாம்!"

"உனக்கும் எனக்கும் தவறான உறவு இருப்பதாக விக்ரம் நினைப்பானா? அந்தக் கவலையா உனக்கு...?"

"விக்ரம் இங்கே பிக்சரில் இல்லவே இல்லை...!"

"அப்ப ஊருக்குப் பயப்படுகிறாயா? இல்லை என்மீது நம்பிக்கை இல்லையா?

இல்லை, உன்மீதே உனக்கு நம்பிக்கை இல்லையா?"

அவள் முகம் சட்டென வாடியது. துடிக்கும் உதட்டைப் பற்களால் கடித்துத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முயன்றாள் அவள்.

"நான்... எனக்குத் தோட்ட வேலை பிடிக்கும். நன்றாகச் செய்வேன்.

நான் தோட்டத்தைப் பராமரிக்கவா? அதற்கு நீங்கள் சரி என்றால் நாங்கள் வீட்டில் தங்குகிறோம்!" என்றாள் மெதுவாக.

அவன் கண்களில் கனிவு தெரிந்தது.

"சரி... உன் இஷ்டம். அப்புறம் உன் ஆன்ட்டியிடம் பயப்படாமல் இருக்கச் சொல்.

அவர்கள் நூறு ஆளுக்குச் சமம். அவர்களை மீறி, என்னால் உன்னை ஏதும் செய்ய முடியாது!" என்றான் கிண்டலாக.

அதைக் கேட்டு அவள் சிரித்தாள்.

"தேங்க்ஸ்!" என்று சொல்லிவிட்டு அறையிலிருந்து வெளியேறினாள் வர்ஷா.

விக்ரம் ஏன் ஃபோனே செய்யவில்லை என யோசித்தபடியே நடந்தாள் அவள்.

கைப்பேசியை எடுத்து விக்ரமைத் தொடர்பு கொண்டாள்.

"ஹாய் வர்ஷா... சொல்லு!"

"ம்... என்ன விக்ரம் பிஸியா? ஃபோனே செய்ய வில்லை."



"ஆமாம் டியர். கொஞ்சம் வேலை அதிகம்தான்."

"அப்புறம் அப்பா இன்னும் கொஞ்ச நாளில் டிஸ்சார்ஜ் ஆகிவிடுவார்.

கம்பெனிக்குப் போயிருந்தோம் நானும், ரிஷபும். டேக்-ஓவர் பற்றிப் பேசுவதற்கு..." என்று அவள் முடிக்கும் முன்பு விக்ரம் குறுக்கிட்டான்.

"ம்... கேள்விப்பட்டேன். சங்கீதா சொன்னாள். ஸோ டிராகுலா கொஞ்சம் கொஞ்சமாக வேலையைக் காட்டு கிறது..."

"இல்லை விக்ரம்! ஹி இஸ் எ குட் மேன். நான்தான் தவறாகப் புரிந்து கொண்டேன்."

"ஓ... அப்புறம் வீடும் அடகில் உள்ளதாகத்தானே சொன்னாய் அன்று...!"

"ஆமாம்... ஆனால் அதை ரிஷபே வாங்கிவிட்டார். நாங்கள் இங்கேயே இருக்கலாம் என்று சொன்னார்."

"ஓ... அதற்குக் கைம்மாறாக டிராகுலா என்ன கேட்கிறான்?"

"ஒன்றும் இல்லை விக்ரம்."

"என்னால் இதை நம்ப முடியாது. எனிவே ஐ லவ் யூ!"

"மி டூ...!" என்று இணைப்பைத் துண்டித்தாள் அவள்.

ஸ்வெட்டர் போடாததால் சாயங்காலப் பனி தோட்டத்தில் அவள் உடலை ஊசி போல் குத்தியது.

ஆனால் அவள் மனதில் ஒரு வெறுமை. விக்ரம் கேட்ட கேள்வி அவள் மனதைக் குடைந்தது. அவன் இப்பொழுது எல்லாம் தன்னிடம் பேசுவதைக் குறைத்துக் கொண்டான். ஏன் பேசுவதே இல்லை என்ற உண்மை அவள் மனதைத் தைத்தது.

ப்ளம் மரத்தடியில் இருந்து எழுந்தவளுக்குக் கால் குளிரால் மரத்துப் போயிருந்தது.

காலை ஊன்ற முடியாமல் ஏடாகூடமாக நடக்க முயன்றதால் கீழே விழுந்தாள். எழுந்திருக்க முயன்றாள். ஆனால் முடியவில்லை. குளிர் அவள் உடலை உறையச் செய்தது.

"வர்ஷா... கெட் அப்!"

கண்களைக் கஷ்டப்பட்டுத் திறக்க முயன்றாள். மங்கலாக ரிஷப் முகம் தெரிந்தது. வெதுவெதுப்பான நீர் முகத்தில் பட கண்களை நன்றாகத் திறந்தாள்.

ரிஷப் அவள் அருகே பதட்டமாக உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

"என்ன ஆச்சு வர்ஷா? மெதுவாக எழுந்திரு!" என்று அவளைக் கைத்தாங்கலாக எழுந்திருக்க உதவி செய்தான்.

அவள் உடல் குளிரில் நடுங்குவதை அவனால் உணர முடிந்தது. காட்! எவ்வளவு நேரமாக இப்படியே பனியில் உறைந்து போய் மயங்கி இருந்தாளோ...!

சே! கடைசியாக விக்ரமிடம் பேசியிருக்கிறாள். கைப்பேசி அவள் அருகிலேயே இருக்கிறது.



விக்ரமுடன் சண்டையா? அதனால் மனம் நொந்து போய்ப் பனியில் நேரம் போனது தெரியாமல் மயங்கி விட்டாளா? செல்லில் அவள் கடைசியாகப் பேசிய பொழுது மணி ஆறு.

நான் இவள் அறையில் இருக்கிறாள் என நினைத்துச் சும்மா இருந்துவிட்டேன். இப்பொழுது மணி எட்டு.

இரண்டு மணி நேரம் கிட்டே இவள் இந்தக் குளிர் தரையில் படுத்திருக்கிறாள். நினைவின்றி மயங்கிப் போய் இருக்கிறாள்.

'சே... பாவம்!' என்று நினைத்தபடி அவளை அறையினுள் கட்டிலில் உட்கார வைத்தான்.

அவள் குளிர் பொறுக்க முடியாமல் கையைக் குறுக்காகக் கட்டி நடுங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தவுடன் அவன் மனம் நெகிழ்ந்தது.

சட்டென அவளை இழுத்து அணைத்தான் ரிஷப். திகைத்துப் போய்க் கண்கள் விரிய அவனைப் பார்த்தாள் வர்ஷா.

அவன் அணைப்பில் இருந்து விலகத் தோன்றாமல் அவள் அவன் பிடியில் இருந்தாள்.

அவள் உடல் நடுக்கம் குறைவதை அவனால் உணர முடிந்தது.

அவளை விடுவித்தவன் ரூம் - ஹீட்டரை ஆன் செய்தான். அவள் கட்டிலில் சோர்வாகப் படுத்திருந்தாள்.

"ஸோ... விக்ரமோட சண்டையா? அதான் அங்கே குளிரில் மயங்கிப் போய் விழுந்து கிடந்தாயா?"

அவள் பதில் சொல்லாமல் அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள். ஆனால் அவள் மனம் அவன் அணைப்பில் தான் அனுபவித்த புதிய பாதுகாப்பான உணர்வை அசை போட்டபடி இருந்தது.

"நவ் யூ ஆர் நாட் எ ரிச் கேர்ள். அதைப் புரிந்து கொள். விக்ரம் அதை நன்றாகப் புரிந்து கொண்டான்.

ஸோ பிஹேவ் யூவர்செல்ஃப் அக்கார்டிங்லி."

"விக்ரம் என்னைக் காதலிப்பான். என்னிடம் நயா பைசா இல்லாவிட்டாலும் என்னைக் காதலிப்பான்."

"உன்னிடம் இப்பொழுது பைசா இல்லை. கரெக்ட்! நீ சொன்னதில் பாதி கரெக்ட்தான்."

"எனக்குத் தெரியும். என்னிடம் பைசா இல்லை. அதையே சொல்லி நீங்கள் குத்திக் காட்ட வேண்டாம்.

ஐ ஹேட் யூ ரிஷப். உங்களை மாதிரி ஒருவரை நான் இதுவரை சந்தித்தது இல்லை.

இனியும் சந்திக்கக் கூடாது. என்னை வீட்டில் தங்க வைப்பதற்கு ஒரு மோட்டிவ் இருக்கிறது.

ஐ நோ... கொஞ்ச நேரம் முன்... நீங்கள் நடந்து கொண்டதே அதற்கு எடுத்துக்காட்டு!" என்றாள் வர்ஷா கோபமாக.

"நீ குளிரில் விரைத்துப் போய் இருந்தாய். அதனால்தான் நான் உனக்குக் கதகதப்பை ஏற்படுத்தவே அணைத்தேன்.

மற்றப்படி ஐ டோண்ட் ஹேவ் எனி இண்ட்ரெஸ்ட் ஆன் யூ!" என்றான் அழுத்தமாக அவன்.



அவள் முகம் அவமானத்தால் சிவந்தது.

சே! நான்தான் இவனைத் தப்பாக எடை போட்டு விட்டேன் போல என மனதிற்குள் வருந்தினாள் அவள்.

"என்ன ஆச்சு வர்ஷா! ஏதாவது பிரச்சனையா? நான் கோவில் போயிட்டு வர்றேன். இந்தாங்க விபூதி, குங்குமம்..." என்று பொதுவாகச் சொல்லிவிட்டு, ஆன்ட்டி பிரசாதத்தை இருவரிடமும் நீட்டினாள்.

"ஆன்ட்டி! நான் வில்லன் இல்லை. வர்ஷா கதாநாயகியும் இல்லை. நீங்கள் தமிழ்ப் பட போலீஸும் இல்லை.

அதனால் அமைதியாக இருங்கள். உங்கள் உடம்பிற்கு ஸ்ட்ரெஸ் ஆகாது."

"எந்தப் பிரச்சனையும் இல்லை ஆன்ட்டி. நாங்கள் இரண்டு பேரும் ஆர்க்யூ செய்தபடி இருந்தோம்.

தட்ஸ் ஆல். வேறு ஏதும் இல்லை."

"சரி... வர்ஷா! நான் பிஸினெஸ் உன்னிடம் பேச வேண்டும். இப்பொழுது பேசலாம்தானே!" என்றான் அதிகாரமாக ரிஷப்.

"ம்... ஓ.கே.!"

"இங்கிருக்கும் ஃபர்னிச்சர் பற்றி... நீ அதைப் பணமாக மாற்றுவது பற்றி!"

"சொல்லுங்கள். இதில் எதெல்லாம் மீதம் இருக்கிறது எங்களுக்கு...!"

"இந்த சோபா, கட்டில், அலங்காரச் சின்னங்கள், அறையை அலங்கரிக்கும் வார்ட்ரோப், ஊஞ்சல் எல்லாமே என்னுடையது."

"அப்ப எதுவுமே இல்லை... எங்களுக்கு!"

"ஏன் இல்லை... இந்த டைனிங் டேபிள்... அப்புறம்.. ஸ்டேஷனரி ஐட்டம்ஸ்... எல்லாமே உங்களுக்குத்தான்."

அவளுக்குக் கோபமும் எரிச்சலும் புகை போல் உடல் எங்கும் பரவியது. சுயபச்சாதாபத்தால் கண்கள் கலங்கின.

திமிர் பிடித்தவன். ஸ்டேஷனரி அயிட்டம்ஸ், நோட் புக், ஸ்டேபிளர், க்ளிப்ஸ் இதெல்லாம் என்ன விலைக்குப் போகும்? சே! வேண்டும் என்றே இப்படி என்னைச் சீண்டுகிறான்.

"உங்களுக்கு எந்த அறை வேண்டும்?"

"நான் மாஸ்டர் பெட் ரூமை எடுத்துக் கொள்கிறேன். அப்புறம் அங்கிள் உபயோகித்த ஆபீஸ் அறை. அதுவும் எனக்கு வேண்டும்.

மற்ற அறைகள் எல்லாம் நான் ஷேர் செய்து கொள்வேன். டைனிங் ரூம், டிராயிங் ரூம்..." என்றான் ரிஷப்.

இது எப்படியும் வருடத்தில் சில மாதங்கள்தான். அதனால் பிரச்சனை இருக்காது. ரிஷப் மற்ற நாட்களில் எல்லாம் இங்கே தங்கப் போவதில்லை.

அப்பொழுது எல்லாம் வீடு பழையபடி இருக்கும் என மனதிற்குள் நினைத்துக் கொண்டாள் அவள்.



"அப்ப ஐயா கீழே இருக்கிற ரூமை எடுத்துப்பார்... அப்படித்தானே!"

"ஆமாம். தோட்டத்தின் வியூ அங்கிருந்து அருமையாக இருக்கும். அதனால் அங்கிளுக்கு அது ஏற்ற அறை.

வர்ஷா இதைப் பற்றி என்னிடம் முன்னமே பேசி விட்டாள்."

"ஓ... அப்ப சரி!" என்றாள் சந்திரா ஆன்ட்டி.

"வர்ஷா! அப்புறம் என்னுடைய புது மேனேஜர் இங்கே இன்னும் கொஞ்ச நேரத்தில் வருவார்.

அவருக்கு பிஸினெஸ் சம்பந்தமான டவுட்கள் இருக்கலாம். ப்ளீஸ் க்ளாரிஃபை!"

"இன்னிக்கு வர்றாரா? இப்பவே மணி ஒன்பது ஆச்சே. சரி... நான் அவருக்குச் சாப்பிட ஏதாவது தயார் செய்யறேன்...!" என்று சொல்லிவிட்டுச் சமையல் அறை நோக்கிச் சென்றாள் சந்திரா.

"பை தி பை என் மேனேஜர் கல்யாணமானவன். பெயர் ராஜன். அவனுக்குக் குழந்தைகள் இருக்கிறார்கள்.

அதனால் என்னை அட்ராக்ட் செய்வதற்காக நடந்து கொள்கிறாயே... அதுபோல் அவனிடம் செய்யாதே...!" என்றான் கோபமாக.

"என்ன உளறல் இது... சே!"

"நான் உளறவில்லை...!" என்று அருகே வந்தவன் சட்டெனக் குனிந்து அவள் சுடிதாரின் துப்பட்டாவை ஒழுங்காகப் போட்டான்.

அவள் முகம் அவமானத்தால் சிவந்தது. மயங்கி விழுந்ததில் நான் இதைக் கவனிக்கவில்லை. சே! இதைப் போய் நான் வேண்டும் என்றே செய்தது போல் உளறு கிறானே எனக் குமுறினாள் அவள்.

"ஐ ஹேட் யூ... சீ! என்ன ஒரு கேவலமான எண்ணம் உங்களுக்கு?

இந்த உலகில் நீங்கள் மட்டும் இருந்தால்கூட நான் உங்களைக் கவர ஒரு துரும்பைக்கூடக் கிள்ளிப் போட மாட்டேன்!" என்றாள் சீறலாக.

அவன் பதில் சொல்லாமல் அங்கிருந்து வெளி யேறினான். அவன் சென்ற பின்பும்கூட அவள் கோபம் குறையவில்லை.

சே...! எவ்வளவு கேவலமாகப் பேசிவிட்டான். அவன் சந்தித்த பெண்கள் அவனிடம் அப்படி நடந்து கொண்டிருப்பார்கள். அதை வைத்து எல்லோரையும் அப்படி எடை போடுகிறான் போல என மனம் குமைந்தாள் வர்ஷா.

"வர்ஷா பாப்பா! ராஜன் ஸார், மேனேஜர் வந்திருக்கார்."

"சரி, ஆன்ட்டி! நான் வர்றேன். அவரை ஹாலில் வெயிட் செய்யச் சொல்லுங்க."

கட்டிலில் இருந்து எழுந்தவள் கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள். சுடிதாரின் முதல் பட்டன் மீண்டும் கழன்று இருந்தது.

சே! துவைத்ததில் பட்டன்-ஹோல் பெரிதாகிவிட்டது போல என நினைத்தபடியே ஒரு பின்னை அங்கே மாட்டினாள்.



முகத்தை டவலால் துடைத்துக் கொண்டு ஹால் நோக்கி நடந்தாள் அவள்.

"குட் மார்னிங் மேம்!"

"ஹலோ! இது நைட்."

"இருக்கட்டும் உங்களை முதல் முறையாகச் சந்திக்கிறேன். அதனால்தான் அப்படி விஷ் செய்தேன்."

"ஓ... பேசுவதில் நீங்களும் ரொம்ப ஸ்மார்ட்தான்."

"மேம்! பாஸிடம் ஐந்து வருடங்களாக வேலை பார்க்கிறேன். அவரிடம் இருந்து கற்றுக் கொள்ள நிறைய உள்ளன.

அவருக்குப் பயம் என்பதே கிடையாது. ஹி இஸ் எ டைனமோ. ஹி வோண்ட் ஃபீல் டயர்ட்.

புதிய விஷயங்களை பிஸினெஸில் அறிமுகப்படுத்து வதற்குத் தயங்கமாட்டார். மற்றவர்கள் எல்லாம் ரிஸ்க் எடுக்கப் பயப்படும் விஷயத்தை அவர் ரொம்ப கூலாகச் செய்வார்."

"அப்படியா... ஸோ யூ லைக் யுவர் பாஸ்!"

"யெஸ். அவர் இந்த மாதிரி பிஸினெஸில் வெற்றி கரமாக இருக்க வேண்டும் என்றால் சில நேரம் சில விஷயங்களில் கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டி வரும்.

பட் ஹி இஸ் தி பெஸ்ட் ஆஃப் தி பாஸஸ் அண்ட் பெஸ்ட் ஆஃப் தி ஃபிரண்ட்ஸ்."

"அண்ட் தி வொர்ஸ்ட் ஆஃப் தி எனிமீஸ். சரியா?"

அதைக் கேட்டு ராஜன் சிரித்தான்.

"அப்புறம் ரிஷப் எப்படி இந்த நிலமைக்கு வந்தார்? அவர் ஆஸ்திரேலியாவிற்குப் போனது தெரியும். பட் அங்கே என்ன நடந்தது?

எப்படி பிஸினெஸ் டைகூனாக மாறினார் அவர்?"

இதைப் பற்றி ரிஷபிடமோ, அப்பாவிடமோ கேட்காமல் இவனிடம் கேட்கிறோமே என நினைத்தாள் வர்ஷா. பரவாயில்லை, இவன் வெளிப்படையாகப் பேசுகிறான்.

அதனால் இவனிடம் கேட்பதில் தப்பு ஏதும் இல்லை என நினைத்துக் கொண்டாள் அவள்.

"ஆஸ்திரேலியாவில் முதலில் ஒரு கால்நடைப் பண்ணைதான் ஆரம்பித்தார் ஸார்.

அங்கே பண்ணை நன்றாக ப்ராஃபிட் கொடுத்தது. அப்பொழுது அவர் நிலத்தில் பாக்ஸைட் இருப்பதை ஒரு ஆய்வாளர் சொன்னார்."

"என்னது பாக்ஸைட்டா?"

"யெஸ் மேம். அது ஒரு தாது. அலுமினியம் செய்வதற்கு அது தேவைப்படும்.

அதற்குப் பின்புதான் அவர் அலாய் தொழிற்சாலையில் கால் பதித்தார். அப்புறம் கொஞ்சம் கொஞ்சமாக எல்லாமே அவர் தொட்டது எல்லாம் துலங்க ஆரம்பித்தது."

"ஓ... லக் ஹாஸ் ஃபேவர்ட் ஹிம்."



"முதலில் வேண்டுமானால் லக் அவருக்குச் சாதகமாக இருந்திருக்கலாம் மேம்.

ஆனால் அதற்குப் பின்பு ஹார்ட் ஒர்க், ரிஸ்க்கி வென்ச்சர்ஸ், சரியான முடிவுகள், இதெல்லாம்தான் அவரை பிஸினெஸ் டைகூனாக மாற்றியது."

"சரி, வாங்க. டின்னர்... சாப்பிடலாம். ஆன்ட்டி இஸ் எ குட் குக்!" என்றாள் புன்முறுவலோடு வர்ஷா.

"ஓ... தேங்க்ஸ். நாம் சந்திப்பது கேஷுவலாக இருக்கட்டும் என்று நினைத்துதான்... மேம்! நான் உங்களை வீட்டில் வந்து சந்திக்க விரும்பினேன்.

அடுத்த முறை சந்திக்கும்பொழுது அது நாம் புரஃபஷனலாகப் பழகுவதற்கு உதவி புரியும்.

ஹோப் யூ ஆல்ஸோ டேக் இட் இன் தி ஸேம் வே...!"

"யெஸ்... ஒரு நாள் உங்கள் குடும்பத்தோடு டின்னருக்கு வாருங்கள்!" என்றாள் வர்ஷா.

"பாஸ் வீட்டில் இல்லையா மேம்...!"

"ம்... கொஞ்ச நேரம் முன்பு வரை இருந்தார். வெளியே போயிருப்பார் என நினைக்கிறேன்."

இருவரும் பேசியபடி சாப்பிட்டு முடித்தனர். ராஜனின் வெளிப்படையான பேச்சு அவளுக்குப் பிடித்தது.

"டின்னர் இஸ் வெரி குட்... தேங்க்ஸ்!"

"இட்ஸ் ஓ.கே. குட் நைட்!"

"குட் நைட் மேம்!"

ராஜன் சென்ற பிறகு அவன் ரிஷப் பற்றிச் சொன்னதை அவள் மனம் அசை போட்டது.

ரிஷப் கஷ்டப்பட்டு முன்னேறி இருக்கிறான். பிஸினெஸில் எந்தப் பின்னணியும் இல்லாமல் அவன் தைரியமாக ரிஸ்க் எடுத்து ஒவ்வொரு தொழிலிலும் தன் முத்திரையைப் பதித்திருக்கிறான்.

ஆஸ்திரேலியாவில் அந்த நிலத்தில் பாக்ஸைட் இருந்தது மட்டுமே அவனுடைய அதிர்ஷ்டம். மற்றது எல்லாம் அவன் உழைப்பும், சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளும்தான்.

அவன் மேல் அவளை அறியாமல் ஒரு பிரமிப்பு தோன்றியது வர்ஷாவிற்கு.

தோட்டத்தில் குளிரில் விரைத்துப் போய் நினைவிழந்து தான் இருந்தபொழுது அவன்தான் தன்னைக் காப்பாற்றினான் என்பதை நினைக்கும்பொழுது ஒரு மெல்லிய பூச்சாரல் அவள் மனதில் வீசியது.

# 13

நதியோரம்
நான்
நின்று
கொண்டு
இருந்தேன்!
தென்றல்
என்னைச்



செல்லமாகத்
தீண்டியது!
நதி
சலனமில்லாமல்
ஆரவாரம்
இல்லாமல்
வளைந்து
நெளிந்து
ஓடிக்
கொண்டு
இருக்கிறது!
அதுவும்
உன்னை
எனக்கு
ஞாபகப்
படுத்துகிறது!
துரத்துகிறது
உன்
நினைவுகள்
என்னை...
ஏன்...?

அடுத்த ஒரு வாரம் நேரம் இறக்கை கட்டிக் கொண்டு பறந்தது வர்ஷாவிற்கு.

பாதி நேரம் ஹாஸ்பிடலில் இருந்தாள் அவள். அப்பாவின் அருகிலேயே இருந்து அவருக்குத் தேவையான மருந்து, உணவு எல்லாம் வேளா வேளைக்கு அளித்தாள் அவள்.

வீட்டில் நடக்கும் சுவையான விஷயங்கள், நாட்டு நடப்பு என எல்லாமே அவள் தந்தைக்கு அவ்வப்பொழுது சொல்லியபடி இருந்தாள்.

சில நேரம் ரிஷபும் ஹாஸ்பிடலுக்கு வருவதுண்டு. அப்பொழுது தந்தையின் முகத்தில் கூடுதல் பிரகாசம் தெரிவது போல் அவளுக்குத் தோன்றும்.

ஹாஸ்பிடல் நர்ஸ், ஸ்டாஃப் எல்லோருமே அவளுக்கு நன்றாகப் பழக்கமாகி விட்டனர்.

அன்றும் அப்படித்தான் அவள் அப்பாவிற்குத் தினசரி பேப்பர் வாசித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது ரிஷப் உள்ளே வந்தான்.

"என்ன அங்கிள், வர்ஷா உங்களுக்கு நியூஸ் வாசிக்கிறாளா?"

"ஆமாம் ரிஷப்."

"ஒரே பாலிடிக்ஸ், ஸ்போர்ட்ஸ். அவ்வளவுதானே அவ வாசிக்கிற நியூஸில் இருக்கு. பாவம் அங்கிள் நீங்க...!

இப்ப பாருங்க நான் ஸ்பைஸியா உங்களுக்கு நியூஸ் சொல்றேன்."



"பூவின் பெயரைக் கொண்ட மூன்று எழுத்து நடிகை தன் அடுத்த படத்திற்கு வாங்கப் போகும் சம்பளம் பத்துக் கோடி.

தீபாவளிப் பண்டிகையுடன் தொடர்பு கொண்டுள்ள நடிகர் வீட்டில் நேற்று ஒரே சண்டை சச்சரவு. 'நிலா' முகம் கொண்ட நடிகை உடன் சேர்ந்து நடிக்கக் கூடாது என நடிகர் மனைவி கூச்சல்.

அப்புறம் அடுத்த செய்தி..." என்று அவன் முடிக்கும் முன்பு வர்ஷா சீறினாள்.

"ரிஷப்! என்ன இது, இந்த மாதிரி காஸிப் எல்லாம்...!" என்று பேப்பரை அவளிடம் இருந்து பிடுங்க முயன்றாள்.

அவன் விலகி அவளுக்கு ஆட்டம் காட்ட, தெரியாமல் அவன் மேலே சரிந்து விழுந்தாள்.

அவன் அவளை அணைத்தான். நெற்றியில் இதழ் பதித்தான்.

"வர்ஷா குட்டி! அங்கிள் இருக்கார். இல்லாட்டி...!" என்று சத்தமாகச் சொன்னான்.

அவள் முகம் சிவந்தது. சே! இவன் ஏன் இப்படி பிஹேவ் செய்யறான்? ஏதோ தினசரி நடப்பது போல் அல்லவா நாடகம் ஆடுகிறான் என மனதிற்குள் பொருமினாள் அவள்.

ஆனால் ரிஷப் மட்டும் அது ஏதோ தினசரி நடப்பது போல் இயல்பாக கூலாக இருந்தான்.

"ரிஷப்! டோண்ட் ஒர்ரி. எனக்கு உடம்பு இப்பவே பாதி சரியாயிடுச்சு. ஸோ சீக்கிரமே கல்யாணம்தான்."

"அப்பா... நான் என்ன சொல்றேன்னா...?"

"அங்கிள் ரெஸ்ட் எடுக்கட்டும். வர்ஷா மை டார்லிங்! கம். நாம வெளியே போகலாம்!" என்று அவளைக் கையைப் பிடித்து, இழுத்துச் செல்லாத குறையாகச் சென்றான் ரிஷப்.

வெளியே வந்ததும் சீறினாள் அவள்.

"வாட் ஆர் யூ திங்க்கிங்... சே! ஏன் இப்படிச் செய்யறீங்க?"

"எல்லாம் நன்மைக்கே வர்ஷா!"

"வாட் டு யூ மீன்?"

"நாம் இருவரும் சேர்ந்து இருப்பதைப் பார்த்தால் அவர் மனம் சந்தோஷப்படும்.

அவர் உடல் நிலை சீக்கிரமாகக் குணமடையும். அதனால்தான் ஒரு சின்ன நாடகம்!" என்றான் ரிஷப்.

"பட் யூ ஆர் மேக்கிங் திங்ஸ் டிஃபிகல்ட் லேட்டர். அப்பாவிற்கு நான் விக்ரம் பற்றி முன்பு சொன்னது எதுவும் ஞாபகம் இல்லை போல.

அவருக்கு நான் விக்ரமைக் கல்யாணம் செய்து கொள்வதாகச் சொன்னதுகூட நினைவில் இல்லை..."

"ம்... விக்ரமிற்கும் அப்படித்தான் இருக்கும்."

"வில் யூ கீப் கொய்ட். விக்ரம் ஒன்றும் அப்படிப்பட்டவன் இல்லை."

"ஜஸ்ட் வெயிட் அண்ட் வாட்ச்."



அவன் சொன்னதைக் கேட்டு அவள் மனம் குமுறியது. இவன் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் மனதில்? இவன்தான் எல்லாவற்றிலும் பர்ஃபெக்ட். மற்றவர்களுக் கெல்லாம் ஏதும் தெரியாது என்றா? சே! என மனம் குமுறினாள்.

அப்பா டிஸ்சார்ஜ் ஆகி வரும் வரை வேலைக்குப் போக முடியாது. அப்பா வீட்டிற்கு வந்து செட்டில் ஆன பின்புதான் அதைப் பற்றி யோசிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் வர்ஷா.

வீட்டில் ரிஷப் இருப்பது வேறு ஒரு மாதிரி இருந்தது.

அதற்குள்ளாகவே அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் இவளை ஜாடைமாடையாக விசாரிக்கத் தொடங்கி விட்டார்கள்.

அப்பாவின் உடல்நிலை எப்படி இருக்கிறது, ரிஷப் ஏன் இங்கேயே இருக்கிறான்? அவன் எப்பொழுது திரும்பப் போவான் எனக் கேள்வி மாற்றிக் கேள்வி.

அடுத்தவர் விஷயத்தில் எப்படி இவர்களால் மூக்கை நுழைக்க முடிகிறது என ஆச்சரியப்பட்டாள் வர்ஷா.

ரிஷப் வீட்டில் இருக்கும்பொழுது அவள் அவன் இருக்கும் இடங்களைத் தவிர்த்தாள். ஆனாலும் சில நேரம், அவளும் ஆன்ட்டியும் ஏதாவது டிராயிங் ரூமிலோ ஹாலிலோ உட்கார்ந்து பேசும் பொழுது ரிஷபும் அவர்கள் பேச்சில் கலந்து கொள்வான்.

ஆன்ட்டி அப்பொழுது எல்லாம் வர்ஷாவைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்வாள். ரிஷப் வர்ஷாவை ஏதேனும் செய்து விடுவானோ என்ற பயம் அவளுக்கு.

அது ரிஷபிற்கும் தெரியும். மனதிற்குள் அவன் சிரிப்பது அவன் உதட்டில் தெரியும் புன்னகைக் கீற்றின் மூலம் வெளிப்படும்.

யோசனையில் மூழ்கியிருந்தவளைக் கலைத்தது ரிஷபின் குரல்.

"வர்ஷா... நேற்று ராஜன் மிஸ்டர் ரிச்சர்ட் என்பவருடன் பேசிக் கொண்டிருந்தான் போல.

இட் ஸீம்ஸ் ரிச்சர்ட் இஸ் எ கிரேட் ஃபேன் ஆஃப் யூ. ஐ மீன் யூவர் டிஸைன்ஸ்."

"ஏன், அதில் என்ன கஷ்டம் உங்களுக்கு?"

"இல்லை. அமுல் பேபி மாதிரி இருக்கும் ரிச்சர்டின் முகம் உன் பெயரை ராஜன் உச்சரிக்கும்பொழுது எல்லாம் பீட்ரூட் நிறத்திற்கு மாறிவிடுகிறது போல.

அது ஏன் வர்ஷா... எனி ஐடியா?"

"அவருக்கு என் டிஸைன்ஸ் பிடிக்கும். தட்ஸ் ஆல்!"

"வேறு ஏதும் இல்லையா?"

"அவரையே கேட்க வேண்டியதுதானே!"

"ராஜன்தான் இருந்தான். இல்லாவிட்டால் நான் கேட்டிருப்பேன்."

அவள் அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

"ம்... விக்ரம், பீட்டர், ரிச்சர்ட் என்று பட்டியல் நீண்டு கொண்டே போகிறது."

"ஷட் அப்!" என்று சொல்லிவிட்டு வேகமாக அங்கிருந்து வெளியேறினாள் வர்ஷா.



அறையினுள் சென்றவள் படுக்கையில் விழுந்தாள். அவள் கைப்பேசி சிணுங்கியது. அவள் எடுக்கும் முன்பு கட் ஆகிவிட்டது.

லோக்கல் நியூஸ் லெட்டரைப் படுக்கையில் படுத்த படியே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'அட! விக்ரம் நடிக்கும் நாடகம் இன்று தியேட்டரில் அரங்கேறுகிறதே! விக்ரம் ஏன் சொல்லவே இல்லை?

அவசரத்தில் பிஸி ஷெட்யூலில் மறந்து விட்டானா? சரி, அவன் சொல்லாவிட்டால் என்ன?

நான் போய்ப் பார்த்தால் என்ன? இட் வுட் பி எ ஸர்ப்ரைஸ் ஃபார் ஹிம்.' நாடகம் எப்பொழுது தொடங்கு கிறது எனப் பார்த்தாள்.

இரவு மணி பத்து என்று இருந்தது. எப்படியும் ஒரு மணி நேரம் நீடிக்கும் நாடகம்.

போய் விட வேண்டியதுதான். ஐ நீட் எ பிரேக். ஹாஸ்பிடலில் அப்பா சட்டென அட்மிட்டானது, ரிஷபின் வருகை பிஸினெஸில் என நிறைய அதிர்ச்சிகள் அடுத்தடுத்து என் வாழ்க்கையில்.

அட்லீஸ்ட் இந்த டிராமாவிற்குப் போய் வந்தாலாவது மனம் லேசாகலாம் என முடிவு செய்தாள். கடகடவெனக் குளித்துவிட்டு ஒரு லாங் ஸ்கர்ட்டும், டாப்ஸும் அணிந்து கொண்டாள்.

ஹாலில் ரிஷப் இருந்தால் அவனிடம் சொல்லிவிட்டு, வெறுப்பேற்றி விட்டுப் போகலாம் என நினைத்தாள்.

ஆனால் ஹால் இருளில் இருந்தது. அதனால் சந்திரா ஆன்ட்டியிடம் மட்டும் சொல்லிவிட்டுச் சென்றாள்.

கார் மேல் ஒட்டியிருந்த பனியை ஷவலால் தள்ளி விட்டுவிட்டு காரைக் கிளப்பினாள்.

நாடகம் நடக்கும் தியேட்டர் போய்ச் சேர எப்படியும் அரை மணி நேரமாகிவிடும்.

விக்ரம் நடிக்கும் பாத்திரம் எப்ப வரும் என்று தெரியவில்லை. பாவம்! அவனுக்கு அந்தத் தியேட்டரை வாங்க வேண்டும் என்று ஆசை.

என்ன செய்வது? அதை வாங்கலாம் என நினைத்த பொழுதுதான் எல்லாமே ஒன்றன்பின் ஒன்றாகத் தெரிய வந்தது எனப் பெருமூச்சு விட்டாள் வர்ஷா.

காரை நிறுத்திவிட்டு இறங்கலாம் என நினைத்த பொழுது மழை சடசடவெனப் பெய்யத் தொடங்கியது. மழை நின்ற பிறகு போகலாமா என யோசித்தாள்.

ஆனால் அந்த மழை நிற்கிற மழை இல்லை. அதனால் அப்படியே போக வேண்டியதுதான் என முடிவு செய்தாள்.

வேகவேகமாக ஓட்டமும் நடையுமாகச் சென்றாள் அவள். தியேட்டரின் முன் இருந்த வரவேற்பு அறைக்குள் முதலில் போய் மழையிலிருந்து தப்ப வேண்டும் என நினைத்தபடியே லானைக் கடந்தாள் அவள்.

வரவேற்பு அறையும் இருளில் மூழ்கியிருந்தது. அங்கே ஒரு உருவம் நிற்பது தெரிந்தது. ஓடி வந்ததால் மூச்சு வாங்கியது அவளுக்கு.



அந்த உருவத்தைக் கடந்து தியேட்டரினுள் நுழையப் போனாள். ஆனால் அந்த உருவம் அவளை இழுத்து அணைத்தது. அவள் கத்த முயன்றாள்.

ஆனால் அவள் உதடுகளைத் தன் உதட்டால் சிறை செய்தது அந்த உருவம்.

'ரிஷப்... டோண்ட் ப்ளே திஸ் வித் மி' என்று சொல்ல முயன்றாள் அவள்.

ஆனால் வார்த்தைகள் தொண்டைக்குள்ளே சிக்கின. அவளுக்கு அது ரிஷப் என்று புரிந்தது. அவன் அணைப்பில் தெரிந்த அந்த வேகம் அவளுக்குப் புதிதல்ல.

கொஞ்சம் கொஞ்சமாக ரிஷபிடம் தான் கட்டுப்பட்டு விடுவோமோ என்ற பயம் அவளை அரித்தது.

"விக்ரம்... ஐ லவ் யூ!" என்றாள் அவனை அணைத்தபடி.

சட்டென அந்த உருவம் அவளை விடுவித்தது. வர்ஷாவின் மனதிற்குள் வெற்றிப் புன்னகை பரவியது. அதற்குள் விளக்குகள் எரியத் தொடங்கின.

ரிஷப்பின் முகம் கோபத்தால் இறுகியிருப்பதை அவளால் உணர முடிந்தது.

அவன் கண்கள் தீப்பிழம்பு போல் ஜொலித்தன.

"ஓ... நீங்களா? நான் விக்ரம் என நினைத்தேன்!" என்றாள் கூலாக.

அவளுக்குத் தெரியும். அவன் இழுத்து அணைத்த பொழுதே அது ரிஷப்தான் என்று.

ஆனால் ரிஷபைப் பழி வாங்க வேண்டும் என்று வேண்டுமென்றே அவள் அப்படிச் சொன்னாள்.

"நான்... விக்ரம் இல்லை. பட் ஐ கேன் ஆக்ட் லைக் ஹிம்.

நீ இவ்வளவு டெஸ்பரேட்டாக இருப்பதைப் பார்க்கும் பொழுது எனக்கு அப்படித்தான் தோன்றுகிறது."

"சே... யூ ஆர் நாட் ஹியூமன். ஐ ஹேட் யூ!"

"கொஞ்ச நேரம் முன்பு நீ நடந்து கொண்டதைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லை.

அதோடு ஐ லவ் யூ என்று வேறு சொன்னாய்?"

"நீங்கள் விக்ரம் என்று நினைத்தேன் நான்..." என்று பொய் சொன்னாள் அவள்.

அவன் முகத்தில் தோன்றிய கோபத்தை ரசித்தாள் அவள். ரிஷப்! ஐயாம் ஹேப்பி. உங்களை நான் கோபப் படுத்தி விட்டேன். யெஸ் ஐ மேட் இட் என்று தனக்குள்ளே சந்தோஷப் பட்டவள் அங்கிருந்து வெளியேறினாள்.

மழையினால் டிராமா கேன்சல் என ஒரு அறிவிப்பு அவள் காதில் விழுந்தது.

சே... இது வேறா? சரி, வந்ததிற்கு விக்ரமைப் பார்த்து விட்டுச் செல்லலாம் என முடிவு செய்தாள் அவள்.

டிராமாவில் பங்கேற்பவர்கள் எல்லாம் அங்கே இருப்பார்கள் எனத் தெரியும் அவளுக்கு. அந்த அறையை நோக்கி அவள் கால்கள் சென்றன.

கதவைத் தட்டினாள். ஆனால் யாரும் திறக்கவில்லை.



உள்ளே இருந்து சிரிப்புச் சத்தம் கேட்டது. அது விக்ரமின் சிரிப்புதான்.

பீட்டரும் விக்ரமுமாக இருக்கும் என நினைத்தவள், மீண்டும் கதவைத் தட்டினாள்.

"விக்ரம் டார்லிங்... கதவைத் திறங்க... யாருன்னு பார்க்கலாம்!" என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டாள் அவள்.

அந்தக் குரல் சங்கீதாவோடது. காட்... அவள்... நான் ஏதாவது தப்பாக அர்த்தம் கற்பித்துக் கொள்கிறேனா?

ஒருவேளை டிராமாவிற்கு பிராக்டிஸ் நடக்கிறதா... நான் கேட்டது டயலாக்கா?

சே... டிராமாவிலுமா விக்ரம் அதே பெயர் வைத்துக் கொண்டிருப்பான். நோ ஸம்திங் இஸ் ராங் எனத் தீவிரமாக யோசிக்கத் தொடங்கினாள்.

அதற்குள் கதவு திறந்தது. உள்ளே இருந்து வந்தவர்களைப் பார்த்துத் திடுக்கிட்டாள் வர்ஷா.

விக்ரமின் கை அணைப்பில் இருந்தாள் சங்கீதா. அவளை அங்கு எதிர்பார்க்காத விக்ரமின் முகத்தில் அதிர்ச்சி ரேகைகள் அப்பட்டமாகத் தெரிந்தன.

"வர்ஷா! நீ... நீ இங்கே எப்படி?"

"விக்ரம் டியர்! வர்ஷா வந்தது நல்லதாப் போச்சு. அவளே இப்ப எல்லாத்தையும் பார்த்துட்டா. நம்ம கல்யாணம் ஈஸியா முடிஞ்சிடும்.

ஸோ நீங்க எதுவும் சொல்ல வேண்டாம்!" என்றாள் சங்கீதா.

"தேங்க்ஸ் சங்கீதா. அட்லீஸ்ட் இப்பவாவது எனக்குப் புரிந்ததே...!" என்று இருவரையும் பார்த்து நிதானமாகச் சொன்னவள் அங்கு இருந்து வேக வேகமாக வெளியேறினாள்.

மழை விட்டிருந்தது. காரினுள் சென்றவள் காரை எடுக்காமல் யோசித்துக் கொண்டிருந்தாள்.

ஸோ... ரிஷப் வாஸ் ரைட். எப்பவும் போல் அவன் எடுக்கும் முடிவுகளைப் போல அவன் இதையும் கரெக்டாக கெஸ் செய்திருக்கிறான்.

இப்பொழுது நான் பணக்காரி இல்லை. வீடு, நிலம் எல்லாமே அடமானத்தில் உள்ளது. இது எல்லாமே விக்ரமிற்குத் தெரியும்.

அதனால் அவன் சங்கீதாவைத் திருமணம் செய்யச் சட்டென முடிவு செய்து விட்டான் போல... சே! என்ன ஒரு கேவலம் இது!

அப்பொழுது அவன் என் மேல் அன்பு செலுத்த வில்லை. அவனுடைய நோக்கம் குறிக்கோள் எல்லாமே பணம்தான்.

கடவுளே! இப்படிப்பட்ட ஒருவனையா நான் விரும்பினேன்? 'நீ அவனை விரும்பவில்லை வர்ஷா!' என அவள் மனச்சாட்சி எதிர்க் குரல் கொடுத்தது.

அவனை உனக்குப் பிடிக்கும். பீட்டர் போல அவன் உனக்கு ஒரு ஃபிரண்ட். அவ்வளவுதான்.

'அவன் கையில் நீ உருகியதில்லை. ரிஷப் உன்னைத் தொட்டபொழுது உன் உடலில் பரவிய மின்சாரம், அந்தப்



புதிய உணர்வு உனக்கு விக்ரமிடம் ஒரு பொழுதும் ஏற்பட்டதில்லை.

அது மட்டும் இல்லை. அப்பாவிற்கு உனக்கும் விக்ரமிற்கும் இடையே இருந்த உறவு பிடிக்கவில்லை.

அவர் சொல்வதற்கெல்லாம் தலையாட்ட உனக்குப் பிடிக்கவில்லை. அதனால் உன்னை அறியாமல் நீ விக்ரமைத் தீவிரமாகக் காதலிப்பது போல் ஒரு மாயையில் இருந்தாய்.

இதுதான் உண்மை. எப்ப ரிஷப் உன் வாழ்வில் வந்தானோ அப்பொழுதே உனக்குப் பயம் வந்துவிட்டது. எங்கே நீ அவனைக் காதலித்துவிடப் போகிறாயோ என்ற பயம் உன்னுள் இருந்தது.

அதனால்தான் நீ ரிஷபிடம் வேண்டுமென்றே எரிந்து விழுந்தாய். ஆனால் உன் மனதில் இருப்பது ரிஷப்தான் வர்ஷா!' என்று மனச்சாட்சி சொல்ல வர்ஷா திகைத்தாள்.

கார் ஸ்டியரிங்கைப் பிடிக்க முடியாமல் அவள் விரல்கள் நடுங்கின. தன் மேலேயே கோபம் வந்தது அவளுக்கு.

காட்! ரிஷப் சொன்னது போல் எனக்கு ஐ.க்யூ. கம்மிதான் போல. எது நிஜம் எது பொய் என்று எனக்குத் தெரியவில்லையே!

நான் இந்த விஷயத்தை எப்படிப் போய் ரிஷப்பிடம் சொல்ல முடியும்? விக்ரமிற்கும் எனக்கும் கல்யாணம் நடக்கப் போவதில்லை என்பதை நான் எப்படி அவனிடம் போய்ச் சொல்ல முடியும்?

நான் ரிஷபை விரும்புகிறேனே.. அதை... எப்படி அவனிடம் சொல்ல முடியும்?

விக்ரம் கிடைக்காததால் நீ இப்படிப் பேசுகிறாய் என்று ஏளனமாகப் பேசுவான். அது மட்டும் இல்லை... இப்பொழுது பணம் என்னிடம் இல்லை. அதனால் பணத்திற்காக இப்படிப் பேசுகிறேன் என நினைப்பான்.

இது என்ன சோதனை? நான்... நான் என்ன செய்வது? - என மனதிற்குள் போராட்டம் நடந்தது.

கொஞ்ச நேரம் முன்புதான் ரிஷபின் அணைப்பில் தன்னை மறந்தது அவளின் நினைவுக்கு வந்தது.

இன்னொரு முறை அது போல் நடக்கக் கூடாது. நடந்தால் என் மேலேயே எனக்குக் கட்டுப்பாடு இருக்காது.

'ரிஷப்! யூ ஆர் மேக்கிங் மி க்ரேஸி!' என மனதிற்குள் புலம்பினாள் அவள்.

எப்படி காரை ஓட்டிக் கொண்டு வீடு வரை வந்தோம் என்று அவளுக்குத் தெரியவில்லை.

வீடு வந்தவுடன் தன் அறைக்குள் சென்றவள் ஈர உடையை மாற்ற வேண்டும் என்றுகூடத் தோன்றாமல் கட்டிலில் விழுந்தாள் வர்ஷா.

விக்ரமும் சங்கீதாவும் தன்னைப் பார்த்த பார்வை, ரிஷப் விக்ரமைப் பற்றி எச்சரித்தது எல்லாமே அவளை ஆட்டிப் படைத்தது.

கட்டிலில் படுத்தபடி அழுது கொண்டே இருந்தாள் அவள். தன்மீதே கோபம் வந்தது அவளுக்கு.



எது நல்லது எது கெட்டது என்று தெரியாமல் இருக்கிறேனா நான்? அப்பா சொன்னது, ரிஷப் சொன்னது எல்லாம் சரிதான்.

ஐ யாம் எ கிட். எந்த முடிவும் சரியாக எடுக்கத் தெரியாத முட்டாள் கிட் நான் என மனம் வெதும்பினாள்.

ஈர உடையோடு இருந்ததால் காய்ச்சல் வரும் போல் இருந்தது அவளுக்கு.

குளிரால் அவள் உடல் நடுங்கத் தொடங்கியது. எழுந்து போய் ஹீட்டரை ஆன் செய்ய நினைத்தாள் அவள்.

ஆனால் கால்கள் ஒத்துழைக்கவில்லை. சோர்ந்து போய்க் கட்டிலில் வீழ்ந்தாள் அவள்.

# 14

உன்னைப்
பார்த்த
அந்த
நொடி
அழகாய்
விரிகிறது
என்
மனத்
திரையில்!

பூங்காவில்
அந்த
ஒற்றைக்
கல்
மேலே
நீ
உட்கார்ந்து
இருந்தாய்!
உனக்குத்
தெரியுமா
என்
இதயத்தில்
அப்பொழுதே
நீ
உட்கார்ந்து
விட்டாய்
என்று?

"என்ன பாப்பா, இப்படி சின்னப் பிள்ளையாட்டம் மழையில நனைஞ்சுட்டு அப்படியே படுத்துட்ட...

பார் நல்ல காய்ச்சல் உனக்கு அதனாலே...!" என்றாள் பரிவோடு சந்திரா ஆன்ட்டி.

பதில் பேச முடியாமல் முனகினாள் வர்ஷா. அதற்குள் ஃபேமிலி டாக்டர் மார்க் வந்து அவளைப் பரிசோதித்தார்.



"என்னம்மா, மௌன ராகம் ரேவதி ஸ்டைல்ல மழையில ஆட்டம் போட்டியா?

யாருக்குப் பயந்திட்டு அப்படி ஓடின? உன்னை யாராவது பெண் பார்க்க வந்தாங்களா? வசந்த் ஏதும் சொல்லலையே...!"

"ஏன் ஸார் அப்படிச் சொல்றீங்க? அவங்க திக் ஃபிரெண்ட் யாரையாவது பார்க்கப் போயிருக்கலாம் தானே...!" என்றான் ரிஷப்.

ஏதும் பேசாமல் கட்டிலில் படுத்திருந்தாள் வர்ஷா.

"அப்படியா வர்ஷா! எனிதிங் இண்ட்ரஸ்டிங்?" என்றார் டாக்டர்.

"ஸார்! பாவம், பாப்பாவை நீங்களும் கிண்டல் செய்யறீங்களே? சாப்பாடு என்ன சாப்பிடலாம்?"

"கோல்டா எதுவும் கொடுக்க வேண்டாம். பிரெட், பால், கஞ்சி எனக் கொடுங்க.

மழையில நனைஞ்சதால வந்த காய்ச்சல்தான். அதனால நத்திங் டு வொர்ரி."

"தேங்க்ஸ் டாக்டர்..." என்று ரிஷப் அவரை வழியனுப்பினான்.

"சரிடா வர்ஷா! நான் உனக்குச் சாப்பிட ஏதாவது எடுத்திட்டு வர்றேன்."

டாக்டரை வழியனுப்பி விட்டு உள்ளே நுழைந்தான் ரிஷப். முகம் வெளிறி, சோர்ந்து போய்ப் படுத்திருந்தவளைப் பார்த்து அவன் மனம் உருகியது.

"என்ன வர்ஷா! ரொம்ப முடியலையா?" என்றவன் அவள் நெற்றி மேல் கை வைத்துப் பார்த்தான்.

கண்களைத் திறந்தாள் அவள். அவள் கண்களில் தெரிந்த சோர்வும், பயமும் அவனை ஏதோ செய்தது.

"ஐயாம் ஸாரி.... உன்னைப் பார்த்தவுடன் நேற்று என்னால் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

அதனால்தான் அப்படி நடந்து கொண்டேன். என்னால்தான் உனக்கு இந்த நிலைமை.

ஐயாம் ரியலி ஸாரி. மருந்து சாப்பிட்ட பின்பு ஃபீவர் குறைந்துவிடும். கவலைப்படாதே... வர்ஷா!" என்றான் கனிவாக.

இவனால் இப்படி எல்லாம்கூட பேச முடியுமா என்று ஆச்சரியப்பட்டாள் வர்ஷா. இவன் எப்பவும் என்னிடம் எரிந்து விழுவான்.

இன்று என்ன ஆச்சு என்று யோசித்தபடியே கண் மூடினாள் அவள்.

மருந்தின் எஃபெக்டால் கண் மூடினாள். உடனே தூங்கி விட்டாள்.

மதியம் மேல் கண் விழித்தாள் வர்ஷா. சோர்வாக இருந்தது. காய்ச்சலால் ஒரு பக்கம் சோர்வு என்று இன்னொரு பக்கம் அடுத்து என்ன செய்வது என்று புரியாமல் சோர்வாக இருந்தது.

கைப்பேசி சிணுங்கியது.

"ஹலோ வர்ஷா!"



"வர்ஷா டியர்! நான் விக்ரம்."

"எனக்குப் பேச விருப்பம் இல்லை."

"லுக். ப்ளீஸ்! லெட் மி எக்ஸ்ப்ளெய்ன்!"

"எனக்குப் பேச நேரமும் இல்லை, விருப்பமும் இல்லை..." என்று சொல்லிவிட்டு, இணைப்பைத் துண்டித்தாள்.

எக்ஸ்ப்ளெய்ன் செய்யப் போகிறானாம். இடியட். சே! என்னை என்னவென்று நினைத்தான். என்ன கதை சொன்னாலும் முட்டாள் மாதிரி நான் கேட்டுக் கொண்டிருப்பேன் என நினைத்தானா?

"ஸோ... உனக்குக் காய்ச்சல் வந்ததற்கு நான் காரணம் இல்லை என்று எனக்கு இப்பொழுதுதான் புரிந்தது!" என்றான் ரிஷப் கோபமாக.

"என்ன சொல்றீங்க?"

"புரியாத மாதிரி நடிக்காதே..!"

"லுக்... ஏன் இப்படி சித்திரவதை செய்யறீங்க? ஜஸ்ட் டெல் வாட் இஸ் இட்?"

"விக்ரம் இப்பொழுதுதான் லேண்ட் லைனில் என்னைத் தொடர்பு கொண்டான்."

"ஓ... உங்களிடம் பேசினானா?"

"ஆமாம்... நடந்த எல்லாவற்றையும் சொன்னான். அவனின் இழப்புதான் உனக்கு டிப்ரஷெனை ஏற்படுத்தியிருக்கிறது.

அதனால்தான் காய்ச்சல். நான் என்னவோ நான் உன்னை அணைத்ததால்தான் பயத்தில் இப்படி ஆகி விட்டதோ என நினைத்தேன்."

"ப்ளீஸ் லீவ் மி அலோன்!"

"ஏன்... உண்மையைச் சொன்னால் கஷ்டமாக இருக்கிறதா?"

"ஏன்... இப்படி எல்லோரும் என்னைச் சித்திரவதை செய்யறீங்க?"

"ஓ... உன் லிஸ்டில் விக்ரமுடன் என்னையும் சேர்க்கிறாயா? அப்ப ஐயாம் லக்கி!"

"வாட் டு யூ மீன்..."

"அப்ப விக்ரமிற்கு நீ கொடுத்தது எல்லாம் எனக்கும் கிடைக்கும்.

உன் அணைப்பு, உன் முத்தம், ம்... ம்... இன்னும் என்னென்னவோ?"

"ஷட் அப் ரிஷப்! போதும்!" என்று சீறினாள் அவள்.

"உன் உடல்நிலை சரியாகட்டும். தென் ஐ நோ வாட் ஐ ஹேவ் டு கிவ் அண்ட் வாட் ஐ நீட் டு டேக் ஃப்ரம் யூ!" என்றான் ரிஷப் கோபமாக.

அவன் கண்களில் பளபளப்பு அவன் கோபத்தை உணர்த்தியது.

கடவுளே! நான் என்ன செய்வேன்? இநத வீடு எனக்கு எவ்வளவு தூரம் பாதுகாப்பாக இருக்கும், தெரியவில்லையே. என்ன செய்யலாம்?



அப்பாவின் உடல்நிலை சரியான பின்பு ஏதேனும் செய்ய வேண்டும். இங்கே ரிஷபின் நிழலில் இந்த வீட்டில் இருக்க முடியாது.

என்னால் போராட முடியாது. ரிஷப் என் அருகே வந்தால் என் உடலின் செல் எல்லாம் உருகுகிறது.

ஆனால் அவன் என்னைப் பற்றி ரொம்ப ரொம்ப சீப்பாக நினைத்துக் கொண்டு இருக்கிறான். சே! என்ன பேச்சு பேசிவிட்டான்.

ஆமாம்... அவன் சொன்னதில் என்ன தப்பு? நான் ரிஷபைச் சீண்ட வேண்டும் என்று நினைத்து அவனை விக்ரம் என நினைத்து அணைத்ததாகச் சொன்னேன்.

அது இப்பொழுது என்னையே துரத்துகிறது. நான் செய்த தப்பு இப்பொழுது என்னைக் கொல்லாமல் கொல்கிறது.

என் உடல் நிலை சரியானவுடன் ரிஷப் என்னை ஏதாவது செய்து விடுவானா? அவனைக் கண்டால் என் மனம் பரபரக்கிறது. நான் இருக்கும் நிலையில் என்னை அடைவது அவனுக்குச் சுலபம்.

"இந்தா பாப்பா... உனக்காக கார்ன் சூப் கொண்டு வந்திருக்கேன்.

காய்ச்சலுக்கு நல்லது. கொஞ்சம் குடிடா!" என்றாள் சந்திரா.

"வேண்டாம் ஆன்ட்டி! வாய் எல்லாம் ஒரு மாதிரி கசப்பா இருக்கு...!"

"அதெல்லாம் சரியாயிடும். அதுக்குத்தான் சூப் கொஞ்சம் காட்டமா மிளகெல்லாம் போட்டு வெச்சேன்."

"சரி ஆன்ட்டி... கொடுங்க!"

அவள் சூப் குடிப்பதையே பார்த்துக் கொண்டிருந்தாள் சந்திரா.

"என்ன ஆன்ட்டி... அப்படி பார்க்கறீங்க?"

"ம்... ஒரே நாளில் உன் உடம்பு ரொம்ப டவுன் ஆயிடுச்சு! சீக்கிரம் நல்லா சாப்பிட்டு உடம்பைத் தேத் தணும்... சரியா?"

"என்னவோ ஆன்ட்டி! எதுவுமே பிடிக்கலை."

"ஏன்டா அப்படிச் சொல்றே? அப்பாவுக்கு உடம்பு சரியாயிடும். உனக்குக் கல்யாணம் செஞ்சு, உன் குழந்தைகளை எல்லாம் வளர்த்து ஆளாக்கப் போறது நானும் ஐயாவும்தான்."

"கல்யாணம் எல்லாம் வேண்டாம் ஆன்ட்டி. நான்... இப்படியே இருந்திடறேன்."

"அட போ... பாப்பா! என்ன பேச்சு இதெல்லாம்! சரி ரிஷப் தம்பி பற்றி நீ என்ன நினைக்கிறே?"

சட்டெனப் புரை ஏறியது அவளுக்கு.

"ஏன் ஆன்ட்டி அப்படி கேக்கறீங்க?"

"ம்... அந்தத் தம்பி உன்னைப் பார்க்கும்பொழுது அவர் கண்ணில் ஒரு ஆசை தெரியற மாதிரி எனக்குப் படுது.

அதனாலேதான் நான் கண் கொத்திப் பாம்பு மாதிரி உன்னைப் பார்த்துக்கிறேன்.



நீ எதற்கும் கொஞ்சம் ஜாக்கிரதையா இரு, ரிஷப் தம்பியிடம். என்னடா ஆன்ட்டி இப்படி எல்லாம் பேச றாளேன்னு நினைக்காதே!"

"இ... இல்லை ஆன்ட்டி. அம்மா முகம்கூட எனக்கு ஞாபகம் இல்லை.

நீங்கதான் என்னை வளர்த்தது... நீங்க சொன்னதை நான் மனசில் வெச்சிக்கிறேன்.

அதோடு ரிஷப்பிற்கு ஏற்கெனவே நிறையப் பெண்கள் க்யூவில் நிற்கிறார்கள். என் ஃபிரண்ட் தீபா உட்பட.

அதனால் நானும் அந்த லிஸ்டில் சேர எனக்கு விருப்பம் இல்லை. ரிஷபோடு இன்வால்வானால் எனக்குத் தான் கஷ்டம் ஆன்ட்டி.

எனக்கு ஏற்கெனவே நிறையத் தொல்லைகள் புதிதாக முளைத்திருக்கின்றன. கூடவே ரிஷபின் தொல்லையை நானே வலியப் போய் வாங்க விரும்பவில்லை...."

"சரி கண்ணா! மனசைப் போட்டுக் குழப்பிக்காதே... ரெஸ்ட் எடு!"

"ஆன்ட்டி! அப்பாவை இன்று நான் போய்ப் பார்க்க வில்லை. என் முகத்தைப் பார்த்தே உடல்நலம் சரியில்லை என்று கண்டுபிடித்து விடுவார் அவர்.

பாவம்! அப்புறம் அநாவசியாக வருத்தப்படுவார்."

"ரிஷப் தம்பி அப்பாவைப் பார்க்கத்தான் போயிருக்கார். எப்படியும் அப்பாவை டிஸ்சார்ஜ் செய்தாலும் செய்து விடுவார்கள் இன்னிக்கு...!"

"ஓ... அப்படியா! சந்தோஷமா இருக்கு ஆன்ட்டி! அப்பாவின் குரல் வீட்டில் கேட்டு எவ்வளவு நாளாச்சு?"

"ஆமாம் வர்ஷா! எல்லாம் கடவுள் சித்தம்...!"

ரிஷப் வந்தவுடன் அவனுக்கு நன்றி சொல்ல வேண்டும். அவன் அப்பப்ப அப்பாவிடம் பேசிக் கொண்டிருப்பதால்தான் அவர் உற்சாகமாக இருக்கிறார்.

டிஸ்சார்ஜ் செய்வதற்கு எவ்வளவு பணம் செலவானது எனக் கேட்டு அவனிடம் கொடுத்துவிட வேண்டும்.

பட் எங்கிருந்து பணத்தைப் புரட்டுவது? சட்டெனத் தன் கையில் பளிச்சிட்ட முத்து மோதிரத்தைப் பார்த்தாள் அவள்.

"ஆன்ட்டி...! எனக்கு ஒரு உதவி."

"என்னடா கண்ணா! பெரிய வார்த்தை எல்லாம் பேசறே? என்ன வேணும் சொல்!"

"ஆன்ட்டி! இந்த மோதிரத்தை விற்று அதற்குக் கிடைக்கும் பணத்தை வாங்கி வாருங்கள்."

"என்னடா... அப்பா உனக்கு ஆசையாக உன் பிறந்த நாள் பரிசாக வாங்கிக் கொடுத்ததாச்சே...!

அதோடு அதுக்கு மேட்சிங்காகக் கம்மல், மாலை என எல்லாம் செட்டாக இருக்குமே!

அப்புறம் எதையுமே போட முடியாது. செட்டில் ஒன்று குறைந்தால்கூட அந்த செட்டே வீணாகி விடும்டா!"

"கம்மல், மாலை எல்லாம் ஏற்கெனவே விற்று விட்டேன் ஆன்ட்டி. அதனால் உங்கள் லாஜிக்படி பார்த்தால் இந்த மோதிரம் வேஸ்ட்.



அதனால் இதையும் விற்று விடலாம்!"

"சே! ரிஷப் தம்பி எப்படி இதை எல்லாம் விலை கொடுத்து வாங்கினார்.

ரொம்ப தப்புடா இது. என் மனசே ஆறலை. உனக்கு ரொம்ப அழகாக இருக்கும் இந்த செட்."

"ரிஷப் அதை வாங்கவில்லை ஆன்ட்டி. நான்தான் அதை விற்றேன்.

அதனால் அவரைத் திட்டுவதில் எந்தப் பயனும் இல்லை."

"எப்படி இருந்தாலும் வீட்டின் மற்ற பொருட்கள் எல்லாம் தம்பிதானே வாங்கப் போகுது...

ஒரு தடவை அதனால் அவரிடம் பேசிவிட வேண்டும். எல்லாமே ஐயா பார்த்துப் பார்த்து வாங்கியது...!"

சந்திரா ஆன்ட்டியைப் பார்க்க அவளுக்குப் பாவமாக இருந்தது. உயிர் இல்லாத பொருட்களுக்கு இப்படி உருகுகிறாளே... இங்கே நானே கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து கொண்டிருக்கிறேன்.

அதற்கு என்ன சொல்வாள்? ம்... ம்... அவளைச் சொல்லிக் குற்றம் இல்லை. அவள் வயதானவள். அதனால் தான் சின்னச் சின்ன விஷயங்களைக்கூட அவள் மனம் ஏற்க மறுக்கிறது.

"இன்னும் இரண்டு வாரங்களில் உனக்குப் பிறந்த நாள் வருகிறது கண்ணா!

ஞாபகம் இருக்கா... போன பிறந்த நாளை ஐயா எவ்வளவு விமரிசையாகக் கொண்டாடினார்...!"

"ம்... ஆமாம் ஆன்ட்டி. என் பிறந்த நாளை ஐந்து நட்சத்திர விடுதியில் கொண்டாடினார்.

வந்திருந்தவர்களுக்கெல்லாம் பிறந்த நாள் விழா ஞாபகமாக விலை உயர்ந்த பரிசுகளை வாரி வழங்கினார்.

சுவையான விருந்து, இன்னிசைக் கச்சேரி எனத் தூள் கிளப்பினார்.

ஆனால் எனக்கு இப்பொழுது ஒன்று தோன்றுகிறது, ஆன்ட்டி!"

"என்னடா கண்ணா...?"

"அந்தப் பணத்தில் கொஞ்சம் சேமித்து வைத்திருந்தால் இந்த மாதிரி தருணத்தில் ரொம்பவே உபயோகமாக இருக்கும்.

பணம் இருக்கும்பொழுது அதன் அருமை தெரிய வில்லை. இல்லாதபொழுதுதான் அதன் வெறுமை பூதாகரமாகத் தெரிகிறது."

"சரி கண்ணா... நீ திரும்பத் திரும்ப அதையே போட்டு மண்டையை உருட்டிக் கொண்டிருக்காதே.

ஓய்வு எடு. நான் இருந்தால் நானும் இதையேதான் பேசிக் கொண்டிருப்பேன்.

அதனால் நான் சமையலைப் பார்க்கிறேன்...!" என்று சொல்லிவிட்டு அகன்றாள் சந்திரா.



எவ்வளவு முட்டாள்தனமாகப் பணத்தைத் தாம் - தூம் எனச் செலவு செய்திருக்கிறேன். தோழிகளின் பிறந்த நாளுக்கு காஸ்ட்லியான பரிசுகள், விடுமுறை நாட்களில் அவர்களோடு சேர்ந்து சிங்கப்பூர், மலேசியா, ஐரோப்பா சுற்றுப் பயணம்.

அவர்களுக்குத் தேவையான டிக்கெட் செலவு, மற்ற செலவு எல்லாமே தானே செய்தது என ஒவ்வொன்றாக அவள் மனத் திரையில் ஓடியது.

இப்பொழுது அந்தத் தோழிகளில் ஒருத்திகூட இவள் பக்கம் திரும்பவில்லை. தீபா வழியாக, சங்கீதா மூலமாக எல்லா ஃபிரண்ட்ஸுக்கும் தன் நிலை தெரிந்திருக்கும்.

ஆனால் இதுவரை யாரும் வரவில்லை. தீபா வந்தாள். ஆனால் ரிஷப் பற்றிச் சொல்லவே அவள் வந்தாள்.

அவள் சொன்னது உண்மையாக இருக்குமா? ரிஷபிற்கும் அவளிற்கும் திருமணம் நடக்கப் போகிறதா?

ஏனோ ஒரு வலி அதை நினைக்கும்பொழுதே அவள் உடலில் பரவியது.

விக்ரமிற்கும் சங்கீதாவிற்கும் திருமணம் என்று கேட்ட பொழுது தோன்றாத வலி, இழப்பு, சோர்வு இதெல்லாம் ஏன் ரிஷபையும் தீபாவையும் இணைத்துப் பார்க்கும்பொழுது தோன்றுகிறது எனத் தன்னையே கேட்டுக் கொண்டாள்.

தன் கப்போர்டில் இருக்கும் மற்ற நகைகளையும் விற்றுவிட வேண்டும் என நினைத்துக் கொண்டாள். ரிஷபிடம் ஏதும் உதவி வாங்கக் கூடாது.

எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் எப்படியாவது இங்கிருந்து கிளம்பிவிட வேண்டும். என்னுடைய சொந்தக் காலில் நிற்க வேண்டும்.

அப்பாவையும் ஆன்ட்டியையும் காப்பாற்ற வேண்டும். முதலில் அதற்கு ஒரு வேலை வேண்டும். என்ன வேலைக்கு விண்ணப்பிக்கலாம்?

நகைகள் டிஸைன் செய்வது குறித்து ஏதேனும் வேலை இருந்தால் அதற்கு விண்ணப்பிக்கலாம். இனி ஒவ்வொன்றாக யோசித்து வேகமாகச் செய்ய வேண்டும் என மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

அவர்கள் கடைக்கு அடுத்தபடியாக ஊட்டியில் இருக்கும் பிரபல நகைக் கடைகள் எதுவென்று அவளுக்குத் தெரியும்.

கிட்டத்தட்ட போட்டிக் கடைகள் அவர்களுடைய பிஸினெஸிற்கு என்றே சொல்லலாம். அதில் ஒரு கடை முதலாளி அப்பாவிற்கு நல்ல பழக்கம்.

அவரிடம் பேசினால் என்ன? அவரிடமே கூட நகைகளை விற்பதற்குப் பார்க்கலாம். அதுதான் சரி வரும் என நினைத்தவள், உடனே கைப்பேசியிலிருந்து அந்த நம்பருக்கு ஃபோன் செய்தாள்.

"நான் வர்ஷா பேசறேன்... வசந்தன் டாட்டர்... எனக்கு ஒரு உதவி வேணும்."

"சொல்லும்மா... என்ன செய்யணும் நான். ஸாரி...! அப்பாவிற்கு இந்த மாதிரி ஆயிடுச்சு.

எனக்கு பிஸினெஸ்ல நிறைய வேலை. அதான் வர முடியலை... ஸாரி."



அப்பாவைப் பற்றிப் பேசியவுடன் அவள் கண்கள் கலங்கின. தன்னைக் கஷ்டப்பட்டுச் சமாளித்துக் கொண்டு பேசத் தொடங்கினாள்.

"எனக்குப் பணம் கொஞ்சம் தேவைப்படுது. அதனால் என்னிடம் இருக்கும் நகை எல்லாம் விற்றுவிடலாம் என நினைக்கிறேன்.

அப்புறம் கொஞ்சம் ஃபர்னிச்சரும் இருக்கு. அதை எல்லாம் நீங்கள் வாங்கிக் கொண்டு பணம் கொடுக்க முடியுமா?"

"ஷ்யூர். அப்புறம் வீடெல்லாம் என்ன ஆச்சு? ரிஷப் அங்கேதான் தங்கி இருக்கான் போல...!

ஒரே வீட்டில் இப்படி நீ அவனோடு தங்கியிருப்பது நல்லதில்லை வர்ஷா!

இது சின்ன ஊர். இப்பொழுதெல்லாம் அரட்டை அடிப்பவர்கள் உன்னைப் பற்றித்தான் பேசுகிறார்கள்.

ஏதோ மனசு கேட்கவில்லை. அதான் சொன்னேன். சரி... இப்ப வீட்டில் யார் இருக்காங்க? நான் இப்ப வந்து விற்கப் போற பொருள் எல்லாம்... பார்க்கவா?"

"ம்... வாங்க ஸார். வீட்டில் நான் மட்டும்தான் இருக்கிறேன். அப்பாவின் மருத்துவச் செலவிற்குப் பணம் தேவைப்படுகிறது.

அதனால்தான்...!" என்றாள் மெல்லிய குரலில்.

"புரியுதும்மா... அப்புறம் என்னை ஸார்ன்னு எல்லாம் கூப்பிட்டு அந்நியப்படுத்தாதே.

என்னை உன் வீட்டு ஆள் போல் நினைத்துக் கொள். சரியா... நான் இன்னும் பத்து நிமிஷத்தில் உங்க வீட்டில் இருப்பேன். டோண்ட் ஒர்ரி வர்ஷா!"

முகுந்தன் ஃபோனை வைத்த பின்பும் மனம் அவர் சொன்னதையே சுற்றிச் சுற்றி வந்தது. சே... இந்த ஊரில் இருப்பவர்களுக்கு வேற வேலை இல்லை போல.

அதனால்தான் என் தலையை உருட்டிக் கொண்டிருக்கிறார்கள் போல. அப்பா வீட்டிற்கு வந்தவுடன் கொஞ்ச நாள் பொறுத்து அவர் உடல்நலம் தேறிய பின்பு வேறு வீட்டிற்குப் போவது பற்றி பக்குவமாகப் பேச வேண்டும் என முடிவெடுத்தாள்.

இனி என் வாழ்க்கை முறையே வேறு. நான்தான் இனி அப்பாவையும் ஆன்ட்டியையும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

இவ்வளவு நாள் செல்லமாக வளர்ந்தது போதும். இனி நான் பொறுப்போடு இருக்க வேண்டும்.

முடியுமா? என்னால் முடியுமா? மீண்டும் முட்டாள்தனமாக முடிவெடுக்காமல் இருக்க என்னால் முடியுமா?

வாழ்க்கை மீண்டும் தெளிந்த நீரோடை போல் இருக்குமா என ஏதேதோ யோசித்தபடி இருந்தாள் வர்ஷா.

'முடியும் என்னால் முடியும்!' எனத் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள் அவள்.

கோவில் மணிச் சத்தம் அதை ஆமோதிப்பது போல் அவள் காதுகளில் ஒலித்தது.



# 15

**அந்த
ஞாயிற்றுக்கிழமையை
என்னால்
மறக்கவே
முடியாதா?
நீயும்
நானும்
இனிச்
சந்திக்கவே
முடியாது
என
முடிவான
அந்தக்
கறுப்பு
ஞாயிறு
ஏன்
வந்தது?
உன்
பாதை
வேறு
என்
பாதை
வேறு!**

ஏன் கடவுள்
இவ்வளவு
கொடுமைக்காரராக
இருக்கிறார்?

காலிங் பெல் சத்தம் கேட்கவே வர்ஷா வேகமாக வாசல் கதவை நோக்கி நகர்ந்தாள்.

முகுந்தனைக் கண்டவுடன் அவள் முகம் மலர்ந்தது.

"வாங்க ஸார்... உள்ளே வாங்க."

"ஸார் எல்லாம் வேணாம் வர்ஷா! என்னை நீ முகுந்த்ன்னே கூப்பிடலாம்."

"உட்காருங்க... நீங்க என்னைவிட வயசில பெரியவங்க. அதனால உங்களைப் பெயர் சொல்லிக் கூப்பிட மனசு ஒப்பலை."

"சரிம்மா... நம்ம இப்பத்தானே பழக ஆரம்பிச்சிருக்கோம். கொஞ்சம் கொஞ்சமா சரியாயிடும்.

ஏம்மா இளைச்சுப் போயிட்டே!" என்று அவளைப் பார்வையால் அளந்தார் அவர்.

ஏனோ அந்தப் பார்வை அவளுக்கு அருவருப்பைத் தோற்றுவித்தது. பூச்சி உடல்மேல் ஊர்வது போல் இருந்தது அவளுக்கு.

"இருங்க ஸார்... நான் திங்ஸ் எல்லாம் எடுத்திட்டு வர்றேன்," என்று உள்ளே சென்றாள் வர்ஷா.



ஒரு ட்ரேயில் அவளுடைய செயின்கள், ஆரம், வளையல்கள், காதணிகள், கொலுசு எல்லாவற்றையும் எடுத்து வந்தாள்.

முகுந்தனின் கண்கள் ஆசையால் பளபளத்தன. அவள் அருகே வந்தார்.

"இந்தச் செயின் ரொம்ப நல்லாயிருக்கும்மா... உனக்குப் போட்டால் எப்படி இருக்கும் பார்க்கலாம்!" என்று சொன்னவர் சட்டென அதை அவள் கழுத்தில் போட முயன்றார்.

அவரின் செய்கை பிடிக்காமல் இரண்டு அடிகள் பின்னே நகர்ந்தாள் வர்ஷா.

"ஹலோ மிஸ்டர்! இந்தப் பொருட்கள் மட்டுமே விற்பனைக்கு...

வர்ஷா அல்ல...!" என்று கோபமாக ஒலித்தது ரிஷபின் குரல்.

இவன் எப்பொழுது வந்தான் எனத் திகைத்தாள் வர்ஷா.

"என்ன மிஸ்டர், மிரட்டறீங்க. இந்தப் பொண்ணுதான் என்னைக் கூப்பிட்டது. நானா இங்க வரலை!

உங்க பாதையில நான் குறுக்கிடறேனா?" என்றார் ஒரு மாதிரி குரலில் முகுந்தன்.

"ஷட் அப். கெட் அவுட். இல்லாட்டி நான் செக்யூரிட்டியைக் கூப்பிட வேண்டியிருக்கும்..." என்று உறுமினான் ரிஷப்.

அதைக் கேட்ட முகுந்தனின் முகம் சிறுத்தது.

"வர்ஷா! நான் உனக்கு அப்புறம் ஃபோன் செய்யறேன்மா!" என்று சொல்லிவிட்டு வேகமாக வெளி யேறினார்.

ரிஷபின் அனல் வீசும் பார்வையைச் சந்தித்தாள் வர்ஷா.

"முட்டாள்! உனக்கு இதுகூடத் தெரியலையா? சே...!"

"என்ன தெரியலை எனக்கு...?"

"ம்... அவன் உன்னை எப்படி... எப்படிப் பார்க்கிறான்? ஹி இஸ் கிவ்விங் டர்டி லுக்ஸ்.

அவன் மனதில் இருக்கும் எண்ணமே வேறு. ஸ்கௌண்டிரல்!"

"ம்... பாம்பின் கால் பாம்பறியும்!"

"என்ன சொன்னே...?" என்று அவளை நோக்கி வேகமாக வந்த ரிஷப் அவள் கன்னத்தில் பளீரென அறைந்தான்.

அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள் வர்ஷா.

"என்னை ஏன் இப்படி சித்திரவதை செய்யறீங்க. நீங்க வந்த பிறகு என் வாழ்க்கையே மொத்தமாக மாறிவிட்டது.

செய்யறதெல்லாம் நீங்க... பட் தண்டனையை நான் அனுபவிக்கிறேன்!" என்று சீறினாள்.

கோபத்தால் அவள் முகம் சிவந்தது. எது முயற்சி செய்தாலும் அது கிடைக்கவே மாட்டேங்குதே!



ஏன் இப்படி? இந்த நகை, ஃபர்னிச்சர் எல்லாம் விற்று அதில் வரும் பணத்தை வைத்து அப்பாவைப் பார்த்துக் கொள்ளலாம் என நினைத்தால் அதற்கும் வழியில்லை.

இயலாமையாலும், சுயபச்சாதாபத்தாலும் அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.

ரிஷப் முன்னே அழ, அவள் தன்மானம் இடம் தரவில்லை. அதனால் வேகமாக அந்த இடத்தை விட்டு வெளியேறினாள் வர்ஷா.

தோட்டத்துப் பக்கம் சென்றாள். ஏதாவது வேலை செய்தால்தான் இந்த டிப்ரஷன் சரியாகும் என முடிவு செய்தாள்.

புல் வெட்டுவதற்கு, அதைச் சீராக்குவதற்கு ஒரு மெஷின் (மோவர்) தோட்டக்காரர் பயன்படுத்துவார்.

அந்த மெஷின் பூச்செடிகளுக்கு நடுவே இருந்தது. அதை நோக்கி நகர்ந்தாள் அவள்.

அதை இயக்க ஆரம்பித்தாள். கைப்பிடியைப் பிடித்துக் கொண்டு புல்வெளியில் அதை இயக்கினாள்.

பழக்கமில்லாத வேலை செய்யத் தொடங்கியதால் கை வலிக்க ஆரம்பித்தது.

அதோடு நடந்து நடந்து களைப்பாக இருந்தது அவளுக்கு. அந்த மெஷின் நல்ல கனமாக வேறு இருந்தது.

அதிலிருந்து இரைச்சல் அதிகமாக வந்தது. ம்... ம்... இதை சர்வீஸிற்கு விடவேண்டும். ஆனால் இப்பொழுது விடவேண்டாம்.

விட்டால் தொகையை ரிஷப்தான் கட்ட வேண்டி வரும். ஏனோ அவனிடம் பணம் எதற்கும் வாங்கக்கூடாது என்ற எண்ணம் அவள் மனதில் ஆழமாகப் பதிந்தது.

அதற்குள் தோட்டக்காரர் அங்கே வந்தார்.

"என்ன மேடம்! நீங்க இந்த வேலை எல்லாம் செய்யறீங்க?" என்று பதறினார்.

"பரவாயில்லை... உங்களுக்கும் விஷயம் தெரிஞ் சிருக்குமே...!"

"ஆமாம் மேடம். கேள்விப்பட்டேன். வீட்டைத் தம்பி வாங்கிட்டார். அப்புறம் ஐயா எப்படி இருக்கார் மேடம்?"

"ம்... அப்பா சீக்கிரமே டிஸ்சார்ஜ் ஆயிடுவார். நான் அதுக்குத்தான் வெயிட் பண்ணிகிட்டு இருக்கேன்!"

"ம்... என்னமோம்மா... நம்ம நேரம்!"

"ஆமாம்... நீங்க இங்க ரொம்ப வருஷமா இருக்கீங்கதானே... உங்களுக்கு ரிஷபோட அப்பாவைத் தெரியுமா?

அவர் இங்கதான் எஸ்டேட்டில் வேலை பார்த்தார் போல!"

"ம்... அவர் அப்பா எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. அதோட ரிஷப் தம்பியை நல்லாவே ஞாபகம் இருக்கு."

"என்னது ரிஷபை ஞாபகம் இருக்கா?"

"ஆமாம் மேடம். ரிஷ்ப் தம்பிக்கு அப்ப பதினைந்து பதினெட்டு வயசுதான் இருக்கும்.



நம்ம வீட்டையே பார்த்தபடி நிற்பான் அப்ப. நான்கூட கேட்பேன், ஏன்டா இப்படி பார்க்கிறன்னு...?

அதுக்குத் தம்பி சொல்லும்... எனக்கு இந்த வீடு ரொம்ப பிடிச்சிருக்குன்னு...!

நான் இதை வாங்கப் போறேன்னு வேறு சொல்லும்."

"ஓ... அப்படியா? சின்ன வயசு முதல் ரிஷபிற்கு இந்த வீட்டின் மேல் கண் போல...! கரெக்டாக அதான் டார்கெட் செய்து வாங்கி விட்டான்."

சின்ன வயது ரிஷபை உருவகப்படுத்திப் பார்க்க முயன்றாள் அவள். ஒல்லியாக உயரமாக தீர்க்கமான முகத்தோடு பளிச்சிட்டது ஒரு உருவம் அவள் மனக் கண்ணின் முன்னால்.

பத்து வருடங்களுக்கு முன்பு ரிஷப் நினைத்ததை இப்பொழுது சாதித்து விட்டான். பிஸினெஸிலும் சரி, வாழ்க்கைத் தரத்திலும் சரி... என நினைத்தபடியே மெஷினைத் தள்ளியபடியே நடந்தாள்.

"மேடம்! கை வலிக்கப் போகுது...!"

"இல்லை... நான் கொஞ்ச நேரம் வேலை பார்க்கிறேன். ப்ளீஸ் நான் தனியா இருக்க விரும்பறேன்."

"சரி மேடம்! பார்த்துச் செய்யுங்க. கை வலிக்கும்!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து அகன்றார் அவர்.

வெறி பிடித்தாற் போல் மெஷினை விரைவாக இயக்கினாள் வர்ஷா. எவ்வளவு நேரம் அப்படியே மெஷினை ஓட்டியபடி இருந்தாளோ சட்டென ஒரு கட்டத்தில் மெஷின் நின்றுவிட்டது.

அதை நகர்த்தி நகர்த்திப் பார்த்தாள் வர்ஷா. அது நகர மறுத்தது. ஆனால் சத்தம் மட்டும் வந்தது.

"சே... நீ கூட என்னிடம் தகராறு செய்கிறாயா? எல்லாம் என் நேரம்!" என்று அதை உதைத்தாள்.

"ம்... என்னிடமா பேசுகிறாய்?" என்று ரிஷப் குரல் அருகே கேட்கத் திடுக்கிட்டாள்.

அவன் வந்ததைக்கூடக் கவனிக்காமல் இப்படி வேலையில் மூழ்கிவிட்டேனே என நினைத்தபடி தன் நெற்றியில் விழுந்த கூந்தலை இழுத்துக் காதோரம் தள்ளினாள் வர்ஷா.

"ம்... ஐ நெவர் தாட் ஐ ஷுட் ஸீ யூ ஸ்வெட் அண்ட் வொர்க் லைக் திஸ்!"

"நான் அடிக்கடி தோட்டத்தில் வேலை செய்வேன்!" என்றாள் பல்லைக் கடித்தபடி.

"ம்... உன்னிடம் பிடித்ததே இந்த அதிகமான திமிர் பேச்சுதான். என்ன, மூளைதான்..." என்று கடகடவெனச் சிரித்தான்.

"லுக்... நான் நல்ல ஸ்கூலில் படித்தேன். ஐ நோ திங்ஸ் பெட்டர் தேன் யூ!"

"ஓ... அப்படியா மேடம்! ஏன் இந்த மெஷின் வேலை செய்யலை? உங்க நல்ல ஸ்கூல் படிப்பை உபயோகப் படுத்தி இதைக் கொஞ்சம் சரி செய்யுங்க."

"எ... எனக்கு அதெல்லாம் தெரியாது. இதை சர்வீஸுக்கு விடணும். இட்ஸ் டியூ ஃபார் இட்."



"அப்படியா! கொஞ்சம் தள்ளிக்கோ... நான் பார்க்கிறேன்!"

ரிஷப் கொஞ்ச நேரம் மெஷினை ஆராய்ந்தான். மேலே இருந்த முகப்பைக் கழற்றிவிட்டு பார்ட்ஸைக் கழற்றத் தொடங்கினான்.

"ஹலோ... அப்புறம் அசெம்பிள் செய்யறது கஷ்டம். இது பழைய மிஷின். மேனுவல் கூட எங்க இருக்குன்னு தெரியலை!"

"கொஞ்ச நேரம் பேசாமல் இரு. அதோடு என்னோட இந்த ஸ்வெட்டரைப் பிடி!" என்று ஸ்வெட்டரைக் கழற்றி அவளிடம் நீட்டினான்.

அவனுடைய ஸ்வெட்டரும் அவனைப் போலவே முரட்டுத்தனமாக இருப்பது போல் தோன்றியது அவளுக்கு.

அதை வாங்கித் தன் தோள் மேலே போட்டுக் கொண்டாள். ரிஷப் புல் தரையில் உட்கார்ந்தபடியே மெஷினை ஆராய்வதைப் பார்த்தபடி இருந்தாள்.

"கார்பரேட்டர் அடைத்துக் கொண்டிருக்கிறது. அதனால்தான் சத்தம் அப்படி பயங்கரமாகக் கேட்கிறது...!" என்றவன் அதை க்ளீன் செய்தான்.

பழையபடி எல்லாப் பாகத்தையும் அதில் பொருத் தினான். லேசாக அதைத் தள்ளி ஓட்டிப் பார்த்தான்.

சத்தம் குறைவாக இருந்தது. அதோடு அது முன்னைக் காட்டிலும் புற்களை அழகாகவே சீர்படுத்தியது.

"ஓ... குட் ஜாப்... உங்களுக்கு எப்படி எல்லாமே தெரிகிறது.

இது மெக்கானிக்கல் வேலை. எப்படி... எப்படி கரெக்டா பிரச்சினையை அறிந்து கொண்டு சரி செய்தீர்கள்?" என்றாள் விழிகள் அகல வர்ஷா.

"ஐயாம் ஜாக் ஆஃப் ஆல் ட்ரேட்ஸ் அண்ட் மாஸ்டர் ஆஃப் நன்..." என்றான் புன்முறுவலோடு ரிஷப்.

"இல்லை... யூ ஆர் மாஸ்டர் ஆஃப் ஆல் ட்ரேட்ஸ்!" என்றாள் வர்ஷா.

"ஓ... ரொம்ப தேங்க்ஸ். உன்கிட்டே இருந்து காம்ப்ளிமெண்ட்ஸ் வர்றது... ரொம்ப ரேர்!"

"இல்லை... புகழ்ச்சிக்காகச் சொல்லவில்லை. நீங்கள்... பெரிய பிஸினெஸ்மேனாக இருந்தால்கூட இந்த மாதிரி சின்னச் சின்ன விஷயங்கள் எல்லாம் ரொம்ப நேர்த்தியாகச் சரி செய்கிறீர்கள்.

இது... இது எல்லாருக்கும் வராது."

"அப்படியா... இன்னும் ஒரு விஷயத்தில்கூட நான் மாஸ்டர்தான். நீதான் அதை புரூவ் செய்யச் சந்தர்ப்பம் தர மாட்டேங்கிற!" என்றான் கண்களில் குறும்பு மின்ன.

"என்ன விஷயம்? எனக்குப் புரியலை!" என்றாள் குழப்பமாக.

"ம்... இதுதான்..." என்று சொல்லியபடியே அவள் அருகில் வந்தான்.

அவளைச் சட்டென அணைத்தான். அவன் இதழ்கள் அவள் இதழ்களைக் கவ்வின. அவன் கைகள் அவள் கூந்தலை அளைந்தன.



ஏதோ ஒரு உலகில் இருப்பது போல் இருந்தது வர்ஷாவிற்கு. அவள் கண்மூடி அவன் மேல் துவண்டாள்.

சட்டென வர்ஷாவின் மூளை செல்கள் விழிப் படைந்தன. காட்! இது தப்பு... என்று தன்னையே கடிந்து கொண்டவள், அவனைப் பிடித்துத் தள்ள முயன்றாள்.

ஆனால் அவன் பிடி வலிமையாக இருந்ததால் அவளால் அவன் பிடியை விலக்க முடியவில்லை.

"ப்ளீஸ் ரிஷப், வேண்டாம்!"

"நீதான் என்னை முகுந்தோடு ஒப்பிட்டுப் பேசினாயே... ஏதோ பழமொழி வேறு சொன்னாயே..! என்ன அது... ஆங்.. பாம்பின் கால் பாம்பறியும்!

அப்புறம் என்ன தயக்கம் உனக்கு... முகுந்தனுக்கே நீ...!" என்று அவன் முடிக்கும் முன்பு அவள் சீறினாள்.

"ரிஷப், போதும்! எனக்குச் சுயமரியாதை இருக்கிறது. பணத்தை வேண்டுமானால் நானும் அப்பாவும் இழந்திருக் கலாம்.

வீடு, நிலம் எல்லாமே எங்களிடம் இல்லாமல் இருக்கலாம். பட்! என்னால் என் மானத்தை இழக்க முடியாது.

நான் முகுந்தனை அழைத்தது நகைகளை விற்க மட்டுமே. மற்றப்படி வேறு எந்த எண்ணமும் என் மனதில் இல்லை.

இதை நம்புவதும் நம்பாததும் உங்க இஷ்டம்! நீங்கள் உங்கள் மாஸ்டரிங் ஸ்கில்லை வேறு யாரிடமாவது காட்டுங்கள்.

ஐயாம் நாட் ஃபார் யுவர் கேம்ஸ்."

"ஏன் விக்ரமிடம் மட்டும்தான் இதெல்லாமா?"

அதைக் கேட்டவுடன் அவள் முகம் அவமானத்தால் சிவந்தது. விக்ரம் சங்கீதாவைத் திருமணம் செய்து கொள்ளப் போகும் விஷயம் இவனுக்குத் தெரியும்.

என்னைப் பற்றி அதனால்தான் இன்னும் மோசமாக நினைக்கிறான். 'முட்டாள்களின் திலகம்' நான் எனப் பட்டமளித்தாலும் அளிப்பான்.

அவள் ஏதும் சொல்லாமல் அங்கிருந்து கிளம்ப முயன்றாள்.

"ஏன் வர்ஷா இன்னும் விக்ரமிற்காக உருகிக் கொண்டிருக்கிறாய்? அவனுக்கும் சங்கீதாவிற்கும் சீக்கிரமே திருமணம் நடக்கப் போகிறது.

அதனால் நீ இன்னும் அவனை நினைத்துக் கொண் டிருப்பது ரொம்பத் தப்பு."

என் மனதில் விக்ரம் இல்லை. நீங்கள்தான் இருக் கிறீர்கள் ரிஷப் என்று மனதிற்குள் புலம்பினாள் வர்ஷா.

தன்னைச் சமாளித்துக் கொண்டு பேசத் தொடங் கினாள் வர்ஷா.

"எது சரி, எது தப்பு என்று எனக்குத் தெரியும்."

"ஓ... உனக்கு ரொம்ப நன்றாகத் தெரியுமே... நீ எடுக்கும் முடிவுகளில் இருந்தே அது தெரிகிறது.

விக்ரமை ரொம்ப நம்பினாய்... உனக்கும் அவனுக்கும் திருமணம் நடக்கும் எனக் கனவில் மிதந்தாய்.



ரொம்ப ஆடம்பரமாக உன் தோழிகளுக்கு விழாக் களின்பொழுது பரிசளித்தாய்...

அப்புறம் முகுந்தனை வீட்டிற்கு அழைத்தாய்...

இது எல்லாமே நீ சரி எது, தப்பு எது என்று தெரிந்துதான் செய்திருக்கிறாய்!"

அவன் ஒவ்வொன்றாகப் பட்டியல் போட்டுச் சொல்லச் சொல்ல அவள் முகம் அவமானத்தால் சிவந்தது.

எல்லாவற்றையும் சொல்லிக் குத்திக் காட்டுவதைப் பார் என மனதிற்குள் குமைந்தாள்.

அவள் கண்கள் கலங்கின. எல்லாவற்றையும் நான் தொலைத்து விட்டு நிற்கிறேன். என்னிடம் ஏன் இப்படி வெறுப்பை உமிழ்கிறான் என மனதிற்குள் அழுதாள்.

"என்ன வர்ஷா பதிலே இல்லை...!"

"ப்ளீஸ் ரிஷப்... வேண்டாம்!" என்று சொல்லும் பொழுதே அவள் குரல் உடைந்தது.

"ஏய் வர்ஷா! என்னடா...?" என்று அவளை நோக்கிக் கைகளை நீட்டினான்.

நீட்டிய கைகளுக்குள் சரண் புகுந்தாள் அவள். இவ்வளவு நாள் அடக்கி வைத்திருந்த துக்கம், சோகம் எல்லாம் அழுகையாக வெடித்தது.

அவன் மார்பில் சாய்ந்து அழுதாள் அவள். அவன் கைகள் அவள் தோளைத் தடவிக் கொடுத்தன. அவள் முதுகை ஆதரவாக வருடின அவன் விரல்கள்.

"ரிஷப் நான்... நான் மக்குதான். அப்பா பாவம்! என்னால் அவருக்குக் கஷ்டம்!" என்று அழுதபடியே சொன்னாள்.

"ஷ்... விடு! நீ என்ன, வேணும்னா இப்படி எல்லாம் செய்தாய்?

லீவ் இட். அதையே யோசிக்காதே.. பீ எ குட் கேர்ள். வா, பனி ரொம்ப பெய்கிறது...!" என்று அவள் இடையில் கை போட்டபடி அவளை அணைத்துச் சென்றான்.

அவன் பிடியில் இருந்து விலக வேண்டும் என்று நினைத்தாள் வர்ஷா. ஆனால் மனம் வரவில்லை.

எப்பவும் இப்படியே இருக்க வேண்டும் என மனம் பரபரத்தது. இது என்ன புது உணர்வு?

நான் எவ்வளவு பாதுகாப்பாக உணர்கிறேன், ரிஷபின் அண்மையில். இது என்ன மாற்றம்?

'ரிஷப்! ஐ லவ் யூ!' என் நிலையைக் கண்டு எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நான் எப்படி இந்த மாதிரி மாறினேன்?

உங்கள் மேல் இருந்த வெறுப்பு என்னவாயிற்று? எப்பொழுது இந்த மாயம் நிகழ்ந்தது என மனதிற்குள் கேட்டபடியே வீட்டை நோக்கி நடந்தாள் வர்ஷா.

வீட்டின் அருகே வந்ததும் தன்னை அவன் பிடியில் இருந்து விடுவித்துக் கொண்டாள் வர்ஷா.

ஏனோ அவன் முகத்தைப் பார்க்கக் கூச்சமாக இருந்தது. உள்ளே செல்ல முயலும்பொழுது ரிஷப் குரல் கொடுத்தான்.



"வர்ஷா! ஒரு குட் நியூஸ் உனக்கு!"

"என்ன சொல்லுங்க?"

"உன்னோட அப்பாவை நாளைக்கு டிஸ்சார்ஜ் செய்யறாங்க..."

"ஓ... தேங்க்ஸ்... ரொம்ப தேங்க்ஸ்!"

"ம்... அங்கிள் உடல் நலம் தேறி வீட்டுக்கு வர்றார். ஸோ நீ கொஞ்சம் கவனமா நடந்துக்கோ!"

"எ... எனக்குப் புரியலை!"

"விக்ரமின் நினைப்பிலேயே நீ இருப்பது அவருக்குத் தெரியக் கூடாது.

அவருக்கு அட்டாக் வந்ததற்குக் காரணமே நீ விக்ரமைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னது...

அதை நீ நினைவில் வைத்துக் கொள்."

"சரி!" என்றாள் தலை குனிந்தபடி வர்ஷா.

"அப்புறம் இன்னொரு விஷயம். நீயும் நானும் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று உன் தந்தை விரும்புகிறார்.

ஆனால் உனக்கு அதில் விருப்பம் இல்லை என்று எனக்குத் தெரியும். உன் மனம் முழுவதும் விக்ரம் இருக்கிறான் என்று எனக்குத் தெரியும்.

இருந்தாலும் அவர் முன்னால் நாம் நெருக்கமாக இருப்பது போல் சண்டை ஏதும் இல்லாமல் நடந்து கொள்ள வேண்டும்.

கொஞ்ச நேரம் முன்பு சும்மா ஒரு ஒத்திகை பார்த்தோமே... அது போல அப்பப்ப நடக்க வேண்டி யிருக்கும்.

ஸோ! ஐ நீட் யூவர் கோ-ஆபரேஷன். நியாயப்படி பார்த்தால் அப்பாவின் உடல்நிலையை மனதில் வைத்து நீ என்னிடம் இதைக் கேட்டிருக்க வேண்டும்.

பட் யூ மே ஃபைண்ட் இட் டெலிகேட் டு டாக் டு மி. அதனால்தான் நான் இதைப் பற்றிப் பேசுகிறேன்...!" என்றான் நிதானமாக ரிஷப்.

அவமானத்தால் முகம் சிவந்தாள் வர்ஷா.

# 16

வாழ்க்கைப்
பக்கங்களைப்
புரட்டிப்
பார்த்தபடி
நான்
.......
நீ
என்
பிறந்த நாளுக்குப்
பரிசளித்த
வாழ்த்து மடல்!



நான்
வெளிநாட்டில்
இருந்த
பொழுது
அனுப்பிய
மின் அஞ்சல்!
நான்
புதுவீடு
கட்டிக்
குடிபுகுந்த
பொழுது
பரிசளித்த
பிள்ளையார்
பொம்மை...
எல்லாமே
என்னிடம் உள்ளன,
உன்னைத் தவிர
- இப்பொழுது...

அப்பா வீட்டிற்கு வரப் போகிறார் என்ற செய்தி அவளுக்கு சந்தோஷமளித்தது. ஆனால் அதை என்ஜாய் செய்ய முடியாதபடி ரிஷபின் வார்த்தைகள் அவள் மனதைத் தைத்தன.

ஒத்திகை என்று சொன்னானே...! சே! ஆமாம், அவன் சந்தித்த பெண்கள் ஏராளம்.

நான் அவன் மார்பில் சாய்ந்து அழுதபொழுது என் மனதில் தோன்றிய பாதுகாப்பு உணர்ச்சி அவனுக்குத் தெரியாது. அவனைப் பொறுத்தவரை இது ஒத்திகை.

அப்பா வருவது நாடக அரங்கேற்றம். அதற்கு முன்னால் ஒத்திகை பார்த்திருக்கிறான் ரிஷப். நான்தான் என் மனதில் ஏதேதோ எண்ணங்களைக் கற்பனை செய்து கொண்டிருக்கிறேன் என நினைத்து மறுகினாள் அவள்.

சரி, இதைப் பற்றி நினைக்கக் கூடாது. பத்து மணிக்கு ஹாஸ்பிடலுக்குப் போக வேண்டும் என்று ரிஷப் சொன்னான். அதனால் அதற்குள் தயாராக வேண்டும் என நினைத்தபடியே படுக்கையில் இருந்து எழுந்தாள் அவள்.

குளித்து விட்டு ஒரு சல்வாரை அணிந்தாள். கண்ணாடி முன் தன்னைப் பார்த்தபொழுது, தான் இளைத்து விட்டது போல் தோன்றியது அவளுக்கு.

இனி அப்பாவிற்காக சந்தோஷமாக இருப்பது போல் நடிக்க வேண்டும். வேறு வழியில்லை... என மனதிற்குள் முடிவு செய்தாள் வர்ஷா.

அறையை விட்டு வெளியே வந்தாள் அவள். ஹாலில் ரிஷப் பேப்பரில் மூழ்கியிருப்பது தெரிந்தது.

தான் வருவதைக் கவனிக்காமல் பேப்பரில் மூழ்கி இருப்பவனைச் சில நொடிகள் உற்றுப் பார்த்தாள் அவள்.

நல்ல கம்பீரமான முகம். நினைத்ததை நடத்தி முடிப்பேன் என்று சொல்லும் பிடிவாதமான கண்கள். ஆறடி



உயரம். உயரத்திற்கு ஏற்ற எடை என மனதில் தோன்றிய எண்ணங்களை இழுத்து அடக்கினாள் வர்ஷா.

"ஹாய் வர்ஷா... குட்மார்னிங்...!"

"ஹாய் குட்மார்னிங்!"

"ஸோ... ரொம்ப பசியா காலையிலே..!"

"இல்லையே... ஏன் கேக்கறீங்க?"

"ம்... என்னையே விழுங்கிற மாதிரி கொஞ்ச நேரம் முன்னாடி பார்த்த இல்ல...!

அதான் கேட்டேன்...!" என்றான் கண்களில் குறும்பு மின்ன ரிஷப்.

தான் பார்த்ததை இப்படி சொல்லிக் காட்டுகிறானே என மனதிற்குள் அவனைத் திட்டினாள் வர்ஷா.

"ஸாரி ஏதோ யோசனை... அதுதான்!" என்று சமாளித்தாள் வர்ஷா.

"ம்... இட்ஸ் ஓ.கே. நான் நம்பறேன். சரி, சாப்பிட்ட பிறகு கிளம்பலாம்.

கம்... வீ வில் ஹேவ் பிரேக்பாஸ்ட்!"

'சரி' என்பது போல் தலை அசைத்துவிட்டு அவனைப் பின் தொடர்ந்தாள் வர்ஷா.

டைனிங் டேபிளில் இருந்த சாப்பாட்டின் மணம் நாசியைத் துளைத்தது.

"வாங்க தம்பி...! வர்ஷா... உனக்குப் பிடித்த பூரிக் கிழங்கு சூடாக இருக்கிறது."

"ம்... தேங்க்ஸ் ஆன்ட்டி!" என்று லேசாக முறுவலித்தாள்.

பசியாக இருந்ததால் பூரியும் கிழங்கும் தொண்டையில் வேகமாக இறங்கியது.

"ஆன்ட்டி! பிரேக்பாஸ்ட் சூப்பர்!" என்றான் ரிஷப்.

"தேங்க்ஸ் தம்பி! ஐயா இன்னும் கொஞ்ச நேரத்தில வந்திடுவார்தானே!"

"ஆமாம் ஆன்ட்டி. நானும் வர்ஷாவும் இப்ப ஹாஸ்பிடல்தான் கிளம்பறோம்."

"ம்... ஐயா இங்க வந்த பிறகு அவர் மனசு கஷ்டப்படாம நடந்துக்கணும்.

பாவம்! நல்லா சுறுசுறுப்பா இருந்தவர்... போதாத நேரம் ஹாஸ்பிடல்ல அட்மிட் ஆனார்."

"ஆன்ட்டி... பொதுப்படையா அவர் மனசு கஷ்டப்படாம நடந்துக்கணும்னு சொல்லாதீங்க.

வர்ஷாவிற்குப் புரியுற மாதிரி தெளிவாச் சொல்லுங்க...!"

வர்ஷா ரிஷப் சொன்னதைக் கேட்டு அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

"ஏன் தம்பி பாப்பாவைச் சும்மா சீண்டறீங்க?"

"பாப்பாவா! இங்கே யாரையும் காணலையே...!" என்றான் சுற்றும் முற்றும் பார்த்தபடி ரிஷப்.

"தம்பி... வர்ஷாவைச் சின்ன வயசில இருந்து தூக்கி வளர்த்தவள் நான்.



எப்பவுமே அவளை நான் குழந்தையாகத்தான் பார்க்கிறேன்."

"அப்ப எப்படி ஆன்ட்டி வர்ஷா இருந்தா? ரொம்பப் பிடிவாதமா, சொன்னதைக் கேட்காம, அடம் பிடிச்சபடி... இப்ப இருக்கிற மாதிரிதானா, இல்லே... வேற மாதிரியா?"

"ஆன்ட்டி! வாயை மூடிக்கிட்டு சாப்பிடச் சொல்லுங்க...!"

"வாயை மூடிக்கிட்டால் எப்படி சாப்பிட முடியும்?"

அதைக் கேட்டு வர்ஷா சிரித்தாள். ரிஷபும் அந்தச் சிரிப்பில் சேர்ந்து கொண்டான்.

"நீங்க ரெண்டு பேரும் இதே மாதிரி சிரிச்சுப் பேசி கலகலன்னு இருங்க.

அப்பதான் ஐயாவும் உற்சாகமாக இருப்பார்."

சரி என்பது போல தலையசைத்தாள் வர்ஷா.

சாப்பிட்டு முடித்த பின்பு இருவரும் காரை நோக்கிச் சென்றனர்.

"அப்பாவோட மருத்துவச் செலவுக்கு இதுவரை ஆன பணம்... அப்புறம்... இப்ப டிஸ்சார்ஜ் ஆகறதுக்குத் தேவையான பணம் எல்லாமே எவ்வளவு செலவு ஆச்சுன்னு சொல்லுங்க!

ஐ வில் பே ஃபார் இட்."

"ஷ்யூர். சொல்றேன்! பட் நீ எப்படி பே பண்ணப் போறே?

உன்கிட்டே பாங்க் பேலன்ஸ் இருக்கா?"

"ம்... நான் என்னுடைய நகையை அதுக்குத்தான் விற்கலாம்னு நினைச்சேன்."

"மறுபடியும் முகுந்தைக் கூப்பிடப் போறியா?"

அவள் அவனை முறைத்தாள்.

"உனக்கு ஆட்சேபணை இல்லாட்டி நானே உன் நகை எல்லாம் வாங்கிக்கவா?

அஃப்கோர்ஸ் ஒரு தர்ட் பார்ட்டி மூலமாக உன் நகையெல்லாம் மதிப்பீடு செய்த பின்பு இப்படிச் செய்யலாம்..."

அங்கே சில நிமிடங்கள் மௌனம் நிலவியது.

ம்... தன்னோட வருங்கால மனைவிக்குச் சேர்த்து வைக்கிறான் போல... பரவாயில்லை. இவனிடம் இந்த மாதிரி பழக்கங்கள்கூட இருக்கே!

ஆனால் மனதின் மூலையில் ஒரு ஏமாற்றம். ஒரு வலி அவள் மனதை ஆக்கிரமித்தது.

தீபாவிற்காக இருக்குமா? இருக்கலாம்... தீபா நல்ல அழகி. ஷி லவ்ஸ் ஹிம். பணமும் இருக்கிறது.

அதனால் சீக்கிரமே திருமணம் செய்து கொள்ளலாம் இருவரும். என் நகைகளைத் தீபா அணிந்து கொள்ளலாம் என நினைத்துப் பெருமூச்சு விட்டாள்.

"என்ன வர்ஷா... யோசனை பலமா இருக்கு...!"

"இ... இல்லை... இந்த நகைகளை வைத்து நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என யோசித்துக் கொண்டிருந்தேன்."



"ஓ... என் வருங்கால மனைவிக்கு... பரிசாகக் கொடுக்கலாமே... உன் நகைகள் எல்லாமே நிச்சயமாக நன்றாக இருக்கும்.

டிஸைன் எல்லாம் நீயே செய்திருப்பாய். இல்லை... நல்ல டிஸைன் இருப்பதைத்தான் வாங்கியிருப்பாய்.

திஸ் வுட் பி மை மேரேஜ் கிஃப்ட் டு மை கேர்ள்."

"ம்... குட்... யார் உங்கள் வருங்கால மனைவின்னு முடிவு செய்து விட்டீர்களா?

நீங்கள் திருமணமே செய்து கொள்ள மாட்டீர்கள் என நான் நினைத்தேன்.

நீங்கள் அந்த மாதிரி சொன்னதாகத்தான் எனக்கு ஞாபகம்!"

"ம்... கரெக்ட். பட் இப்ப என் முடிவை மாத்திக்கிட்டேன்!"

அவன் சொன்னதைக் கேட்டவுடன் ஏனோ ஏமாற்றத்தாலும், கோபத்தாலும் கண்கள் கலங்கின வர்ஷாவுக்கு.

ஸோ... இது தீபாவாகத்தான் இருக்கும். காட்! இது தான் விதியா?

நான் இங்கே ரிஷபிடம் என் மனதை இழந்து விட்டேன். ஆனால் அவன் வேறு யாரையோ நினைத்துக் கொண்டிருக்கிறான்.

என்னால் இதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால்... என்ன செய்வது? என் மனதிலேயே எல்லாவற்றையும் புதைத்துக் கொள்ள வேண்டும். வேறு வழியில்லை என்று நினைத்துக் கொண்டாள் வர்ஷா.

ஹாஸ்பிடலில் அப்பாவைப் பார்த்ததும் அவள் மனம் உற்சாகமடைந்தது. அப்பா இளைத்திருப்பது நன்றாகத் தெரிந்தது அவளுக்கு.

"அப்பா... இன்னிலேயிருந்து குட்பை டு ஹாஸ்பிடல்...!" என்றாள் உற்சாகமாக வர்ஷா.

"யெஸ்டா கண்ணா! இட்ஸ் குட் டு ஸீ யூ அண்ட் ரிஷப் டுகெதர்...."

"அங்கிள், இன்னும் அரை மணி நேரம் முன்னாடி கிளம்பி இருப்போம்.

பட்... உங்க பொண்ணு மேக்கப் எல்லாம் முடிச்சுட்டு வர லேட்டு...!" என்றான் புன்முறுவலோடு ரிஷப்.

"ரிஷப்! ஏன் இப்படிப் பொய் சொல்றீங்க?" என்று சீறினாள் வர்ஷா.

"அங்கிள்! காப்பாத்துங்க... உங்க பொண்ணு காளி அவதாரம் எடுத்திட்டா...!" என்று பயப்படுவது போல் பாவனை செய்தான் ரிஷப்.

அவன் தன்னைக் கிண்டல் செய்கிறான் என்று புரிந்தது அவளுக்கு.

லேசான புன்முறுவல் படர்ந்தது அவள் இதழ்களில்.

"அப்பாடா! நான் மனசுக்குள்ளே காளி அஷ்டோத்தரம் சொன்னேன் அங்கிள். அது ஒர்க் அவுட் ஆயிடுச்சு.

ஆத்தா மனசு இறங்கி பக்தனுக்குப் புன்னகை அருள் புரிஞ்சுட்டா...!" என்றான் சீரியஸாக.



அதைக் கேட்டுக் கடகடவெனச் சிரித்தாள் வர்ஷா. வசந்தனும் அந்தச் சிரிப்பில் சேர்ந்து கொண்டார்.

"என்ன ஸார்... குஷி மூடில இருக்கீங்க போல... பெண்ணையும் மாப்பிள்ளையையும் பார்த்ததிலேயே எல்லா நோயும் குணமாயிருக்குமே...!" என்றார் டாக்டர் புன்முறுவலோடு.

அதைக் கேட்டுத் திடுக்கிட்டாள் வர்ஷா. ரிஷப் முகத்தில் அவள் பார்வை படர்ந்தது.

'அமைதியாக இரு!' என்பதைப் போல் அவன் விழிகளால் சமிக்ஞை செய்தான்.

"ஆமாம் டாக்டர்! யூ ஆர் ரைட். இன்னிக்கு எனக்கு விடுதலை இந்த ஹாஸ்பிடலில் இருந்து...!"

"ம்... தட்ஸ் நைஸ். சரி... எல்லா செக்-அப்பும் முடிஞ்சு போச்சு.

இப்ப நீங்க டிஸ்சார்ஜ் ஆகலாம்...!" என்றார் டாக்டர்.

"வர்ஷா! யூ பி ஹியர். நான் ரிசப்ஷனில் ஃபார்மாலிடிஸ் எல்லாம் முடிச்சுட்டு வரேன்!" என்றான் அவள் தோளில் கை போட்டபடி கூலாக ரிஷப்.

அப்பாவின் முன் ஏதும் சொல்ல முடியாமல் பல்லைக் கடித்தபடி இருந்தாள் வர்ஷா.

ஆனால் ரிஷப் தொட்டவுடன் தன் உடலில் ஒரு நடுக்கம் பரவுவதை அவளால் உணர முடிந்தது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு சமாளித்தாள் வர்ஷா.

ரிஷப் சென்ற பின்பும் அவன் அங்கேயே இருப்பது போல் தோன்றியது வர்ஷாவிற்கு.

அப்பாவின் அருகே உட்கார்ந்தபடி அவர் கைவிரல்களை நீவிவிட்டாள்.

"அப்பா! நீங்க இல்லாம வீடு ரொம்ப போர். இனிமே ஜாலிதான்."

"ஆமாம்டா... எனக்கும் ஹாஸ்பிடல் லைஃப் எப்படா முடியும்னு இருந்தது.

நீயும் ரொம்ப இளைச்சுப் போயிட்ட கண்ணா!"

"ம்... நீங்க இல்லாததால் ஆன்ட்டி சரியாவே சமைக்கலை. நானும் சரியா சாப்பிடலை... அதான்!"

"அடிப்பாவி! காலையிலகூட ஆன்ட்டி உனக்குப் பிடிக்கும்னு பூரிக் கிழக்கு செய்தாங்க.

நல்லா இருக்குன்னு சாப்பிட்டு முடித்த பிறகு இப்படி மனச்சாட்சி இல்லாம பொய் சொல்றியே..!" என்றான் ரிஷப் உள்ளே நுழைந்தபடியே.

"ரிஷப், ஒட்டுக் கேட்பது தப்பு...!" என்றாள் வர்ஷா.

"நீ பேசுவது பக்கத்து ரூம் வரைக்கும் கேட்குது. யூ ஆர் பார்ன் வித் எ ஸ்பீக்கர்...!"

"அப்பா! பாருங்க அப்பா...!" என்று சிணுங்கினாள் வர்ஷா.

"ரிஷப்! பாவம்... குழந்தை... கண் போடாதீங்க. ரொம்ப மெலிஞ்சு போயிட்டா வர்ஷா."



"ம்... எல்லாரும் அவளைக் குழந்தை, பாப்பா, கண்ணான்னு செல்லம் கொஞ்சறீங்க...

ம்... அதான் மேடம் ரொம்பத் திமிரா நடந்துக்கறாங்க. நான் சொல்றதுக்கு மதிப்புக் கொடுக்கிறது இல்லை...!"

"ஹலோ! நான் என்ன செய்யலை? இப்ப எதுக்கு கம்ப்ளெயிண்ட் செய்யறீங்க அப்பாகிட்டே...?"

"அங்கிள்... இப்ப இங்கே இருக்கார். அதனால என்னால கேட்க முடியாது.

நீ தனியா மாட்டும் பொழுது கேட்கிறேன். அப்ப மட்டும் நீ நான் கேட்டதைக் கொடுக்கலை... அப்புறம் உன்னைக் கவனிச்சிக்கிறேன்..." என்று அவளுக்கு மட்டும் கேட்குமாறு சொன்னான் ரிஷப்.

அவள் கன்னங்கள் சிவந்தன. சே! ஏன் இப்படி எல்லாம் பேசுகிறான் என்று அவள் உடல் முழுவதும் சூடு பரவியது.

அப்பாவின் பார்வை தன் மேல் படிவதை அவளால் உணர முடிந்தது.

"ம்... பேமெண்ட் முடிந்து விட்டது என்றால் நாம கிளம்பலாமா?" என்றாள் மெல்லிய குரலில்.

"ஷ்யூர்... அங்கிள், வாங்க!" என்று அவர் கையைப் பற்றிக் கொண்டான் ரிஷப்.

அவர்களைப் பின்தொடர்ந்தாள் வர்ஷா. ரிஷப்பிடம் வீட்டிற்குப் போனவுடன் பேச வேண்டும். இந்த மாதிரி தொட்டுப் பேசும் வேலை எல்லாம் கூடாது எனச் சொல்ல வேண்டும் என மனதிற்குள் சொல்லியபடியே நடந்தாள்.

காரினுள் சென்றதும் அப்பாவைப் பின் சீட்டில் வசதியாக அமர உதவி செய்தான் ரிஷப். பின்னால் உட்காரப் போனவளைத் தடுத்தான்.

"டியர்! முன்னாடி வந்து உட்கார். உன்னைப் பார்த்துக் கொண்டு வண்டி ஓட்டினால்தான் ஒரு த்ரில்!"

"ம்... ரோடையும் அப்பப்ப பாருங்க..." என்றாள் அவளும் அதே தொனியில்.

வழி முழுவதும் உற்சாகமாகப் பேசியபடி காரைச் செலுத்தினான் ரிஷப்.

இவனால் எப்படி இந்த மாதிரி அப்பாவுடன் ஈஸியாகப் பேச முடிகிறது என வியந்தாள் வர்ஷா.

வீடு வந்தவுடன் அவளிடமிருந்து ஒரு நிம்மதிப் பெருமூச்சு பிறந்தது. இனி அப்பாவுடன் நான் இருக்கலாம். நான் தனி இல்லை என்ற உணர்வே அவளுக்கு புதிய பலத்தைக் கொடுத்தது.

"வாங்க... ஐயா!" என்று சந்திரா வரவேற்றாள்.

வீடு கலகலவென இருந்தது. தோட்டத்தின் பசுமை ஜன்னல் வழியாகத் தெரியும் அறையினுள் வசந்தன் படுக்கையில் படுத்திருந்தார்.

அப்பா கண்மூடி ரெஸ்ட் எடுக்கிறார் என்பதை உறுதி செய்து கொண்ட வர்ஷா ரிஷபை நோக்கி வேகமாக நடந்து வந்தாள்.

"நான் உங்களோட பேசணும். கொஞ்சம் வர முடியுமா?" என்றாள் பல்லைக் கடித்தபடியே.



"ஓ... ஷ்யூர். வா போகலாம்!" என அவள் கையைப் பற்றினான் ரிஷப்.

சட்டெனக் கையை விடுவித்துக் கொண்டவள் அவனை எரித்து விடுவது போல் பார்த்தாள்.

"லுக் ரிஷப்... எனக்கு இதெல்லாம் பிடிக்கலை!"

"எது பிடிக்கலை?"

"நீங்க செய்யறது!"

"என்ன செஞ்சேன்... பி க்ளீயர்!"

"அப்பாவுக்காக நீங்க ரொம்ப நடிக்கறீங்க. நீங்க... நீங்க சும்மா என்னைத் தொட்டுப் பேசறது..! ஐ டோண்ட் லைக்!"

"ஓ... அப்ப என்னை விக்ரமா நினைச்சுக்கோ...!"

"ஷட் அப்!" என்று கத்தினாள்.

"கத்தாதே...! அங்கிள் முழிச்சுக்கப் போறார்... உனக்கு உன் அப்பா மேலே அக்கறை இல்லை.

அவர் இப்பதான் சந்தோஷமா இருக்கார். அதைக் கெடுக்கப் போறியா?"

அவன் சொன்னதைக் கேட்ட பின்பு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தாள் வர்ஷா.

"உங்க அக்கறைக்கு நன்றி. அப்பா மேல எனக்கும் அக்கறை இருக்கு.

அதை நீங்க புரிஞ்சுக்கணும். இப்ப ரொம்ப நடிச்சா பின்னாடி பிரச்சனை வரும். ஐயாம் கன்ஸர்ன்ட் அபௌட் தட்!"

"ம்... என்ன பிரச்சினை?"

"நீங்க... நீங்க தீபாவைக் கல்யாணம் செஞ்சுக்கப் போறீங்க. ஐ நோ. இட்ஸ் எ மேட்டர் ஆஃப் டைம்.

பட் இட் வில் கிரியேட் எ ஷாக் ஃபார் மை ஃபாதர்!" என்றாள் மெல்லிய குரலில்.

ஏனோ அதைச் சொல்லும்பொழுது அவள் மனதில் ஒரு வலி படர்ந்தது. அது அவள் முகத்திலும் தெரிந்தது.

ரிஷப் அவளை உற்றுப் பார்த்தான். அவள் முகத்தில் தெரிந்த வலி அவன் கண்களுக்குத் தப்பவில்லை.

"ஓ... அதுதான் உன் பிரச்சினையா?"

"யெஸ்...!"

"பிரச்சினைக்குத் தீர்வு என்ன?"

"நாம் ரொம்ப நடிக்க வேண்டாம். ரொம்ப ஹோப்ஸ் அப்பாவிற்குக் கொடுத்தால் கடைசியில் அவருக்கு அது ரொம்ப அதிர்ச்சியாக இருக்கும்.

அதனால் லெட் அஸ் மெயின்டெயின் ஸம் டிஸ்டன்ஸ்!"

"ம்... இதைத் தவிர வேற வழியில்லை. அப்படித்தானே!"

"ஆமாம்..."

"ஓ.கே. பாயிண்ட் டேக்கன். தேங்க்ஸ் ஃபார் டெல்லிங் மி ஓபன் அபௌட் வாட் யூ ஃபீல்!"



"தேங்க்ஸ் ரிஷப்!" என்று சொல்லிவிட்டு தன் அறைக்குள் சென்றாள். அங்கே போனவள் படுக்கையில் படுத்து வாய்விட்டு அழத் தொடங்கினாள்.

ரிஷப் தீபாவைத் திருமணம் செய்து கொள்ளப் போகிறான். அது உறுதியாகிவிட்டது. அவனை என்னால் மறக்க முடியுமா? இது என்ன அவஸ்தை என அழுதபடி இருந்தாள் அவள்.

# 17

**வெண்ணிலவின்**
**ஒளியில்**
**நீ**
**மின்னிக்**
**கொண்டிருந்தாய்!**
**உன்**
**கைவிரல்கள்**
**கடற்கரை**
**மணலில்**
**சங்கைத்**
**தேடிக்**
**கொண்டிருந்தன!**
**அலைகளை**
**அவ்வப்பொழுது**

உன்
பார்வையால்
செல்லமாகக்
கண்டித்து
உன்
அருகே
வரவிடாமல்
தடுத்தாய்!
என்னையும்
அப்படிப்
பார்க்காதே!
நான்
உன் அருகே
வர விரும்புகிறேன்...!

"நான் வரவில்லை. உங்கள் ஆஃபீஸ் டூர். அதனால் நீங்க போயிட்டு வாங்க!" என்றாள் வர்ஷா தீர்மானமான குரலில்.

"லுக்... நீ வந்தால் நல்லா இருக்கும். உன்னிடம் ஆஃபீஸில் இருப்பவர்கள் நன்றாகப் பழகுவார்கள்.

இட் வில் பி எ குட் டைம் பில்டிங் கேம்...!"

"பட் ஏற்கனவே நீங்க அவங்ககிட்ட பேசியிருக்கீங்க. அதனால இட் வில் நாட் பி எ டிஃபிகல்ட் ஒன் ஃபார் யூ!

ப்ளீஸ் எனக்கு வர இஷ்டமில்லை."



"வர்ஷா! சரி, நேரடியாகவே கேட்கிறேன். நான் உன்னுடைய அப்பாவிற்காக நடிக்கிறேன்.

அவர் உடல்நிலையை மனதில் வைத்துக் கொண்டு, நான் நடிக்கிறேன். உன்னிடம் நெருக்கமாக இருப்பது போல் நடந்து கொள்கிறேன்.

அதற்குக் கைம்மாறாக நீ எனக்காக இந்த டூர் ப்ரோக்ராமிற்கு வர வேண்டும்."

அதைக் கேட்டு அவள் முகம் அவமானத்தால் சிவந்தது. சே! இப்படி எல்லாம் பேசுகிறானே... ஸோ அவன் நடிப்பதற்கு நான் பதிலுக்கு இந்த உதவி செய்ய வேண்டும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டாள்.

"சரி... நான் வருகிறேன்!" என்றாள் மெதுவாக வர்ஷா.

"தேங்க்ஸ்... ஒத்துக் கொண்டதற்கு. ஐயாம் ஷ்யூர். அங்கிள் கண்டிப்பாக சந்தோஷப்படுவார். நாம் இரண்டு பேரும் சேர்ந்து இந்த மாதிரி வெளியே போவது அவருக்குப் பிடிக்கும்."

'ஆமாம்' என்பது போல் தலையசைத்தாள் அவள்.

"சரி... இன்னும் ஒரு ஒன் ஹவர் டைம் இருக்கு. லெட் அஸ் கெட் ரெடி!"

"ஓ.கே. எப்படிப் போகப் போறோம்? இங்கேயிருந்து காரிலா?"

"ம்... ஒரு பஸ் அரேன்ஜ் செய்திருக்கு. ஸோ இட் வில் கம் ஹியர். எல்லாரையும் பிக் அப் செஞ்ச பிறகு இங்கே வரும்."

"ஓ.கே. நான் ரெடியாயிடறேன்!" என்று சொல்லி விட்டுத் தன் அறை நோக்கி நடந்தாள் வர்ஷா.

ஊட்டியில் உள்ள முக்கியமான இடங்களுக்கு எல்லாம் ஆஃபீஸ் ஸ்டாஃபுடன் போவது என ரிஷப் முடிவு செய்திருந்தான்.

முதலில் வர மாட்டேன் என்று மறுத்த தன்னை எப்படி ஒரு காரணம் சொல்லி வரவழைத்து விட்டான்.

நினைத்ததை நடத்தி முடித்துக் கொள்கிறான். எல்லோருக்கும் அந்தத் திறமை இல்லை என்று நினைத்த படியே உடை மாற்றிக் கொண்டாள் வர்ஷா.

லேசான ஒப்பனை செய்து கொண்டவள் தன்னைக் கண்ணாடியில் பார்த்தாள். மெலிந்துதான் போய்விட்டேன் எனத் தனக்குள்ளே சொல்லியபடி அறையிலிருந்து வெளியே வந்தாள்.

"என்னடா கண்ணா டல்லா இருக்க...!" என்றார் பேப்பர் படித்துக் கொண்டிருந்த வசந்தன்.

"நோ டாடி! நத்திங். கொஞ்சம் டயர்டா இருக்கு. தட்ஸ் ஆல்!"

"ஹாய் வர்ஷா! யூ லுக் வெரி க்யூட் இன் திஸ் டிரெஸ்!" என்றான் ரிஷப்.

"தேங்க்ஸ்!" என்றாள் வர்ஷா.

மனதிற்குள் இது நடிப்பு எனப் புரிந்தது அவளுக்கு. அதுவே அவள் மனதில் ஒரு வலியை ஏற்படுத்தியது.

"அங்கிள்! மாத்திரை எல்லாம் மறக்காம போட்டுக் கோங்க. நாங்க எப்படியும் ஈவினிங் வந்திடுவோம்."

"ஓ.கே. ரிஷப். நல்லா என்ஜாய் பண்ணுங்க. நீங்க ரெண்டு பேரும் வந்தவுடன் நான் உங்க கல்யாண விஷயம் பற்றிப் பேசணும்."



"ஓ... கண்டிப்பாக அங்கிள்! டேக் கேர்!" என்று சொல்லிவிட்டு வர்ஷாவின் கையை சுவாதீனமாகப் பற்றியபடி நடந்தான் ரிஷப்.

அப்பா சொன்னதைக் கேட்ட வர்ஷா அதிர்ந்தாள். என்ன செய்வது என்று யோசித்தபடியே நடந்தாள்.

மெதுவாகத் தன் கையை விடுவித்துக் கொண்டாள். காட்! அப்பாவிடம் இதை எப்படிச் சொல்வது? இப்பத்தான் உடல் நிலை தேறி வந்திருக்கார்.

இப்ப இதை எப்படிச் சொல்வது என அவள் மனதிற்குள் ஒரு போராட்டம் நடந்தது.

"ரிஷப்! அப்பா இஸ் சீரியஸ் அபௌட் அவர் மேரேஜ். இப்ப என்ன செய்யறது?"

"ம்... அவர் பேசும்பொழுது பார்த்துக் கொள்ளலாம்!"

"ரிஷப்! இன்னிக்கு ஈவினிங் பேசப் போறார்... அப்பா!"

"எனக்குத் தெரியும்."

"இப்படி பிடி கொடுக்காமல் பேசினால் எப்படி."

"ம்... பேசாமல் வாயை மூடிக் கொண்டு வா என்று அர்த்தம்."

"சே...! யூ ஆர் எ ஹிப்போக்ராட். அப்பாவை மறுபடியும் ஹாஸ்பிடலில் பார்க்கணும்.

அப்பத்தானே எல்லாச் சொத்தும் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் உங்களுக்குக் கிடைக்கும்!" என்று சீறினாள்.

"ஷட் அப். அங்கிளுக்கு மாரடைப்பு வந்ததற்குக் காரணம் நீ இரவு நேரத்தில் வீட்டை விட்டு ஓடிப் போனாய் உன் காதலனுடன் கொஞ்சிப் பேச!

செய்யற தப்பெல்லாம் நீ. கடைசியில் என் மேலே குற்றம் சொல்றே! அப்புறம் சொத்து பத்தி வேற பேசறே!

எந்தச் சொத்தும் இப்ப அங்கிள்கிட்ட இல்லை. உன் சம்பந்தப்பட்டது மட்டுமே இருக்கு. உன் நகைகள், உன் உடைகள் மட்டும்தான்!" என்றான் அழுத்தமாக ரிஷப்.

தன் மேல் யாரோ சேற்றை வாரி இறைத்தது போல் இருந்தது வர்ஷாவிற்கு. கண்கள் கலங்கின.

சே...! இந்த மாதிரி ஒரு அவமானம் எனக்கு ஏன்? இனி இவனிடம் பேசக்கூடாது. பேசவே கூடாது என முடிவு செய்தாள் வர்ஷா.

பஸ் வந்துவிடவே, அதற்கு மேல் ஏதும் பேசாமல் பஸ்ஸினுள் சென்றாள்.

"பாஸ், குட்மார்னிங்... மேம், குட்மார்னிங்!" என்று கோரஸாகக் குரல் கேட்டது.

ரிஷப் புன்முறுவலோடு எல்லோரையும் பார்த்துக் கை காட்டினான். அவனால் எப்படி இந்த மாதிரி சட்டுன்னு மூடை மாற்றிக் கொள்ள முடிகிறது எனத் திகைத்தாள் வர்ஷா.

பஸ்ஸில் ஒரு ரோ காலியாக இருந்தது. அங்கே இருவரும் உட்கார்ந்து கொண்டனர்.

சங்கீதா தனக்கு முன்னே உட்கார்ந்திருப்பது அவளுக்குத் தெரிந்தது. கூடவே அவள் அருகில் விக்ரம் ஏதோ பேசிக் கொண்டு உட்கார்ந்திருப்பதை வர்ஷா கவனித்தாள்.

அந்தப் பக்கமே பார்க்கக் கூடாது என முடிவு செய்தவள், ஜன்னல் வழியாக வெளியே தெரிந்த காட்சிகளைப் பார்த்தவண்ணம் இருந்தாள்.



பஸ் முதலில் பொட்டானிக்கல் கார்டன் அருகே நின்றது. "இறங்கணும் வர்ஷா... வா!" என்று அவள் கையைப் பற்றினான் ரிஷப்.

"இங்கே அப்பா இல்லை. அதனால் நீங்க நடிக்க வேண்டாம்."

"ம்... நீ சொல்றது கரெக்ட்தான். பட் டிராமாவில் நடிக்கிறதுக்கு முன்னாடி அப்பப்ப ஒத்திகை பார்ப்பார்கள்.

அந்த மாதிரி செய்தால்தான் டிராமா நடக்கும்பொழுது சொதப்பாமல் நடிக்க முடியும்.

அது மாதிரிதான் இதுவும். ஸோ புரிஞ்சுக்கோ..."

அவன் சொன்னதைக் கேட்டு அவளுக்கு எரிச்சல் வந்தது. பொட்டானிக்கல் கார்டனுக்கு இதற்கு முன்பு வந்திருக்கிறாள் வர்ஷா.

ஆனால் இந்தத் தடவை ரிஷபோடு வருவது அவளுக்கு ஏதோ மாதிரி இருந்தது.

"சரி... வர்ஷா! இந்த கார்டனைப் பற்றிச் சொல்லு. இதற்கு முன்னாலே நீ இங்க வந்திருக்கியா?"

"ம்... நிறையத் தடவை. இது ஊட்டியின் ஃபேமஸ் டூரிஸ்ட் ஸ்பாட்.

கிட்டத்தட்ட இருபது ஏக்கர் கிட்டே இருக்கு இந்த கார்டன். ஐந்நூறுக்கு மேற்பட்ட செடி, மரங்கள் இங்கே உள்ளன.

இன்னும் கொஞ்ச தூரம் போனா... கிட்டத்தட்ட இருபது மில்லியன் வருடம் ஓல்ட் மரம் ஒன்றைப் பார்க்கலாம்."

"வாவ்... விஜயகாந்த் ஸ்டைல்ல, ரமணா படத்தில வர்ற மாதிரி... ஸ்டேடிஸ்டிக்ஸ் எல்லாம் சொல்றே!"

"தட்ஸ் குட்!" என்றான் ரிஷப்.

"ம்... யாரோ ஒருத்தர் என் ஐ.க்யூ. ரொம்ப கம்மின்னு சொன்னதா ஞாபகம்."

அதைக் கேட்டு அவன் கடகடவெனச் சிரித்தான்.

"பரவாயில்லையே... அதை இன்னும் ஞாபகம் வெச்சிருக்கியே!"

"நான் பழசை எல்லாம் அவ்வளவு சீக்கிரமாக மறந்துவிட மாட்டேன்."

"ஓ... அப்ப விக்ரமையும் நீ மறந்துவிட மாட்டாய். அப்படித்தானே!"

அவள் பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்தாள். அவன் சொன்னது உண்மை இல்லை. நான் விக்ரமை மறந்து விட்டேன்.

ஒருவேளை நான் அவனைக் காதலிக்கவே இல்லையா? விக்ரம் இங்கே இந்த டூரில் சங்கீதாவோடு வந்திருக்கிறான். எனக்கு ஏன் கோபம் வரவில்லை?

ஒரு பொறாமை உணர்வுகூட வரவில்லையே... சே! இது என்ன மனம்? இப்படி தெளிவில்லாமல் இருந்திருக்கிறது அப்பொழுது எனத் தன்னையே கடிந்து கொண்டாள்.

பொட்டானிக்கல் கார்டனில் இருந்த மலர்களைப் பார்த்தாள் அவள். வண்ணமயமாகப் பூத்துக் குலுங்கியபடி இருந்தது தோட்டம்.



எல்லா வண்ணங்களிலும் மலர்கள் செழிப்பாக இருந்தன. எப்ப இங்கே வந்தாலும் அவள் மனம் லேசாகும். காரணம் இயற்கை கொஞ்சும் இடம்.

ஆனால் அன்று அவள் மனம் வெறுமையாக இருந்தது. காரணம் ரிஷப் என்று அவளுக்கு நன்றாகத் தெரிந்தது.

நடந்து நடந்து கால் வலிப்பது போல் இருந்தது அவளுக்கு. அங்கிருந்த புல்வெளியில் உட்கார்ந்திருந்தாள் வர்ஷா.

ரிஷப் கைப்பேசியில் தொலைவில் யாருடனோ பேசிக் கொண்டிருந்தான். கண் மூடி அமர்ந்திருந்தவளின் அமைதியைக் கெடுத்தது ஒரு குரல்.

"வர்ஷா டியர்! நான் உன்கிட்டே பேசணும்!" என்றான் விக்ரம்.

கண் திறந்தவளின் அருகே தென்பட்டான் விக்ரம்.

"விக்ரம்! தள்ளி நில்லுங்க!" என்று எழுந்திருக்க முயன்றாள்.

ஆனால் அவன் கைகள் அவள் தோளை அழுத்திப் பிடித்து உட்கார்த்தி வைத்தன.

"விக்ரம்! என்ன இது!" என்று அவனைத் தள்ள முயன்றாள்.

ஆனால் அவன் அவளைப் புல் வெளியில் தள்ளினான்.

"விக்ரம்! பிஹேவ் யூவர்ஸெல்ஃப்!"

"உன்னிடம் பழகும் பொழுது கஷ்டப்பட்டு ஒழுங்காக பிஹேவ் செய்தேன். பிகாஸ் உனக்கு அப்படி இருந்தால் தான் பிடிக்கும்.

அதனால் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தேன். ஆனால் இப்பொழுது ஃபீல் செய்கிறேன்.

உன்னிடம் உள்ள சொத்திற்காக நான் உன்னைக் காதலித்தேன். இப்ப உன்னிடம் சொத்து ஏதும் இல்லை.

பட் நீ இருக்கிறாய், எப்பொழுதும் போல அழகாக... கம் டியர்!" என்று அவளைத் தன் புறம் இழுத்தான்.

"விக்ரம்! லீவ் ஹர். ஷி இஸ் மை கேர்ள்!" என்று ரிஷப் குரல் அருகே கேட்கவும், விக்ரம் அவளை விடுவித்தான்.

"விக்ரம்! உனக்கும் சங்கீதாவிற்கும் கல்யாணம் ஆகப் போகிறது.

இனிமேலாவது ஒழுங்காக நடந்து கொள்!" என்றான் ரிஷப் கடுமையான குரலில்.

விக்ரம் ஏதும் சொல்லாமல் அங்கிருந்து நகர்ந்து சென்றான். வர்ஷா தன் மேல் ஒட்டி இருந்த புல்லை உதறியபடியே எழுந்தாள்.

அவள் முகம் கோபத்தால் சிவந்திருந்தது. அதை ரிஷப் வெறுப்பாகப் பார்த்தான்.

"வர்ஷா... ஆர் யூ நாட் அஷேம் டு பிஹேவ் லைக் திஸ். சே! பொது இடத்தில் இந்த மாதிரி...!"

"ரிஷப்! மைண்ட் யூவர் வர்ட்ஸ். என் மேல் எந்தத் தப்பும் இல்லை.



நான் ஒன்றும் அவனை வரச் சொல்லவில்லை!" என்று சொல்லும் பொழுதே அவள் குரல் உடைந்தது.

அவமானத்தால் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. ரிஷப்பின் பார்வையில் தெரிந்த கோபம் அவள் மனதில் சோர்வை ஏற்படுத்தியது.

ஏதும் பேசாமல் அந்த இடத்தை விட்டு அகன்றான் ரிஷப்.

பஸ்ஸில் மௌனமாக அமர்ந்திருந்தாள் வர்ஷா. ரிஷப் தன் ஸ்டாஃப் எல்லோரிடமும் ஏதோ பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

அடுத்து பைக்காரா லேக்கிற்குச் செல்லத் தயாரானது பஸ். விக்ரமிடமும் ரிஷப் பேசுவது தெரிந்தது.

எப்படி இந்த மாதிரி சட்டென எல்லாவற்றையும் மறந்துவிட்டு இவர்களால் இயல்பாகப் பேச முடிகிறது எனத் திகைத்தாள் அவள்.

ஒருவேளை ஆண்களுக்கு இதெல்லாம் சகஜம் போல. சண்டை முடிந்துவிட்ட பின் நண்பர்களாக மாறுவது அவர்கள் ஹார்மோன் கோளாறாக இருக்கும் என நினைத்துக் கொண்டாள்.

பஸ்ஸில் சி.டி.யில் பாட்டு ஓடிக் கொண்டிருந்தது. பாட்டிற்கு ஏற்ப பெண்களும் ஆண்களும் ஆடிக் கொண்டிருந்தனர். மற்ற நேரமாக இருந்தால் அவள் இதை எல்லாம் நன்றாக ரசிப்பாள்.

ஆனால் இப்பொழுதிருக்கும் நிலையில் எதுவுமே பிடிக்கவில்லை அவளுக்கு. அவள் அருகே ரிஷப் வந்து உட்கார்ந்தான்.

"என்ன ஸைலண்ட்டா வர்றே!"

"ஒண்ணுமில்லை..."

"ம்... ஸாரி. உன்னைத் தப்பாகப் புரிந்து கொண்டேன். விக்ரம் என்னிடம் மனம் விட்டுப் பேசினான்.

அவன்தான் உன்னிடம் தவறாக நடக்க முயன்றான் என்பதை அவன் ஒத்துக் கொண்டான்...!" என்றான் கனிவான குரலில் ரிஷப்.

"விக்ரம் சொன்னா நம்புவீங்க. பட் நான் சொன்னா நம்ப மாட்டீங்க. அப்படித்தானே!" என்று படபடத்தாள் அவள்.

"ஸாரி... வர்ஷா!" என்றான் மெதுவாக.

அவள் ஏதும் சொல்லாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

"ஆஃபீஸ் ஸ்டாஃப் எல்லாம் இருக்காங்க... அதான் யோசிக்கிறேன். இல்லாட்டி...!" என்றான் கண்களில் குறும்பு மின்ன ரிஷப்.

"எ... என்ன செய்வீங்க அவங்க இல்லாட்டி...!"

"ம்... தோப்புக்கரணம் போடுவேன்."

அதைக் கேட்டு அவள் கடகடவெனச் சிரித்தாள்.

அவள் சிரிப்பதையே பார்த்துக் கொண்டிருந்தான் ரிஷப்.

"யூ லுக் வெரி நைஸ், வென் யூ ஸ்மைல் வர்ஷா!"

"தேங்க்ஸ்."

அவன் சொன்னதைக் கேட்டு அவள் மனம் பூரித்தது. அவன் சொல்வதை நான் ரசிக்கிறேனா... என்ன ஆச்சு எனக்கு என்று தன்னையே கேட்டுக் கொண்டாள்.



பைக்காரா ஏரியில் அன்று கூட்டம் அவ்வளவாக இல்லை. வரிசையாக அங்கே படகுகள் இருந்தன.

"வர்ஷா! போட்டிங் போகலாமா... வா!" என்று அவள் கையைப் பற்றினான்.

அவன் கையில் தன் கை அடங்கியிருப்பதை அவள் ரசித்தாள். கையை விடுவிக்க மனமின்றி அவனுடன் நடந்தாள்.

"ஸோ... எப்ப ஸார் கல்யாணம்?" என்று அவனிடம் கேட்டாள் மாலதி, அக்கௌண்டண்ட்.

"ம்... சீக்கிரமே நடக்கும். உங்களுக்கெல்லாம் ஒன் டே வேகேஷன் வித் பே (சம்பளம்)!"

"ஓ.. தட்ஸ் நைஸ்!" என்று அங்கிருந்தவர்கள் எல்லோரும் உற்சாகமாகக் குரல் கொடுத்தனர்.

"கங்கிராட்ஸ் ஸார்! மேம், ஆல் தி பெஸ்ட்!" என்று எல்லோரும் விஷ் செய்தனர்.

அதைக் கேட்ட அவள் மனம் திகைத்தது. வெளியே அவர்களிடம் எதையும் காட்டிக் கொள்ளாத போதும் மனதினுள் கலக்கமாக இருந்தது வர்ஷாவிற்கு.

ரிஷப் முகத்தை ஓரக் கண்ணால் பார்த்தாள் அவள். அவன் முகத்தில் எந்த மாற்றமும் இல்லை. எப்பவும் போல் உற்சாகமாக இருந்தான் அவன்.

"வர்ஷா! வா... இந்த போட் எடுக்கலாம்...!"

"பட், இது மோட்டார் படகு இல்லை."

"எனக்குத் தெரியும். இன்ஃபேக்ட் துடுப்பு நான் நல்லா போடுவேன். அதனால பயப்படாம வா...!"

"ஓ... உங்களுக்குத் துடுப்புப் போடத் தெரியுமா?"

"யெஸ் மேடம்... ஐ நோ... ஸோ கம்...!"

அந்தப் படகில் இருவரும் ஏறி அமர்ந்தனர். காற்று சில்லென வீசியது. குளிராக இருந்ததால் சட்டென அவள் உடலில் நடுக்கம் பரவியது.

"ஏய்... என்ன வர்ஷா! ஆர் யூ ஓ.கே.?"

"யெஸ்... திடீர்னு ஜில்லுன்னு காத்து படவே குளிர் எடுக்க ஆரம்பிச்சுடுச்சு...!"

"இரு..." என்றவன் தன் ஜெர்க்கின்ஸைக் கழற்றி அவளிடம் நீட்டினான்.

"இட்ஸ் ஓ.கே. வேண்டாம். உங்களுக்கு... குளிரப் போகுது!"

"ம்... என் உடம்பு எல்லாத்தையும் தாங்கும் வர்ஷா. நான் சின்ன வயசு முதலே வெயில், மழை, குளிர் எல்லாம் பார்க்காம வேலை பார்த்திருக்கேன்.

ஐ வாஸ் நாட் பார்ன் வித் எ ஸில்வர் ஸ்பூன்!"

"ஸோ... நான் அப்படிப் பிறந்தவள்னு சொல்றீங்களா?

பட் நவ் ஐ யாம் நாட் ஹாவிங் எனிதிங் ரிஷப். வாழ்க்கை சட்டுன்னு ரொம்ப... ரொம்ப மாறிடுச்சு.

நான் இதை எல்லாம் துளிக்கூட எதிர்பார்க்கலை. பட் எல்லாமே சொல்லாம கொள்ளாம என்னை அடிச்சுப் போட்டுடுச்சு ரிஷப்..."

"லுக் வர்ஷா! வாழ்க்கை எப்பவும் ஒரே மாதிரி இருக்காது. மேடு, பள்ளங்கள்... நிறைந்ததுதான் வாழ்க்கை.



ஒரே மாதிரி லைஃப் இருந்தால் அதில் எந்த சுவாரசியமும் இல்லை.

அதனாலே நடந்ததைப் பற்றியே நினைக்காமல், அதைப் பற்றியே யோசிக்காமல், இனி நடக்கப் போவதைப் பற்றி யோசனை செய்.

தட்ஸ் குட் ஃபார் யூ. ஓ.கே. ட்ரை ஃபார் இட் லைக் எ குட் கேர்ள்!" என்றான் லேசான புன்முறுவலோடு ரிஷப்.

## 18

நீ
தூங்கும்
பொழுது
அம்மா
எனக்குச்
சொன்ன
தேவதைகளின்
கதை
நினைவுக்கு
வருகிறது
......
தேவதை
போல்
ஏன்
நீயும்

தோன்றி

மறைந்து

மீண்டும்

தோன்றி

மறைந்து

கண்ணாமூச்சி

ஆட்டம்

ஆடுகிறாய்?

போதும்

பெண்ணே,

விளையாட்டு!

போதும்...!

அவன் சொன்னதை யோசித்தபடியே இருந்தாள் வர்ஷா. அவன் பேசுவதில் கெட்டிக்காரன். அதனால்தான் எல்லாவற்றிலும் இந்த மாதிரி வெற்றி பெற முடிகிறது போல என நினைத்துக் கொண்டாள் அவள்.

அவன் ஜெர்கின்ஸை அணிந்திருந்ததால் குளிர் நன்றாகக் குறைந்ததை அவளால் உணர முடிந்தது.

"நீங்கள் ஊட்டியிலேதான் சின்ன வயசில இருந்தீங்களா?"

"ஆமாம். என் அப்பா இங்கேதான் எஸ்டேட்டில் வேலை பார்த்தார். அதனால் நான் இங்கேயேதான் இருந்தேன்; படித்தேன்.



இன்ஃபேக்ட் நான் உன்னை நிறையத் தடவை பார்த்திருக்கிறேன்... உனக்கே தெரியாமல்!"

"எ... என்னது. எனக்குத் தெரியாமலா?" என்று நம்பாமல் கண்களை அகல விரித்தாள் அவள்.

"ஆமாம். உனக்கு அப்ப எட்டு இல்ல பத்து வயது இருக்கும். இரட்டை ஜடை போட்டு ஸ்கூல் யூனிஃபார்ம் அணிந்து கொண்டு ஒரு டெடி பொம்மையை வைத்துக் கொண்டு உன் வீட்டு ஊஞ்சலில் நீ ஆடிக் கொண்டிருப்பாய்.

நான் அதை நிறைய முறை பார்த்திருக்கிறேன். உண்மையைச் சொல்லப் போனால் உன்னைப் பார்க்கவே நான் வருவேன்...!" என்றான் கூலாக ரிஷப்.

அவன் சொன்னதைக் கேட்டு அவள் முகத்தில் கூச்சம் படர்ந்தது. தன் உடல் முழுவதும் சூடானது போல் இருந்தது அவளுக்கு.

"ஓ... அப்படியா! எனக்கு ஞாபம் இல்லை."

"ம்... உனக்கு எங்கே ஞாபகம் இருக்கும். நீ என்னைப் பார்த்ததே இல்லை.

உன் டெடி பொம்மையைக் கொஞ்சியபடி இருப்பாய். உன் அழகான பெரிய கண்கள், குட்டி மூக்கு, க்யூட் லிப்ஸ் இதெல்லாம் எனக்கு ரொம்பப் பிடிக்கும்.

அதனால் மதில் சுவர் மேல் நின்றபடி உன்னைப் பார்ப்பேன். தோட்டக்காரத் தாத்தாகூட ஒரு முறை பார்த்து விட்டு என்னைச் சத்தம் போட்டார்!" என்றான் ரிஷப்.

"ஓ... அப்படியா!" என்றாள் மெதுவாக.

"ம்... அப்ப மட்டும் இல்லை... இப்பகூட எனக்கு உன்னை ரொம்பப் பிடிக்கிறது.

உன் குழந்தைத்தனமான முகம்... இஸ் ஆல் டைம் ஃபேவரைட் ஃபார் மி!

உன் மடியில் அந்த டெடிக்குப் பதிலாக நான் இருக்கக் கூடாதா என்று அப்பொழுது ஏங்கியிருக்கேன்.

இப்பொழுதும் அந்த ஏக்கம் இருக்கிறது. என்ன செய்யலாம் வர்ஷா... சொல்?" என்றான் அவள் முகத்தை உற்றுப் பார்த்தபடி ரிஷப்.

அவன் சொன்னதைக் கேட்டு அவள் இதயத் துடிப்பு அதிகரித்தது. மூச்சு விடவே சிரமமாக இருந்தது அவளுக்கு. ஏதும் சொல்லாமல் தலை குனிந்தபடி இருந்தாள் அவள்.

"என்ன வர்ஷா! எப்பவும் பதிலுக்குப் பதில் பேசுவ... இப்ப என்ன ரொம்ப அமைதியாயிட்ட...!" என்றான் துடுப்பு போட்டபடியே ரிஷப்.

அவள் ஏதும் பதில் சொல்லாமல் தண்ணீரைப் பார்த்தபடியே இருந்தாள். சட்டென உதடு உலர்ந்தது போல் இருந்தது அவளுக்கு.

"ஸோ... விக்ரமை உன்னால மறக்க முடியலை. அப்படித்தானே. டோண்ட் யூ ஹேவ் ஸென்ஸ்?

விக்ரமிற்கும் சங்கீதாவிற்கும் திருமணம் நடக்கப் போகுது. அப்புறம் உன் நிலை என்ன?

நீ என்ன செய்யப் போகிறாய்? அப்பவும் விக்ரமையே நினைத்துக் கொண்டு இருக்கப் போகிறாயா?

உனக்கே இது அசிங்கமாகத் தோன்றவில்லையா? சே! யூ ஆர் ஸ்டில் எ கிட்!" என்று உறுமினான் ரிஷப்.

துடுப்பை அவன் அதி விரைவாகச் செலுத்தினான். படகு சட்டென வேகமாகச் செல்லத் தொடங்கியது.



அதை எதிர்பார்க்காத வர்ஷா பேலன்ஸ் தவறி அவன் மேல் விழுந்தாள்.

தன் மடியில் பூக்குவியல் போல் விழுந்தவளை அவன் கண்கள் பருகின. தன் நிலை இழந்தான் ரிஷப்.

சட்டென அவள் முகத்தை நோக்கிக் குனிந்தான் ரிஷப். அவன் உதடுகள் அவள் நெற்றியில் பதிந்தன.

அவள் கண்மூடித் தன்னை மறந்தாள். அவன் அவள் கண்களில் தன் உதட்டைப் பதித்தான். அவள் புது உலகில் இருப்பது போல் உணர்ந்தாள்.

அவன் உதடுகள் அவள் முகம் முழுவதும் கோல மிட்டன. தன் உடலில் ஏற்படும் மாற்றங்களை அவளால் உணர முடிந்தது. ஏதும் செய்ய முடியாமல் அவன் மடிமேல் துவண்டிருந்தாள் வர்ஷா.

"வர்ஷா... எனக்கு நீ வேண்டும்!" என்று காதோரம் கிசுகிசுத்தான் ரிஷப்.

அவன் சொன்னதைக் கேட்டு அவள் புலன்கள் விழிப் படைந்தன. தன் மேலேயே கோபம் வந்தது அவளுக்கு.

"ரிஷப்... வேண்டாம்!" என்று சட்டென எழுந்தாள் அவள். தன்னைச் சமாளித்துக் கொண்டு படகில் உட்கார்ந்தாள்.

ரிஷப் முகத்தைப் பார்க்கவே அவளுக்கு அவமானமாக இருந்தது. அவன் தொட்டவுடன் தான் தன் நிலை இழந்ததை நினைத்துத் தன் மேலேயே கோபம் வந்தது.

ரிஷப் இதுவரை என்னைக் காதலிப்பதாகச் சொல்ல வில்லை. ஹி நீட்ஸ் மி. தட்ஸ் ஆல்!

நத்திங் மோர் தேன் தட். இட்ஸ் ஜஸ்ட் ஆன் அட்ராக்ஷன். அது தீர்ந்த பின் என்னவாகும்?

வாழ்க்கை வெறுமையாகி விடும். இது என்ன கொடுமை? நான் ரிஷபைக் காதலிக்கிறேன். அதுதான் பிரச்சினை.

அவனுக்கு என் மேல் ஒரு ஈர்ப்பு இருக்கிறது. சின்ன வயது முதலிலேயே அந்த அட்ராக்ஷன், பப்பி லவ் இருந்திருக்கிறது என் மேலே.

பட் அது மட்டும் போதாதே. வாழ்க்கைக்கு நட்பு, தோழமை என நிறையத் தேவைப்படுமே... அது... அது ரிஷபிடம் கிடைக்காது. ஹி ஜஸ்ட் நீட்ஸ் மி.

சே...! நான் என்ன செய்வது? ஐயாம் ஸ்கேர்ட். என் மேலேயே எனக்கு நம்பிக்கை இல்லை.

ரிஷப்பை விட்டு நான் விலகி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஐ மே கெட் ட்ராஃப்ட்.

அப்பாவிடமும் இதைப் பற்றிப் பேச முடியாது. இந்த மாதிரி ஒரு இக்கட்டான சூழ்நிலையில் நான் மாட்டிக் கொண்டு இருக்கிறேனே!

என்ன செய்யலாம் கடவுளே! ப்ளீஸ் எனக்கு ஒரு நல்ல வழியைக் காட்டு.

நான் இது வரை ரொம்ப மனம் உருகிப் பிரார்த்தனை செய்ததில்லை. ஆனால் இப்பொழுது கெஞ்சிக் கேட்கிறேன். எனக்கு ஒரு வழி காட்டு என்று மனதிற்குள் உருகிப் பிரார்த்தனை செய்தாள் வர்ஷா.

அவள் முகத்தைப் பார்த்தான் ரிஷப். அவள் முகத்தில் ஏதோ வேதனை தெரிந்தது அவனுக்கு.



அதைப் பார்த்தவனுக்கு ஏனோ கோபம் வந்தது. இன்னும் அவள் விக்ரமை இவ்வளவு ஆழமாக நேசித்துக் கொண்டிருக்கிறாள்.

வெளிப்படையாக அவளிடம் இதைப் பற்றிப் பேசவும் செய்தாகி விட்டது. ஆனால் அவள் பிடிவாதமாக இருக்கிறாள்.

க்ரேஸி. ஹி இஸ் ஆன் ஆர்டிஸ்ட். அதனால் உருகி உருகிக் காதலிப்பது போல நடித்திருக்கிறான்.

அவளும் அதை நம்பி மனதைப் பறிகொடுத்து விட்டாள் போல. இன்னும் குழந்தைத்தனமான அந்த முடிவிலிருந்து அவளால் வெளிவர முடியவில்லை போல.

சே...! இந்த மாதிரி ஒரு மக்குப் பெண் இந்த நூற்றாண்டில் இருப்பது ஆச்சரியம்தான்.

என்ன செய்வது? எப்படி இவளைச் சமாளிப்பேன்? அங்கிளுடன் வேண்டுமானால் இவளைப் பற்றிப் பேசலாமா?

பட் இட் மே ஹேவ் ஆன் இம்ஃபேக்ட் ஆன் ஹிஸ் ஹெல்த். பாவம்! இப்பத்தான் உடம்பு தேறி இருக்கிறார். இதைப் பற்றிப் பேசினால் அவர் மனம் கஷ்டப்படும் என யோசித்தபடியே இருந்தான் ரிஷப்.

கரை அருகே வந்துவிட்டனர் இருவரும். மற்றவர்கள் எல்லாம் ஏரிக்கரை ஓரத்தில் கூட்டம் கூட்டமாக அரட்டை அடித்தபடி இருந்தனர்.

"ஸார்... போகலாமா? உங்களுக்காகத்தான் வெயிட்டிங்."

"ம்... ஷ்யூர்... எல்லோரும் இருக்காங்கதானே!"

"ஆமாம் ஸார். எல்லோரும் வந்திட்டாங்க. சீக்கிரமே கிளம்பலாம். அப்பத்தான் கொஞ்சம் பயம் இல்லாமல் ஓட்டலாம்.

போன வாரம்கூட ஊட்டி - மேட்டுப்பாளையம் ரோடு அருகே யானைங்க தொந்தரவு செய்ததாம்."

"சரி, வாங்க... கிளம்பலாம்! ஸோ எல்லோரும் நல்லா என்ஜாய் செஞ்சீங்களா?"

"யெஸ் பாஸ். தேங்க்ஸ்...!" என்றனர் அங்கே இருந்தவர் எல்லோருமே கோரஸாக!

"தேங்க்ஸ் ஃபார் மேக்கிங் இட் ஸோ நைஸ். வாங்க எல்லாரும் பஸ்ல போய் உட்காரலாம்."

உற்சாகமாகப் பேச்சும் சிரிப்புமாக எல்லோரும் பஸ்ஸிற்குள் சென்றனர்.

பஸ்ஸில் ஏறும்பொழுதே உடல் சோர்வாக இருப்பது போல் உணர்ந்தாள் வர்ஷா. சில்லென்ற ஏரிக்காற்று, ரிஷப் தன்னிடம் நடந்து கொண்ட விதம் எல்லாமே தன்னால் மறக்க முடியாது என்று அவளுக்குப் புரிந்தது.

பஸ் கிளம்பியது. ரிஷப் அவள் அருகே அமர்ந்தான். ஆனால் இருவரும் ஏதும் பேசவில்லை. பஸ்ஸில் ஒலித்த மென்மையான பாடல் மனதிற்கு இதமாக இருந்தது.

காலையில் இருந்து அலைந்து கொண்டே இருந்ததால் தன்னை மீறிச் சோர்வு மிகுதியால் கண் அயர்ந்தாள் வர்ஷா.

பஸ் சட்டென நின்றதால் கண் விழித்தாள் அவள். தான் தூக்கக் கலக்கத்தில் ரிஷப் தோள் மேலே தலை சாய்த்து உறங்கி இருக்கிறோம் என்று புரிந்தது அவளுக்கு.



"என்ன ஆச்சு... சட்டுன்னு முழிச்சிட்ட வர்ஷா!"

"ம்... பஸ் நின்னுடுச்சா? அதான் விழிப்பு வந்திடுச்சு."

"ஆமாம். ஏதாவது ப்ராப்ளமான்னு தெரியலை. ஒரு செகண்ட் இரு இங்கேயே!

நான் போய் டிரைவரைப் பார்த்துட்டு வர்றேன்!" என்று சொல்லிவிட்டு டிரைவரை நோக்கி நடந்தான் ரிஷப்.

"என்ன ப்ராப்ளம் ராமு?"

"அதுதான் சார். செக் செஞ்சிட்டு இருக்கேன். டயர் பிரச்சினைன்னு நினைக்கிறேன்.

கீழே போய்ப் பார்க்கிறேன். வண்டி ஏதோ இழுத்துட்டு ஓடற மாதிரி இருக்கு."

"சரி... வா... போகலாம்!"

"நீங்க எதுக்கு சார்? நான் போய்ப் பார்க்கிறேன்."

"இட்ஸ் ஓ.கே. கம் ராமு!"

இருவரும் கீழே இறங்கினர். டயரைப் பார்த்தவுடன் தெரிந்துவிட்டது. அது காற்றுப் போய் விட்டது என்று.

"ராமு! டயர்தான் பிரச்சினை...!"

"ஆமாம் ஸார். இப்ப ரீப்ளேஸ் செஞ்சிடறேன்...."

"வா... ஐ வில் ஹெல்ப் யூ!"

ராமுவுடன் சேர்ந்து டயர் மாற்றுவதில் பிஸியாக இருந்தான் ரிஷப். ஒரு வழியாக மாற்றி முடித்தனர் இருவரும்.

பேருந்திற்குள்ளேயே இருப்பதால் மூச்சு முட்டுவது போல் இருந்தது வர்ஷாவிற்கு. சற்று நேரம் கீழே போய் நிற்கலாம் என நினைத்தபடியே கீழே இறங்கினாள் அவள்.

லேசான ஒளி நிலவில் இருந்து சாலையில் தெறித்து இருந்தது. மற்றப்படி எங்கேயும் இருள் படர்ந்து இருந்தது.

ஏதோ சத்தம் கேட்க திரும்பினாள் வர்ஷா. அவளுக்கு அருகே மிக அருகே ஒரு யானை தன் குட்டியோடு நின்று கொண்டிருந்தது.

அதைப் பார்த்துத் திடுக்கிட்டாள் வர்ஷா. அதே நேரம் ரிஷபும் அதைப் பார்த்து விட்டான். டிரைவரும் அதிர்ந்து போய்ச் சிலையாக நின்றார்.

தன் கையில் இருந்த டூல்-கிட்டில் இருந்து ஒரு ஆயுதத்தை எடுத்துக் குட்டி யானை மேல் எறிந்தான் ரிஷப்.

தாய் யானையின் கவனம் இவன் மேல் பாய்ந்தது. வர்ஷாவைத் தாண்டி அவனை நோக்கி நகர்ந்தது கோபமாக.

"ராமு! நீங்க போய் உட்காருங்க. பஸ்ஸைக் கிளப்ப தயாரா வெச்சுக்கோங்க.

வர்ஷா... கெட் இன்ஸைட் தி பஸ். க்விக்! நான் கொஞ்ச நேரத்தில் வந்திடுவேன்!" என்று கத்தியபடியே ஓடினான் ரிஷப்.

"நோ ரிஷப்!" என்று அலறினாள் வர்ஷா.

"சொன்னதைச் செய் வர்ஷா!" என்று அவன் குரல் காற்றில் கரைந்தது.

பஸ்ஸிலிருந்து சத்தம் கேட்டு வெளியே வந்தவர்கள் ராமு மூலமாக நடந்ததை அறிந்து பதறினார்கள்.

வர்ஷாவை வலுக்கட்டாயமாக உள்ளே அழைத்து வந்தனர்.



"வேண்டாம்... என்னை விடுங்க. ரிஷப்... ரிஷப்... பாவம்!" என்று திமிறினாள் வர்ஷா.

"மேடம்! பயப்படாம இருங்க. ஸார் எப்படியும் யானைக்கு ஆட்டம் காட்டிட்டு வந்திடுவார்.

அவருக்கு ஒண்ணும் ஆகாது!" என்று ராமு அவளுக்குச் சமாதானம் சொல்ல முயன்றார்.

"சே... என்னாலதான் அவருக்கு இந்த ஆபத்து.

நான் கீழே இறங்கி இருக்கக் கூடாது. என்னைக் காப்பாற்ற வேண்டும் என்றே அவர் குட்டி யானை மேல் எதையோ விட்டெறிந்தார்.

அதனால்தானே தாய் யானை அவரைத் துரத்தியது!" என்று அழுது புலம்பினாள் வர்ஷா.

அழுது அழுது ஓய்ந்து போயிருந்தாள் அவள். ஒவ்வொரு மணித் துளியும் ஒரு யுகம் போல் தோன்றியது அவளுக்கு.

பேருந்தில் இருந்தவர்கள் முகத்தில் எல்லாம் பயம் அப்பட்டமாகத் தெரிந்தது.

சங்கீதா வர்ஷாவின் அருகே வந்து அவளைச் சமாதானம் செய்ய முயன்றாள்.

எந்த வார்த்தைகளாலேயும் அவளுக்குச் சமாதானம் ஏற்படவில்லை.

"ரிஷப்... ரிஷப்... என்னாலேதான் இதெல்லாம் நடந்தது.

ரிஷப்! ப்ளீஸ் வாங்க... ரிஷப்! ஐயாம் ஸாரி!" என்று புலம்பியபடியே இருந்தாள் வர்ஷா.

அவளைப் பார்க்கவே பாவமாக இருந்தது. எல்லோரும் என்ன செய்வது என்று புரியாமல் திகைத்துப் போய் இருந்தனர்.

எதிரே ஒரு ஜீப் வருவது ராமுவிற்குத் தெரிந்தது. அருகே ஜீப் வர வர ஒரு திகில் படர்ந்தது அவன் மனதில்.

காரணம் அது போலீஸ் ஜீப். கடவுளே! ஐயாவிற்கு ஏதும் ஆயிருக்கக் கூடாது என்று அவர் மனம் பதைத்தது.

ஜீப்பில் இருந்து இறங்கிய ஃபாரஸ்ட் ஆபீஸரின் சீருடையைப் பார்த்துத் திகைத்தாள் வர்ஷா.

வேக வேகமாக பஸ்ஸிலிருந்து இறங்கினாள் அவள். ஜீப்பிலிருந்து அடுத்து இறங்கிய ரிஷபைக் கண்டவுடன் அவள் மனம் சந்தோஷத்தில் திக்குமுக்காடியது.

வேகமாக அவனை நோக்கி ஓடினாள் வர்ஷா. நீட்டிய அவன் கைகளுக்குள் புகுந்தாள் அவள்.

அழுதபடியே அவன் மார்பில் தலை சாய்த்தாள்.

"ரிஷப்... ரிஷப்... நான் ரொம்...!" என்று மேலே பேச முடியாமல் அழுகை வந்தது அவளுக்கு.

"ஏய் வர்ஷா! என்ன இது...? எனக்கு ஒண்ணும் ஆகலை. கூல் டவுன்டா!" என்று சிறு குழந்தையிடம் பேசுவது போல் பேசினான் ரிஷப்.

"ரிஷப்... ஏன் அப்படி செஞ்சீங்க... அந்த யானைக் குட்டி மேலே நீங்க எதையோ தூக்கிப் போட்டதாலேதானே அது உங்களை அப்படி கோபமாகத் துரத்தியது.

நான்... ரொம்ப பயந்திட்டேன் ரிஷப். என் உயிர் என்னிடம் இல்லை. ஐ ஜஸ்ட் காண்ட் ஸே ஹவ் ஐ ஃபெல்ட் ரிஷப்.



இட் வாஸ் வெரி பெயின்ஃபுல். நீங்க இல்லாத ஒவ்வொரு மணித்துளியும் ரொம்ப ரொம்ப நீளமா... காட்... ரிஷப்!" என்று அவனை அணைத்துக் கொண்டாள் வர்ஷா.

அவளின் அணைப்பில் தன்னை இழந்தான் அவன். அவள் முகத்தைக் கையில் ஏந்தியவன் அவள் நெற்றியில் புரண்ட கூந்தலை ஒதுக்கிவிட்டான்.

பின் அவள் கண்ணீரைத் துடைத்தான். அழுதழுது சிவந்திருந்த அவள் முகமும், கலங்கியிருந்த கண்களும் துடிக்கும் இதழ்களும் அவனை ஏதோ செய்தன.

"வர்ஷா... நீ இப்படி எல்லாம் எனக்காக உருகுவாய் எனத் தெரிந்திருந்தால் எப்பவோ அந்த யானையை வரவழைச்சிருப்பேனே...!

சே! எவ்வளவு நாளை வேஸ்ட் செஞ்சிட்டேனே...!" என்றான் அவள் காதோரம் கிசுகிசுப்பாக.

"சே...! உங்களுக்கு விளையாட்டுத்தான்!" என்று கையால் அவன் தோளைக் குத்தினாள் வர்ஷா.

"வர்ஷா! ஏன் என்னைக் காணோம்னு நீ அவ்வளவு பதறினே... சொல்!"

அவன் கேள்வி அவளைத் திகைக்க வைத்தது. என்ன பதில் சொல்வது? உண்மையைச் சொல்லிவிடத் துடித்த மனதை அடக்கினாள் அவள்.

"சொல் வர்ஷா... சொல்!"

"எ... எனக்குத் தெரியலை ரிஷப். யானைகிட்டே யார் மாட்டியிருந்தாலும் நான் இப்படித்தான் ரீஆக்ட் செஞ்சிருப்பேன்.

அதோட என்னைக் காப்பாற்ற முயன்றதால்தான் நீங்க யானைகிட்ட மாட்டிக்கிட்டீங்க.

ஸோ... ஐ பெல்ட் கில்ட்டி. ஒரு குற்ற உணர்வு என்னுள் எழுந்தது. அதனாலதான் ஐ வாஸ் ரெஸ்ட்லெஸ்!" என்றாள் மெல்லிய குரலில்.

"அதுதானா வர்ஷா காரணம்...?"

"ஆமாம்... அதுதான்...!"

"நீ நல்லா பொய் சொல்ல ட்ரை செய்யறே?"

"நோ... ரிஷப்!" என்று கத்தினாள்.

அவளைப் பளீரெனக் கன்னத்தில் அறைந்தான் ரிஷப்.

"ஏன் இப்படிப் பொய் சொல்றே? என்னைப் பார்த்தவுடன் உன் முகத்தில் தெரிந்த சந்தோஷம், கண்களில் தெரிந்த காதல், இதெல்லாம் பொய் இல்லை வர்ஷா!

உன் முகம் உன்னைக் காட்டிக் கொடுத்துவிட்டது. ஐ நோ யூ ஆர் இன் லவ் வித் மி. அதை ஏன் சொல்லத் தயங்குகிறாய்.

டெல் மி...! வாட்ஸ் பாதரிங் யூ? சொல் வர்ஷா!" என்று அவள் தோளை உலுக்கினான் ரிஷப்.

அவன் கோபத்தைக் கண்டு பயந்தாள் அவள். தன் மனதில் இருப்பதை அவன் உணர்ந்து கொண்டானே, இனி என்ன செய்வது எனக் குழம்பித் தவித்தாள் அவள்.

அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது.



# 19

மன்னிக்க
மாட்டாயா?
தெரியாமல்
நான்
அமிலம்
போல்
சிந்திய
வார்த்தைகளை
மன்னிக்க
மாட்டாயா?
சொன்ன
பின்பு
புரிந்தது
தவறு
என்று!
உன்
முகத்தைப்
பார்க்கத்
துணிவின்றி
வாழ்க்கையில்
முதல்
முறையாகத்

தலை
குனிகிறேன்
மன்னிப்பாயா...!
என்னை மன்னிப்பாயா?

"ஸார்! பஸ் உள்ளே போங்க. மறுபடியும் யானை வந்து விடப் போகுது!" என்று அந்த ஃபாரஸ்ட் ஆபீஸர் குரல் கொடுத்தார்.

"ஓ... ஷ்யூர். தேங்க்ஸ் எ லாட். வா வர்ஷா!" என்று அவள் கையைப் பற்றினான் ரிஷப்.

"நல்ல காலம் ஸார் நீங்க வந்தீங்க. இல்லாட்டி மேடம் அழுதழுது இங்க ஒரு லேக்கே ஃபார்ம் ஆயிருக்கும்!" என்றாள் மாலினி.

"அப்படியா வர்ஷா! அவ்வளவு அழுதியா?" என்றான் தன் அருகே உட்கார்ந்து இருப்பவளைப் பார்த்து ரிஷப்.

"ஆமாம்...!" என்றாள் மெல்லிய குரலில்.

"தேங்க்ஸ்!" என்று அவள் கைவிரல்களைத் தன்னோடு பிணைத்துக் கொண்டான்.

அவள் கையை எடுத்துத் தன் கன்னத்தில் பதித்துக் கொண்டான். அவனின் இந்தச் செய்கை அவளைப் பலவீனமாக்கியது.

அவள் உடல் நடுங்குவதை ரிஷபால் உணர முடிந்தது

"என்ன வர்ஷா! இன்னும் என்ன பயம்? நான்தான் வந்திட்டேன் இல்ல...!" என்றான் மென்மையாக.



அந்தக் குரலின் மென்மையில் கரைந்தாள் அவள். அவன் அவள் கையை எடுத்துத் தன் உதட்டில் ஒற்றி எடுத்தான்.

"வர்ஷா! ஐ லவ் யூ...! ப்ளீஸ் நாம் திருமணம் செய்து கொள்ளலாம்.

அதுவும் சீக்கிரமாக. ஐ லவ் யூ ஸோ மச்!" என்றான் மெதுவாக, அவள் விரல்களை வருடியபடியே ரிஷப்.

அவள் நம்ப முடியாமல் விழிகள் அகல அவனைப் பார்த்தாள். ரிஷப் சொன்னது நிஜமா? நான் ஏதாவது கனவு கண்டேனா எனக் குழம்பினாள் அவள்.

அதற்குள் பஸ் அவர்கள் வீட்டை அடைந்து விட்டது.

"வர்ஷா! வா, இறங்கணும்... அப்புறம் எல்லோருக்கும் குட் நைட். நாளைக்குப் பார்த்துக்கலாம்!" என்று பொதுவாகச் சொல்லிவிட்டு கை அசைத்தான்.

"ஓ... குட்நைட் பாஸ். தேங்க்ஸ். நாளைக்கு வருவீங்களா? இல்ல மேடமோடு பிஸியாக இருப்பீங்களா?" என்றாள் குறும்புக்காரப் பெண் ஒருத்தி.

"யூ ஆர் ரைட். ஐ மே பி ஆன் லீவ்!" என்று சிரித்தபடியே இறங்கினான் ரிஷப்.

அதைக் கேட்ட அவள் முகம் சிவந்தது. வாசலில் செக்யூரிட்டி இவர்களைப் பார்த்தவுடன் விரைப்பாக ஒரு சல்யூட் அடித்தார்.

வர்ஷாவின் கையைப் பற்றியபடியே வீட்டினுள் நுழைந்தான் ரிஷப்.

ஹாலில் தந்தை உட்கார்ந்திருப்பது தெரிந்தது. தன் கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள் அவள்.

ஆனால் அவன் முன்பை விட அழுத்தமாக அவள் கையைப் பற்றினான்.

"வா ரிஷப்! வர்ஷா, டூர் எப்படி இருந்தது? என்ஜாய் செய்தீங்களா?"

"ம்... நல்லா இருந்தது அப்பா. வரும்பொழுது ஒரு ஆபத்து. நல்ல காலம்!" என்று அவள் முடிக்கும் முன்பு ரிஷப் குறுக்கிட்டான்.

"அங்கிள் நத்திங் டு வொர்ரி... பஸ்ஸில் டயர் பஞ்சர். அதைத்தான் உங்க செல்லப் பெண் அவ்வளவு அழகா சொல்றா!" என்றான் ரிஷப்.

அவன் அப்பாவின் உடல் நிலையை மனதில் வைத்துக் கொண்டு இப்படிப் பொய் சொல்கிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

"ஆமாம்... அப்பா. அதான் கொஞ்சம் லேட். இல்லாட்டி இன்னும் கொஞ்ச நேரம் முன்னாடியே வந்திருப்போம்!" என்று சமாளித்தாள் அவள்.

"இந்தாங்க பால், எடுத்துக்கோங்க. குடிக்கற சூட்டில் இருக்கு!" என்று ட்ரேயை நீட்டினாள் சந்திரா.

"ஓ... தேங்க்ஸ்!" என்று சொல்லியபடியே பால் தம்ளரை எடுத்துக் கொண்டான் ரிஷப்.

"எனக்கு வேண்டாம் ஆன்ட்டி!" என்றாள் வர்ஷா.

"கமான்... வர்ஷா! நீயா குடிக்கிறியா இல்லை... நான் ஹெல்ப் செய்யவா?" என்றான் கிண்டலாக ரிஷப்.



"ஓ... நோ. நானே குடிக்கிறேன்!" என்று வேகமாக டம்ளரை எடுத்துக் கடகடவெனக் குடித்தாள் வர்ஷா.

"ம்... சின்ன வயசில பாப்பா பால் குடிக்க அடம் பிடிப்பா. அப்ப அவளுக்கு ஏதாவது விளையாட்டுக் காட்டிப் பால், சாப்பாடு எல்லாம் ஊட்டுவேன்.

இனி, நீங்கதான் அந்த வேலையைச் செய்யணும் போல...!" என்றாள் சந்திரா.

"ம்... இட்ஸ் மை பிளஷர். அப்புறம் அங்கிள், சீக்கிரமா ஒரு நல்ல நாளா பாருங்க. ஐ வாண்ட் டு மேரி யூவர் லிட்டில் கேர்ள்..."

அதைக் கேட்ட வர்ஷாவிற்கு மூச்சுத் திணறியது.

"ஓ... ஐயாம் வெரி ஹேப்பி டு ஹியர் திஸ். கங்கிராட்ஸ் வர்ஷா! நீ இப்பதான் ஒரு நல்ல முடிவு எடுத்திருக்க...

ஐயாம் வெரி ஹேப்பி மை டியர் கேர்ள்!" என்று அவளை அணைத்தார் வசந்தன்.

"அப்பா அது வந்து நான்..." என்று அவள் முடிக்கும் முன்பு ரிஷப் குறுக்கிட்டான்.

"வர்ஷா வா... அங்கிள் ரெஸ்ட் எடுக்கட்டும். இனிமேல் அவருக்கு நிறைய வேலை. பாவம், கல்யாண வேலைன்னா சும்மாவா!

ஸோ லெட் ஹிம் டேக் ரெஸ்ட்!" என்று சொல்லியபடியே அவள் கையைப் பற்றி அவளை மாடி நோக்கி அழைத்துச் சென்றான்.

"மக்கு...! அங்கிள் முகத்தில் கல்யாணம்னு சொன்னவுடன் எவ்வளவு சந்தோஷம் தெரிந்தது.

அதைக் கெடுக்கப் பார்த்தியே...! நீ இன்னும் குழந்தையாவே இருக்க வர்ஷா!"

"இ... இல்லை... நான் உங்களுக்கு ஏற்ற பெண் இல்லை. என்னிடம் இப்ப எதுவும் இல்லை ரிஷப்.

ஐயாம் நாட் எ ரிச் கேர்ள். நீங்கள் தீபாவைக் கல்யாணம் செய்து கொள்ளுங்கள்.

என்னிடம் எதுவும் இல்லை. பணம், வீடு, நிலம் என எதுவுமே இல்லை!" என்றாள், வெறுமையான குரலில்.

"ஏய் கிட்... உன்னிடம் எனக்குத் தேவையான எல்லாம் இருக்கிறது.

குழந்தைத்தனமான முகம்... கிட்டிஷ் பேஸ், பியூட்டி ஃபுல் ஃபிகர்... ம்... இதெல்லாம் எனக்கு வேணும்!" என்றான் அழுத்தமாக, ரிஷப்.

தன் அறை வந்துவிடவே உள்ளே சென்றாள்.

"சரி ரிஷப். குட் நைட்!" என்றபடி கதவை மூடப் போனாள். ஆனால் அதற்குள் அவன் உள்ளே நுழைந்தான். கதவை மூடினான்.

"ரிஷப்... இது என் ரூம். ப்ளீஸ் வெளியே போங்க."

"லுக் வர்ஷா! இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம் போதும். நான் உன்னிடம் பேச வேண்டும்!" என்று அவள் கையைப் பற்றியவன் அவளைப் படுக்கையினில் உட்காரச் செய்தான்.

அவள் அருகே அவனும் உட்கார்ந்தான். அவனின் அண்மை அவளினுள் ஏதோ ஒரு மாற்றத்தைத் தோற்று வித்தது.



அவள் மௌனமாக இருந்தாள்.

"என்ன வர்ஷா! அமைதியா இருக்க...!" என்றான் அவள் காதோரம் கொஞ்சிக் கொண்டிருந்த கற்றை முடியைக் கட்டை விரலால் அளைந்தபடியே.

அவள் உடலில் ஒரு சிலிர்ப்பு பரவியது.

"நீங்கதான் பேசணும்னு சொன்னீங்க!" என்று சொல்லும் பொழுது அவள் குரல் நடுங்கியது.

"வர்ஷா! இந்த டிராகுலாவை உனக்குப் பிடித்திருக் கிறதுதானே? ஏன் உன் மனதைப் பூட்டி வைத்துக் கொள்கிறாய்?

உன்னிடம் நான் எப்பொழுதோ மனதைப் பறி கொடுத்து விட்டேன். எப்ப தெரியுமா? கெஸ் செய்!"

"ம்... தெரியலை!" என்றாள் தலைகுனிந்தபடி.

"நாம் வீடு பார்க்கப் போயிருந்தோம் தெரியுமா? அப்ப நீ ஜன்னல் வழியாக வெளியே வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றாய்.

அப்பொழுதுதான் என் மனதில் மின்னல் மாதிரி அந்த எண்ணம் தோன்றியது."

"என்ன எண்ணம்?"

"ம்... அந்த வீட்டில் உன்னைப் போல் குழந்தைகள் நம் அன்பின் அடையாளமாகப் பிறந்து ஓடி விளையாட வேண்டும் என்று நினைத்தேன்!" என்றான் கண்களில் காதல் ததும்ப.

"வாட் ரிஷப்!" என்று அதிர்ந்தாள் அவள்.

அவள் முகத்தில் செம்மை படர்ந்தது.

"யெஸ் வர்ஷா! என் மனத்தில் தோன்றியதை அப்படியே சொல்கிறேன். எந்த அலங்காரமும் செய்யாமல், எந்தப் பூச்சும் இல்லாமல் என்னில் தோன்றிய எண்ணத்தை உன்னிடம் சொல்கிறேன்.

உன் திமிர், உன் அழகு எல்லாமே எனக்குப் பிடித்தது."

"ஆமாம்... அதான் சொன்னீர்களே... அரகண்ட் அண்ட் பியூட்டிஃபுல்ன்னு!"

"யெஸ்... சின்னப் பெண்ணாக நீ இருந்த பொழுதே எனக்கு உன்னோடு பழக வேண்டும் என்று ஆசை.

பட் நீ எட்டாத உயரத்தில் இருந்தாய். உன்னை நான் ஏக்கமாகத் தினமும் பார்ப்பேன்.

உன் குண்டு முகம், பட்டாம்பூச்சி போல் படபடக்கும் கண்கள்... இதெல்லாம் என்னுள் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது உண்மை."

"ஓ... காட்! அப்ப உங்களுக்கு என்ன வயதிருக்கும்?"

"ம்... இருபது வயது. உனக்குப் பத்து அல்லது பன்னிரண்டு வயது இருக்கும்.

நீ அந்த டெடி பொம்மையை வைத்துக் கொண்டுதான் எல்லாவிடத்திலும் திரிவாய்.

அந்த டெடி மேல் எனக்குக் கோபமும் பொறாமையும் ஏற்பட்டதற்குக் காரணம் நீதான்."

அதைக் கேட்டு அவள் கடகடவெனச் சிரித்தாள்.

"நிஜமா ரிஷப்! அப்பவே நீங்க என்னைக் கவனிச்சீங்களா? ஐ காண்ட் பிலீவ் இட்!"



"யெஸ் வர்ஷா. நீ என் மனதில் ஒரு தேவதையாக அப்பவே பதிந்து விட்டாய்.

உன் இரட்டை ஜடை, பூப்போட்ட ஃபிராக், இதெல்லாம் என்னில் ஒரு மயக்கத்தை ஏற்படுத்தியது நிஜமே...!

அப்பொழுது தோன்றிய மயக்கம் இன்னும் தீரவில்லை வர்ஷா! யூ ஆர் எ ஸ்வீட் பேபி!" என்று அவளை அணைத்தான் ரிஷப்.

"ரிஷப்! ப்ளீஸ்... முதலில் நீங்க... சொல்ல வந்ததை எல்லாம் சொல்லி முடிங்க..." என்று அவன் தோளில் தலை சாய்த்தாள் அவள்.

"ம்... நீ சொல்வதும் சரிதான். நமக்குள் இனி எந்தப் பிரச்சனையும் வரக்கூடாது!" என்றவன் அவள் கையை எடுத்துத் தன் கையினுள் அடக்கிக் கொண்டான்.

"ஆஸ்திரேலியா சென்ற பின்புகூட உன்னை என்னால் மறக்க முடியவில்லை.

ஆனால் என் உள்ளுணர்வு சொல்லியது. எனக்கு நீ கிடைப்பாய் என்று...!"

"இஸ் இட் ஸோ? ஆனால் நீங்கள் என்னிடம் துளிகூட அந்த மாதிரி நடந்து கொள்ளவில்லையே!

இன்ஃபேக்ட் நீங்கள் எப்பவும் என்னை இரிடேட் செய்து கொண்டிருந்தீர்கள்."

"ம்... உன்னுடைய ஃபோட்டோவை அங்கிள் என்னிடம் ஆஸ்திரேலியாவில் காட்டினார்.

அப்பொழுதே எனக்குத் தெரிந்து விட்டது. இது நம்ம தேவதைதான் என்று.

உன் முகத்தில் பத்து வயதில் இருந்த அந்தக் குழந்தைத்தனம் அந்த ஃபோட்டோவில் எனக்குத் தெரிந்தது."

"அப்பவே தெரிந்து விட்டதா? அப்புறம் ஏன் என் மேல் அப்படி எரிந்து விழுந்தீர்கள்?"

"ம்... உன் அப்பா என்னிடம் உன்னைப் பற்றி எல்லாமே சொன்னார்.

உன்னுடைய கிட்டிஷ் பிஹேவியர், உன் ஃபிரண்ட்ஸ், அவர்களுக்காக நீ செலவு செய்வது, அப்புறம் உன் பாய் ஃபிரண்ட் விக்ரம் என எல்லாமே என்னிடம் சொன்னார்."

விக்ரம் பெயரைக் கேட்டவுடன் அவள் முகத்தில் ஒரு இறுக்கம் படர்வதை ரிஷப் கவனித்தான்.

"வர்ஷா! உனக்கு விக்ரம் மேல் காதல் இல்லை என்று எனக்குத் தெரியும். அப்ப டெடி பேர் வைத்து விளையாடிக் கொண்டிருப்பாய். அதுபோல ஜஸ்ட் ஃபார் ஃபன் நீ அவனுடன் பழகினாய்.

மற்றப்படி அவனிடம் உனக்குப் பெரிதாக ஈடுபாடு இல்லை என்று நான் நம்பினேன்."

"அது உண்மைதான் ரிஷப். எனக்கு ஆச்சரியமாக இருக்கு.

எப்படி நீங்கள் இவ்வளவு துல்லியமாக என் மனதில் இருப்பதை அறிந்து வைத்திருந்தீர்கள்...!"

"அதற்கு ஒரு வலுவான காரணம் உண்டு வர்ஷா. உனக்கு இயல்பாகவே நினைத்ததை நடத்தி முடிக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டு என்பது உன் அப்பாவின் பேச்சிலிருந்து தெரிந்து கொண்டேன்.



உன் அப்பா... விக்ரமோடு பழகாதே! ஹி இஸ் நாட் எ குட் பெர்ஸன் என்று சொல்லியிருக்கார் பலமுறை.

அதனாலேயே உன் ஆழ்மனதில் அதை எதிர்க்க வேண்டும் என்று ஒரு எண்ணம் உன்னை அறியாமலேயே உன் மனதில் வலுப் பெற்றது.

சைக்காலஜியில் இதற்கு பேஸிவ் அக்ரஷன் என்று பெயர்.

அதாவது எதிராளி சொல்வதை நேரடியாக எதிர்க்காமல் மறைமுகமாக அதை எதிர்ப்பது..."

"ஓ... இவ்வளவு விஷயங்களை எப்படித் தெரிந்து வைத்திருக்கிறீர்கள் ரிஷப்!"

"அப்புறம் நீ சந்தோஷ் - சுப்ரமணியன் படம் பார்த்திருப்பியே... அதில் வர்ற ஹீரோவின் அப்பா போல் தான் அங்கிளும்.

உன்னை எப்பவும் அவர் குழந்தையாகத்தான் பார்த்தார். அவர் சொல்வதை நீ கேட்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்.

ஆனால் உனக்கு அது பிடிக்கவில்லை. உனக்கு அது மூச்சு முட்டுவது போல் இருந்தது.

அதனாலேயே நீ அங்கிள் சொல்வதற்கு எதிராக நடந்து கொள்ள ஆரம்பித்தாய்.

விக்ரம் மேல் நீ தீவிரமாக இருந்தது அதனால்தான். அது மட்டும் இல்லை. அங்கிள் என்னைப் பற்றி நல்ல விதமாகச் சொல்லச் சொல்ல உனக்கு என் மேல் கோபம் அதிகமானது.

அதனாலேயே நீ என்னுடன் எப்பவும் சண்டை பிடித்தபடி இருந்தாய்.

அங்கிள் என்னைப் பற்றி உயர்வாகச் சொல்லச் சொல்ல உனக்கு என் மேல் இன்னும் கோபம் வந்தது. கரெக்டா?"

"ம்... ரொம்பவே சரி... ரிஷப்! நீங்கள் பிஸினெஸில் மட்டும் இல்லை.

அடுத்தவர்கள் மனதில் இருப்பதைத் துல்லியமாகக் கணிப்பதிலும் முதல்தான்!"

"ம்... அதில் மட்டும் இல்லை. இன்னொன்றிலும் நான் முதல்தான்...!" என்றான் ரிஷப் கண்களில் குறும்பு மின்ன.

"அது என்ன ரிஷப்? எனக்குப் புரியவில்லை."

"ம்... ரொமான்ஸிலும் நான் முதல்தான்... ஃப்ரூப் செய்யவா?"

"காட்! யூ ஆர் வெரி நாட்டி!" என்று சிணுங்கினாள்.

"ம்... கல்யாணத்திற்குப் பின்பு அதை ஃப்ரூப் செய்கிறேன்.

இப்பவே செய்ய வேண்டும் என்றுதான் ஆசையாக இருக்கிறது. ஆனால் கஷ்டப்பட்டு என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருக்கிறேன்."

"தேங்க்ஸ் ஃபார் இட்!" என்றாள் குறும்பாக வர்ஷா.

"ம்... சொல்லுவடா நீ... உனக்கென்ன தெரியும் என் காதலைப் பற்றி...!

நீ விக்ரமோடு பேசும்பொழுதெல்லாம் எனக்கு ஒரு கோபம் வரும் பார். காட்!



அன்னிக்கு நீ செல்போனில் தெரியாமல் ஸ்பீக்கர் பட்டனை அழுத்தி விட்டாய்.

காரில் நாம் போய்க் கொண்டிருந்தோம். விக்ரம் உன்னை டியர் என அழைத்தான்.

அதைக் கேட்டு என் ரத்தம் கொதித்தது. நீ எனக்கு வைத்த பெயர் டிராகுலா எனத் தெரிந்து கொண்டேன்... ஐ லைக் தட் நேம்!

இந்த டிராகுலாவிற்கு எப்பவுமே நீ வேண்டும். நீ மட்டுமே வேண்டும்!" என்றான் அவள் உதட்டைப் பெரு விரலால் வருடியபடி.

"ரிஷப்... ஐயாம் ஸாரி!" என்றாள் மெல்லிய குரலில் வர்ஷா.

"ஓ... மை கேர்ள்!" என்று அவள் தலைமுடியில் முகம் புதைத்தான் ரிஷப்.

"ரிஷப், ப்ளீஸ்!" என்று சிணுங்கினாள் அவள்.

"அப்புறம் என்னைச் சந்திக்க நீ ஹோட்டலுக்கு வந்தாய் அல்லவா?

வீடு எல்லாம் சுற்றிப் பார்த்த பின்பு லஞ்ச் சாப்பிட்ட பின்பு நீ உன் காரில் புறப்படுவதாக இருந்தாய்.

நீ என்னுடன் சேர்ந்து வரவேண்டுமென்பதற்காக நான் உன் காரின் டயரை பஞ்சர் செய்ய ஏற்பாடு செய்தேன்."

"காட்! இந்த வேலை எல்லாம் செய்தீர்களா?"

"யெஸ்... ஆனால் பாவம் நீ! என்னுடன் வந்தபொழுதுதான் விபத்தில் சிக்கிக் கொண்டாய்.

ஐயாம் ஸாரி ஃபார் தட்...!"

"இட்ஸ் ஓ.கே. நீங்க அதை ப்ளான் செய்யவில்லை. அது மட்டும் இல்லை. பிரேக் போடும்பொழுது நீங்க நான் விழாமல் இருப்பதற்காக என்னைப் பிடித்துக் கொண்டீர்கள்.

ஐ லைக்ட் இட் ரிஷப். அந்த இக்கட்டான தருணத்தில் நீங்கள் ஞாபகமாக என்னை விழாமல் தாங்கிப் பிடித்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது."

"ஆனால் அந்தக் கார்காரனுக்கு நான் அப்பப்ப நன்றி சொல்வேன்... மனதிற்குள்!"

"ஏன் அவனுக்கு நன்றி?" என்றாள் குழப்பமாக வர்ஷா.

"ம்... உன்னைத் தூக்குவதற்கு எனக்கு சான்ஸ் கிடைத்தது அவனாலேதான்...!

அது மட்டும் இல்லை... நீ என்னைத் தூக்கக் கலக்கத்தோடு அன்று என்ன செய்தாய் தெரியுமா?"

"எ... என்ன செய்தேன்?"

"உன் பட்டு இதழ்களால் இங்கே ஒற்றி எடுத்தாய்!" என்று கன்னத்தைக் காட்டினான் ரிஷப்.

"நோ... நோ... நான் நம்ப மாட்டேன்!"

"ம்... நீ என்னை அங்கிள் என்று நினைத்துதான் அப்படிச் செய்தாய் ஹனி!"

## 20

நான்
வானில்
பறக்கிறேன்
மேகக்
கூட்டங்கள்



இடையே
நிலவைக்
கடந்து
விண்மீன்களைத்
தாண்டிப்
பறவையைப்
போல்
பறக்கிறேன்
..........
உன் முகம்
எனக்குத்
தெரிகிறது
நிலவுக்குச்
சவால்
விடும்
உன்
முகம்
என் கை அருகே...
அழகான கனவு
என் அருகே உள்ள
உன்னைப்
போல....

"காட்! நான் அப்படியா செய்தேன்?" என்ற அவள் முகத்தில் செம்மை படர்ந்தது.

"யெஸ் வர்ஷா! அன்று உன் அருகிலேயே நீ என்னை இருக்கச் சொன்னாய்!

ஐ வாஸ் இன் க்ளவுட் நைன். அந்த நாளை என்னால் மறக்கவே முடியாது...!"

"ம்... புரிகிறது."

"உன் உடல்நிலை சரியாக வேண்டும் என்று நான் ஒரு பூங்கொத்தை உனக்கு அனுப்பி இருந்தேன்."

"ஓ... அதை அனுப்பியது நீங்களா? ஃபார் எ க்ளவர் கேர்ள் என்று இருந்தது.

கீழே வித் லவ் - வி என்று இருந்தது. அதனால் நான் தவறாக விக்ரம் என்று நினைத்துக் கொண்டேன்."

"ம்... என் முழுப் பெயர் ரிஷப் வினய். அனுப்பிய பின்புதான் எனக்கு என் தவறு புரிந்தது.

எல்லோரும் என்னை வினய் என்று அழைப்பார்கள். என் ஃபிரண்ட்ஸ் மத்தியில் நான் வினய்.

அதனால்தான் சட்டுன்னு அப்படி ஸைன் செஞ்சுட்டேன். இந்த மாதிரி ஒரு பேக்-பையர் ரீஆக்ஷன் ஆகும்ன்னு நான் நினைக்கலை...!"

"அப்புறம் நான் உங்ககிட்டே தீபா பற்றி கேட்கணும்...!"

"என்ன கேட்கணும்... ஹனி கேர்ள்?"

"வந்து அவ என்கிட்டே வந்து ஒரு நாள் பேசினாள். நீங்களும் அவளும் கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகச் சொன்னாள்.



நீங்க... நீங்க அவளிடம் க்ளோஸாகப் பழகியதாக அவள் சொன்னாள். இஸ் இட் ட்ரூ ரிஷப்?" என்றாள் மெல்லிய குரலில் வர்ஷா.

"ஏய் மக்கு! நிஜமாலுமே உனக்கு ஐ.க்யூ. கம்மிதான்! அவளைப் பார்த்தாலே எனக்குப் பிடிக்காது.

அவளும் அவளோட டிரெஸ் சென்ஸும். சே! அவளை வேண்டுமென்றேதான் நான் உன்னிடம் அனுப்பினேன்.

அவளைப் பற்றி எனக்குத் தெரியும். உன்னிடம் வந்து உளறுவாள் என எனக்குத் தெரியும்.

உன்னை யோசிக்க வைக்கவே நான் அப்படிச் செய்தேன்."

"ஓ... இந்த மாதிரி ஐடியாவெல்லாம் செய்தீர்களா? ரொம்ப மாஸ்டர் மைண்ட்தான் உங்களுக்கு!"

"இதெல்லாம் நத்திங். உன் அப்பா எல்லாம் தெரிந்தும் தெரியாதது போல் நடித்தாரே...

அவரை என்ன சொல்வது? நான் உன்னை விரும்பியதை முதலில் அவரிடம்தான் சொன்னேன்.

ஆஸ்திரேலியாவில் ஹோட்டலில் உன் ஃபோட்டோவைப் பார்த்தவுடன் நான் அவரிடம் எல்லா வற்றையும் சொல்லி விட்டேன்.

அதைக் கேட்டவுடன் அவர் முகத்தில் பரவிய மகிழ்ச்சி இன்றும் என் கண் முன்னால் தோன்றுகிறது."

"ஓ... அப்பா உங்களிடம் எல்லாமே சொல்லி விட்டாரா? காட்! அவருக்கு எப்படி உங்கள் மேல் அவ்வளவு நம்பிக்கை.

அப்பா உங்களிடம் பிஸினெஸ் நஷ்டம் பற்றி பேசியிருக்கார். என்னைப் பற்றிப் பேசியிருக்கிறார்.

காட்! ஐ ஜஸ்ட் காண்ட் பிலீவ் இட். ஆனால் அவர் என்னிடம் பிஸினெஸ் நஷ்டம் பற்றிப் பேசத் தயங்கினார்.

அதனாலேயே எனக்கு உங்கள் மேல் பொறாமை ஏற்பட்டது. அப்பாவின் பலவீனமான இதயம் பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கிறது.

ஆனால் எனக்கு எதுவுமே தெரியவில்லை. அதனாலேயே உங்க மேலே இன்னும் எரிச்சலும் கோபமும் ஏற்பட்டது."

"ம்... தெரியும் எனக்கு. உன் கோபம்தான் ரொம்ப பிரசித்தமான ஒன்றாயிற்றே...

நீ கோபப்பட்டுப் பின்பு அழுவதை நான் கஷ்டப் பட்டுப் பார்த்துக் கொண்டிருப்பேன்...!"

"ம்... நீங்களும்தான் என்மீது கோபப்பட்டீர்கள்."

"ஆமாம். அர்த்த ராத்திரியில் நீ பாட்டுக்குச் சொல்லாமல் கொள்ளாமல் விக்ரமின் வீட்டிற்குப் போய் விட்டாய்.

அன்னிக்கு எனக்கு வந்த கோபத்திற்கு உன்னை என்ன செய்தாலும் அது சரிதான்.

என்ன ஒரு தைரியம் உனக்கு. அப்பாவிடம் கூலாக அப்படிப் பேசினாய்!

விக்ரமைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக நீ சொன்னவுடன் அவர் பதறிவிட்டார்."

"நீங்கள் பதறவில்லையா? நான் விக்ரமைத் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று நீங்கள் நம்பினீர்களா?"



"யெஸ். என் கோபம் எல்லாம் உன் முட்டாள்தனமான முடிவை நினைத்துத்தான்.

ஐ மீன் நீ விக்ரம் வீட்டிற்குச் சென்றது எனக்குத் துளிகூடப் பிடிக்கவில்லை.

ஆனால் அங்கிளுடன் கோபித்துக் கொண்டுதான் நீ வேண்டுமென்றே அப்படி செய்தாய் என்று எனக்குப் புரிந்தது."

"ஆமாம்... நீங்க சொன்ன பேஸிவ் அக்ரெஷன்தான் அதற்குக் காரணமாக இருக்கும்.

அப்பா திருமணத்தைப் பற்றிப் பேசினார். நான் உங்களைத் திருமணம் செய்து கொண்டால் வீடு, நிலம் எல்லாமே பத்திரமாக இருக்கும் என்று அப்பா சொன்னார்."

"ஸோ... நீ என்னை உடனே வில்லன் ரேஞ்சிற்குக் கற்பனை செய்து கொண்டாய். அப்படித்தானே?

ஏதோ நான் ஷாப்பிங் செய்து மனைவியைத் தேர்ந்தெடுப்பது போல் நீ பேசினாய்."

"யெஸ் ரிஷப். அப்பா பிஸினெஸ் நஷ்டத்திலிருந்து மீள ஒரே வழி... நான் உங்களைத் திருமணம் செய்து கொள்வதுதான் என்று சொன்னார்.

அதைக் கேட்டவுடன் எனக்கு வழக்கம்போல் உங்கள் மேல் கோபம் வந்தது."

"அந்தக் கோபத்தில் நீ வார்த்தைகளைக் கொட்டினாய். விக்ரமைத் திருமணம் செய்து கொள்ளப் போவதாக அங்கிளிடம் சொன்னாய்!

கரெக்டா வர்ஷா?"

"ஆமாம்... ஆனால் உங்களை விக்ரம் வீட்டில் நான் துளிகூட எதிர்பார்க்கவில்லை. உங்களைப் பார்த்த பின்பு எனக்கு அவமானமாக இருந்தது. என் மேலேயே எனக்குக் கோபம் வந்தது.

நீங்கள் வேறு என்னைப் பற்றி என்னவெல்லாமோ தவறாகச் சொன்னீர்கள்.

என்னையும் விக்ரமையும் இணைத்து...!" என்று அவள் முடிக்கும் முன்பு அவன் அவள் உதட்டைத் தன் உதடுகளால் மூடினான்.

"ஐயாம் ஸாரி... வர்ஷா! அங்கிளுக்கு மாரடைப்பு ஏற்பட்டவுடன் எனக்குப் பதற்றம்! அதனால்தான் அன்று ஏதேதோ பேசினேன். ஸாரி வர்ஷா!" என்றான் தணிவான குரலில்.

"ம்... இட்ஸ் ஓ.கே.. தப்பு என் மேலேதான். நான் அந்த மாதிரி செஞ்சிருக்கக் கூடாது."

"புரியுது... வர்ஷா! உன்னை அன்று விக்ரம் வீட்டில் பார்த்த அன்று எனக்குக் கோபத்தில் விக்ரமை ஏதாவது செய்து விடுவேனோ எனப் பயமாக இருந்தது.

விக்ரம் வேறு உன்னை டியர் என்று அழைத்தான். உன்னை அணைத்துச் சமாதானப்படுத்தினான்!" என்று சொல்லும் பொழுதே ரிஷப் உடல் கோபத்தால் இறுகுவதை அவள் உணர்ந்தாள்.

"ரிஷப்... ஐயாம் ஸாரி!" என்று அவன் தலைமுடியை மெதுவாகக் கோதினாள்.

"ஆனால் கெட்டதிலும் நல்லது என்பது போல் நீ அங்கிள் உடல்நலம் குன்றிய பிறகு வேறு வழியில்லாமல் என்னுடன் நெருங்கிப் பழகினாய்."



"ஆமாம்... அதைச் சாக்கா வெச்சு நீங்க என்ன வெல்லாமோ செஞ்சீங்க!

பட் நீங்க நம்ம கம்பெனி ஸ்டாஃபிடம் கேஷுவலாகப் பழகினீங்க. அதுவும் முதல் நாள் அன்றே நீங்கள் எந்த டென்ஷனும் இல்லாமல் கூலாக அழகாக அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கும்படி பேசினீங்க.

ஐ லைக்ட் யுவர் அப்ரோச்! இந்த மாதிரி எப்படி இவ்வளவு அழகாக உங்களால் பேச முடிந்தது என்று நான் வியந்தேன்.

ஆனால் தனியாக என்னிடம் பேசும்பொழுது நீங்கள் என்னை ரொம்பக் கேவலமாகப் பேசினீர்கள்.

விக்ரம், பீட்டர்... ரிச்சர்ட்... அவர்களுடன் என்னை... சே! என்னவெல்லாமோ சொன்னீர்கள்!" என்று சொல்லும் பொழுதே அவள் குரல் உடைந்தது.

"ஸாரி வர்ஷா! நான் வேண்டுமென்றேதான் அப்படிச் சொன்னேன்.

அப்பொழுதுதான் உனக்குப் புரியும், நான் உன்னைக் கேவலமாக நினைத்தேன் என்று.

உன் ஈகோ ஹர்ட் ஆகும் என்று எனக்குத் தெரியும். உன்னை முதல் முதலாகச் சந்தித்த பொழுதே உன் கோபம் என்னைக் கவர்ந்தது.

அதனால்தான் வேண்டுமென்றே குதிரையைப் பற்றியே பேசினேன். கீழே விழுந்த உன்னைக் கண்டு கொள்ளவில்லை.

அதனாலேயே நீ என்னைப் பற்றி அவ்வப்பொழுது நினைத்திருப்பாய். நான் சொல்வது சரிதானே!"

"யெஸ்... கரெக்ட். ம்... பயங்கர பிளான்தான்."

"பட், சிலவற்றை நான் பிளான் செய்யவில்லை. நகை எஸ்டிமேட் செய்ய நீ ஒரு ஆளைப் பார்த்தாய் பார்.

சே...! சரியான ஃபிராட் அவன். அவன் உன்னைப் பார்த்த பார்வையே சரியில்லை....!"

"ஓ... அதுதான் அப்படி அவனை விரட்டினீர்களா?"

"ஆமாம். ஆனாலும் உனக்கு ரொம்பவே ஈகோ. அன்று ஒரு நாள் மழையின்போது விக்ரமின் நாடகத்தைப் பார்க்க நீ வந்திருந்தாய்."

"ம்... நான் மழையில் நனைந்து ரிசப்ஷன் அருகே நின்று கொண்டிருந்த பொழுது... நீங்கள்... நீங்கள்..." என்று முடிக்க முடியாமல் திணறினாள் அவள்.

"ம்... நான் உன்னை இப்படி அணைத்தேன்!" என்று எலும்புகள் நொறுங்கும்படி அவளை அணைத்தான் ரிஷப்.

"ஸாரி! நான் உங்களை ஹர்ட் செய்யவே... அன்று உங்களை விக்ரம் என நினைத்தேன் என்று பொய் சொன்னேன்!" என்றாள் மெதுவாக வர்ஷா.

"தெரியும் எனக்கு. அதனால்தான் உனக்கு ஈகோ அதிகம் என்று சொன்னேன்."

"ஆனால் பிளான் பண்ணாம ஹெல்ப் செஞ்சது நம்ம கணேஷ்தான்!"

"கணேஷா? யார் அது?"

"ம்... ரோட்டில் வந்ததே அந்த யானையைத்தான் சொல்கிறேன்."

அதைக் கேட்டு அவள் கடகடவெனச் சிரித்தாள்.



"ம்... இப்ப சிரிக்கிறேன் ரிஷப். ஆனால் அப்ப நான் பட்ட வேதனை.... கடவுளே...!

என்னால் மறக்க முடியாது. அதோடு விக்ரம் எவ்வளவு மோசமானவன் என்று எனக்கு டூரில் தெரிந்தது!" என்று மெதுவாகச் சொன்னாள் வர்ஷா.

"ம்... புரிகிறது வர்ஷா. நீ அவனை நல்லவன் என்று நினைத்தாய்.

பட் ஹி டஸ் நாட் டிஸர்வ் யூவர் லவ்!"

"தேங்க்ஸ் ரிஷப். என்னைப் புரிந்து கொண்டதற்கு...!"

"ம்... நீ உன் அப்பாவிற்குத்தான் தேங்க்ஸ் சொல்ல வேண்டும்.

அவர் என்னை ஆஸ்திரேலியாவில் சந்தித்து நம் காதலுக்குப் பிள்ளையார் சுழி போட்டார்!"

"அப்புறம் பிள்ளையார் யானை ரூபத்தில் வந்து நம் காதலைக் கல்யாணத்தில் முடித்து வைத்தார்.

அப்படித்தானே ரிஷப்!"

"கரெக்ட் மை கேர்ள். இப்ப மணி என்ன தெரியுமா? விடிகாலை நான்கு.

நான் இன்னும் உன் அறையில் பேசி டயத்தை வேஸ்ட் செய்து கொண்டிருக்கேன்!" என்றான் கண்களில் குறும்பு மின்ன ரிஷப்.

"ஓ... ரிஷப் ஸ்டே தேர்!" என்றாள் வர்ஷா, அதிகாரமாக.

"ம்... இப்பவே இப்படி அதிகாரம் செய்யறே! கல்யாணத்திற்கு அப்புறம் நான் காலிதான்...!"

"ம்... ஆமாம். நீங்க தனிக் கட்சி. நான், அப்பா, ஆன்ட்டி எல்லாம் ஒரு கட்சி."

"குட் ஜோக். நான் உன்னை ஏதாவது செய்து விடுவேன் என்று ஆன்ட்டி ரொம்ப ஜாக்கிரதையாக உன்னைப் பார்த்துக் கொள்வார்கள்.

அதை நினைத்தாலே சிரிப்பு வருகிறது..."

"யெஸ்... ஆன்ட்டிக்கு என் மேல் பாசம் அதிகம். என்னை வளர்த்தவர்கள் அவர்கள்.

நான் கஷ்டப்படுவதை அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாது."

"ம்... நீ கஷ்டப்படுவதை என்னாலேயும் பொறுத்துக் கொள்ள முடியாது.

அது புரிய உனக்கு எவ்வளவு நாளாச்சு... என்ன செய்வது ஐ.க்யூ. கம்மி உனக்கு... ஐ நீட் டு மேனேஜ் வித் யூ...!" என்றான் சீண்டும் குரலில்.

"எனக்கு ஐ.க்யூ. கம்மிதான். எனக்கும் சேர்த்து உங்களுக்கு நிறைய ஐ.க்யூ. இருக்கு.

ஸோ இட் வில் பி மேனேஜ்ட் வெல்!" என்றாள் அவளும் அதே குரலில்.

அதைக் கேட்டு ரிஷப் சிரித்தான். வர்ஷாவும் அவன் சிரிப்பில் இணைந்து கொண்டாள். வெளியே பனி பெய்து கொண்டிருந்தது. பூக்கள் பனியில் குளித்துக் கொண்டிருந்தன.

வர்ஷாவும் ரிஷபும் அன்பெனும் பனியில் ஆனந்தமாக நனைந்து கொண்டிருந்தார்கள்.